ANANTHA KRISHNAN

AN ILLUSTRATED DETECTIVE TAMIL NOVEL

அநந்த கிருஷ்ணன்

மூன்று சித்திரப்
படங்களுடன் கூடிய
ஓர் துப்பு அறியும்
இனிய தமிழ் நாவல்

By J. R. RANGA RAJU

Author of Rajambal, Chandrakantha and Mohanasundaram

FIFTH EDITION

PUBLISHED BY THE TRUSTEES OF
RANGA RAJU'S NOVEL ACCOUNT FUND
Copies Can be had of:—
RANGA RAJU & BROS.
5, MOUNT ROAD, MADRAS, S.C.

 PRICE AS. 12 *[Postage extra.*

THE GUARDIAN PRESS
MADRAS

“இராஜாம்பாள்” “சந்திரகாந்தா”
“மோஹன சுந்தரம்” – –
– – “ஆநந்த கிருஷ்ணன்”
“இராஜேந்திரன்” – –

மேற்சொன்ன ஐந்து புஸ்தகங்களும் ஒன்றைவிட ஒன்று கீழே சொல்லிருக்கும் விஷயங்களைத் தாங்கி “நான் முன், நான் முன்” என ஆர்ப்பரித்து ஆநந்தத்தை விளைவிக்கின்றன.

மேற்சொன்ன ஒவ்வொரு புஸ்தகத்திலும் ஸ்திரீ, புருஷ, பாலக பாலகிகளுக்கு யுக்தமான அநேக அத்யற்புத விஷயங்களும் துப்பறிய வேண்டி (அபார சக்தியுடன்) செய்யும் தந்திரங்களும், நீதி விஷயங்களும், (சன்மார்க்கிகள் அனுபவிக்கும் இன்பமும், துன்மார்க்கிகள் துன்பத்தைப் பங்கிட்டுக்கொள்வார்கள் என்பதையும்) தற்காலத்திற்கேற்ற அநேக நவநாகரீகமான விஷயங்களும், பெரியோரன்றிச் சிறியோரும், பெண்பாலரும் எளிதில் உணருமாறு உயர்ந்ததும் அழகியதுமாய் (நல்லகாகிதத்தில் நன்ருய்) அச்சிடப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகத்தில் காணும் ஒவ்வோர் விஷயங்களும் அறிவைப் பரவச் செய்யும் சக்திவாய்ந்தன. இவ்வளவு அருமைவாய்ந்த புஸ்தகங்களை அவஸ்யம் வாங்கிப் படிப்பது நம் தமிழறிந்த நண்பர்களின் முக்கிய கடமை களிலொன்ருகும்.

ஒவ்வொரு நாவலிலும் கண்டோர் மனதைக் கவரும் மூன்று சித்திரப்படங்கள் வளவளப்பான காகிதத்தில் அச்சடித்துக் கோர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்புஸ்தகங்களைப் போலொத்த வேறு புஸ்தகங்கள் இதுவரையில் தமிழ் பாஷையில் பிரசுரிக்கப்படவில்லையென்பது இதை வாசித்த எல்லோருடைய அபிப்பிராயம்.

இவைகளைப் புகழ்ந்து எழுதியிருக்கும் நற்சாக்ஷிப்பத்திரங்கள் எம்மிடம் ஆயிரத்துக்கு மேலிருக்கின்றன.

இவ்வளவு அருமையான புஸ்தகங்களை எல்லாரும் வாங்கி வாசித்து ஆநந்தமடைய வேண்டுமென்னும் எணத்துடன் ஒவ்வொன்றின் விலையும் அணு 12 என்று மிகவும் குறைத்து வைக்கப் பட்டிருக்கிறது. தபாற்கூலி, வி. பி. கமிஷன் பிரத்தியேகம்.

வேண்டியவர்கள் :—

மெஸர்ஸ் ரங்கராஜு அண்டு பிதர்ஸ்,
5, மௌண்ட் ரோட், சென்னை,
என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.



பாலம்மாள் பாக்கியரத்னத்தைப்பார்த்து "போடி வித்தைக்கள்ளி!
உன் மாய்மாலமெல்லாம்......இங்கே பலிக்காது" என்றாள்.

(40-ம் பக்கம் பார்க்க.)

ஆநந்த கிருஷ்ணன்

சித்திரப்படங்களுடன் கூடிய

ஓர் துப்பு அறியும் இனிய தமிழ் நாவல்

"இராஜாம்பாள்" "சந்திரகாந்தா" "மோஹனசுந்தரம்"

என்னும் நிகரில்லாத நாவல்களை எழுதிய

ஜே. ஆர். ரங்கராஜா அவர்களால்

எழுதப்பெற்றது

ஐந்தாம் பதிப்பு

ரங்கராஜு அவர்களின் செட்டில்மெண்டில் கண்ட
நபர்களின் உபகாரார்த்தமாய்

அதன் டிரஸ்ட்டிகளால்
வெளியிடப்பட்டது

புஸ்தகங்கள் ரங்கராஜு பிரதர்ஸ்
5, மௌண்ட்ரோட் சென்னையில் கிடைக்கும்

1919

விலை அணா பன்னிரண்டு] [தபாற்கூலி பிரத்தியேகம்

MADRAS
PRINTED AT THE GUARDIAN PRESS,
NO. 4, SEMBUDAS STREET.

ஆநந்த கிருஷ்ணன்

முதல் அத்தியாயம்

மருந்திடல்

"வாருங்கள்; வாருங்கள்; எப்போது வந்தீர்கள்? ஏன்! புறப்படுமுன் ஒரு தந்தி கொடுத்திருந்தால் நான் ரெயில் ஸ்டேஷனுக்கு வந்திருக்க மாட்டேனா? அல்லது மோட்டார்க்காராவது அனுப்பியிருக்க மாட்டேனா? திருச்சினாப்பள்ளியில் எல்லோரும் சௌக்கியமா?" என்று தனது நண்பராகிய ராமாநுஜலு நாயுடுவைப்பார்த்து பெருமாள் நாயுடு கேட்டார்.

ராமாநுஜலு நாயுடு.—நான் என்ன சிறு பிள்ளையா? அல்லது திருச்சியிலிருந்து சென்னைக்கு இப்போதுதான் புதிதாக வருகிறேனா? என்னத்திற்கு அனாவசியமாய்த் தங்களுக்கு தொந்தரவு கொடுக்க வேண்டுமென்றுதான் முன்கூட்டி எழுதவில்லை.

பெருமாள் நாயுடு.—சரி; மெத்த சந்தோஷம். தங்களைப்பார்த்து ஏறக்குறைய மூன்று வருஷங்கள் ஆகின்றன. இதுவரை கடிதப் போக்குவரவே தவிர சந்திப்பென்பதே இல்லாமல் போய் விட்டது. இது மிகவும் ஆச்சரியமே. கூடிய ஜல்தியில் தங்களை வந்து பார்க்கவேண்டுமென்று நினைத்திருந்தேன். சற்று நேரத்திற்கு முன்புதான் தங்களைக்குறித்து எனது நண்பரிடம் பேசிக்கொண்டிருந்தேன். நம்மிருவருக்கும் இருக்கும் பாஸ்பர வாஞ்சையானது தங்களைக் கொண்டுவந்து சேர்த்துவிட்டது.

ராமாநுஜலு நாயுடு.—வழக்கப்பிரகாரம் நீ வருவாய் வருவாய் வருவாயென்று காத்திருந்து பார்த்தேன். உனக்கு இப்போது விசேஷஜோலிகள் ஏற்பட்டு விட்டதாகக் கேள்விப் பட்டேன். ஆகையால் இனி உன்னை எதிர்பார்ப்பதில் பிரயோஜன மில்லையென்று என் மனதில் பட்டதால் நாமாவது போய்ப் பார்த்து விட்டு வாலாமென்று வந்தேன்.

பெருமாள் நாயுடு.—அண்ணா! நீ கேள்விப் பேச்சுகளை யெல்லாம் நம்பாதே. என் குணம் உனக்கு நன்றாய்த் தெரியுமல்லவா? ஆகையால் எவனெவனோ சொன்ன கதைகளை யெல்லாம் நம்பிக் கொண்டு நீ என்னைத் திட்ட ஆரம்பிக்காதே.

ராமாநுஜலு நாயுடு.—நான் ஒன்றும் சொல்லாமலிருக்கும் போதே நீ ஏதேதோ பேசுகிறதால் உன்னிடத்தில் குற்றம் இருக்கிறதென்று நம்புகிறேன். "கள்ளமனம் துள்ளியடிக்கும்" என்பதைப்போல் உன்மனதிலிருக்கும் விஷயங்கள் உன்னைப் பாதிக்கின்றனபோ விருக்கின்றது. சரி, அதைக்குறித்துப் பின்னால் பேசிக்கொள்வோம். இவ்விடத்தில் எல்லாரும் சௌக்கியமா யிருக்கிறார்களல்லவா?

பெருமாள் நாயுடு.—எல்லாரும் சௌக்கியந்தான். மதினியார், குழந்தைகள் முதலான எல்லாரும் க்ஷேமந்தான்.

ராமாநுஜலு நாயுடு.—ஆம்; நான் புறப்படும்வரையில் சௌக்யமாய்த்தானிருந்தார்கள். இதுவரையில் எனக்குத் தந்திஒன்றும் வந்திராவிட்டால் சௌக்ய மென்றுதான் நினைக்கவேண்டும்.

பெருமாள் நாயுடு.—அண்ணா! ஸ்நானம் செய்துவிட்டுவா; காப்பிசாப்பிடுவோம்! காலதாமதமாகிறது. எத்தனைநாள் இங்கிருக்க உத்தேசித்திருக்கிறாய்?

ராமாநுஜலு நாயுடு.—ஏனப்பா நாள் கணக்கைக் கேட்கிறாய்? நான் இங்கே யிருப்பது உனது ஜோலிகட்குச் சங்கடமாயிருக்கிறதா? எப்போது தொலைந்து போவானென்று யோசித்துக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறதே?

பெருமாள் நாயுடு.—இல்லை, இல்லை அண்ணா! அப்படி ஒன்றும் வித்தியாசமாக எண்ணவேண்டாம். அன்பின் முதிர்ச்சியாலேயே கேட்டேன். எங்கே இரண்டொரு தினங்களில் புறப்பட்டுவிடுகிறாயோ வென்ற பயமே இப்படி என்னைக் கேட்கும்படிசெய்தது. ஆசைக்கு அளவில்லை. எத்தனைநாள் நீங்கள் இங்கிருந் தாலும் எனக்குச் சந்தோஷமே. உங்கள் வாழ்நாள் முற்றிலும் தாங்கள் இங்கிருந்தால் நான் எவ்வளவு பாக்கியசாலியாக இருப்பேன்.

ராமாநுஜலு நாயுடு.—இரண்டு மாதம் ரஜாவில் வந்தேன் இந்த இரண்டு மாதமும் இங்கிருப்பதாய்த்தான் உத்தேசித்திருக்கிறேன்.

பெருமாள் நாயுடு.—யாரடா சேவகன்! ராமனைக் கூப்பிடு. அடே ராமா! அம்மா அவர்களிடம் அண்ணா வந்திருக்கிறானென்று சொல்லு. சரியாய்க் காப்பித்தூள்போட்டு நல்ல காப்பி

யும் பலகாரங்களும் தயார்செய்து என் அறையில் கொண்டுவந்து வை. தெரிந்ததா நான் சொன்னது? பலகாரங்களும் காப்பியும் சரியா யில்லாவிட்டால் அண்ணன் சாப்பிடமாட்டான். அவர் இங்கு இரண்டுமாதம் இருக்க உத்தேசித்திருக்கிறார். ஆகையால் என் அறைக்குப் பக்கத்தறையைச் சுத்திசெய்து உடனே வேண்டிய சௌகரியங்களைச் செய். சரியாய் நடந்து கொள்ளாவிட்டால் உன் முதுகுத்தோலை உரித்து விடுவேன் ஜாக்கிரதை!

என்று சொல்லிவிட்டுத் தன் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார். ராமாநுஜலு நாயுடு ஸ்நாநம் செய்துவிட்டு வந்தவுடன் இருவரும் ஒன்றாயிருந்து சாப்பிட்டார்கள். அப்பால் ராமாநுஜலு நாயுடு விடம் விடை பெற்றுக்கொண்டு பெருமாள் நாயுடு தன் உத்தியோகத்திற்குச் சென்றார். ராமாநுஜலு நாயுடு ரயிலில் சரியாய்த் தூங்காததால் படுத்து நித்திரை செய்தார். பெருமாள் நாயுடு மத்யானம் வீட்டிற்கு வந்து தனது நண்பருடன் சாப்பிட்டு விட்டு உத்தியோகத்திற்கு மறுபடியும் போய்விட்டார். ராமாநுஜலு நாயுடு காலையிலெல்லாம் நன்றாய்த் தூங்கினாராதலால் பொழுது போக்குக்காக ஒரு கதைப்புஸ்தகத்தைக் கையிலேந்தி வாசித்துக்கொண்டிருந்தார். சுமார் ஒருமணிநேரத்திற்கப்பால் அந்தத் தெருவிலுள்ள பெண்களில் அநேகர் ஒவ்வொருவராய் பெருமாள் நாயுடுவின் வீட்டிற்கு வந்து அவ்விடத்தில் அவர்கள் போட்டுக்கொள்வதற்காகத் தயாராய் வைத்திருந்த பெரிய வெற்றிலைச் செல்லத்திலிருந்து பாக்கும் வெற்றிலையும் எடுத்துப்போட்டுக்கொண்டு வழக்கப்பிரகாரம் முந்தின நாள் மத்தியானம் முதல் அவர்கள் வரும் வரையில் பார்த்தும் கேட்டுமிருந்த ஊர் வம்புகளைப்பேச ஆரம்பித்தார்கள். அப்போது பெருமாள் நாயுடுவின் தாயாராகிய பாலம்மாள் அவர்களைச் சற்று தாழ்ந்த குரலுடன் பேசும்படி சொன்னாள். அவர்கள் "ஏன்" என்று கேட்டதற்கு அந்தம்மாள் ஜவாப்பு சொல்லுமுன் பெருமாள் நாயுடு அவர்களின் தர்மபத்தினியாகிய செல்லம்மாள் குறைந்தது இரண்டு வீடுகள் வரையில் கேட்கும்படியான தாழ்ந்த குரலுடன் "அவர் அண்ணன் வந்திருக்கிறார்" என்றாள். "யார் அண்ணன்" என்று ஊர்வம்பி கேட்டாள். யார் என்று உனக்குத் தெரியவில்லைபோலிருக்கிறது. "படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோயில்" என்பதுபோல் பேசுவதும் எழுதுவதும் பிரசங்கிப்பதும் ஒருவாறுயிருக்க சதா பாக்யரத்னம் பாதமே கெதி யென்றிருக்கும் எங்கள்

வீட்டுக்காரருடைய அண்ணன்"; என்றாள் செல்லம். "என்னடீ? வேடிக்கை பேசுகிறாய்; உங்கள் வீட்டுக்காரருக்கு அண்ணனேது தம்பியேது? எங்களுக்கெல்லாம் தெரியாததுபோல் புதிதாய்ச் சொல்லுகிறாயே." என்றாள் ஊர்வம்பி. "ஆமாம்; கூடப்பிறந்தால்தான் அண்ணன் போலிருக்கிறது" என்றாள் செல்லம்.

ஊர்வம்பி.—பின் யாரடீ! சொல்லேன் கேட்போம்.

செல்லம்மாள்.—அவருடன் கூடவே வாசித்துவந்த நண்பராம். அவரைக்கண்டது முதல் அவருக்குக் கால் தலை ஒன்றும் தெரியவில்லை. தன் தாயாதியுமல்ல; பந்துவுமல்ல; அப்பேர்ப்பட்டவரைக் கீழேகூட விடக்கூடாதென்று தன் தலையிலேயே கூடுமானால் தூக்கிவைத்துக் கொள்வார். ஐயோ இன்று காலையில் அவர் வந்தவுடன் இந்த வீடு பட்ட பாட்டைப் பார்த்தாலல்லவா தெரியும்! எந்தச் சனியன் வந்தாலும் எனக்குத்தான் கேடு. முதலில் அந்த அறையிலிருந்த என் சாமான்களையெல்லாம் வாரி இறைத்தாய் விட்டது. இவ்வளவு பெரியவீட்டில் எத்தனை அறைகள் இருக்கின்றன. அவைகளெல்லாம் அவருக்குச் சரிப்படாதென்று என்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளினதைப்போல் தள்ளி அவனைக் கொண்டுபோய் அந்த அறையில் நீட்டிவைத்திருக்கிறது. இந்தமட்டோடு ஒழிந்ததா? இன்னும் இரண்டு மாதத்திற்கு இங்கேயே இருந்துகொண்டு பன்றியைப்போல் திங்கப் போகிறானும். இந்த ஊர் இழவுக்கெல்லாம் அழ யாரால் முடியுதம்மா? இப்போதே ஊருக்குழைத்து என் தேகத்தில் ஒரு முழு எலும்புகூடக் கிடையாது. இன்னும் இந்த 'சாவான்' போவதற்குள் என்னைக் கட்டையில் கட்டாயமாய் வைத்துவிடவேண்டியதுதான். இன்று காலையில் உப்புமாவு செய்ததில் நெய் சரியாய் சேர்க்கவில்லையென்று குதிரைச் சவுக்கெடுத்துக்கொண்டு ராமனை அடிக்கவந்தார். அவன் அம்மா அவர்கள் உத்திரவுப்படி செய்தேனென்று சொன்னான். இந்த ஊர் இழவுக்கெல்லாம் வயணமாய் வடித்து வட்டிக்க யாரால் முடியுமம்மா? இவ்வளவு கஷ்டம் என்னத்திற்கு? ஓட்டலுக்குப்போய்த் தொலையக் கூடாதா?

ஊர்வம்பி.—என்னடி பைத்தியக்காரியாயிருக்கிறாய், ஓட்டலுக்குப் போனால் முடிச் சவிழ்க்கவேண்டாமா? மேலும் அவன் போட்டதை மூச்சுவிடாமல் தின்றுவிட்டு எழுந்திருக்கவேண்டும். இல்லா விட்டால் சுடச்சுட குழம்பை மூஞ்சியில் ஊற்றிவிடுவான். வாட்ட சாட்டமாய் அதிகாரத்துடன் சாப்பாடு போடப் பைத்

தியம் ஒன்றிருக்கும்போது என் ஒட்டலுக்குப் போவான்?

தெருச்சுத்தி.—ஏண்டி, ராமக்கா நீதான் சொல்லு, இந்தச் செல்லத்தைப்போல் இவ்வளவு துப்புக்கெட்டவள் யாராவதுண்டா? புருஷன் சம்பாதிப்பதை யெல்லாம் அவனிஷ்டம் போல் செலவுசெய்கிறுன். போதாக்குறைக்கு இருக்கிறதையும் துடைத்துவிட்டுப் போக இப்போது சிநேகித உபசாரங்கள் வேறே நடக்கிறது.

ராமக்கா.--என்னத்தைச் சொல்லுகிறது? நானும் பத்துவருஷம் வாழ்ந்துதான் அறுத்தேன். இப்படியா? இந்த அநியாயமா? போவான் வருவானுக்கெல்லாம் சப்ளையா? இருக்கிறதெல்லாம் அந்த முண்டை வீட்டுக்கா? செல்லத்துக்குப் புருஷனே அடக்கியாளத்தெரியவில்லே. நான் என் புருஷனைப் பம்பரம்போல் ஆட்டிவந்தேன். என் கொடுமை பொறுக்காமலே அவர் சீக்கிரம் போய்விட்டார் என்று ஊரார் சொல்கிறுர்கள். ஆனுலும் என்ன? செல்லத்தைப்போல் எனக்கு இளிச்சவாய்ப்பட்டம் வாராதல்லவா?

ஊர்வம்பி.—மருந்து இருந்து, வைத்து சரிபடுத்திக்கொண்டாலொழிய சாத்தியப்படாதடி யம்மா. போன சித்திரையில் தான் கோயமுத்தூர் காமாக்ஷி பெண்ணுக்கு ருதுசாந்தி யாச்சு. அதற்குள்ளே அவள் நாலுமாசம் முழுகாமலிருக்கிறுள். நம்ம செல்லத்தைப்பாரு இன்னும் ஒண்டிமரமாக நிற்கிறுள்.

ஆமணக்கம்மாள்.—அவன் நோக்கமறிந்து நடக்க உனக்குத் தெரியவில்லே போலிருக்கு. அதனுல்தான் அந்தத் தேவடியாளேக் கட்டிக்கொண்டு அழுகிறுனுக்கும். நன்ருய் நாலு கறியோடே பண்ணி வைத்து இனிப்பாய்ப் பேசி இஷ்டப்படி யிருந்தால் அவன் தான் இப்படிக் கெட்டலேவானு? நீ தான் ஒண்டிமரமா இப்படி நிற்பாயா?

பாலம்மாள்.—அடுத்த தெரு சுப்பம்மா மகளேத் தெரியுமா? பார்த்தால் சிறு பெண்போலத்தான் இருக்கிறுள். அதற்குள்ளே பொத்து பொத்தென்று ஐந்துகுட்டிகளே பெற்றுவிட்டாள். எப்படித் தான் பெற்ருளோ? நாசமாய்ப்போக, அவளேக் கட்டையிலே வைக்க, என்மருமகள் அதிர்ஷ்டம் ஒரு காய்ப்புக்கூட இன்னும் காய்க்கவில்லே.

அலமேலு.—எதற்கும் காலம் வரவேணுமம்மா; குட்டிசாமி முதலியாருக்குக் கலியாணம்பண்ணி பதினுறு வருஷமாயிற்று.

இதுவரை குழந்தையே யில்லையே யென்று போனவருஷந்தான் வேறுகலியாணம் நடந்தது. இதற்கு மத்தியிலே இதுவரையில் காய்க்காத மூத்தவள் இப்போ வழுமாசமாக முழுகாமலிருக்கிறாள். இதென்ன அதிசயமடியம்மா? புதியவள் அவ்வளவு அதிஷ்டக் காரியல்லபோலிருக்கு.

ஊர்வம்பி.—ஊரிலே தெருவிலே கிடக்கிற கழுதைகளெல்லாம் காய்க்கிறபோது நம்ம செல்லத்துக்கு என்ன குறைவு? அழகுக்குக் குறைவா? அதிஷ்டத்துக்குக் குறைவா? அம்சைக்குக் குறைவா? ஆளுக்குக் குறைவா? அறிவுக்குக் குறைவா?

ராமக்கா.—ஆமாம்; அவள் அதிஷ்டத்தைச் சொல்லு. என்ன அதிஷ்டமடி யம்மா?

ஊர்வம்பி.—என்னடி இப்படிச்சொல்லுகிறாய்? அவளுக்கென்றே ஒரு மோட்டார்வண்டியும் இரண்டு குதிரைவண்டிகளும் வாங்கிவிட்டிருக்கிறது. விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களும் தட்டுமுட்டுசாமான்களும் இங்கே வேலை செய்வதற்குப் போதுமான ஆள்களும் இருக்கிறார்கள். இவ்வளவு இருக்கும்போது அவளுக்குக் குறையென்ன?

ராமக்கா.—இவ்வளவிருந்தும் என்ன பயன்? ஓரிடத்திற்குப் போக வேண்டுமானால் புருஷன் உத்தரவு வேண்டும். ஏதோ நினைத்தோம் குழந்தையைத் தூக்கி கக்கத்தில் போட்டோம் போனோமென்பது உண்டா? இவ்வளவு நிர்ப்பந்தமாயிருக்க யாரால் முடியுமடி! அந்த மந்திரகாரனிடம் போய்க்கேட்டு அவள் புருஷனுக்கு சரியான எற்பாடு செய்துவிட்டால் அப்பாலே எல்லாப் பாக்கியமும் அவளுக்குத்தான்.

பாலம்மாள்.—ஆமாம், அதற்கேதாவது எற்பாடு செய்ய வேண்டும். என் மகனை ஒரு கட்டி திட்டத்தில் வைத்தாலொழிய இந்த வீடு தலையெடுக்கப் போகிறதில்லை. ஊருக்கெல்லாம் இறைத்து உருமாறித் துரும்பாய்ப் போய்விட்டான். நீ அன்றைக்குச் சொன்ன மந்திரக்காரன் எங்கே யிருக்கிறான்?

ஊர்வம்பி.—எனக்கு அவ்வளவு தெரியாது. காமாக்ஷியம்மாளைக் கேட்டுவந்து சொல்லுகிறேன். அவள் அரையணாவுக்கு சுண்ணாம்பைத் தடவி ரூபாயாக்கி சில்லரை மாற்றி, கொண்டை நிறையப் பூ முடித்துக்கொண்டு போனவள். அவள் சாமர்த்தியம் யாருக்கு வரும்? அவளுக்கு எல்லாம் தெரிந்திருக்கும். நேரமாச்சு; நாளைக்கு வருகிறேன்.

என்று சொல்லி ஊர்வம்பி எழுந்திருக்கவே எல்லாரும் எழுந்தார்கள். அன்றியும் அன்றையதினம் வீட்டிலே விருந்தாளி யொருவர் வந்திருந்தபடியால் அதிகநேரம் சபை நடக்கவில்லை. இவ்விதமான சபைகள் முற்காலத்தில் அதிகமாகஇருந்தன. இப்போது அவ்வளவுக்கு அதிகமாய் இல்லாவிட்டாலும் எப்போதுமே அவைகளுடைய சேர்க்கைக்கும் செல்வாக்குக்கும் தாழ்வு கிடையாது. அந்த மகா சபைகளில் நடத்தப்படும் தீர்மானங்களுக்கும் அப்பீல் இல்லை. ஆற்றோரங்களிலும், உற்சவகாலங்களிலும், கலியாண வீடுகளிலும், ஜலம் திரட்டப்போகும்போதும், மத்தியான காலங்களிலும் இந்த சபைகளின் ஆர்ப்பாட்டங்கள் எங்கும் காணலாம்.

அவிவேக மாதர்களின் காரியங்களெல்லாம் இப்படித்தானிருக்கின்றன. ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே, இது உலகஅநுபவம். படிப்புள்ள பாக்கியவதியாயிருந்தால் அதற்கேற்றபடி அவளுடைய நடவடிக்கைகளும் அடக்க ஒடுக்கமும் உத்தமமான சம்பாஷணைகளும் வேறுவிதமா யிருக்கும். அவள் ஒழிந்த காலங்களில் பத்திரிகை புஸ்தகங்களோடு பேசி தனக்குள் தானே மகிழ்ந்து இன்புறுவாள். வித்தியாவிதிகளான சிநேகிதிகளின் ஸல்லாபத்தையே நாடுவாள். அத்தகைய குணவதிகள் நால்வர் கூடிவிட்டால் அவர்களின் ஆநந்தத்திற்குக்கேட்கவேண்டுமா?

"நற்றாமரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாப்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம்."

நமது தேசத்துப் பெண்களுக்கு நல்ல பழக்கங்கள் ஏற்படுகிறதில்லை. அவர்கள் பாடசாலைகளிற் படித்த போதிலுங்கூட அந்தப் படிப்பு நான்காவது வகுப்புடனோ அதற்கு முன்னதாகவோ முடிந்து போகின்றது. இந்தப் படிப்பினால் என்ன பிரயோஜனம்? பாடசாலைகளில் பெண் பாலர் நீடித்து கல்வி பயில வேண்டுமென்ற விஷயத்தை நாம் இங்கு வற்புறுத்த வரவில்லை. அப்படி நாம் வற்புறுத்தினாலும் இது சுலபத்திலிருக்கிறதா? ஐந்து ஆறு வயது குழந்தைகளுக்கு நடக்கிற பாலவிவாகக் கொடுமையைத் தவிர்க்கிறதற்கே நம்மவர் சக்தியற்றவராய் இருக்கின்றனர். பிரஸங்க மேடைகளில் ஏறி கம்பீரமான வார்த்தைப் பந்தல்கள் சிங்காரிக்கின்ற தக்கோர்களே இந்தப் பால்ய விவாகத்தைத் திருத்தத் தவறி விடுகிறதுடன் தாங்களே நடத்துவிக்கவும்

நேர்கிறபோது, மற்றப் பிரேரபணைகளின் கதி இன்னவிதமாகத் தான் முடியுமென்பதையும் நாம் நன்றாகத் தெரிந்துதா னிருக்கிறோம். ஆகவே நடக்கிற காரியத்தைப் பார்ப்பதே உசிதமென்று நம் மனதில் படுகிறது. நமது சிறுமிகள் பாடசாலையை விட்டு வந்துவிட்ட போதிலும், வீட்டிலே அவர்களுடைய படிப்பை விர்த்தி படுத்திக் கொள்வதற்கான சாதனங்களைப் பெற்றோர்கள் தேடிவைக்கவேண்டியது முக்கியம். இது நமது மக்களுக்குச் செய்கிற அநுகூலமாகக் கருதப்படாமல் பெரிய தேசோபகாரமாகவே பாவிக்கப்படும். பெண்பாலர் அஞ்ஞான இருளி னின்றும் கரைபேறுவாரானால் புருஷர்களின் லோகோபகாரமான முயற்சிகள் பயன்படுவதோடுகூட, அவர்களுக்கு ஒரு ஊன்றுகோலாகவும் முக்கியமான தூண்டுகோலாகவும் இருந்து நாட்டின் அபிவிர்த்தியின் முன்னேற்றத்திற்கு முக்கிய ஹேதுக்களுமாவார்கள். சிறிய விதையிலிருந்துதான் பெரிய ஆலவிருக்ஷம் உண்டாகின்றது. தேசமெங்கும் விரைந்து ஓடிச்சென்று பாழ் நிலங்களையெல்லாம் செழிப்பித்து உலகத்தாருக்கு அன்னவஸ்திரம் உபகரிக்கின்ற நதிகளும் அற்பமான ஒரு சுனையிலிருந்துதான் ஆரம்பமாகின்றது. ஆகவே நாம் எதை சாமான்ய மானதென்று அலக்ஷியம் செய்கிறோமோ அது தான் பின்னுக்கு இமயகிரி பர்வதம் போல் பெரிதாகி அநேக பொல்லாங்குகட்கும் எதுகாமாக நேரலாம். மனோதத்துவ சாஸ்திர நீதிப்படிக்கும், தேர்ந்த கல்வியறிவு ஆடவர்களினும் மாதரார்க்கே பதின்மடங்கு அத்தியாவசியகமாகின்றது. ஆடவர் கல்வி வெளிப்பார்வையில் மட்டுமே பயன் தரும்; மாதரார் கல்வியோ கர்ப்பத்துக்குள் ளிருக்கும் சிசுவையும் கல்விக் களஞ்சிய மாக்கிவிடச் செய்தல்கூடும். வைத்திய சாஸ்திரமும் இதற்கநுகூலமாகவேயிருக்கிறது. ஒருஸ்திரீ கருத்தரிக்குங் காலையில் எவ்வித மனோபாவத்தை அடைந்திருக்கிறாளோ அதே வித ரூபமே அவளிடத்து உற்பவிக்குஞ் சிசுவுக்கும் ஏற்படுகின்றது. இப்படியே அந்தஸ்திரீ, தான் கர்ப்பவதியாயிருக்கும்போது என்னென்ன விதமான நடவடிக்கைகளுள்ளவளா யிருக்கிறாளோ அதற்கொத்ததாகவே அவளது சிசுவுக்கும் அமைகிறதென்பது சாஸ்திரக் கொள்கையும் அநுபவத் துணிபுமா யிருக்கின்றது.

ஆகவே ஒரு ஸ்திரீ வித்யா ரத்நமாயிருந்து அதே சிந்தனையில் தனது பத்துமாதக் கர்ப்பகாலத்தையும் செலவிடுவாளாயின் அவளுக்குப் பிறக்கும் குழந்தையும் அவ்விதமே கல்வியறிவுள்ள

தாகுமென்று சாஸ்திரவல்லோர் சாற்றுகின்றனர். நாரதமகா ரிஷி ஹிரணியாக்ஷஸனுடைய மனைவிக்கு நாராயண மந்திரம் உபதேசிக்கும்போது அவள் வயற்றிலிருந்த சிசுவாகிய பிரஹலாதனுக்கும் அம்மந்திர தியானம் சுதாவிலேயே உண்டானதாகவும் அவர் பரம பாகவதராணுரென்றும் பாகவதத்தில் நாம் வாசிக்கவில்லையா ? இவ்விதமாக ஒரு சிசுவைத் தாம் நினைத்தபடியே உருவாக்கும் சக்தி சாமர்த்திய சாகஸங்கள் பெண்பாலருக் கமைந்திருக்கின்றன. தாயைப்போலப் பிள்ளையென்ற பழமொழியும் இதையே வற்புறுத்தி வியாக்கியானிப்பதாயுள்ளது. ஸ்திரீ சக்தி விசேஷம். இவ்வாறெல்லா மிருப்பதால் அவர்களின் அறிவைப் பிரகாசிக்கச் செய்விப்பதாகிய கல்வியை அவர்களுக்குப் போதுமானமட்டில் வீட்டிலாகிலும் அபிவிர்த்தி செய்துகொள்ள மார்க்கங்கள் அமைத்து வைப்பது உத்தமோத்தமமான கைங்கரியமாகு மென்னலாம். இப்படிச் செய்வதிலும் நமது வற்புறுத்துதலின்றி அவர்களே தங்களின் கல்வியை விர்த்திசெய்துகொள்வதற்கான வழி வகைகளை நாம் உண்டாக்கிவைப்பது நல்ல யுக்தியான காரியமா யிருக்கும். தானே பெருகிவருகிற ஆற்றின் ஜலத்திற்கும், நமது தூண்டுதலால் வரும் குழாய் ஜலத்திற்கும் உள்ள பேதம் யாவரும் அறிந்ததேயாகும். கதைகளிலும், தேச சமாசாரங்களை யறிவதிலும் சிறு குழந்தை முதற்கொண்டே ஆவலேற்படுவது யாவருக்கும் சகஜம்.

பிறர் தூண்டுதலால் வெளிப்படுகிற குழாய் ஜலத்தின் ஸ்திதியிலுள்ள நமது பெண்பாலருக்குக் கதைகளிலும், சமாசாரப் பத்திரிகைகளிலும் அபிருசி தோன்றுமாறு நாம் கொஞ்சம் சிரமமெடுத்துக்கொண்டு அவர்களைப் பழக்கிவிடுவோமாயின், பிறகு நமது முயற்சியொன்றும் அவர்களுக்கு வேண்டியிராது. ஆற்று ஜலத்தைப்போலத்தானே ஊற்றெடுத்துப்பிரவாகிக்கும் ஸ்திதிக்கு அவர்கள் வந்துவிடுவார்கள். அவர்களே மேலும்மேலும் விஷயங்களை அறிய முற்பட்டுப் பத்திரிகைகளை வாசிக்கத் தொடங்குவார்கள். நூதன கதைகளை வாசிக்க வாசிக்க அவர்களுக்கு ஆவல்மேலிட்டு அதினுல் அவர்கள் அறிவு விசாலம்பெற்று சாவகாசமான நேரங்களி லெல்லாம் புஸ்தகங்களே ஹஸ்த பூஷணங்களாகக் கொண்டுவிளங்கி மேன்பாடுறுவர். இந்த இருவித உபாயங்களாலும் அவர்கள் தங்களுக்குத் தாங்களே விர்த்தியடைதல் கூடுமானதாகும். இவ்விதமாக, வித்தியாபிவிர்த்தியில் ஸ்திரீகளுக்கு சுதா

வில் ஆர்வமேலிடச்செய்து அவாவை மூட்டி அபிவிர்த்தி நலம் நாட்டினால் மட்டும் காரிய சாதகம் கைகூடும்.

இதனால் பெண்களுக்கு அவர்கள் வீட்டு வேலைகளில் உழைக்கும் காலம்போக ஒழிந்த நேரமெல்லாம் உலகத்திலுள்ள பல இயற்கை அற்புதங்களைப்பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் பிரீதி வரவர அதிகரித்துவரும். அவர்கள் சும்மா வீண் காலம் போக்க விரும்பார்கள். தங்கள் அறிவை விர்த்திசெய்துகொள்வதில் அவர்களுக்கு அப்போதைக்கப்போது நேரும் பல விக்னங்களையும் இடையூறுகளையும் லக்ஷியம் செய்யாமல் மென்மேலும் ஊக்கமும் முயற்சியும் விர்த்தியடையவே அவர்கள் வரவர புராண இதிகாசங்களையும் கருத்தோடு வாசிக்கத் தொடங்குவார்கள். அதனால் மாதரின் மனதை மயங்கிக் கலங்கச்செய்யும் அறிவீனமானது ஆரியனைக்கண்ட பனிபோல் அவர்களை விட்டுப் பறந்தோடும். அவர்கள் ஜெபதபவிரத சீலர்களாய் இயன்றமட்டும்அறநெறி பிசகாது நிற்க முயல்வர். தர்மாதர்ம விமர்சைகள் அவர்கள் மனதில் நல்வரமடையும். இம்மை மறுமைப் பலாபலங்கள் இன்னவென்று உணர ஹேது உண்டாகும். கூட்டுறவின் பிரயோஜனங்கள் அவர்களுக்கு வெளியாகும். இராஜ விசுவாசம், சுதேச வைராக்யம், பரோபகாரம், தேவதா பக்தி முதலான நற்குணங்கள் இயல்பாகவே அவர்களுக்கு உண்டாகும். புருஷருக்கும் ஸ்திரீகளுக்கும் மனஒற்றுமையும் சிநேகமும் குடும்பத்தில் சமாதானமும் உண்டாகும். இதனால் நமது நாட்டில் நாகரீகம் சிறப்புற்றோங்கும்.

இது நிற்க, ராமாநுஜலுநாயுடு தமது அறையில் இவ்வாறான பலவித ஆலோசனைகளில் மனதைச் செலுத்திக்கொண்டிருந்தார். கையிலேந்திய புஸ்தகம் அப்படியே இருந்ததாயினும் அவருக்கு அதிற்கவனம் புகவில்லை. தன்னைப்பற்றி ஸ்திரீகள் மஹா சபையில் நடந்தேறிய பிரசங்கங்கள் அனைத்தையும் ஒரு வார்த்தைகூடப் பிசகாமல் செவிசாய்த்துக் கேட்டார். என்றாலும் அதனால் அவர் சற்றும் மனவருத்தமடையவில்லை. எவ்வளவோ வித்தியாவந்தனும் சாமர்த்திய சாலியுமான தனது நண்பனுக்கு இப்படிப்பட்ட இரண்டு ஸ்திரீரத்தினங்கள் தாயும் தாரமுமாக வாய்த்ததைக் குறித்து வெகுவாய் வியாகூலமடைந்தார். உண்மைக்குப் பொய்யும், கருமைக்கு வெண்மையும், இருளுக்கு வொளியும், கற்புக்கு முன் வியபிசாரத்துவமாக இப்படி ஒன்றுக்கொன்று எதிரிடையாய் உலகமிருப்பது நோக்கிச் சிறிதுநேரம் சிந்தனையிலாழ்ந்திருந்

தார். அவரது யோசனைகள் வளர்ந்து விசாலித்துக்கொண்டே யிருந்தன. என்ன ஆச்சரியம்! படித்தவனுக்கு படிப்பறியாத எருமையையும் தக்க படிப்புள்ள குணசாலியான பெண்ணுக்கு ஒரெழுத்துமே தெரியாத ஒட்டகத்தையும் கொண்டு வந்து மண முடிப்பிக்கின்றார்களே! இதென்ன பரிதாபம் என்று கலங்கினர். மருந்து வைக்கிறதாம்—ஐயோ! இதென்ன பைத்தியம்!! இப் படிப்பட்ட பேதை மாதர்களும் நமது நாட்டில் மிகுந்து கிடக்கின் றார்களல்லவா? இவர்களை யெல்லாம் சீர்திருத்துகிற தென்றால் சுலப சாத்தியமாவென்று பெருமூச்சு விட்டார். தான் கேட் டதை யெல்லாம் தமது நண்பரிடம் சொல்லலாமா வென்று யோசித்தார். அப்படிச் சொல்லுவதால் அவருக்கும் அவர்குடும் பத்திற்கும் ஏற்பட்டிருக்கும் மனத்தாங்கல் இன்னும் அதிகமாக வளருமென்று நினைத்ததால் அப்படிச் செய்யக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டார்.

இதற்குள் மணியும் நாலாயிற்று, பரிசாரகன் வந்து நாயுடு அவர்களைக் கைகால் சுத்தி செய்துகொண்டு பலகாரம் சாப்பிடும் படி சொன்னன். அவர் தனக்கு உடம்புக்குக் குணமில்லை யென் றும் தனக்கு ஒன்றும் வேண்டியதில்லை யென்றும் சொல்லிவிட்டு சமுத்திரக்கரைக்கு உலாவப்போனர். மாலை ஏழுமணியானதும் வீட்டிற்கு வந்தார். அவர் வருவதற்குச் சற்று முன்தான் பெரு மாள் நாயுடு அவர்கள் வீட்டிற்கு வந்தார்கள். இருவருமாகச் சாப் பிட்டானபிறகு நிலா வெளிச்சத்தில் பூங்காவனத்தில் சாய்வு நாற் காலிகளின்மேல் இருவரும் ஏகாந்தமாய்உட்கார்ந்துகொண்டு தாம் பூலம் போட்டுக்கொண்டே பின்வருமாறு பேச ஆரம்பித்தார்கள்.

பெருமாள் நாயுடு.—அண்ணா! இன்றையதினம் தாங்கள் யாதொரு வேலையுமின்றி ஏகாந்தமாய் இவ்விடத்தி லிருந்தது அதிக கஷ்டமாயிருந்திருக்குமென்று நினைக்கிறேன். இன்று தங் களுக்கு எப்படிப் பொழுது போச்சோ தெரியவில்லை?

ராமாநுஜலு நாயுடு.—அப்பா! பட்டணத்திலே பொழுது போவதற்குச் சொல்லவும் வேண்டுமா? என்போன்ற பைத்தியக் காரருக்குக் காலத்தைக் கழிப்பதற்குத் தேவையான கதைப் புஸ்தகங்களும் சமாசாரப் பத்திரிகைகளும் நிறைந்திருக்கின்றன. இன்னும் சுகமாகப் பொழுது போக்கவேண்டுமென்றால் கோச்சு வண்டியில் உல்லாசமாய் சாய்ந்துகொண்டு சமுத்திரக் கரையில் உலாவலாம். இராப்பொழுதைக் கழிப்பதற்குப் பார்சிநாடக கம்

பெனிகளும், இந்து நாடக கம்பெனிகளும் சர்க்கஸ் கம்பெனிகளும் பையாஸ்கோப், சினமோடோகிராப், கம்பெனிகளும் நல்வரவு கூறி அழைக்கின்றன. சங்கீதப் பிரியர்களுக்காக கச்சேரிகளும், கதாப் பிரசங்கங்களும் மூலைக்குமூலை நடந்தேறி வருகின்றன. நிஜபக்தர்களுக்கும் வேஷதாரிகளுக்கும் பகவத்கீதை ஸ்கந்த புராண பிரசங்கங்களும், பாதிரியார்களின் பிரசங்கங்களும் நடந்தேறி வருகின்றன. பலர் கூடிப் பேசுவதற்கும் விளையாடுவதற்கும் பல கிளப்புகள் இருக்கின்றன. இன்னும் உன்னைப் போன்றவர்கள் ரமிப்பதற்குத் தேவையான வேசியாக்கிரஹங்களும் அபரிமிதமாயிருக்கும் இச்சென்னையில் பொருள்மட்டும் இருந்தால் குறைவு என்ற வார்த்தையும் வருமோ?

பெருமாள் நாயுடு.—அண்ணா? மெதுவாய் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைப்போல் பேச ஆரம்பித்துவிட்டாய். என்னைப் பற்றி நீ கொண்டிருக்கிற அபிப்பிராயம் சிறிதேனும் பொருத்தமுடையதல்ல. அவ்வளவு அபாசக்களஞ்சியமாகவா என்னை நீ கருதிவிட்டாய்! ஐயோ! உலகம் பலவிதமென்பது உன்னிடத்தில்தான் விளங்கக்கண்டேன். ஆராய்ந்து பார்க்கில் என்னைப்போல் அவ்வளவு பரிசுத்தமான இருதயத்துடன் வேறெவராவது இருப்பாரோ என்பதே சந்தேகமாகின்றது. இவ்வளவு பேசும் நீ கூட என்னைப் போல் அவ்வளவு கிரமஸ்தனாய் இருப்பாயோ என்பது சந்தேகம்.

ராமானுஜலு நாயுடு.—பேஷ்! பேஷ்!! அப்படியா! ரொம்ப சந்தோஷம். பூனையானது கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடித்துவிட்டு ஒருவரும் பார்க்கவில்லையென்று நினைத்துக்கொள்ளுமாம். அதைப்போல் நீ செய்யும் அபாசமான காரியாதிகள் ஒருவருக்கும் தெரியாதென்று நினைத்துக்கொண்டு இப்படிப் பேசுகிறாய். நீ சாக்ஷாத் ராமசந்திர மூர்த்தி அவதாரமல்லவா! நீ நிரம்பவும் கிரமஸ்தன்; அதிலும் பரநாரி சகோதரன்!! ஏகபத்னி விரதன்!!! இரும்புத் தூணைச் செல்லரிக்குமா? உன்னைப்பற்றி எவராகிலும் குறை கூற முடியுமா?

பெருமாள் நாயுடு.—அண்ணா! நீ என்னைப்பற்றி இழிவாக நினைத்திருக்கிறாய். அப்படி நினைப்பதுசரியல்ல. இவ்விஷயத்தைப் பற்றி கோபப்படாமலும் சாவதானமாயும் நியாயமாயும் பாரபட்சமில்லாமலும் என்னோடு பேசுவாயாகில் என்பேரில் கிஞ்சிற்றேனும் தோஷமில்லையென்று உனக்குத் திருப்தியாகும்படி செய்கிறேன்,

ராமானுஜலு நாயுடு.—அப்பா! நீ பேச்சில் வல்லவனென்றும்,

மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் வாதிக்கக் கூடிய வக்கீல்களும் பாரிஸ்டர்களும்கூட உனக்குச் சமானமாய்ப் பேசமாட்டார்களென்றும் எனக்குத்தெரியும். என்னதான் நீசாமர்த்தியமாய்ப் பேசியபோதிலும் உனது நடவடிக்கைகள் எனக்கு சற்றும்பிடிக்கவில்லை.சிறிதுகாலமாகநீ முற்றிலும்மாறியிருக்கிறாய்.

பெருமாள் நாயுடு.—என்னைப்பற்றி உனக்கு யாரோ விபரீதமாய் போதித்திருக்கிறார்கள். அதை நீ நம்பிக்கொண்டு இப்படிப் பேசுகிறாய். உன்மேல் குற்றமில்லை. என்றாலும் ஒன்றையும் ஒழியாமல் உண்மையை உன்னிடம் சொல்லிவிடுகிறேன். நீயே அப்பால் நான் செய்வது சரியா அல்லவா என்று சொல்லு.

ராமாநுஜலு நாயுடு.—சரி ; சொல் பார்ப்போம்.

பெருமாள் நாயுடு.—அண்ணா! நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் ஏதோ கதை சொல்லுகிறேனென்று ஒரு காதால் கேட்டு ஒரு காதால் விட்டு விடாமல் நிதானமாய் கவனி ; எனக்குக் கல்யாணமாகி எத்தனை வருஷங்களாயின வென்று உனக்குத் தெரியுமே. இது வரையில் என் சம்சாரம் என் இஷ்டத்தின்படி எந்த விஷயத்திலாவது நடந்திருக்கிறாளா என்பது உனக்குத் தெரியாதா ?

ராமாநுஜலு நாயுடு.—சீ! சீ! முட்டாள் பயலே. ஏதோ பிரமாதமாய் சொல்லுவதைப்போல் ஆரம்பித்துவிட்டு சாதாரணமாய் ஒவ்வொரு வீட்டிலும் சதா நடந்தேறக்கூடிய விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்து விட்டாய்.

பெருமாள் நாயுடு.—அண்ணா! உனக்கு எப்போதும் முன் கோபமும் அவசரபுத்தியும் தீவிரமான அபிப்பிராயமும் அதிகம். நான் சொல்வதையெல்லாம் கேட்டு அப்பால் உன் அபிப்பிராயத்தைத் தெரிவிக்காமல் ஏன் அவசரப்படுகிறாய்? நான் சொல்வதை சாவதானமாய்க் கேட்டு அதன்பின் பேசு.

ராமாநுஜலு நாயுடு.—சரி; அப்படியே. இனி நீ முடிக்கும்வரையில் நான் தர்க்கித்துக் கேட்கவில்லை. உன் கதையைச்சொல்லிமுடி.

பெருமாள் நாயுடு.—அண்ணா! எனக்கு அறிமுகமானவர்களாவது, பந்துக்களாவது என் வீட்டுக்கு வர, போக, இருக்க எனது மனைவி சம்மதியாள். புருஷன் மனமறிந்து நடக்க அவளுக்குத் தெரியவே தெரியாது. யாராவது வேண்டியவர்கள் வந்தால் சாப்பாடு தயார் செய்யும்படி வேலைக்காரனிடம் தெரிவித்தால் “ இவருக்கு என்ன வேலை. இந்த ஊரெழவுக்கெல்லாம்

அழ யாரால் முடியும்" என்று வந்திருப்பவர்கள் காதுகேட்கும்படி கூவிப் பேசுவாள். யாராவது வீட்டிற்கு வந்து அரைமணி நேரமானாலும் வேலைக்காரிகள் போய் இன்னார் வந்திருக்கிறார்களென்று தெரிவித்தாலும் உடனே வந்து அவரவர்களுக்குத் தகுந்தபடி உபசரிக்காமல் மலைப் பாம்பைப்போல் தன் படுக்கையைவிட்டு எழுந்திராள். இவள் இப்படிச் செய்வதால் வந்தவர்கள் மனம் எப்படி இருக்குமென்றும் அதனால் எனக்கு எவ்வளவு கௌரவக் குறைவென்றும் நீ யோசித்துப் பார். நெருங்கின பந்துக்கள் வந்துவிட்டாலும் வீட்டில் சிடு சிடுப்பும் முறுமுறுப்பும் அதிகமாகி விடுகிறது. இதைப் பார்த்து நான் தலையிறக்க வேண்டியதுதான். மற்றவர்கள் வந்து போவதால் இவளுக்குத் தேகஸ்ரமம் அதிகமாவதா யிருந்தால் இவள் வருத்தப்படக் காரணமுண்டு. இவ்விடத்திலோ வேலைக்காரர் சாமான் வாங்கிக் கொண்டு வந்து போடுகிறார்கள். சமைத்து வட்டிப் பதற்கும் ஆட்கள் இருக்கிறார்கள். இப்படி யிருக்க இவள் ஏன் இப்படியெல்லாம் வருகிறவர்கள் மனதைப் புண்படுத்துவதோடு என்னையும் அவமானப்படுத்த வேண்டும். வேண்டியவரையில் புஸ்தகங்கள் இருக்கும்போது அவைகளை வாசிப்பதில்லை. துஷ்ட ஸ்திரீகள் துன்மார்க்கிகள் இவர்களுடைய கூட்டங்கள் வீட்டில் ஜாஸ்தியாகி வருகிறது. இதையெல்லாம் கண்டிக்கப் போனாலோ பாக்கியரத்னம் சொல்லிக்கொடுத்து இப்படிவேண்டுமென்று திட்டி அடித்து நிர்ப்பந்தப் படுத்துகிறேனென்ற கூக்குரல் உண்டாகிறது. இதுவெல்லாம் எப்படியாவது இருக்கட்டும், புருஷனுடைய மனதைக் களிக்கச் செய்யக்கூடிய சுபாவமாவது, சக்தியாவது இவளுக்கு உண்டோ? ஐயோ! அந்த வெட்கக்கேட்டை வெளியில் சொல்லவும் மனம் கூசுகிறது. இதென்ன சுகம்? இதென்ன இல்வாழ்க்கை! எனக்கு உலகமே வெறுத்துப்போய் விட்டது. எனது ஜென்மத்திற்கு இன்பம் கொடுத்துச் சந்தோஷப்படுத்த வேண்டிய என் பெண்சாதி என் இல்வாழ்க்கைக்கு இடறுகட்டையானாள். அன்றே! திரிமூர்த்திகளாலும், தேவர்களாலும், மனிதர்களாலும் நிவர்த்திக்க முடியாத சிற்றின்பமென்று சொல்லும் இவ்வின்பத்தினின்று நான் மட்டும் விலகியிருக்கக் கூடுமோ? கடவுள், அவரால் சிருஷ்டிக்கப்பட்ட சகலமான பிராணிகளுக்கும் இவ்வுணர்ச்சியை உண்டாக்கி யிருக்கிறாரென்பதை நீ அறிவாய். இவ்வுணர்ச்சி மனிதர்களுக்கு மட்டுமல்

லாமல் மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் மச்சம் முதலிய சகல
பிராணி களுக்கும் நாம் உயிரில்லாததாக பாவிக்கும் செடி, கொடி,
புல், பூண்டு முதலிய தாவர வர்க்கங்களுக்கும் இருக்கிறதென்பது
உனக்குத் தெரியுமல்லவா? சிற்றின்பத்தைத் தவிர்க்கவேண்டு
மென்று பலர் பலவிதத்தில் சொன்னபோதிலும் அதை தவிர்ப்ப
தற்குத் திட்டமான வழிகள் நமது சாஸ்திரங்களிலும் சொல்லப்
படவில்லை. இதற்குத் திருஷ்டாந்தரம் என்னவென்றால் சாஸ்தி
ரப்பியாசமும் யோகாப்பியாசமும் தவிர வேறு வேலை செய்யாத
வர்களாகிய யோகிகளும் இம்மாயையில் அகப்படாமல் தப்பின
வர்களல்லர். சிலர் போட்டுக்கொள்ளும் வேஷத்தாலும் பேசும்
ஞான வாக்கியங்களாலும் எழுதும் பக்திசாரமான வியாசங்களா
லும் செய்யும் பிரசங்கங்களாலும் மஹான்களாக மதிக்கப்படுகிறார்
கள். அந்தோ பரிதாபம்!! ஆனால் ஆராய்ந்து பார்த்தாலோ
அவர் ஸ்திதி முற்றும் ஆபாசமாய் முடியும். அண்ணா! இதனால்
உலகத்தில் யோக்யரே கிடையாதென்று நான் சொல்லவரவில்லை.
ஆனால் அப்பேர்ப்பட்டவர் இன்னார்தான் என்று நம்மால் கண்டு
கொள்ள முடியவில்லை. அவர்களுக்கும் மற்றவர்களைக் குறித்த
அக்கறை சிறிதேனும் இல்லையாதலால் எல்லோரும் நன்மை
அடையக்கூடிய வழிகளைச்சொல்ல அவர்கள் முன்வருவதில்லை.
ஆகவே இச்சிற்றின்பத்தைத் தவிர்ப்பதற்கு உண்டான வழிகள்
சாஸ்திர மூலமாயும் குரு மூலமாயும் தெரிந்து கொள்ளக்கூடா
மையால், அரைவயிறு சாப்பிட்டும் சத்வ ஆகார பதார்த்தங்களைப்
புசித்தும் இன்னும் என்னென்னமோ செய்தும் பார்த்தேன்.
ஒன்றிலும் பிரயோஜனமில்லை. இந்திரிய நிக்ரஹத்துக்காகப்
பிரபல வைத்தியரிடம் நான் மருந்து சாப்பிட்டதின் பலன், இது
வரையில், நோய் என்பது இன்னதென்று அறியாமல் இருந்த
எனக்கு மருந்துகள் சாப்பிட்டபின் பலவிதமான ரோகங்கள்
வந்தன. இதுதான் நான் அடைந்த அநுகூலம். ஆகவே வீட்டி
லும் சுகமில்லாமல் தேகத்தில் பல வியாதிகள் உண்டாகிவிட இப்
பேர்ப்பட்ட பிராணனை வைத்திருப்பதைப் பார்க்கிலும் தற்கொலை
புரிந்துகொள்ளுவதே சிலாக்கியமென்று சில சமயங்களில் தோன்
றிற்று. இப்படி இருக்கும் சமயத்தில் ஒருநாட் காலை ஏழுமணி
சுமாருக்கு சைதாப் பேட்டையிலிருக்கும் ஆற்றின் பாலத்தின்
மீது எனது மோட்டார்காரின் மீது போய்க்கொண்டிருந்தேன்.
பாலத்தின் மீது ஜனத்திரள் அதிகமாயிருந்தது. கூட்டமும் கூச்ச

னும் ஆரவாரமும் சொல்லிமுடியாது. மோட்டார்காரை நிறுத்தி என்ன விசேஷமென்று விசாரித்ததில் ஒரு பெண் ஆற்றில் விழுந்து முழுகிவிட்டாளென்ற செய்தி தெரிந்தது. வண்டியிலிருந்து இறங்கி பார்த்தபோது ஒரு பெண் தண்ணீருக்குள் முழுகுவதும் மேல் வருவதுமாயிருந்தாள். உயிருடன் இருக்கிறளென்று தெரிந்தவுடனே சொக்காயைக் கழற்றி வண்டியில் போட்டுவிட்டுப் பாலத்தின் மீதிருந்து ஆற்றில் குதித்தேன். அங்கு எனக்கு எதுவும் தோன்றவில்லை. பிரவாகமும் அதிகமாயிருந்தது. வெகு பிரயாசையுடன் அப்பெண்ணைத் தேடிக்கொண்டிருக்கையில் அவள் ஆடையின் நுனி சிறிது தூரத்தில் கொஞ்சம் வெளிப்பட்டு மறையவே உடனே அங்கு நீந்திச் சென்றேன். அதற்குள் அந்தக் குறிப்பு மாயமாய் விட்டது. அங்கு அவளைக் காணவில்லை. இங்கு மங்கும் நீந்தித்தேடினேன். கடைசியாக இன்னேரிடத்தில் கருமையான கேசங்காணவே அதைப் பலமாகப் பிடித்து இழுத்தேன். அப்போது ஒரு அழகிய பெண்மணியின் உடலம் சற்று வெளித் தோன்றிற்று. உடனே வெகு கஷ்டத்துடன் அந்த ஆபத்தான சந்தர்ப்பத்தில் பிரவாகத்துடன் எதிர்த்துக்கொண்டு அவளை அப்படியே என் முதுகின்மீது சுமந்துகொண்டேன். ஆனாலும் நிலையற்ற ஆழமானதையால் சற்றும் நிதானிக்க முடியவில்லை. முதுகில் அவளை சுமந்துகொண்டே வெகு சாகஸங்காட்டி நீந்திச் சற்று தூரம் செல்லவும் அங்கிருந்த தண்ணீரின் ஆழம் என் கழுத்தளவுக்கிருந்ததால் அங்கு சிறிது நின்று கொஞ்சம் இளைப்பாறி பிறகு அவளை முதுகில் தாங்கியபடியே ஆற்றின் கரையேறினேன். சுற்றிலும் கூடிய ஜனங்கள் இதைப்பார்த்தபடி நின்றார்களே தவிர உதவிக்கு ஒருவராவது வரவேயில்லை. அச்சிறுமியோ உயிரற்ற பிணம்போல் கிடந்தாள். பலவிதமான உபசாரங்கள் செய்ததில் வெகுநேரத்திற்கப்பால் அப்பெண்மணி கண்விழித்துப் பார்த்தாள். அப்படியிருக்க ஆற்றில் குதித்து நீந்தி அவளை எடுத்தபோது பிரவாகத்தால் இழுப்புண்டு களைப்படைந்து அவள் பிராணனைக் காப்பாற்றுவதில் என் முழு மனதும் சென்றதாயினும் அவளைச் சுமந்து கொண்டு நீந்த முடியாமல் என் பிராணன் தத்தளித்தது. அப்படியிருக்க அவளுடைய தேகம் என் மீது பட்டபோது அந்த ஸ்பரிசத்தால் அதுவரையில் நான் அறியாத ஓர் விதமான உடல் புளகாங்கிதம் உண்டு பண்ணிற்று. முனி புங்கவர்களுக்கும் ஸ்பரிசம் புளகாங்கித முண்டாக்கி அவர்கள்

மனதை சலிக்கச்செய்யும் என்பதில் என்ன சந்தேகம்? மிருதுவான அவள் சரீரமும் சுகுமாரமும் கட்டழகும் என் கண்களைக் கவர்ந்து மனதை வசியப்படுத்தின. என்னை யறியாமலே எனக்கு அவளிடத்தில் ஒருவித அன்பும் நேசமும் பிரியமும் உண்டாயிற்று. பிறகு அவளை எனது மோட்டார்காரில் படுக்கவைத்துக்கொண்டு சைதாப் பேட்டையில் எனக்குப் பரிச்சயமுள்ள வைத்தியரின் வீட்டுக்கு சென்றேன். அங்கு அவருடைய சிகிச்சையால் அவள் முற்றிலும் சொஸ்தமானாள். அப்பால் அவள் எங்கிருப்பவளென்றும் யாருடைய குமாரி யென்றும் அவள் ஆற்றில் விழவேண்டிய காரண மென்ன வென்றும் விசாரித்தேன். அவள் பின்வருமாறு சொன்னாள்.

"என் ஜனனபூமி மதுரை. நான் அங்கே மிக்க ஐஸ்வரியவந்தரான சாரங்கபாணி நாயுடுவின் குமாரத்தி. மதுரைக்கு ஒரு நாடகக்கம்பெனி வந்தது. அக்கம்பெனியில் முத்துசாமி யென்று ஒருவர் இருந்தார். அவர் தேகலாவண்யத்திலும் அவரது பாடல்களின் இனிமையிலும் நான் ஈடுபட்டவளானேன். என் பிதாவுடன் நான் ஒவ்வொரு நாடகத்திற்கும் போய்வந்தேன். நாளுக்கு நாள் முத்துசாமியின் நினைவே எனக்கு அதிகமாயிற்று. அவரும் இதை அறிந்துகொண்டு என்னிடத்தில் அன்புபாராட்டி வந்தார். முத்துசாமி ஸதா சிற்றின்பப் பிரியராதலால் என்னை எவ்விதமேனும் அவர் வலையிற் சிக்கவைக்க வேண்டு மென்று வெகு கவனமாய் இருந்தார். இதனிடையே நான் யுவதித்தன்மை அடைந்தேன். ஆதலால் நான் முன்போலப் பிதாவுடன் நாடகங்கள் பார்க்கக்கூடவில்லை. அப்படிப் போகாமலிருந்தது நான் அவர் மீது கொண்டிருந்த காதலை அதிகப்படுத்திற்று. நாடகக் கம்பெனியும் ஊர்வந்து நான்குமாதங்களானதால் நாகப்பட்டணத்துக்குப் புறப்பட்டுப் போய்விட்டது. இந்த விவரமெல்லாம் விசாரித்து வைத்துக்கொண்டு ஒருநாள் நான் எவருக்குந் தெரியாமல் நாகப்பட்டணத்துக்கு ரெயிலேறிப் போய்விட்டேன். அங்கே கம்பெனியில் விசாரித்து முத்துசாமியைக் கண்டு பிடித்து நெருங்கினேன். என்பிதா மிக்க ஐஸ்வரியவானானதால் நாங்கள் அங்கிருந்தால் எங்களுக்குக் கெடுதிவருமென்று நினைத்து முத்துசாமியை என்னுடன் அழைத்துக்கொண்டு இரங்கூனுக்குச் சென்று அங்கே இருவரும் அந்நியோன்னிய தம்பதிகளாய் எங்கள் காலத்தை மிகச் சந்தோஷமாய்க் கழித்தோம். இப்படி மூன்று வருஷங்கள்

இருந்துவிட்டுக் கடைசியாகச் சென்னையை அடைந்தோம். இந்தச் சமயத்தில் பெங்களூரில் ஒரு நாடகக் கம்பெனியார் முத்துசாமியை அழைக்க அவர் அதற்காகப்போய் மூன்று தினத்தில் திரும்புவதாய்ச் சொல்லிச் சென்றார். அவர் போகும்போது என்னை சைதாபேட்டையில் விட்டுவிட்டுச் சென்றார். பெங்களூர் போன முத்துசாமிக்கு அவ்விடத்தில் பிளேக் உண்டாகி நான்காம் நாளில் மரணமடைந்தார் என்று தந்திவந்தது. இதைக் கேட்டவுடனே நெருப்பில் விழுந்த புழு துடிப்பதுபோல் துடித்தேன். எனது துயரம் என்னால் சகிக்கக்கூடாததால் தற்கொலை செய்துகொள்ள விரும்பி ஆற்றில் குதித்துவிட்டேன். என்னை நீங்கள் கரையேற்றாமல் பிரவாகத்தில் மாண்டு போகவிட்டிருந்தால் மெத்த நலமாயிருந்திருக்கும். என் அன்பனிறந்தவுடனேயே என் பிராணன் அவருடன் போயிற்று. இங்கிருப்பது வெறுங்கட்டை இதை என்மீதேன் சிரமப்பட்டுக் கரையேற்றிக் காப்பாற்றினீர்கள் ?" என்று சொல்லி முடித்தாள்.

[மூடர்களும், குடி கேடர்களும், சிற்றின்பப் பிரியர்களும், வியபிசாரமே தொழிலாகக் கொண்டவர்களும், ஆபாசங் களஞ்சியங்களுமானவரால் நடத்தப்படும் தற்கால நாடகங்களைப்பார்க்க குல ஸ்திரீகள் செல்லுவதனால் வரும் கெடுதிகளில் இதுவு மொன்றாகும். "ஒரு தொழிலுமில்லாதார் நாடகக்காரராவர்" என்ற பாடல் மிகவும் பொருத்த முள்ளதேயாகும்.]

உடனே பாக்கியரத்னத்தை அவள் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய் விட்டு இனிமேல் தற்கொலை புரிவதில்லையென்ற வாக்குறுதி அவளிடம் பெற்றுக்கொண்டு சற்றுநேரம் இருந்து அவளுக்குப் போதுமான தேறுதல் சொல்லிவிட்டு அவள் வேலைக் காரியைக் கூப்பிட்டு நல்லபோஜனம் தயார் செய்துகொண்டு வரும்படி ஏற்பாடு செய்து பாக்கியரத்னத்தை சாப்பிடும்படி கட்டாயப்படுத்தி அவள் சாப்பிட்டபின் மறுபடியும் சாயங்காலம் அவள் தேகஸ்திதி எப்படியிருக்கிறதென்று தெரிந்து கொள்வதற்கு வருவதாகச் சொல்லிவிட்டு உடனே தந்தி ஆபீசுக்குப் போய் அவள் தகப்பனாருக்கு அவள் இங்கிருப்பதாகவும் அவளுடைய தற்கால ஸ்திதியைக் குறித்தும அவசரத்தந்தி அடித்துவிட்டு நான் வீட்டிற்குப் போனேன். அப்போது என் மனமானது ஒரு நிலையில் இல்லையாதலால் அன்று வேலைக்குப் போகாமல் பின்வருமாறு சிந்திக்கத் தொடங்கினேன்.—

"என்மனம் என்ஒருவாருய் ஒன்றும்தோற்றுமலிருக்கிறது. எனக்கும் இவளுக்கும் என்ன சம்பந்தம்? எனக்குக் கல்யாணமாகி இத்தனை வருஷமாகியும் நான் என்ன சுகத்தை அனுபவித்தேன். இவ்விதமான இல்வாழ்க்கையில் இருப்பதைவிட உயிரையே மாய்த்துவிடவேண்டுமென்று சிந்தித்துக் கொண்டிருக்குங்கால் ஆற்றில் ஓர் ஸ்திரீ விழுந்து விட்டாள் என்றதைக் கேட்டவுடனேயே ஜீவ காருண்யத்தினால் தூண்டப்பட்டவனாய் ஆற்றில் குதித்தேன். அவளைக் காப்பாற்றுவதற்காக முதுகில் தாங்கியதும் நான் இது வரையிலும் அனுபவியாத ஓர்வித இன்ப உணர்ச்சி உண்டாயிற்று அப்போதே நமக்கிப்போர்ப்பட்ட எண்ணம் உண்டாவது நமது யோக்யதைக்கும் பெருந்தன்மைக்கும் சற்றும் பொருந்தாதென்று நினைத்தும் மறுபடியும் என் மனதானது அவள்பால் ஈடுபட்டு நிற்கிறது. அப்பால் அவளுக்கு புத்தி தெளிந்தபின் அவள் சொன்ன கதையைக் கேட்டது முதல் நமது வருத்தங்களைத் தீர்ப்பதற்காகவே கடவுள் பாக்கிய ரத்னத்தை ஆற்றில் விழும்படி செய்து அவளை ஆபத்திலிருந்து நீக்கும் பொருட்டு எனது உயிரையும் திரணமாய் நினைத்து ஆற்றில் குதித்து அவளைக் காப்பாற்றும்படி தூண்டினார் போலிருக்கிறது" என்று நினைத்தேன். இதுவரையில் பரஸ்திரீகளை சகோதரிகளாக பாவித்து திரிகாண சுத்தியாய் இருந்த எனக்கு இப்போர்ப்பட்ட எண்ணங்கள் உதித்ததானது எனக்கே அதிக ஆச்சரியத்தையும் வருத்தத்தையுங் கொடுத்தது. இருந்தாலும் அவளை என் முதுகின்மீது தாங்கியபோது என் உடம்பு புளகாங்கித முற்றதை நினைத்த மாத்திரத்தில் இந்த நல்ல எண்ணங்களெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் மாறி பாக்கியரத்னத்தை எனக்கு சொந்தமாகச் செய்து கொள்ளா விட்டால் என் பிராணன் நிற்பது அரிது என்று தோன்றிற்று. ஐயோ! இவளிடத்தில் சிநேகம் பண்ணும் பக்ஷத்தில் நமது வாஸ்தவமான ஸ்திதியை தெரிந்து கொள்ளாமல் உலகம் நம்மை அநியாயமாய் நிந்திக்குமே என்று பயந்தேன். இப்படியே சாயங்காலம் ஐந்து மணிவரையில் இன்னதுதான் செய்வதென்று தெரியாமல் திகைத்தேன். வீட்டிற்கு வந்தது முதல் ஒன்றிலும் நிலைவரமான புத்தி செல்லவில்லை. உட்காருவதும், எழுந்திருப்பதும், சற்று உலாவுவதும், சாய்வு நாற்காலியில் அமர்வதும், பின்னும் எழுந்திருப்பதும், நடப்பதும், படுப்பதும் இப்படியே அன்றையப் பொழுதைப் போக்கினேன். எப்படியாவது வாக்களித்த பிரகாரம்

அவளைப் போய்ப் பார்க்க உத்தேசித்து வண்டியேறி அவள் வீட்டிற்குப் போனேன். அப்போதும் அவள் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாயிருந்ததால் அவளைப் பார்த்தவுடனே எனக்கும் துக்கமுண்டாயிற்று. என்ன ஆச்சரியம் இது! இதுவரையில் நான் பார்த்தும் கேட்டுமிராத அஷ்ட முத்துசாமிக்காக நான் கண்ணீர் விடுவேனென்றால் நம்பக்கூடிய காரியமா? அப்பால் அவளைத்தேற்றி சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு அவளை சாப்பிடும்படி செய்த பின் மறுநாள் வருவதாய்ச் சொல்லிப்போனேன். வீட்டிற்குப்போய் எனது மனம் ஓர் நிலையிலில்லாததால் சாப்பிடாமல் தூங்கச் சென்றேன். என் கண்ணை மூடி எவ்வளவு நேரம் தூங்க முயன்றும் நித்திரை வரவில்லை. பாக்கியரத்னத்தின் உருவம் என் கண்முன்னாலேயே நின்றது.

இப்படியே கொஞ்சங்கூடத் தூங்காமல் மத்தியானம் நினைத்த நினைவெல்லாம் மாறிமாறிவரவும், பாக்கியரத்னத்தின்மீது ஆசை பதின் மடங்கு அதிகப்படவும், சித்தம் சபலப்படவும்; புத்தியானது 'நீ இதுவரையிலும் நின்ற நிலையினின்றும் பிசகாதே பிசகாதே' யென்று அதட்டி ஆர்ப்பரிக்கவும் எனது வருத்தத்தை நீக்கவிரும்பினவர்போல் கிழக்குத்திசையில் சூரியன் உதயமானார். உடனே எழுந்து ஸ்நானஞ்செய்து வண்டியேறி சைதாப்பேட்டை ரெயில்வே ஸ்டேஷனுக்குப்போய் சாரங்கபாணி நாயுடுவை எதிர்பார்த்திருந்தேன். அதிக வருத்தத்தைக்காட்டும் முகத்துடன் முதல்வகுப்பு வண்டியிலிருந்து ஓர் கனவான் இறங்கவே சாரங்கபாணி நாயுடு அவராகத்தானிருக்க வேண்டுமென்று நினைத்து அவரிடம்போய் பேர்கேட்டறிந்து அவரை என் மோட்டார் வண்டியில் ஏற்றிக்கொண்டு பாக்யரத்னம் வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். இவருக்குத் தந்திபடித்த விவரமாவது இவர்வரும் சமாசாரமாவது நான் அவளுக்குச் சொல்லவில்லையாதலால் இவர் வந்தசங்கதி அவளுக்குத் தெரியாது. இவரைப் பார்த்ததும் முகத்தை மூடிக்கொண்டு ஓவென்று கதறினாள். "ஏ! பாக்கியரத்னம்! நாடகமா உன்னை இக்கேதிக்குள்ளாக்கிற்று" என்று சொல்லி அவளைக் கட்டிக்கொண்டு அவர் பெருத்த தொந்தி குலுங்க அழுதார். நானும் மனம் தாளாமல் கூட அழுதேன். நேரமாக ஆக துக்கம் குறைவது உலக இயற்கையாதலால் சற்றுநேரத்துக்கப்பால் துக்கத்தைமாற்றி அதுவரையில் நடந்த சங்கதிகளை இருவரும் பேசிக்கொண்டார்கள். தன்புத்திரியை துர்மரணத்தி

னின்றும் காப்பாற்றி தான் அவளை திரும்பவும் சந்திக்கும்படிச் செய்ததற்காக எனக்கு உபசார வார்த்தைகள் கூறினர். அப்பால் பாக்கியரத்னத்தைத் தன்னுடன் மதுரைக்குப் புறப்பட்டு வரும்படி அவரால் கூடியவரையிலும் கூப்பிட்டார். பாக்கிய ரத்னமோ தான் நிலைதவறிவிட்டால் இனி தன் பந்துக்கள் எதிரில் வரவும் அவர்கள் தன்னைச் சுட்டிக்காட்டி பரிகசிக்கவும், அதைத் தான் பொறுத்துக்கொண்டிருக்க முடியாதென்றும் அதிக கௌரவத்துடன் இருந்த குடும்பத்திற்கு தான் புத்தியில்லாமல் வீட்டை விட்டு வெளியேறியதால் ஏற்பட்ட அவமானத்தோடு நிற்காமல் தான் அங்கு வந்திருப்பதால் இன்னும் இழிவான வார்த்தையும் அவமானமும் ஏற்படுமென்றும், ஆகையால் தான் தன் வாழ்நாள் உள்ளவரையில் மதுரையில் அடிவைக்க மாட்டாளென்றும் தீர்மானமாய்ச் சொல்லி விட்டாள். சாரங்கபாணி நாயுடு அவர்கள் சில நாள் இருந்துவிட்டு மாதம் மாதம் அவள் செலவுக்காக ரூபாய் இருநூறு அனுப்புவதாகவும் அவளை என் குழந்தையைப்போல் அவளுக்கு யாதொரு கெடுதலும் வாராமல் பார்த்துக்கொள்ளும்படி என்னிடம் சொல்லி அவளைப் பிடித்து என் கையில் ஒப்புவித்து விட்டுப்போனர். சாரங்கபாணி நாயுடு சொன்னபடி அவளுக்கு யாதொரு குறைவுமில்லாமல் நாளாவிர்த்தியில் நான் அவளது விசனத்தைப்போக்கி வந்தேன். இப்படி ஆறுமாதங்கள் சென்றன. அதுவரையில் நானும் அவளும் அதிக மரியாதையாய்த்தான் நடந்து வந்தோம். அப்போது ஓர் நாள் சாயங்காலம் நாங்களிருவரும் பூஞ்சோலை சென்றுலாவப் போனேம். அப்போது மந்த மாருதம் வீச பூஞ்சோலையெங்கும் பட்டப்பகல்போல் பூரணசந்திரன் தனது கிரணங்களைப் பரப்பி ஒளிதர, மன்மதன் இதுதான் தக்க சமயமென்று தனது புஷ்ப பாணங்களை என்மீது வருஷிக்க அதுவரையில் அடக்கிவந்த காதல் என்னும் தீயானது அடக்கமுடியாமல் கொளுந்து விட்டேறிய நான் பாக்யரத்னத்தின் மெல்லிய கைகளிரண்டையும் பிடித்துக் கொண்டு, "பெண்ணே! நீ பிரக்ஞையில்லாமலிருந்தபொழுது ஆற்று வெள்ளத்தில் உன்னை என் முதுகின்பேரில் தாங்கிய காலையில் பிறந்த காதல் வெள்ளம் கதித்துப் பாந்து கரைபுரண்டு பாய்ந்தாலும் அறிவு என்னும் கரைகளால் கட்டப்பட்டிருந்தது. இப்போது அவ்வாசை வெள்ளமானது கரைகளை உடைத்துக்கொண்டு எனக்குத் தெரியாமல் ஓட ஆரம்பித்துவிட்டது. அணைகடந்த

வெள்ளத்தைத் தடுக்க எவரால் முடியும்? என்மீது கருணைகூர்ந்து எனது தாபத்தைத் தீர்ப்பாயாகில் எனது பிராணன் நிற்கும். இல்லையேல் நான் சாவது திண்ணம்! திண்ணம்!!" என்றேன். உடனே அவள் தன் இருகரங்களாலும் என்னை மார்புடன்புல்லி கட்டியணைத்து முத்தமிட்டு, எனதன் பிராணேச! சிலகாலமாக எனக்குந் தங்கள்பேரில் காதல் உண்டு. தங்களை நற்செய்கைகளில் சிறந்த தாங்கள் கேவலம் ஓர் கூத்தாடியின் மீது அன்புவைத்து அவருக்குத் தன் தேகத்தை ஒப்புவித்த இவ்வற்ப ஸ்திரியின்பால் அன்புபாராட்ட நினைக்கமாட்டீர்கள் என்ற பயந்தான் என் காதலை அடக்கிவந்தது. தங்கள் பால் எனக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் பிரியத்திற்கும் முத்தாராம் மீது எனக்கு ஏற்பட்டிருந்த நேயத்திற்கும் அதிக வித்தியாசமிருக்கிறது என்று சொல்லித் தனது தேகத்தை என் வசம் ஒப்புவித்து விட்டாள். அன்று முதல் இன்றுவரையில் நாங்கள் இருவரும் உடலிரண்டும் உயிரொன்றுமாய் இருந்து வருகிறோம். பாக்கியரத்னத்தை அன்றிலிருந்து எடுத்து அவள் வீட்டிற்கு அடிக்கடி போய்வருவதைக்கண்ட என் தாயாரும், பெண்சாதியும் எனக்கும் அவளுக்கும் அந்தரங்க ஸ்நேகம் உண்டாகி இருந்தபோதே பலவிதமாகப்பேச ஆரம்பித்தார்கள். அப்போது நம்மிடத்தில் குற்றமிருந்தாலல்லவா நாம் இவர்கள் சொல்வதை லட்சியம் செய்யவேண்டும், நாம் நிஷ்களமாயிருக்கும்போது இவர்கள் வார்த்தையைக் கவனிக்க வேண்டியதில்லையென்று நினைத்து அவர்கள் சொன்னதைக் கேட்காதவன் போல் நடந்துவந்தேன்.

"நல்ல காலத்தில் நாழிப்பால் கறந்தால் கோடை காலத்தில் குறுணி கறக்குமோ?" என்பதைப்போல் இயற்கையாகவே நான் முதலில் சொன்ன காரணங்களால் எனக்கும் என் பெண்ஜாதிக்கும் சற்று மனஸ்தாபங்களிருந்தது. இவ்விஷயம் வந்தது முதல் என் பெண்ஜாதி, நான் பத்துதரம் கூப்பிட்டாலும் ஜவாபு சொல்லாமல் கடுத்த முகத்துடனிருப்பது வழக்கம். அவளுடன் நான் சில நாட்களாக சம்பாஷிக்க முயன்ற போது நாளுக்கு நாள் கோபம் அதிகமாவதைக் கண்ட நான் வெறுப்புற்று அவளிடம் பேசுவதையே நிறுத்திவிட்டேன். அவளும் என்னிடம் பேசுவதில்லை.

ராமாநுஜலு நாயுடு.—அப்பா! உன்பேரில் தப்பிருக்கும்போது அவளுக்கு உன்மேல் கோபம் உண்டாவது இயற்கைதானே!

எவ்வளவு தான் சாத்மீககுணத்தையுடைய பத்தினியாயிருந்தாலும் தன் புருஷன் அயல்வீடு செல்வதைக் கண்டால் அவள் சஹிப்பாளோ? இதற்காக நீ அவளைச் சமாதானப் படுத்தி அவளுடன் அன்னியோன்னியமா யிராமல் இப்படி யிருப்பது உனக்குத் தகுதியல்ல.

பெருமாள் நாயுடு.—அண்ணு! தாங்கள் சொல்வது சரியல்ல என்னை சந்தோஷிப்பிக்கக் கூடிய சக்தியாவது மனுேபாவமாவது அவளுக்கிருந்து, அப்போது நான் இப்படி நடந்துக்கொண்டால் என்மேல் தப்பிதந்தான், அப்படியில்லா திருக்கையில் நான்செய்த காரியத்தில் என்ன பிசகிருக்கிறது?

ராமாநுஜலு நாயுடு.—அப்பா! ஒருவருக்குப் பத்தினியும் குதிரை முதலிய வாகனமும் அமைவது பூர்வஜென்மத்தின் பயன் என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். பூலோகத்திலே உன்னைப் பார்க்கிலும் அதிகமாகக் கஷ்டப்படுகிறவர்கள் இல்லை யென்று நீ நினைக்கிருயா?

பெருமாள் நாயுடு.—அநேகர் இருக்கலாம். ஆனல் அவர்களுடைய ஸ்திரீகள் இவளைப்போல் அவ்வளவு மரமாம்பழங்களாகவும் மந்த மதிகளாகவும் இருக்கமாட்டார்கள்.

ராமாநுஜலு நாயுடு.—பெருமாள்! உனக்கு உலக அனுபவம் போதாது. வருஷக் கணக்காய் வியாதியால் பீடிக்கப்பட்டு உடம்பிற் தசை சற்றுமில்லாமல் மெலிந்து எலும்புகளெல்லாம் எண்ணக்கூடிய ஸ்திதியிலிருப்பவர்கள் கூடத் தங்கள் கணவர்கள் வேறு ஸ்திரீகளின் முகத்தைக் கண்ணெடுத்துப் பார்க்கக்கூடச் சகியார்கள். இவ்விதமிருக்கும் எத்தனையோ ஸ்திரீகளை நான் கண்டிருக்கிறேன்.

பெருமாள் நாயுடு.—அவர்கள் செய்வது எனக்கு நியாயமாகத் தோன்றவில்லை.

ராமாநுஜலு நாயுடு.— வெகுகாலமாக ஜாக்கிரதையுடன் சம்பாதித்த கௌரவத்தையும் நல்ல பேரையும் கெடுத்துக் கொள்ளக் கூடாதென்ற தீர்மான முடையவர்க ளெல்லாம் இப்போர்ப்பட்ட வருத்தங்களை மனதி லடக்கிக்கொண்டுதா னிருப்பார்கள். உன்னைப்போ லொத்தவர்கள்தான் இஷ்டப்படி மனம்போனபோக்கில் திரிவது.

பெருமாள் நாயுடு.—நீயும் என் மதனியாரும் ஒற்றுமையுடன் ஒரே மனதாய் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். உங்கள் இல்வாழ்க்

கையில் சுகமும் சந்தோஷமும் நிரம்பியிருக்கிறது. அப்படியிருப்பதால் நீ இந்தமட்டுமா பேசுவாய்? இன்னும் அதிகமாகவும் பேசக்கூடும். நீயும் என்னுடைய ஸ்திதியிலிருந்தால் அப்படிச் சொல்லமாட்டாய். நிழலின் அருமை வெயிலிற் போனாலல்லவா தெரியும்.

ராமாநுஜலு நாயுடு.—நீ நினைக்கிற அந்தக் கஷ்டதிசை எனக்கு வந்தாலும் உன்னைப்போல் நான் ஒருகாலும் நடந்து கொள்ள மாட்டேன்.

பெருமாள் நாயுடு.—அண்ணா? ஒரேமட்டாய் என்னைக் குறை கூறுகிறாயே. அன்னமும்பேடும்போல் அழகும் மனக்களிப்பும் அமைந்துள்ள ஸ்திரீ புருஷரிருந்துங்கூட அவர்கள் சில சமயங்களில் தங்கள் நிலைபெயர்ந்து தள்ளாடுகிறார்கள். அப்படியிருக்க என்னைப்போல துர்ப்பாக்கியமான ஸ்திதியிலுள்ளவர்கள் நெறிதவறுதல் ஆச்சரியமோ?

ராமாநுஜலு நாயுடு.—நீ இவ்வளவு கஷ்டப்படவேண்டிய பிரமேயமென்ன? இவ்வில்லாளிடத்துனக்கு இன்பமில்லையாயின் இரண்டாவது கலியாணஞ் செய்துகொள்ளக்கூடாதா?

பெருமாள் நாயுடு.—அண்ணா! நீ இக்கேள்விகேட்பதால் இரண்டு பெண்டாட்டிக்காரரைக் குறித்து நீ இதுவரையில் பார்த்தாவது கேட்டாவதிருக்க மாட்டாயென்று நம்புகிறேன். ஏனென்றால் அப்படியிருந்தால் நீ எனக்கு இந்த ஆலோசனை சொல்லமாட்டாய்.

ராமாநுஜலு நாயுடு.—ஏதோ ஒவ்வொரு இடங்களில் நீ சொல்லுகிறபடி சங்கடங்கள் ஏற்படுவது சகஜமே. அதனால் எல்லாரும் அப்படியே யிருப்பார்களென்று நினைத்துவிடலாமா?

பெருமாள் நாயுடு.—அண்ணா! உனக்கு இவ்விஷயத்தில் கொஞ்சமாவது அநுபோகமில்லையென்று திட்டமாய்ச் சொல்லலாம். இப்போது எனக்கு சுகசௌக்கியங்கள் ஏற்படாவிட்டாலும் வீட்டில் சண்டை சச்சரவுகள் கிடையாது. நீ சொல்லுகிறபடி இரண்டாவது கலியாணம் செய்துகொண்டால் இரண்டு பெண்ஜாதிகளுக்கு ஏற்படும் வியாஜ்ஜியங்களைத்தீர்ப்பதற்குவீட்டிலேயே ஒரு மாஜிஸ்டிரேட் எப்போதும் இருக்கவேண்டியது அவசியமாகும். ஆகையால் இன்னொருபெண்ஜாதியைக் கலியாணஞ்செய்துகொள்வதால் என் மனவருத்தம் விருத்தியாகுமே தவிர என்மனோபீஷ்டம் நிறைவேறப் போகிறதில்லை. ஆகையால் என் ஸ்திதியிலிருக்கும் எவராவது என்னிடம் அபிப்பிராயங் கேட்டால் முதல் பெண்ஜாதி உயிருடனிருக்கும்போது இரண்டாவது பெண்ஜாதி

யைக் கலியாணஞ் செய்துகொள்ளுவதைவிட சன்னியாசம் வாங்கிக்கொள்வதே சிலாக்கியமென்று சொல்லுவேன்.

ராமாநுஜலு நாயுடு.—மதுபானம் செய்கிறவர்களைக் கேட்டால் அவர்களுங்கூட அதற்குப்பொருந்தும்படியான ஒருகாரணத்தைச் சொல்வார்கள். அதைப்போல் நீயும் உனக்குத் தோன்றியதைச் சொல்லிவிட்டாய். இனி இவ்விஷயத்தைக்குறித்து உன்னிடம் பேசுவதில் யாதொரு பிரயோசனமும் கிடையாது.

பெருமாள் நாயுடு.—அண்ணு! நீ அப்படிச் சொல்லக்கூடாது. நியாயத்துடன் என்னுடன் தர்க்கித்து என்மனதிற்குத் திருப்தியாகும்படி தக்க காரணகாரியங்களை எடுத்துக்காட்டுவாயானல் நான் ஒத்துக்கொள்கிறேன். பாக்கியரத்னத்தை நான் பார்த்ததுமுதல் இதுவரையில் அவளுக்காக ஒரு தம்படிகூட செலவு செய்தது கிடையாது. அவளுக்கு மாதம் மாதம் இருநூறு ரூபாய் அனுப்புவதாக அவள் தகப்பனர் சொல்லிவிட்டுப்போனரென்று சொன்னேனல்லவா? அப்படியே ஆறு மாதக்காலம் அனுப்பிவந்தார். ஆறும்மாதம் அவர் இறந்துபோனபோது அவருக்கிருந்த ஐந்து லட்ச ரூபாய் பெறுமான சகலசொத்துக்களையும் அவள் பேருக்கே ஓயில் எழுதிவைத்துவிட்டுப்போனதால் அவள் எனது ஆஸ்திக்காக என்னை விரும்பவில்லையென்று நிச்சயமாய்த் தெரிகிறது. மேலும் ஓர்நாள் நான் எப்போதும் வாங்குவதைவிட லட்சம் ரூபாய்க்கு அதிகமாகச் சரக்கு வாங்கிவிட்டேன். அப்போது பாங்கி உத்தியோகஸ்தர்கள் அதிகமாய் வாங்கின தொகையை உடனே கட்ட வேண்டுமென்றுசொன்னர்கள். எனது நண்பர்களிடத்திலெல்லாம் அன்றையத்தினம் பணம் இல்லாததால் என்னசெய்வதென்று தோன்றாமல் வழக்கப்பிரகாரம் பாக்கியரத்னத்திடம் சென்றேன். என்முகம் சற்று மாறுதல் அடைந்திருந்ததைக்கண்ட அவள் அப்படியிருக்கக் காரணம் என்னவென்று கேட்டாள். முதலில் நான் சொல்லாவிட்டாலும் கடைசியாக அவள் என்னைச் சொல்லும்படி செய்தாள். சமாசாரம் இன்னதென்று தெரிந்தவுடனே தான் அணிந்திருந்த ஒன்றரைலட்சம் ரூபாய் பெறுமான வைரநகைகள் எல்லாவற்றையும் கழற்றி என்கையில் கொடுத்துப் பாங்கி ஆபீஸர்களிடம் நம்பிக்கைக்காக வைத்துக்கொள்ளும்படி கொடுக்கச்சொன்னள். நான் அப்படிசெய்ய சம்மதிக்காமல் போகவே அவள் அந்நகைகளையெல்லாம் தன்னுடைய அந்தரங்க வேலைக்காரியாகிய சொர்ணத்தினிடம் கொடுத்து நான்கொடுத்துவிட்டு வரச்சொன்ன

தாக பாங்கியில் என் குமஸ்தாமூலமாய்ச்சேர்த்து என்பேருக்கு ரசீது வாங்கிவரும்படி செய்து ரசிதை என்னிடம் கொடுத்தாள். உலகறியத் தொட்டுத்தாலிகட்டிய பெண்ஜாதியும் தான் அணிந்திருக்கும் விலையுயர்ந்த நகைகள் எல்லாவற்றையும் கழற்றிக்கொடுக்கச்சம்மதிப்பாளென்று நீ நினைக்கிறாயா? இப்படியெல்லாம் இருக்க என் பெண்ஜாதி எந்நேரமும் அவளைத் திட்டவேண்டிய பிரமேயமென்ன? என்னைப் பத்துமாதம் சுமந்து பெற்று அன்புடன்வளர்த்து ஆதரித்த என் தாயாரும் என்பெண்ஜாதிக்கு உபபலமாயிருந்து எந்நேரமும் பாக்கியரத்னத்தை இழிவாய்ப் பேசி இகழ்வதின் காரணமென்ன? மேலும் இப்போது பாக்கியரத்னத்தின் அன்பும் காதலும் பிரியமுந்தான் என் பிராணனைக் காப்பாற்றி வைத்திருக்கிறதென்பதையும் நான் பாக்கியரத்னத்தைச் சந்தித்திராவிட்டால் இதற்குள்ளாக என் தாயார் தன் ஏகபுத்ரனை இழந்து புத்திரசோகத்தால் பாதிக்கப்பட்டிருப்பாள் என்பதையும் என் பெண்ஜாதி புருஷனை இழந்து விதவையாயிருப்பாளென்பதையும் யோசித்து அவர்களிருவரும் பாக்கியரத்னத்தைப் போற்றிப் புகழவேண்டியதிருக்க, அவளைச் சதா சபிப்பதும் வாயில்வந்தபடி யெல்லாம் வைவதும் எவ்வளவு நியாயவிரோதமென்று பார்த்தாயா? பாக்கியரத்னம் ஒருவள் இல்லாவிட்டால் இவ்வுலகத்தில் எனக்கு வேறு எவ்விதமான பற்றும் கிடையாதென்று நீ நிச்சயமாய் நம்பு. பாக்கியரத்னத்திற்கு ஏதாவது அபாயம் வந்து அவள் இறக்க நேரிட்டால் அந்த நிமிஷத்திலேயே நான் தற்கொலை செய்துகொள்வேனென்று உன்மனதில் நன்றாய்ப் பதிந்திருக்கட்டும்.

ராமானுஜலு நாயுடு.—நீ என்னிடம் சொன்ன காரணங்களெல்லாம் உன் தாயாருக்கு எப்படித்தெரியும்? ஆகையால் தான் அப்படிப்பேசுகிறாப்போ லிருக்கிறது.

பெருமாள் நாயுடு.—என் தாயாருக்குத் தெரியுமென்றே நம்புகிறேன். மாமியும் மருமகளும் எப்பொழுதும் ஒன்றாயிருந்து வரும்போது ஒருவர்காரியம் மற்றொருவருக்கு எப்படித்தெரியாமலிருக்கும்?

ராமானுஜலு நாயுடு.—சரி எப்படியாவது இருக்கட்டும்? எனக்கோ தூக்கம் அதிகமாக வருகிறது. படுக்கச் செல்வோம்.

என்று சொன்னார். உடனே இருவரும் படுக்கையறையில் வைத்திருந்த பாலை யருந்திவிட்டுப் படுத்துக்கொண்டார்கள்.

வம்பர் மஹாசபையில் செல்லம்மாள் தன்னைக்குறித்து இழி

வாய்பேசின உடனேயே மறுநாள் காலையில் தன்னைப் புறப்பட்டு வரும்படி தந்தி அடிக்கும்படி ராமாநுஜலுநாயுடு தன் மனைவிக்குக் கடிதம் எழுதிவிட்டார். மறுநாள் பத்துமணி சுமாருக்கு அவர் குழந்தைக்கு உடம்பு குணமில்லையென்றும், தாமதியாமல் என்ன வேலையிருந்தாலும் புறப்பட்டு வரவேண்டுமெனறும் ராமாநுஜலு நாயுடுவுக்குத் தந்திவந்தது. அவர் பெருமாள் நாயுடுவிடம் விடைபெற்றுக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டுப் போனார். போகும்போது தனது நண்பர்சொன்ன விஷயங்களையெல்லாம் சிந்தித்துக்கொண்டும் ஒருகால் முந்திய நாள் வம்பர் மஹாசபையில் தீர்மானித்தபடி தனது நண்பனுக்கு மருந்துவைத்தால் அதனால் என்ன கெடுதல் உண்டாகுமோ என்றும் துக்கித்தார். பின் எல்லாவற்றிற்கும் கடவுள் இருக்கிறாரென்றும் நம்பிக்கையால் மனத்தேறுதலையடைந்தார்.

ராமாநுஜலு நாயுடு வீட்டைவிட்டுச் சென்றதுதான் தாமதம்; உடனே செல்லம்மாள் தமது மகாசபையின் நடவடிக்கையை ஆரம்பிக்கலானாள். ஊர்வம்பி, ராமக்கா, கோமக்கா, தெருச்சுத்தி, ஆமணக்கம்மாள், அலமேலு, காமாக்ஷி முதலிய எல்லோரும் ஒருங்கு கூடினார்கள். ஊர்வம்பி காமாக்ஷி அம்மாளைச் சுட்டிக்காட்டி நான் சொன்னது இந்த அம்மாளைத்தான் என்று குறிப்பிட்டாள். உடனே பாலம்மாள் அவளுக்கு அதிக உபசாரங்கள் செய்தாள். உன்னால் என்குடும்பம் முன்னுக்கு வரவேண்டியிருக்கிறது என்றாள். அதற்கு காமாக்ஷியும் ஒப்புக்கொண்டு தனது பிரதாபங்களை விஸ்தரிக்கலானாள். மைலாப்பூர் கிருஷ்ணபத்தர் ஸதா வேசிவீடு நுழைவதே தொழிலாகயிருந்தார். அவர் மனைவி என்னை வேண்டிக்கொண்டாள். அதற்கான பக்குவமருந்து வாங்கித்தந்தேன். அதுமுதற்கொண்டு இப்போது அவர் வீட்டைவிட்டு வெளிப்படுவதேயில்லை. முதலில் எழுந்திருக்கவே சக்தி கிடையாது, வீட்டிலேயேதான் இருக்கிறார். குப்பாபுரத்து மாணிக்கத்தின் ஆம்படையான் தன் தாயின் வார்த்தையைக் கேட்டுத் தனது பெண்டாட்டியைப் பலவிதமாக அடித்துக்கொடுமைகள் செய்து வந்தான். அவளுக்கும் நான் மருந்து வாங்கிக் கொடுத்தேன். அதைப்படுக்கையறையில் பாலுடன் கலந்து ஊட்டினாள். அதுமுதற்கொண்டு மாமியார் கொட்டம் அடங்கிற்று. இப்போது மாணிக்கத்தைக் கண்டால் அவன் நடுங்குகிறான். திருக்காட்டுப்பள்ளி முத்துசாமிக் கவிராயர் ஒரு பெண்ணை வசியப்படுத்த மருந்துவேண்டுமென்றார்.

அவருக்கும் உதவிசெய்தேன். எவ்வளவோ நாடகக் கம்பெனிக்காரர்களுக்கும் தாசிகட்கும் அநேக தருணங்களில் நான் இந்த உபகாரஞ் செய்திருக்கிறேன். ஒன்றாவது பலிக்காமல்போனதில்லை என்றாள். பாலம்மாள் காமாக்ஷியம்மாளின் பிரசங்கத்தை வெகு அன்புடன் கேட்டு ஆநந்தித்தாள். ஊர்வம்பி அவள் பேச்சை உச்சிமேல் வைத்து மெச்சினாள். செல்லம்மாள் அப்படித்தான் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தனது மாமியைத் தூண்டுதல் புரிந்து காமாக்ஷியின் பிரேரபணையை ஆமோதித்தாள். அங்கு வந்து மற்றவர்களாலும் இது அங்கீகாரஞ் செய்யப்பட்டது. அன்று மத்தியான போஜனத்துக்குமேல் காமாக்ஷியம்மாள் தான் வருவதாகச் சொல்லிப் புறப்படலானாள். மற்றவர்களும் எழுந்திருக்க, அன்றையதினம் வெகு சுபகரமான நாளானதால் யாவருக்கும் புஷ்பதாம்பூல மரியாதைகள் வழங்கப்பட்டு சபையும் கலைந்தது.

மத்தியானம் இரண்டுமணி யடித்தது. சொல்லிய நேரத்திற்குக்கொஞ்சமும் பிசகாமல் காமாக்ஷியம்மாள் வந்து சேர்ந்தாள். ஊர்வம்பியும் துணைக்கு வந்தாள். செல்லம்மாள், பாலம்மாள் இருவரும் உடனே பிரயாணத்துக்குத் தயாராயினர். வெளியில் வண்டி வந்து நின்றது. நால்வரும் அதில் ஏறிக்கொண்டார்கள். காமாக்ஷியம்மாளின் ஆக்ஞையின் பிரகாரம் வண்டி போயிற்று.

சாயந்திரம் ஐந்துமணி சுமாருக்கு மந்திரவாதி இருக்குமிடம் வந்து சேர்ந்தனர். ஏற்கனவே முந்தினநாள் மத்தியானமே காமாக்ஷியம்மாளின் மூலமாக அவனுக்குச் செய்தி எட்டியிருந்தபடியால் அவன் இவர்களின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அதுமட்டுமல்ல. செல்லம்மாள், பாலம்மாள் இவ்விருவர்களின் வீட்டுச்செய்திகள் எல்லாம் காமாக்ஷியம்மாள் அனுப்பிய ஆளின் மூலமாகக் கேட்டுத் தெரிந்துகொண்டு மிருந்தான், நால்வரும் வண்டி விட்டிறங்கி அவனிடம் சென்று அவன் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தனர். [கண்டவர்களுக்குக்கெல்லாம் கும்பிட்டுக் கொள்ள வேண்டிய இந்தவிதி நமது பெண்களுக்குத் தலையில் எழுதியிருக்கிறது. இது எப்போதுதீருமோ அறியோம்.] இது நிற்க, மந்திரவாதி மகா கம்பீரமாகப் புலியாஸனத்தில் வீற்றிருந்தான். அவனைப் பார்த்தால் சாக்ஷாத் சாம்பசிவ மூர்த்தியைப் போலவேயிருந்தது. காமாக்ஷியம்மாள் அவன் சார்பாக இருந்து இந்தப் பெரியவருக்கு ஜோசியம், மந்திரம், வசியம் முதலியன வெல்லாம்

தெரியுமென்று அனேக சமாசாரங்களைப் படிப்படியாய் அளந்து கொட்டினாள். ஊர்வம்பி நாங்கள் என்ன காரியத்துக்காக வந்திருக்கிறோ மென்பதைத் தெரிந்து சொல்ல வேண்டு மென்றாள். அதற்கு மந்திரவாதியார் சிறிது நேரம் ஜெபத்திலிருந்து ஒரு விதமாக இருமிவிட்டு புன்னகையுடன், எல்லாம் மாரியாத்தாள் கடாக்ஷம், இந்த விபூதியை வாங்கிக் கொள்ளுங்கள் என்றான். நால்வரும் வெகு பக்தி பூர்வகமாக அதனைப் பெற்று அணிந்து கொண்டார்கள். உடனே பாலம்மாளைப் பார்த்து நீ ஒரு ஜீவனை உத்தேசித்து வந்திருக்கிறாய். அது கிடைக்குமா கிடைக்காதா வென்று கேட்க எண்ணுகிறாய். அதற்கு மாரியாத்தாள் அநுக்கிரகம் செய்ய மாட்டேனென்கிறாள். அவளுக்கு அடுத்த ஆதிவாரமும் மங்களவாரமும் மூன்று ஆடுகள் வெட்டிப் படையல் போட்டுப் பார்த்தால் ஒருகால் வழி பிறக்கக் கூடும். நீ கேட்க வந்திருக்கிற ஜீவன் இன்னொரிடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். அது சிறையிலல்ல, கடனிலல்ல, கவலையிலல்ல, ஆபத்திலல்ல, உயிர் மோசத்திலல்ல, பெண் ஆசையில் என்று அறியக் கடவாய். அந்த ஜீவனை மீட்கிறது மகாகஷ்டம். அந்த ஜீவன் இப்போது மீளாவிட்டால் உன் வாழ்வு தடுமாறிப்போகும். உன் குடி நிர்மூலமாகிவிடும். உனக்கு ஏழரை நாட்டு சனியன் ஆரம்பமாயிருக்கிறான். அதற்கு சாந்தி செய்ய வேண்டும். இதற்கெல்லாம் அதிகமான தொகை என் கையில் வந்தால்தான் நான் இதை முடிக்க முற்படுவேன். நீ கொடுக்கிற பணம் எனக்காகவல்ல. எல்லாம் அந்த மாரியாத்தாளுக்குத்தான். நீ மாரியாத்தாளை வெகுகாலமாக அலக்ஷியம் செய்து மறந்திருக்கிறாய் போலிருக்கிறது. அவள் உன் பேரில் வெகு ஆங்காரப்பட்டுக் கொண்டிருக்கிறாள். இதற்கு நீ என்னசொல்லுகிறாய்?

பாலம்மாள்.—சாமீ! நீங்கள்தான் என் வீட்டுத் தெய்வம் என்னைக் கெடுத்துவிடக்கூடாது. உங்கள் உத்தரவுப்படி யெல்லாம் நடந்துகொள்கிறேன். நீங்கள் என்னைப்பற்றிச்சொல்லியதெல்லாம் உண்மைதான். இந்த ஆதிவாரம் மாரியாத்தாளுக்குப் பெரிய படையலிட்டுப் பூசைசெய்கிறேன். ஏழரைநாட்டுச் சனியன் தொலையத் தாங்கள் என்னகேட்டாலும் தருகிறேன். சாந்திசெய்து எங்களைக் காப்பாற்றவேண்டும். இதோ நிற்கிற இவள் என் மருமகள். அவள் பெயர் செல்லம்மாள். என் குமாரன் ஒரு முண்டையிடம் அகப்பட்டுக்கொண்டு வீட்டுமுகமே பாராமலிருக்கிறான்

இதற்குத் தாங்கள் எதாவது நல்ல முறையில் வசியமருந்து செய்து கொடுத்து எங்களைக் கண் திறந்து பார்க்கவேண்டும்.

மந்திரவாதி.—என்னைப்பற்றிக் காமாக்ஷியம்மாள் உங்களுக்கெல்லாம் தெரிவித்திருப்பாள். பிட்டாபுரம் ஜமீன்தார் கிருஷ்ணலிங்கஞ் செட்டியாரைக் கேட்டால் என்னைப்பற்றி சகலமும் விவரமாகச் சொல்லுவார். குப்பாபுரம் ஜமீன்தாரணி மங்கதாயம்மகாரு எனக்குச் சென்றவருஷம் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து என்னை வாழ்த்தினார்கள். காவேரியில் பிரபலமான மிராஸ்தாரான கொள்ளிடத்தப்பங்காரின் சம்சாரம் கங்காதேவி அம்மாளுக்கு நான் வசியமருந்து செய்துகொடுத்தேன். அதனால் இப்போது அந்த அம்மாள் வெகுவாய் சந்தோஷப்பட்டு என்னைத் தமது ஊருக்கு வந்துபோகும்படி எழுதி யிருக்கிறார்கள். நான் இன்று மாலையில் போக இருந்தவன்; உங்களால் என் பிரயாணம் தடைபட்டிருக்கிறது. என்னைப்பற்றி யாரிடம் வேண்டுமானாலும் கேட்டுக்கொள்ளுங்கள். என்னுடைய வசியமருந்து சாமான்யமானதல்ல. அது முன்னோர்கள் பெரியோர்கள் அநுக்கிரகித்ததாக்கும். கிஸ்கிந்தா மலையிலுள்ள ஒரு முனிவர் உபதேசித்ததாக்கும். அது கைகண்ட மருந்து; சொல்லுகிறேன் கேள்.

ஆச்சப்பா இன்னமொன்று சொல்லக்கேளு
அப்பனே வசியமதின் வழிதான்சொல்வேன்
கூட்டப்பா வெள்ளெருக்கு லோகமெல்லாம்
குணமான குறுநாகம் வசியம்செய்யும்
நாட்டப்பா கருஞ்செம்பை சகலசித்தி
நயமான வெண்குன்றி மிருகமென்னுஞ்
சூட்டப்பா பொற்கையான் தெய்வசித்தி
சுகமான சென்னாயுருவி வசியமாமே.
ஆமே நீ பொன்னுமத்தை பெண்கள் மோகம்
அடவான கஞ்சாதான் ஜனமோகந்தான்
தாமே நீ மருளுமத்தை தெய்வமோகம்
தயவான மிகுமோகம் முத்தக்காசு
வாமே நீ கிராம்பதுவும் ராஜமோகம்
வளமான நன்னாரி ஜெகத்தின்மோகம்
நாமசேர் ஆள்விழுது ஸ்ரீகள் மோகம்
நயமான வெள்ளுமத்தை சறுவமோக மெண்ணே.
எண்ணவே நீர்மேல் நெருப்புக்காணும்
மிதமாகத் தானுந்தா னெட்டுமூலி
அன்னவே மாரணமும் பேதமெட்டு

மடவாகச் சொல்லிவிட்டேன் பின்னுங்கேளு
இன்னமுள்ள கடைசரக்கு ஐந்நூறுகூட
இயப்பாக இருமனதாய் சிந்திப்பாய் நீ
பன்னவே அறுபத்திநாலு மூலி
பாடிவைத்தேன் போகருட கடாட்சத்தாலே.
கடாட்சமென்றால் சாமான்யமல்ல சொன்னேன்
கவைக்குதவா வீணருக்கு விரிக்கொண்ணாது
ஆகவே சரக்கெல்லாம் ஒன்றுகூட்டி
அப்பனே அரைத்து நீ வஸ்திரகாயம் செய்து
அடுப்பேற்றி ஐங்கலஞ் ஜலத்தில் சேர்த்து
அப்பனே ஆழாக்காய் சுண்டவைத்து
சூடேதான் தணிந்தபின்பு எடுத்து மைந்தா
சுகமாக இதைவடித்து பதனம் பண்ணே.
பண்ணின ஓர் கஷாயத்தின் கூடமைந்தா
பண்புடனே நவரத்னம் கூட்டு கூட்டு
குறைவாக ஒன்றிரண்டு கூட்டாதே நீ
ஏனென்றால் வசியமது பலிக்கா தப்பா
கேளே நீ மோசமது செய்யொண்ணாது
செய்தாக்கால் சிவன்சாபம் சித்திக்கும் பாரு
சீராக இதையெல்லாம் சேர்த்து மைந்தா
சிமிழில் வைத்தடைத்துச் சிந்திப்பாயே.
தானென்ற மசானமதில் நடுசாமத்தில்
தயிரியமாய் சென்று நீ பூசை செய்வாய்
வானென்ற ருத்திரனார் சக்கரத்தைச் சொல்வேன்
வளமாக முக்கோண வட்ட மிட்டு
காலென்ற பன்னிரண்டு இதழ்தான் போடு
கணக்காக இதழ்தோறும் சூலம் நாட்டு
கோனென்ற வாளரையில் சொல்லக் கேளு
கொடிதான சிகாரமுட னுகாரந்தானே.
கேளு நீ வட்டமுகமாய் வெள்ளி நாற்கே
ளிதமுடன் தானிருந்து தியான மோது
சூளேநீ யங் ரிங் மசான மூர்த்தி
சுகமாக வாவென்று லக்ஷம் ஓது
கேளேநீ அங் நங் சிங் கென்றோதி
கெணிதமாய் வலக்கரத்தில் மூன்றுதரந் தட்டி
நாளேநீ யிப்படியே செபித்த போது
நாயகனே ருத்திரன்தான் துணைசெய் வாரே.
மந்தரித்த இம்மருந்தில் மஞ்சாடி எடுத்து
மைந்தனே வசியமாக்கும் மாதின் நாதம்

சேரே நீ அத்துடனே புனுகுங் கூட்டி
சிறப்பாக ஒருவேளை சிற்றுண்டியி லீய
பாரேநீ பார்த்திபனின் பாடுபாரு
பார்ப்பதற்கு வெகு வேடிக்கை யாகும்
சொன்னாக்கால் யாருமே நம்பார்க ளப்பா
சுகமாக நீகொடுத்து நம்பவையே.
நாளப்பா நாள்ஒன்றுக் குள்ளே பாலா
நயமாக மாற்றாளின் பற்று போகும்
கேளப்பா அப்பாலே சொல்லக் கேளு
கெட்டியாய் மங்கையின் அடிபணிந்து
ஆளப்பா அவளைவிட்டகல்வதென்றால்
அவனாலே யாகாது சத்தியமப்பா
வாளப்பா போகர்மேல் ஆணைவைத்து
வளமாக புலிப்பாணி பாடினேனே.

மந்திரவாதி இப்பெரிய பாட்டைச் சொல்லி முடித்ததும் பாலம்மாள் செல்லம்மாள் இவ்விருவருக்கும் அவனிடம் வெகு பக்தியும் விஸ்வாசமும் நம்பிக்கையும் உண்டாய்விட்டது. எங்களைக் காப்பாற்றிக் கரையேற்ற வேண்டுமென்று அவன் காலில் விழுந்து வணங்கினார்கள். மந்திரவாதி காமாக்ஷியம்மாளிடம் இரகசியமாக இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தால் அமிர்த சஞ்சீவி கலந்த வசிய மருந்து கொடுப்பதாகச் சொன்னான். அதைக் காமாக்ஷி பாலம்மாளுக்குத் தெரிவித்தாள். இரண்டாயிரத்துக்கு எங்கே போகிறதென்று கலங்கினாள். அதற்கு மந்திரவாதி இந்த வசியமருந்து இப்போது ஜெகலாபூர் திவானுடைய மனைவிக்காக உயர்ந்தமுறையில் செய்துவைத்திருக்கிறதென்றும், இரண்டாயிரம் தராவிட்டால் வேறே ஒரு மருந்து தனியாகச் செய்து அடுத்த மாதம் தருவதாகவும் சொன்னான். காமாக்ஷியம்மாள் அந்த மருந்து தேவையில்லையென்றும், இப்போது தயாரித்துக் கைவசமாய் வைத்துள்ள அந்த உயர்ந்தவிதமான மருந்தையே கடாக்ஷிக்க வேண்டுமென்றும் சொன்னாள். இதன் நடுவே ஊர்வசியும் சேர்ந்துகொண்டு மந்திரவாதியைப் பார்த்து இப்போது 500 ரூபாய் கையில் கொடுத்து விடுகிறோம். மருந்து பலித்தால் மேலுக்கு 500 ரூபாய் கொடுக்கிறோம். இதற்கு நீங்கள் சம்மதிக்க வேண்டுமென்று காலில் விழுந்து வணங்கினாள். காமாக்ஷியம்மாளும் அப்படியே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். பாலம்மாளும் அவ்வண்ணமே பிரார்த்தித்தாள். செல்லம்மாளும் அவ

ருடைய பாதங்களில் நமஸ்கரித்தாள். மந்திரவாதியும் வெகுநேரம் யோசித்து அப்பால் காமாக்ஷியம்மாளின் கட்டாயத்திற்காக இணங்குவதாக நடித்துக் கடைசியாக ரூ. 1000-க்கு ஒப்பினன். உடனே பாலம்மாள் நூருரூபாய் நோட்டுகளாக 10 நோட்டுகளை எடுத்து அவன் பாதங்களில் வைத்து நமஸ்கரித்தாள். மந்திரவாதியும் செல்லம்மாளை உள்ளே அழைத்துச்சென்று உயர்ந்தவிதமான வசியமருந்தை ஒரு தங்கச் சிமிழில் வைத்துக் கொடுத்து விபூதியால் தேகமுற்றிலும் தனது கைகளால் தடவித் தந்து அதனல் திருப்தியடைந்தவராய் வாழ்த்தி வெளியே அனுப்பினர். நால்வரும் வெகு சந்தோஷத்துடன் மந்திரவாதியிடம் விடை பெற்று வீடுவந்து சேர்ந்தனர்.

பெருமாள் நாயுடு அன்றையதினம் செல்லம்மாள் என்றுமில்லாத உபசாரமும் அலங்காரமுமாக இருக்கக் கண்டார். செல்லம் தன்புருஷனுடன் வெகுவாகக் கொஞ்சினள், அன்பு குலாவினள், சரஸத்தில் மிஞ்சினள், மகா சந்தோஷமாக இருந்தாள். அன்றிரவு சயனக்கிருகத்தில் பெருமாள் நாயுடு அதிகமான உல்லாச பூரிதரானர். பலமுறை ஆலிங்கனதிகள் செய்துகொண்டார். செல்லம்மாள் தனது காதலனை இருகக்கட்டியணைத்து முத்தென்ன முத்தந் தந்து பரவசப்படுத்தினள். இதனிடையே தனது நாயகனைக்கொஞ்சம் பால் சாப்பிட்டுச் சிரமம் தீர்த்துக்கொள்ளும்படி வேண்டினள். அவரும் சம்மதிக்கவே உடனே வசியமருந்து கலந்து வைத்திருந்த பாலை எடுத்துக் கொடுத்தாள். பெருமாள் நாயுடு தமது மனைவியின் புதிய அன்பில்—அவளுடைய மோகத்தில்—அவளுடைய ஆலிங்கன சுகத்தில்—மயங்கினதாலும் தாகம் அதிகமாயிருந்ததாலும் அந்தப்பாலைக்கடகடவென்று குடித்துவிட்டார். பாதி குடித்ததும் அதிற் கலந்திருந்த கொடூரமான மருந்துகளின் சேர்க்கைகளானது உடனே தெவிட்டுதலையும் இயற்கை வெறுப்பையும் உண்டுபண்ணிற்று. அத்துடன் மயக்கமேலிட்டுக் கண்களும் சுழலவே தக்ஷணமே கட்டிலிற் சாய்ந்தார். செல்லம்மாள் அந்த மயக்கத்துடன் மயக்கமாகப் பாக்கிப் பாலையும் உட்செலுத்திவிட்டாள். உடனே கதவைத்திறந்துவிட பாலம்மாள் உள் நுழைந்தாள். சந்தோஷ முகத்துடனே செல்லம்மாளைப் பார்த்தாள். அவளும் காரியம் பலித்ததென்று சைகை காட்டினள். சற்று நேரத்திற்கெல்லாம் பெருமாள் நாயுடு வாந்தி எடுத்தார். எங்கே அதில் மருந்து வெளிவந்து விடுகிறதோ வென்று மாமியும் மருமகளும் கவலை

யுடன் கவனித்து, அப்படி யொன்றும் வெளிவரவில்லையென்று சந்தோஷப்பட்டுக் கொண்டார்கள். இவ்வாறும் அன்றிரவு கழிந்தது. மறுநாட்காலையில் பெருமாள் நாயுடு தன் நினைவு முற்றும் தப்பி இருந்தார். ஆனதால் முந்தின இரவு நடந்த விஷயங்கள் ஒன்றும் அவர் ஞாபகத்துக்கு வரவேயில்லை. வீட்டைவிட்டு வெளிப்படமுடியாத விதமாகத் தடுமாற்றமும் மயக்கமுமாக இருந்தபடியால் பக்கவாதனைதலையும் மறந்தாரென்றே சொல்லவேண்டும். அன்று கட்டிலில் படுத்தவர்தான். அதற்குப் பிறகு பிறர் சகாயமின்றி எழுந்திருப்பதும் அரிதாய்விட்டது. பெருமாள் நாயுடு வீட்டை விட்டு வெளிச்செல்லும் வழக்கம் இப்போது நின்று விட்டது. அவர் தமது கட்டிலைவிட்டுக் கீழே இறங்குவதே கிடையாது. இப்படியாக ஒருமாதம் சென்றது. மருந்து பலித்ததென்று பாலம்மாளும் செல்லம்மாளும் வெகுவாகச் சந்தோஷப்பட்டுக்கொண்டார்கள். அதற் சம்பந்தமாக ஒரு சபை கூட்டி ஊர்வம்பி, காமாக்ஷி முதலானவர்களுக்குத் தகுந்த மரியாதைகளும் செய்தார்கள்.

அடடா! பெருமாள் நாயுடுக்கு நேர்ந்த விபத்தை நினைக்க நினைக்க மனது அநுதாபமாய் வேகிறது. படித்த வகுப்பாரால் அநேகம் கெடுதிகள் விளைகின்றனவென்ற கூப்பாடு இக்காலத்தில் பலமாயிருக்கிறது. இந்த நாளில் நடக்கிறதும் கலகங்கள், மோசங்கள், கோர்ட்டு வியாஜ்யங்கள் இவைகளெல்லாம் படித்த கிளாசின் கிருஷ்டியே செய்யப்படுகின்றன. படிப்பானது அறிவைக் கூர்மைப் படுத்திவிடுகிறபடியால் அதனால் புத்தி புதிய சாதுர்யங்கள் தோன்றி அவைகள் துஷ்டப்பிரவர்த்திக்குத் தூண்டுகோலாகப் பெரும்பான்மையும் முடிகின்றன. வைதிகச் சார்பு இல்லாத கல்வி முறையே தற்போது மிகுதிப்பட்டிருத்தலால் எண்ணமிட நிலைகளை இட்டுத்திருக்கின்றன. இப்படியிருந்தாலும் உற்றுப் பார்க்குமளவில் இவைகளெல்லாம் தேர்ந்தே கெடுவதாக இருக்கின்றன. தெரிந்தும் கிணற்றில் விழுவோனைக் காத்து ரக்ஷித்தல் சாத்தியமா? ஆனால் அறியாமல் கிணற்றில் தவறி விழுந்தோரைத் தடுத்தல் கூடுமல்லவோ! கல்வியால் விளையுந் தீமைகள் ஒரு சார்பு மிகுதிப்பட்டிருந்தபோதிலும், அது அஞ்ஞானத்திற்கும் அநாசாரத்துக்கும் பெரிய வைரியானதால், பாமரப் பெண்களுக்கு இதன் ஒளி வெகு பிரதானமான தென்பதை மறுப்பதற்கில்லை. ஆகவே வித்தியா ஜோதியானது மாதர்களுடைய மூடக் கொள்கைகளையும், அவிவேகமான கிரியைகளையும் தடுத்து அவர்களைத் திருத்த வைக்கிறது.

இங்கே பாலம்மாளும் செல்லம்மாளும் போதுமான படிப்புள்ள பெண்மணிகளாயிருந்திருந்தால் இப்படி மருந்து வைத்துப் பெருமாள் நாயுடுவை வசியப்படுத்த எண்ணுவார்களா? அல்லது இப்படி வசியப்படுத்துதல் என்ற வித்தையைத்தான் நம்புவார்களா? நம்பி அந்தமந்திரக்காரமண்டையாணிடம் போவார்களா? போய் இவன் காலில் விழுந்து ரூ. 1000-த்தையும் கொட்டிக் கொடுப்பார்களா? செல்லம்மாள் தனது தேகத்தைத் தாராளமாக மந்திரவாதி தடவிக்கொள்ள விட்டு அதற்குச் சம்மதித்தது எத்தனை அருவருப்பான காரியம்? வசிய மருந்தென்று ஒரு உயிர் விழுங்கும் விஷத்தைப் பெருமாள் நாயுடுவுக்குக் கொடுத்த இவ்விரு பெண்களின் மௌட்டியம் எவ்வளவு பரிதபிக்கத்தக்கது? பெருமாள் நாயுடுவின் தாயும் அவரது மனைவியும் அவரது சத்துருக்களல்ல. அல்லவாயினும் கல்விப்பிரகாசமற்ற நெஞ்சத்தினராதலால் பிறர் போதனைக்கு எளிதில் வசப்பட்டு அவருக்கு அட்டகொல்லியை சஞ்சீவி என்று நினைத்துக் கொடுத்து மதிமருண்டு போனார்கள். அன்பான சகோதரிகளே! உங்களுக்கொரு வார்த்தை. உலகத்திலே ஒருவனை, அல்லது ஒரு சமூகத்தை, அல்லது ஜெகத்ரக்ஷகனாகிய கடவுளைக்கூட வசப்படுத்தி நமது சட்டைப்பைக்குள் போட்டுக்கொள்ளக்கூடிய வசிய மருந்து ஒன்றுதான் உண்மையில் உண்டு. அது எது வென்பீர்களோ, அதுதான் அன்பு என்னும் வசியம். இந்த உலகமே நிலைநிற்பதும் இந்த அன்பு என்னும் வசிய சக்தியால்தான். குடிகள் அரசனுக்கு அடங்கி நடப்பதும், மனைவி தன் கொழுநனுக்கு அடிமைப்பட்டு நிற்பதும் இந்த அன்பினால்தான். அந்தக் காலத்தில் தன்னை வெட்டும்படி அரிச்சந்திரனைத் தூண்டி சந்திரமதி தலைகுனிந்ததும் அந்த அன்பு முதிர்ச்சியால்தான். ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி பலிச்சக்கரவர்த்திக்கு வாசற்காப்போனாய் அமர்ந்ததும், அர்ச்சுனனுக்குத் தேர்ப்பாகனானதும் இது போன்ற மகாத்மியங்களெல்லாம் அன்பு பற்றியே நிகழ்ந்ததாகும். கடைசியாய்ச் சொல்லப்போனால் இந்த அன்புதான் பிறவிப்பிணியையும் நீங்கும்படிச் செய்கின்றது.

உலகத்திலே உள்ள சகலவிதமான ஐக்கியங்களிலும் ஸ்திரீ புருஷ ஐக்கியமே உயர்ந்ததாகும். ஒரு காதலனும் காதலியும் நாணம் விட்டு ஒன்றுபடும் அன்பினுஞ் சிறந்தது வேறில்லை. காதலனும் காதலியும் வெவ்வேறான இருதேகங்களைப் பெற்றிருந்த போதிலும் அவை இரண்டும் ஒன்றுபட்டு அவர்கள் மனதும் ஒன்று

பட்டு அன்பும் முதிர்ச்சிபெற, அதன் பயனாக இருவருடைய ஆத்மசக்தியும் ஒன்றுசேர்ந்து ஒரு குழந்தையாக ஜெனனமாகிறது. அக்குழந்தையைத் தாய் தகப்பனாகிய இருவரும் தமதுகுழந்தை தமதுகுழந்தை என்று எடுத்து உச்சிமோந்து களிப்படைகின்றனர். இதை இன்னும் விரிக்கின் பெருகும். மேற்காட்டிய இவ்வித அன்பினால் ஒருவனை வசியப்படுத்துதல் சாத்தியமேயல்லாமல் மந்திரக்காரர்களிடத்திலும் குடுகுடுப்பாண்டிகளிடத்திலும் வசிய மருந்து வாங்கி வசியப்படுத்திக் கொள்ள நினைத்தல் பெரும் மடமையாக முடிவதுமன்றி அது உயிருக்கே ஆபத்தாகவும் அமைய நேரும்.

நம் நாட்டிலே பெண்பாலருக்குப் போதுமான கல்வியில்லாதபடியால் தான் அவர்கள் இவ்விதமான மருந்துவைத்தல் போன்ற அவிவேகச் செயல்களுக்கு இடங்கொடுத்துக் கொள்கின்றார்கள். பெண்களுக்குக் கல்வி முக்கியமென்பதைப்பற்றி காலஞ்சென்ற ஸ்ரீமான் வேதநாயகம் பிள்ளையவர்கள் பெண்மதிமாலை என்ற புஸ்தகத்தில் விஸ்தாரமாகத் தெரிவித்திருக்கிறார். ஒவ்வொருவரும் படித்துப் பெண்பாலரை மேன்மைப்படுத்த முயற்சி செய்வார்களென்று நம்புகிறோம். உலகம் கெடுவதும் பெண்களால்; சுகப்படுவதும் பெண்களால்.

நிற்க, வசியமருந்து என்று சொல்லப்படும் கொடிய ஆவிழ்தம் யாதக்காலத்தில் யாரால் வெளியில் பிரஸ்தாபத்துக்குக் கொண்டுவரப்பட்டதோ அறியோம். ஒரு மனிதனுடைய உள்ளாடையே பிரிக்காவிட்டாலும், அவனை சித்திரவதைசெய்து கொல்லுவதற்கான சரக்குகளெல்லாம் இதில் சேர்க்கப்படுகின்றன. இதைச் சாப்பிட்டவுடன் அவன் மூளை மழுங்கி, அறிவு தடுமாறி, நினைவு தப்பிப்போய், புத்தி சுவாதீனமற்றவனாய் சீக்கிரத்தில் பித்தனாகி விடுகிறான். அவ்விஷ ப்ராணிகளாலும் விஷசெடிகளாலும் மருந்திடப்பட்டு மாண்ட மனுஷர்களின் எண்ணிக்கை கணக்கிட முடியாது. இந்த ஆவிழ்த முறையிலே நாகப் பாம்பின் பித்தும் சேர்க்கப்படுகின்றது. இக்கொடிய ஆவிழ்தமானது முதல் இலைதத்திலேயே தனது வசியமந்த்ரவதனைக் காட்டும் நிவாரணமுள்ளதாயிருக்கிறது. அனேகமாய் ஒரு மாதத்துக்குள் மனிதன் எவ்வித பரிகாரத்திற்கும் வசப்படாமல் மாண்டு விடுகிறான். இதுமட்டுமே யல்ல, அரளி கடித்தால் மரணம் என்று ஒரு பழமொழியுண்டு. அந்த அரளிப்பிஞ்சும் சேர்த்துச் செய்கிற அவிழ்தமாயிருந்தால் பதினைந்து நாளில் குணம் காட்டுகின்றது. வசியமருந்து பிரயோகிக்

கப்பட்ட மனிதன் தன் புத்தியும் செயலும் அற்றவனாய்ச் சிறு குழந்தை போல பிறர் வசப்பட்டுப் போகிறான். இருந்தாலு மென்ன? அந்த நஞ்சானது இவனை ஆறுமாத காலத்திலே தானே யமலோகத்திற்குக் குடியேற்றிவிடுகின்றது. ஆந்தைப்பித்தையும் சிலர் சேர்த்துச் செய்கிறார்கள். அது மூன்று பக்ஷத்தில் தனது சக்தியைக்காட்டுகிறது. இதையருந்தியவன் ஆந்தையைப்போல வே கண்களைத் திறந்துகொண்டு பயங்கரத்தோற்றமாய்க் காணப் படுவான். கண்கள் திறந்திருந்தாலும் எதிரிலுள்ள வஸ்துவைக் காணக் கூடிய பார்வைச்சக்தியானது படிப்படியாகக் குன்றி மழுங்கிப் போய்விடுகிறது. விழித்த கண் விழித்தபடியே இருக்க, புலன்கள் குறைபட்டு, ஸ்மரணை மாறி பிரமை ஏற்பட்டு விடுகிறது. நிமிஷத் துக்கு நிமிஷம் புத்தி மாறும்; இவன் கடைசியாக இரண்டு வருஷ த்தில் பரிதாபமான சாவில் இறக்கின்றான்.

மருந்திட்டு வசியப்படுத்த முயற்சிக்கும் பாவைமார்களே! மேலெழுதிய பயங்கரமான முடிவுகளையெல்லாம் ஆழ்ச் சிந்தனை செய்து உங்கள் துன்மார்க்கத்தை நீக்கிக் கொள்ளப்பாருங்கள். இந்த உலகத்திலே கடவுளுக்கும் அரசனுக்கும் பிறகு புருஷர் களின் உயிர் உங்களின் அழகிய கைகளிலேதான் ஒப்புவிக்கப் பட்டிருக்கின்றன. அவர்கள் தங்களுடைய இல்வாழ்க்கைச் சிறப் பித்துக்கொள்வதும், எடுத்த பிறவியைப் பயன்படுத்திக்கொள் வதும், இந்த உலகத்திலே நெடுநாள் ஜீவித்துப் பேரும், கீர்த்தியு மாய் வாழ்ந்திருக்கப் பார்ப்பதும் நீங்கள் நடந்துகொள்கிற மாதிரியில் தான் அடங்கியிருக்கின்றது. ஆகவே என்னருமை சகோதரிகளே! நீங்கள் உங்கள் கணவர்களின் எண்ணங்களை நிறைவேற்றி அவர்களை முழுமனதுடன் நேசியுங்கள். அன்பினால் அவர்களை வசப்படுத்தப்பாருங்கள். நல்லதையே நினைத்து, நல்ல தையே பேசி, நல்லதையே செய்து நலமாக வாழ முயலுங்கள்.

நிற்க, பெருமாள் நாயுடு வழக்கப்பிரகாரம் மறுநாள் வராமற் போகவே இன்னும் சற்றுநேரத்தில் வருவார் வருவா ரென்று பாக்கியரத்னம் எதிர்பார்த்திருந்தும் வராமற்போகவே தனது வேலைக்காரனை அவருடைய உத்யோகஸ்தலத்துக்கு அனுப்பி அவர் வராத காரணம் என்னவென்று அறிந்துவரச் சொன்னாள். அவர் பிரக்ஞையில்லாமல் படுக்கையிலேயே இருப் பதாகத் தெரிந்தவுடனே அவரைப் போய்ப் பார்க்கவேண்டு மென்ற அவா அதிகமாயிருந்தாலும் அவர் எக்காரணத்தை

யிட்டும் அவளைத் தன் வீட்டிற்கு வரக்கூடாதென்று ஆக்ஞாபித்திருந்ததை நினைத்துப் போகாமல் நித்யம் மூன்றுதரம் அவர் ஸ்திதியைக் குறித்து விசாரித்துக்கொண்டிருந்தாள். இப்படி ஒரு மாதத்திற்குமேல் சென்றதால் பொறுமையுடனிருக்க அவளால் கூடவில்லை. மேலும் உலைவாயை மூட முடியும்; ஊர்வாயை மூட முடியுமா? பெருமாள் நாயுடுவுக்கு மருந்திட்ட செய்தி சென்னப் பட்டணம் முழுதும் பரவிவிட்டது. பாக்கியரத்தினத்திற்கும் இந்தச் சமாசாரம் எட்டி அவளைத் திடுக்கிட வைத்தது. உடனே அவள் பலவிதமாகப் பிரலாபித்துக்கொண்டு தன் கைக்குழந்தையுடனே பெருமாள் நாயுடுவின் வீட்டிற்குப் பிரயாணப்படலானாள். அந்தக் கைக்குழந்தை பெருமாள் நாயுடுவின் முற்றிய காதலின் ஞாபகார்த்தமாய்ப் பாக்கியரத்னத்துக்குக் கடவுளால் கொடுக்கப் பட்ட ஓர் பரிசாயிருந்தது.

இது நிற்க, பாக்கியரத்னம் பெருமாள் நாயுடுவின் வீட்டிற்குள் நுழைந்ததும் செல்லம்மாளும், பாலம்மாளும் "நீ இங்கே ஏன் வந்தாய்? வெட்கம் நாணமில்லாத தேவடியா முண்டைக்கு இங்கு என்ன வேலை?" என்று ஆரவாரித்தார்கள். இவள் அவர்களுடைய அட்டஹாசத்தை பொருட்செய்யாமல் உட்சென்று பெருமாள்நாயுடு படுக்கையோடு படுக்கையாகக் கிடக்கும் பரிதாபமான கோலத்தைப் பார்த்து அதிசோகக் கண்ணீரைப் பெருக்கினால், வயிற்றிலடித்துக்கொண்டாள். கதறினாள். ஐயோ! என் அன்பின் பெருக்கே என்று கூவினாள். இதற்குள்ளாக செல்லம்மாள் தனது மாமியைப் பார்த்து, "ஆ! எவ்வளவு பாசாங்கு செய்கிறாள் பாருங்கள்; அவருக்கு மருந்து வைத்து உடம்பைப் புண்ணாக்கி ஒரு மாதக்காலமாய் பிரக்ஞையில்லாமல் படுக்கையிலேயே கிடக்கும்படி செய்துவிட்ட பாதகி இப்போது அழுவதற்கும் வந்து விட்டாளே" என்று கூறினாள்.

இந்த வார்த்தைகள் பாக்கியரத்னத்துக்கு வெந்த புண்ணில் வேலுருவியது போலிருந்தது. அவளால் சகிக்கக் கூடவில்லை. ஆனால் உடனே பாலம்மாளைப்பார்த்து "நீயும் உன் மருமகளும் சேர்ந்து மருந்துவைத்து ஒருநாளும் பாயிற்படுத்தறியாதவரைப் படுக்கையில் சாஸ்வதமாய்க் கிடத்திவிட்டு, இப்போது என்மேல் பழிசுமத்துகிறீர்களா? வேண்டாமம்மா; கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவருக்குப் பயந்து நடவுங்கள்" என்றாள். அதற்குப் பாலம்மாள் "போடி, வித்தைக்கள்ளி! உன்னுடைய மாய்மால

மெல்லாம் உன்னிடம் வரும் நூற்றுக்கணக்கான மடையர்களிடம் காட்டு; இங்கே காட்டினால் பலிக்காது" என்றாள். அதற்குப் பாக்கியரத்னம் "நீ மருந்து வைத்த சங்கதி ஊரெல்லாம் அறியும். காமாக்ஷியின் துணையோடு கோடம்பாக்கத்திலிருக்கும் சண்டமாருதசாமியாருக்கு ஆயிரம் ரூபாயைக் கொட்டிக் கொடுத்துத் தங்கச் சிமிழில் வாங்கி வந்து உனது மகனுக்கு வைத்த விவரம் எனக்குத் தெரியாமலிருக்கவில்லை; நீதான் மருந்து வைத்தா யென்று எனக்கு இருக்கிற இந்த ஒரே பிள்ளையை வைத்துக் கொண்டு நான் சத்தியமாகச் சொல்லுகிறேன். நீ மருந்து வைக்கவில்லையென்று உன் அருமை மருமகள்மேல் ஆணையாய்ச் சொல்லுவாயா" வென்று அழுகையும் ஆத்திரமுமாய்க் கேட்டாள். அதற்குள் செல்லம்மாள் முன்வந்து, "வெட்கங்கெட்ட நாயே! உன்னை இந்த வீட்டில் யார் கால் எடுத்து வைக்கச்சொன்னது? சீச்சீ, வெளியேபோ" என்றாள். இந்தக்கடைசி வார்த்தை செல்லத்தின் வாயிலிருந்து வெளிப்படுகிற சமயத்தில் தான் பெருமாள் நாயுடு தனது கண்களை இத்தனை நாள் இல்லாத விதமாக இன்று திறந்துகொண்டு பாக்கிய ரத்னத்தை உற்றுநோக்கித் தம்மிடம் வரும்படிக்கூறி அவளையும் கைக்குழந்தையையும் தாம்படுத்திருந்த கட்டிலில் தம்முடன் உட்காரவைத்துத் தழுவி முத்தமிட்டார்.

முதலில் பாக்கியரத்னம் வார்த்தைகளைக் கேட்டவுடனேயே பெருமாள் நாயுடுவுக்குச் சித்தப்பிரமை சற்று நீங்கித் தெளிவை உண்டுபண்ணிற்று. ஆனால் கண்களைத் திறக்கவோ எழுந்திருக்கவோ அவர் சக்தியற்றவரா யிருந்தார். பாக்கிய ரத்னத்திற்கும் தனது தாயார், மனைவி இவர்களுக்கும் நடந்த சம்பாஷணையில் சிலவார்த்தைகள் அவர் காதிற்புகுந்து மனதில் பதிந்து ஞாபக சக்தியை உண்டுபண்ணின. கடைசியாகச் செல்லம்மாள் பாக்கிய ரத்னத்தை, மட்டுக்கு மீறி வைது வெளியே போய்விடும்படி சொன்னபோது இவருக்கு ஆக்கிரகம் அதிகரித்துவிட்டது. இப்படி அதிகரித்த மனக்கொதிப்பு அவருக்குள் ஒரு புது சக்தியை எழுப்பிவிட்டது. ஆஹா, காதலின் வலிமை தான் என்னே! என்னே!! அது மருந்தின் சக்தியையும் தாழச்செய்து நூதன பலத்தை யுண்டுபண்ணி ஒரு மாதமாக எழுந்திருக்கச் சக்தியற்றவரை எழுந்து உட்காரும்படி செய்து வைத்ததே! ஆச்சரியம்! ஆச்சரியம்!! ஆச்சரியம்!!! காதலிருவர் கருத்தொக்க ஆதரவு பட்டதே இன்பம் என்ற ஔவையாரின் அமுதவாக்கே வாக்கு.

அதன்பெருமையே பெருமை. காதலார் தம் மனம் ஒன்றுபட்டால் இன்பம். அந்த மனம் ஒற்றுக்கொன்று விகற்பமடைந்து இரண்டாகப் பிளவுபட்டால் துன்பம்.

பாக்கியரத்னம் தனது ஆர்வலனை எல்லோருக்கும் முன்னதாகத்தானே தழுவி முத்தமிட்டுக் கொண்டாள். பெருமாள் நாயுடுவும் அவளை இறுகத் தழுவி அன்புமுத்தம் தந்தார். அந்த முத்தங்களின் சுவை எப்படிப்பட்டதோ அதை அந்த ஸ்தானத்திலிருந்து அனுபவித்தவர்களுக்குத் தான் தெரியும். ஆசை வெட்கமறியாதென்பது நம்முடைய சொந்த மொழியல்ல; முன்னோர் கூறிவைத்த மொழியேயாம். இதை யெல்லாங் கண்டு பாலம்மாள் தனது குமாரனை நோக்கி "என்னடா பெருமாளு! இன்னும் இந்தச் சண்டாள மூதேவியின் பாசம் உன்னை விடவில்லையா? இவளால் தானே நீ இந்த கெதிக்கு வந்தாய்! நானும் உன் பெண்சாதியும் இங்கிருக்கிறோமென்று கூட மதியாமல் அவளை அழைத்து முத்தமிட்டாயே!" என்று கண்டித்துப் பேசினாள். அதற்குப் பெருமாள் நாயுடு தமது தாயாரைப் பார்த்து "சிச்சீ, போதும். வாயை அடக்கு, சண்டாளி! உங்களைப் பகவான் தான் கேட்கவேண்டும்! நாசமாய்ப்போன செல்லத்தின் புதிய அன்பில் பரவசப்பட்டு அந்த மருந்து கலந்த பாலைக் குடித்து ஐயோ! மோசம் போனேனே! அந்தப் பாலின் ஞாபகம் இப்போதுதானே எனக்கு உண்டாகின்றது! பாக்கியரத்னத்தின் சப்தமல்லவோ—அவளுடைய அன்பல்லவோ—என்னை இப்படி எழுப்பி உட்காரவைத்து இவ்வளவு தூரம் பேசவைத்தது. கொலைகாரிகளே! நீங்கள் பாக்கியரத்னத்தை ஏதாவது பேசுவீர்களானால் இந்த நிமிஷமே உங்களை இவ்வீட்டை விட்டு ஜெயிலுக்குப் போகும்படி செய்வேன். அல்லது அவள் வீட்டிற்கு என்னைக் கொண்டுபோகச் செய்து கொள்வேன்" என்று கோபாவேசத்துடன் கூறினவுடன் களைப்பால் பாக்கியரத்னத்தின் மீது சாய்ந்தார். பாக்கியரத்னம் அவரை ஆதரவுடன் தன் மார்பின் மீது சாய வைத்துக்கொண்டு, தன்னுடன் எடுத்து வந்திருந்த அவருக்குப் பிரியமான நன்னாரிவேர் ஷர்ப்பத்தை ஒரு கிளாஸில் ஊற்றிக் கொடுத்து அவரைப் பருகச்செய்து பிறகு அவர் வாயில் ஒன்றை இரகசியமாக வைத்தாள். அவர் அதற்காக அவளுக்கு ஒரு முத்தமும் அளித்தார். அது யாதெனில், அவர் எப்போதும் பிரியமாய்ச் சாப்பிடும் மாங்காய் ஊறுகாய் தான். உண்மையான

அன்பு எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? புறப்படும்போதே தன் ஆர்வலனுக்குப் பிரியமானவற்றைச் சேகரித்துக் கொண்டு வந்த பாக்கியரத்னத்தின் புத்தி வைபவம் யாராலும் யாவராலும் புகழற்பாலது. மருந்திட்டு மயக்குதலால் எஞ்ஞான்றும் உண்மை அன்பு உற்பத்தி யாவதில்லை. மங்கலிய பாக்கியம் இழத்தல் ஒன்றே உறுதி. உள்ளன்பே உத்தமிகளின் லக்ஷணம். அதுவே பரமரகசியம். குலமகளிரா யிருந்தாலென்ன? உள்ளன்பே பிரதானம். அதுவே சிறந்த வெகுமானம்.

பெருமாள் நாயுடு சீற்றத்துடன் பேசியதும், செல்லம்மாளும், பாலம்மாளும் வெளியேபோய் விட்டனர். அவர்கள் சென்றவுடனே பெருமாள் நாயுடுவின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் வடிய பாக்கியரத்னத்தைப் பார்த்து அழுது கொண்டே தனக்கு அந்தியகாலம் சமீபித்து விட்டதென்றும் தான் இரண்டொரு தினங்களில் இறப்பது நிச்சயமென்றும் முத்துசாமி இறந்த சங்கதியைக் கேட்டவுடனே சைதாப்பேட்டை ஆற்றில் விழுந்து தற்கொலைசெய்து கொள்ள முயன்றதைப் போல் இப்போது செய்யக்கூடாதென்றும் அப்படி அவள் செய்தால் தங்களுடைய குழந்தை தெருவில் நின்று தவிக்கும்படி நேரிடுமென்றும் இன்னும் இதைப்போன்ற பல புத்திமதிகளைச் சொல்லி என்ன நேரிட்டபோதிலும் அவள் தற்கொலை செய்துகொள்வதில்லை யென்ற வாக்குறுதி செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அவ்விதமே அவளும் வாக்களித்தாள். அப்பால் பாக்கியரத்னத்தைப் பார்த்து "என்னுடைய ஸ்திதியைத் தந்தி மூலமாக ராமாநுஜத்துக்குத் தெரிவித்து அவரை உடனே தருவிக்க ஏற்பாடு செய்வதுடன் எனது நண்பனுகிய துப்பறியும் கோவிந்தனையும் உடனே என்னிடம் வரச்சொல்" என்றார். மேலும் ரகசியமாகச் செவியோடு செவியாக 'நீ இங்கு ஜலபானமும் செய்யாதே' என்று எச்சரித்தனுப்பினர். பாக்கியரத்னம் அதிக பிரிவாற்றுமை மேலிட்டவளாய்த் தேம்பித் தேம்பி அழுது கொண்டு 'நாளைவருகிறேன்' என்று அவரிடம் விடை பெற்றுக் கொண்டுபோய் ராமாநுஜலு நாயுடுவை உடனே புறப்பட்டு வரும்படி தந்திகொடுத்துவிட்டு கோவிந்தனிடமும் பெருமாள் நாயுடு உடனே வரச்சொன்னுரென்று சொல்லிவிட்டுத் தன் ஜாகைக்குச் சென்றாள். கோவிந்தன் உடனே பெருமாள் நாயுடுவிடம் போனதும் அவர் ஏதோ கோவிந்தனிடம் இரகசியமாகச் சொன்

னார். உடனே கோவிந்தன் வெளியே போய் ஐந்துமணிநேரம் பொறுத்துத் தன்னுடன் கூட சிலரை அழைத்துவந்து பெருமாள் நாயுடுவினிடம் ஏதோ சமாச்சாரம் சொல்லிவிட்டுச் சில பத்திரங்களில் பெருமாள் நாயுடுவிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு போய்விட்டார்.

இது நிற்க, திருச்சினாப்பள்ளியில் ராமாநுஜலு நாயுடு, தந்தியைக் கண்டதும் அன்றிரவு மெயிலில் தானே புறப்பட்டு சென்னை வந்து நேராகப் பெருமாள் நாயுடு வீட்டுக்குப்போய்ச் சேர்ந்து தமது நண்பனைக்கண்டு திடுக்கிட்டுக் கைகால் நடுங்கித் திகைப்புடன் நின்றுவிட்டார். பிறகு மனதைத் தைரியப் படுத்திக் கொண்டு பெருமாள் நாயுடுவைப் பலவிதமாகக் கூப்பிட்டுப் பார்த்தும் அவர் மறுமொழி பகரவில்லை. ஆயினும் இவர் கூப்பிடுகிற சப்தமெல்லாம் அவர் செவிக்குக் கேட்டுக் கொண்டிருந்தது. முன்பு பாக்கியரத்னத்தின் சப்தத்தை கேட்டபோது உண்டான புதுசக்தி இப்போது கொஞ்சம் கொஞ்சமாய்த் தோன்றவே, படுத்திருந்த அவர் மெள்ள எழுந்திருந்து உட்கார்ந்து தனது நண்பனை அப்படியே ஆலிங்கனம் செய்துகொண்டார். ஆனால் இவர் இப்படிச் செய்ததானது அவரது சக்திக்கு நூறுமடங்குக்கு மேல் மீறிச்செய்த காரியமாதலால் கொஞ்ச நேரத்தில்களைப்படைந்து சோர்வு மேலிட்டு கட்டிலின் மீது சாய்ந்துவிட்டார். உடனே ராமாநுஜலு நாயுடு பிடித்துக்கொண்டதால் நல்லவேளையாகக் காயமில்லாமற் போயிற்று.

ராமாநுஜலு நாயுடு அவரது தேகஸ்திதியைப் பார்த்துக் கலங்கினார். உடனே டாக்டரைத் தருவித்துச் சிகிச்சைகள் செய்தார். டாக்டர் பெருமாள் நாயுடு பிழைப்பார் என்று தமக்கு நம்பிக்கையில்லையென்று சொல்லிவிட்டார். ஆயினும் அவருக்குத் தெளிவும் பழைய ஞாபகமும் உண்டாகும்படியான ஏற்பாடுகளையும் அதற்கேற்ற மருந்துகளையும் வெகு சிரத்தையாகக் கொடுத்து கவனித்து வந்ததில் மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு அவருக்குக் கொஞ்சம் பிரக்ஞை அதிகமாய் உண்டாயிற்று. ராமாநுஜலு நாயுடு தமது முகத்தை அவருடைய கண்களுக்கெதிரில் கொண்டுபோய்க்காட்டி தாம் இன்னார் என்பதாகத் தெரிவித்துக்கொண்டார். பெருமாள் நாயுடு வெகு கஷ்டத்துடன் தமது கண்களைத்திறந்து ராமாநுஜலு நாயுடுவை நோக்கினார். தமது சமீபத்தில் வரும்படியாகச் சைகைசெய்யவும் அவரது

வாய்க்கருகே தமது காதை வைத்து சங்கதியைச் சொல்லும்படி வேண்டினார். அதற்குப் பெருமாள் நாயுடு அவரைப் பார்த்து, "அப்பா! ராமாநுஜம்! எல்லாவற்றிற்கும் உன்னையே நம்பியிருக்கிறேன். பாக்கியரத்னத்தைக் கை விடாதே, அவளை ஆதரித்துவா. ஒருகால் முன்போல் சைதாப்பேட்டை ஆற்றில் விழுந்துவிடப்போகிறாள். ஜாக்கிரதையாயிரு. அவளுடைய பொய் வார்த்தைகளை நம்பாதே. அவளை அறியாமலே நீ அந்தரங்கமாக அவளுடைய காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்து அவளுடைய உயிரைக் காப்பாற்றப் பார். நான் இனி அதிக நாள் இருக்கமாட்டேன். நான் இப்பொழுது இறக்கிற மரணம் அநியாய மரணந்தான். எனது கடைசி காலத்தில் என்னெஞ்சில் ஒரு பெரிய குறை இருந்துகொண்டிருக்கிறது. அதை நீ நிறைவேற்றி என் வாக்குத்தத்தத்தைக் காப்பாற்ற வேண்டும். எனக்குப் பிராண சிநேகிதரான ஜமீன்தார் ஒருவர் அவரது அந்திய காலத்தில் அவருடைய ஸர்வ சொத்துக்களையும் என் வசம் ஒப்புவித்து ஒரு ஓயில் சாசனம் செய்திருக்கிறார். அது சம்பந்தமான சகல ரிக்கார்டுகளையும் என்னிடம் கொடுத்துத் தமது பெண்குழந்தையையும் என்னிடம் ஒப்புவித்திருக்கின்றார். அந்த ரிக்கார்டுகள் எனது கைப்பெட்டியில் இருக்கின்றன. அப்பெட்டியின் மேல் குறிப்பிட்டதேதி வரும் வரையில் எத்தக்காரணத்தைக் கொண்டும் அப்பெட்டியைத் திறந்து அதில் எழுதியிருக்கும் விஷயங்களை நீ பார்க்கக்கூடாது. அப்படிப் பார்க்க மாட்டேனென்று நீ பிரமாணம் செய்து கொடு" என்று கெஞ்சிக்கேட்டார். உடனே ராமாநுஜலு நாயுடு பிரமாணம் செய்து கொடுத்தார். எந்தக் காரணத்தைக் கொண்டும் திறக்கக்கூடாதென்பதை மறந்துவிடாதே என்று மறுபடியும் வற்புறுத்திச் சொன்னார். அத்தேதிவரையில் மாதம் மாதம் தவறாமல் ரூ. 100 அவளுக்கு அனுப்பிக்கொண்டிரு என்றார். எங்கு அனுப்பவேண்டுமென்று ராமாநுஜலு நாயுடு கேட்கவே, பதில் சொல்ல வாயெடுத்த பெருமாள் நாயுடுவுக்கு நாக்குத் தடுமாறி வார்த்தை வரவில்லை. கண்களை மூடிவிட்டார். பிரக்ஞை அற்றுப்போயிற்று.

ராமாநுஜலு நாயுடு என்ன உபசாரம் செய்தும் அவர் மறுபடியும் கண்திறந்து பார்க்கவில்லை. ராமாநுஜலு நாயுடு அந்தக் குழந்தை எங்கே இருக்கிறது என்று பலமுறையும் உரக்கக் கூவிக் கேட்டார். அவர் ஒன்றும் பேசாமற் கண்ணை மூடியவராகவே

கிடந்தார். உடனே பாலம்மாள் ராமாநுஜலு நாயுடுவைப் பார்த்து பாக்யரத்னத்தைக் தருவித்தால் ஒருகால் கண்திறந்து பார்க்கக் கூடும். ஏனென்றால் முன்பு அவளுடைய சத்தத்தைக் கேட்ட போதுதான் அவன் கண்திறந்து எல்லோரும அதிசயிக்கும்படி பேசினான். ஆனபடியால் அவளை உடனே வரவழைக்கவேண்டு மென்று அவசரப்பட்டாள்.

இது இப்படியிருக்க வீட்டுக்குப்போன பாக்கியரத்னம் இரவு முற்றும் அழுதவண்ணமே கிடந்து படுக்கை முழுமையும் கண்ணீரால் நனைந்து ஆயாஸக் களைப்பு மேலிட்டவளாய்த் தூங்கிப் போனாள். அவளுடைய சரீரம் சுகுமாரமான மிருது தேகமாதலால் அவளுக்குண்டான துயரத்தைத் தாங்கமாட்டாமல் அதிகமான துர்ப்பலத்தையும ஜ்வரத்தையும உண்டுபண்ணிவிட்டது. அதனால் மறுதினம் 11 மணிக்குத்தான் அவளுக்குப் பிரக்ஞை உண்டாயிற்று. சரியான நினைவும் வந்தது. மணியைப்பார்த்தாள்! 11-ஆயிற்று. உடனே யாதொரு உணவும் அருந்தாமல் பெருமாள் நாயுடுவின் வீட்டுக்கு வந்தாள். இத்தருணத்தில் தான் பாலம்மாளும் அவளைத் தருவிக்கும்படி ராமாநுஜலு நாயுடுவைத் தூண்டினது. இதற்குள்ளாகப் பாக்கியரத்னமும் அங்கு வந்து விட்டாள். தனது அன்பன் இருந்த நிலையைக்கண்டு ஐயோ அத்தான்! என்று அலறினாள். இந்தச் சப்தத்தைக் கேட்டதும் பெருமாள் நாயுடு தமது கண்களைத்திறந்து மேலே பார்த்தார். ஆனால் சரியாக கண்களைத் திருப்பிக் கவனிக்கக் கூடவில்லை. பார்க்கவும் முடியவில்லை. அவளை அணைத்துக்கொள்ளத் தமது இரு கரங்களையும் உயரத்தூக்கினார். ஆயினும் செவ்வையாய்த் தூக்கமுடியவில்லை. இதற்குள் பாக்கியரத்னம் சற்று ஒத்தாசை செய்யவே அவனுடைய மனோபீஷ்டம் நிறைவேறிற்று. ஆஹா! பாக்கியரத்னத்தின் மீது தான் எத்தனை அன்பு! இஃதன்றோ உண்மைக்காதல் அந்த காதலின் தீவிரமான சக்தியன்றோ சரீரத்தைவிட்டுச் சற்று தூரம் அகன்ற பிராணனையும் திரும்பக்கொண்டு வந்து கொடுத்து அக்காதற் கிழத்தியின் முகத்தாரையை ஆர்வத்துடன் நோக்கும்படியான அற்புத சக்தியையும் உண்டாக்கிற்று. ஆஹா! காதலின் வலிமையே வலிமை! இம்மகீதலத்தின் காதலின் ஆழத்தை முற்றும் அறிந்தார் யார்? தாம்பத்திய அந்நியோன்னியத்துக்கு அஸ்திவாரமாக இருக்கும்படியாக ஜெகத்ரக்ஷகன் அருளிய வரமன்றோ அது! நிற்க, பெருமாள் நாயுடு தமது கண்களைச்

சற்று திறந்ததும் ராமாநுஜலு நாயுடு உரத்தத் தொனியுடன் அவரைப்பார்த்து அந்தப் பெண்குழந்தை எங்கேயிருக்கிறது என்று பன்முறை கேட்டார். அதற்குப் பெருமாள்நாயுடு மிகவும் மெலிந்த குரலில் அந்தக் கு—ழ—ந்—தை ; கு—ழ—ந்—தை என்று சொல்லிக்கொண்டே பாக்கியரத்னத்தை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள் என்று ராமாநுஜலு நாயுடுவிடம் சொன்னதைப்போல் கண்களை அவள் பக்கம் திருப்பி ராமாநுஜலுநாயுடுவைப் பார்த்துவிட்டு மறுபடியும் பாக்கியரத்னத்தைப் பார்த்ததும் கண்களை மூடிவிட்டார். பாக்கியரத்னத்தைத் தழுவியிருந்த கரங்கள் சோர்வுற்று படுக்கையில் விழுந்தன. பேச்சும் அடங்கிற்று ; மூச்சும் ஒடுங்கிற்று ; உயிரும் உடலைவிட்டுப் பிரிந்தது ; பெருமாள்நாயுடு திரும்பவும் எழுந்திராத பெருந்தூக்கம் தூங்கலானார்.

இரண்டாம் அத்தியாயம்

ஆச்சரியமாய்க் காணமற்போனது.

முந்திய அத்தியாயத்திற் சொன்ன காரியங்கள் நடந்த எழு வருஷங்களுக்கப்பால் ஓர்நாட் காலையில் சிங்கப்பூரில் போலீஸ் கமிஷனர் துரையவர்கள் தன் ஆசனத்தில் அமர்ந்து வழக்கப் பிரகாரம் தன் வேலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது ஓர் சுதேச கனவான் அவ்விடத்திற்கு வந்திறங்கி அங்கு நின்றுகொண்டிருந்த போலீஸ் சேவகனிடம் ஓர் கடிதத்தைக் கொடுத்து போலீஸ் கமிஷனர் துரையவர்களிடம் கொடுக்கும் படி சொன்னார். போலீஸ் கான்ஸ்டேபில் அப்படியே கொண்டு போய் கமிஷனரிடம் கொடுக்க அவர் அதை உடைத்துப் பார்த்தார். அதில் பின் வருமாறு எழுதியிருந்தது.

கடிதம் போலீஸ் கமிஷனர். ஆபீஸ்,
சென்னை 23-6-

மக-ள-ள-ஸ்ரீ மேஜர் மக்பார்லண்டு துரை அவர்கள்,
போலீஸ் கமிஷனர், சிங்கப்பூர்.

அன்பார்ந்த நண்பரே,

இக்கடிதம் கொண்டு வருபவர் துப்பறிவதில் கியாதிபெற்ற திருவல்லிக்கேணி கோவிந்தன். அதிக தூரத்திலிருந்தாலும் அவருடைய கியாதி தங்களுக்கு இதுவரையில் விசேஷமாய்த் தெரிந்திருக்கலாமென்று நம்பி நான் இங்கு விவரித்து எழுதவில்லை இவர் சிங்கப்பூரில் தங்களால் துலக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஓர் விஷயத்தைத் துலக்குவதற்காக அவருடைய முக்கிய நண்பரொருவரின் வேண்டுகோளுக்

கிணங்கி அங்கே வருகிறார். நம்மாலும் நமது உத்தியோகஸ்தர்களாலும் கண்டுபிடிக்க முடியாத அவ்வளவு கஷ்டமான வேலையை இவர் ஒருவரே எப்படிக் கண்டுபிடிக்க முடியுமென்று அலக்ஷியமாய் நினையாமலும் நம்மால் கண்டுபிடிக்க முடியாத விஷயத்தை அவர் கண்டுபிடித்து விட்டால் நமக்கு அகௌரமாகுமேயென்று பொறாமைப்படாமலும் அவருக்கு வேண்டிய உதவியைக் கொடுத்து எப்படியாவது காரியத்தை முடித்துக்கொள்வீர்கள் என்ற முழு நம்பிக்கையுடன் தங்களுக்கு இக்கடிதம் எழுதலானேன். அவர் திரும்பி வரும்போது தங்களுடைய அன்புக்கும் ஆழ்ந்த நன்றியறிதலுக்கும் விசேஷ மரியாதைக்கும் பாத்திரராகித் திரும்புவாரென்பது நிச்சயம். இவர் வந்து சேர்ந்த விவரத்திற்கும் அவர் செய்துவரும் அபார காரியங்களுக்கும் தங்கள் பதிலை அடிக்கடி எதிர்பார்க்கும்,

தங்கள் பிரிய நண்பன்,

H. குடால்.

கர்னல்,

போலீஸ் கமிஷனர், சென்னை.

இக்கடிதத்தை மேஜர் மக்பார்லண்டு துரை அவர்கள் வாசித்துப் பார்த்தவுடனே கோவிந்தனிருக்கும் இடத்திற்கு எழுந்து போய் அவருடைய கைகளைப் பிடித்துக் குலுக்கி தமது அறைக்கு அழைத்து வந்து தமக்குச் சமீபத்தில் ஆசனமளித்து அவரை வீற்றிருக்குச் செய்து தாமும் உட்கார்ந்தார். அப்பால் அங்கு காவலிருந்த போலீஸ்ஜவானை அழைத்து அங்கு வந்திருக்கும் தனவானுடன் தான் பேசி முடியும் வரையில் ஒருவரையும் உள்ளே விடக்கூடாதென்றும், அநாவசியமாய் மத்தியில் தொந்திரவு செய்யக்கூடாதென்றும் சொல்லி அனுப்பிவிட்டு கதவைமூடித் தாளிட்டுக்கொண்டு கோவிந்தனைப்பார்த்துப் பின்வருமாறு சொன்னார்.

மேஜர் மக்பார்லண்டு துரை.—ஐயா! தங்களை நேரில் காணும் பாக்கியத்தை இதுவரையில் நான் பெறாவிட்டாலும் தங்களுடைய கியாதி இப்பூலோகமென்னும் பரவியிருப்பதைப்போல் இங்கும் எட்டியிருக்கிறது. தங்களை வரவழைப்பதற்குப் போதுமான அந்நியோந்ய ஸ்நேகம் நமக்குள் இதற்குமுன் ஏற்படாததாலும் தங்களூரிலிருக்கும் பல முக்கியமான ஜோலிகளைவிட்டுத் தங்களுக்கு இவ்வளவு தூரம் வருவது சிரமமாயிருக்கும் என்னும்காரணத்தினாலும் தான் தங்களை இதுவரையில் நான் வரவழைக்கவில்லை.

கோவிந்தன்.—தாங்கள் என்னைப் புகழ்ந்து பேசுவது எனக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்தபோதிலும் இவ்வளவு புகழ்ச்சிக்கு நான் அருகனல்லவென்று மட்டும் நினைக்கிறேன். தங்க

ளுடைய சாமார்த்தியத்தையும் வேலைத்திறமையையும் பற்றி நானும் வெகுவாய்க் கேள்விப்பட் டிருக்கிறேன். ஆகையால் தங்களால் கண்டுபிடிக்கமுடியாத விஷயத்தை என்னுலும் கண்டு பிடிக்க முடியாதென்ற பயம் எனக்கிருந்த போதிலும் எனது நண்பர் ம-ா-ா-ஸ்ரீ மாடபுரம் ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் வார்த்தையைத் தட்டக்கூடாதாகையால் இவ்விடம் வந்தேன்.

மேஜர் மக்பார்லண்டு துரை.—எப்படியாகிலும் சரி, தங்களைப் பார்த்தவுடனே எப்படியாவது தாங்கள் இதைக்கண்டுபிடித்துவிடு வீர்களென்ற நம்பிக்கைமட்டும் என் மனதில் உண்டாயிருக்கிறது.

கோவிந்தன்.—சரி, என்னுல் கூடியமட்டும் பிரயாசப்படு கிறேன். தயவு செய்து இவ்விஷய சம்பந்தமான பல விவரங்களையும் எனக்குத் தெரிவிக்கக் கோருகிறேன். அப்படித்தெரிவித்தால் அதைக் கண்டு பிடிக்க முடியும் முடியாது என்பதைத் தீர்மானித் துக்கொண்டு உடனே சென்னைக்குத் திரும்பவேண்டியிருந்தாலும் இருக்கலாம்.

மேஜர் மக்பார்லண்டு துரை.—ஐயா! தங்களுடைய அகராதி யில் முடியாது என்ற வார்த்தையே கிடையாதென்று நம்புகிறேன். இது வரையில் தாங்கள் விசாரிக்க முயன்ற ஒவ்வொரு விஷயத் திலும் உண்மையான சம்பவங்களைக் கண்டுபிடித்து வெற்றிக்கொடி நாட்டியிருக்கிறீர்களே தவிற வேறில்லை என்பது எனக்கு நன்ருய்த் தெரியும். ஆகையால் இவ்விஷயத்தில் தாங்கள் பரிபூரண கிருபை வைத்து எப்படியாவது உண்மையைக் கண்டுபிடித்துக் கொடுத்து விட்டுத் தான் அப்பால் போவதாக வாக்களியுங்கள்.

கோவிந்தன்.—தங்களுக்குத் தெரிந்த விஷயங்களையும் தாங் கள் செய்த ஏற்பாடுகளையும் விவரமாய்த் தெரிவியுங்கள். அவை களைத் தெரிந்துகொண்ட பிற்பாடு தான் என்னுல் முடியும் முடியா தென்ற விஷயம் சொல்லக்கூடும்.

மேஜர் மக்பார்லண்டு துரை.—**வுல மார்ச்சு மாசம் 18வ திங்கட் கிழமை பகல் பத்துமணி சுமாருக்கு கோடீஸ்வரப் பிரபு வான நாராயணசாமிநாயுடு என்பவர் தமது ஏகபுத்திரியான பத்மா வதியை அதற்கு முந்தின இராத்திரி முதல் காணவில்லை என்றும் அவளைக் கண்டுபிடிப்பதில் எத்தனை இலட்சம் ரூபாய் செலவான போதிலும் தான் கொடுக்க சித்தமாயிருப்பதாகவும் எப்படியாவது கண்டுபிடித்து உயிருடன் இருந்தால் தன்னிடம் ஒப்புவிக்கவேண்டு

மென்றும், இறந்து போயிருந்தால் எவ்விடத்தில் இறந்தாள்? அவள் பிரேதம் என்னவாயிற்று? என்னும் விஷயங்களைக் கண்டு பிடித்துத் திட்டமாய்த் தெரிவிக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார். அன்றையதினம் முதல் இன்றையவரையில் எனது சிப்பந்திகளில் சாமார்த்திய சாலிகளான நூறுபேரும் நானும் இவ்விஷயத்தில் ஓயாமல் வேலை செய்தும் ஒன்றும் வெளியாகவில்லை.

கோவிந்தன்.—தங்களுக்கு இவ்விஷயம் தெரிந்ததுமுதல் தாங்கள் எந்தெந்த மார்க்கங்களில் வேலை செய்தீர்களென்று தயவு செய்து விவரமாய்த் தெரிவியுங்கள்.

மேஜர் மக்பார்லண்டு துரை.—ம-ா-ா-ஸ்ரீ, நாராயணசாமி நாயுடு அவர்கள் இவ்விஷயத்தைப்பற்றி தெரிவித்தவுடனே எனது நம்பிக்கையுள்ள உத்தியோகஸ்தர் ஒருவரைக் கூட அழைத்துக் கொண்டு நாராயணசாமி நாயுடு அவர்களின் வீட்டுக்குப்போய் விசாரணை செய்ததில் பின்வரும் விவரங்கள் தெரியவந்தன.

1. பத்மாவதியின் படுக்கை கலையாமல் விரித்தபடியே இருந்ததால் அவள் படுக்கையில் படுக்கவில்லையென்றும் ஆகையால் இராத்திரி முன்னேரத்திலேயே அவள் சம்மதத்துடனாவது பலாத்காரமாயாவது கொண்டுபோகப்பட்டிருக்க வேண்டுமென்றும் தெரிந்துகொண்டோம்.

2. அப்பால் அவளைக் கடைசியில் பார்த்தவர்கள் யாரென்று விசாரித்ததில் சுமார் இரவு எட்டுமணி சமயத்தில் அவளுடைய தாயாராகிய பாகீரதி அம்மாள் தன் பர்த்தாவுடன் முத்துசாமி நாயுடு வீட்டின் ருதுசாந்தி முகூர்த்தத்திற்குப் போகும்போது அவளுடன் பேசிவிட்டுப் போனதாகத் தெரியவந்தது.

3. அப்பால் பாகீரதி அம்மாள் போகும்போது பத்மாவதி என்ன செய்துகொண்டிருந்தாளென்று விசாரித்ததில் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தாளென்றும் அக்கடிதங்கள் யாருக்கு எழுதினாளென்பதைக் குறித்துத் தான் விசாரிக்கவில்லையென்றும் சொன்னாள். அவள் அறையில் அக்கடிதங்களைக் காணாததால் வேலைக்காரர் யாரிடமாவது கொடுத்துத் தபாலில் போடச்சொன்னாளாவென்று விசாரித்தேன். ஒருவரிடமும் கொடுக்கவில்லையென்று ஏற்பட்டது.

4. அவள் வெளியே போனதையாவது யாராவது பார்த்தார்களாவென்று விசாரித்ததில் அந்த வீட்டிலேயே பிறந்து வளர்ந்து அங்கு வேலை செய்துகொண்டிருக்கும் 75-வயதுடைய கோபால

னென்னும் வேலைக்காரன் பத்மாவதி கையில் எதோ வைத்துக் கொண்டு பங்களாவின் பின்பக்கத்தின் வழியாய் தோட்டத்திற் குள் போனபோது தான் பார்த்ததாகவும், அந்நேரத்தில் தோட் டத்திற்குள் பத்மாவதி அம்மாள் தனியாய்ப் போனதால் தான் கூடப்போக எத்தனித்ததாகவும் அப்போது பத்மாவதி நிலவு வெளிச்சத்தில் தோட்டத்திற்குச் சமீபத்திலிருக்கும் தபால்பெட் டியில் கடிதங்களைப் போட்டுவிட்டு வருவதற்காகவே தான்போவ தால் தனக்குத் துணை வேண்டியதில்லை யென்று சொன்னதாகவும், அதற்கு அவன் தானே அக்கடிதங்களைக் கொண்டுபோய்ப் போடு வதாகத் தெரிவித்ததாகவும், அதற்கு அவள் எப்படியாவது தான் தோட்டத்தில் உலாவ உத்தேசித்திருப்பதால் தானே போட்டு விடுவதாகவும் அதைப்பற்றி அவன் சிரமப்படவேண்டாமென்றுங் கூறிப்போனதாகவும், அப்பால் தான் வழக்கப்பிரகாரம் சாப்பிட்டு விட்டுப்படுத்துக்கொண்டதாகவும், தனக்கு வேறொன்றும் தெரியா தென்றும் சொன்னான். அவன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தை யும் உண்மையென்றே எனக்குத் தோன்றிற்று. அப்பால் அவளைக் குறித்தவிஷயம் யாதொன்றும் இதுவரையில் கிடைக்கவில்லை. பூமி யே அவளை விழுங்கிவிட்டால் எப்படிக் கண்டுபிடிக்க முடியாதோ அப்படித்தானிருக்கிறது.

5. அப்பால் நாராயணசாமிநாயுடு அவர்களிடம் அவருடைய புத்திரிக்கு எதாவது மனக்குறை உண்டாவென்று கேட்டதில் தனக்குத் தெரிந்தவரையில் ஒன்றும் இல்லையென்றும் தன் பெண் ஜாதியைக் கேட்டால் விவரமாய்த் தெரியலாமென்றும் சொல்லித் தன் பெண்ஜாதியை அழைத்து அந்தம்மாளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படியாகச் சொன்னார். முதலில் ஒன்றுமில்லையென்று அந்தம்மாள் கூறிய போதிலும் சில சாதுர்யமான கேள்விகளைக் கேட்டதற்குப் பிறகு பத்மாவதி அம்மாளுக்கு சுப்பராயலு நாயுடு வின் குமாரனாகிய குமாரசாமி நாயுடுவைக் கலியாணம் செய்து கொள்ள எண்ணமிருந்ததென்றும் ஓர் நாள் சுப்பராயலு நாயுடு அவர்கள் தன் குமாரனுக்குப் பத்மாவதியை விவாகஞ்செய்ய விரும்பிவந்து பெண்கேட்டதாகவும் அப்போது நாராயணசாமி நாயுடு சுப்பராயலு நாயுடுவை வாயில் வந்தபடி வைது அவர் மகனுக்குப் பத்மாவதியைக் கலியாணம் செய்து கொடுப்பதைவிட தன் பெண்ணுக்கு விஷம் வைத்துக் கொன்றுபோடுவது உத்தம மென்று சொன்னதின் பேரில் சுப்பராயலு நாயுடு கோபித்துக்

கொண்டு போய்விட்டார் என்றும் தெரியவந்தது. நாராயணசாமி நாயுடுவும் சுப்பராயலு நாயுடுவும் இவ்வூரில் மிக்க தனவந்தர்களாகையால் இவர்கள் இருவருக்கும் ஏன் இவ்வளவு விரோதம் என்று விசாரித்ததில் இவ்விருவரும் பூர்வத்தில் ஒரே பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பிக் கேட்டதாகவும் அப்பெண்ணுக்கு நாராயணசாமி நாயுடுவைவிட சுப்பராயலு நாயுடுவிடம் அதிகப் பிரியமிருந்ததால் அவள் அவரைக் கலியாணம் செய்துகொண்டதாகவும் அது முதல் நாராயணசாமி நாயுடு சுப்பராயலு நாயுடுவைத் தன் விரோதியாகப் பாவித்து வருவதாகவும் தெரியவந்தது. குமாரசாமி நாயுடுவுக்காகத் தன்னை கேட்டதையும் தன் தகப்பனார் சொல்லியனுப்பிய மறுமொழியையும் கேள்விப்பட்ட பத்மாவதி முதலில் சும்மா இருந்துவிட்டதாகவும் காணாமற்போன இரண்டு நாளைக்கு முன்னால் தன் தாயாரைப் பார்த்து இன்னொருவருடைய சமாசாரம் கேட்பதுபோல் "ஓர் பெண் எல்லா அம்சங்களிலும் தனக்குச் சமானமாகிய ஒரு புருஷனைக் கலியாணம் செய்துகொள்ள விரும்புகிறாள். அவள் தகப்பனார் யாதொரு காரணமுமில்லாமல் பழைய விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு பெண் கொடுக்கமாட்டேனென்று பிடிவாதமாய்ப் பேசுகிறார். அப்பெண்ணுக்குத் தான் கோரிய புருஷனைத் தவிர வேறொருவரை மணம்புரிந்து கொள்ள சம்மதமில்லை. தகப்பனாரும் முரட்டுத்தனமாய்க் கூடாதென்று ஆட்சேபிக்கிறார். அப்பெண் எப்படி நடந்துகொள்ளவேண்டும்?" என்று கேட்டதாகவும் அதற்கு தாயார் யோசனைசெய்து ஜவாப்பு சொல்லுவதாகச் சொன்னதாகவும் தெரிந்தது.

6. பத்மாவதி காணாமற்போனபின் சுப்பராயலுநாயுடு மறுபடியும் வந்து நாராயணசாமி நாயுடுவுக்குத் தேறுதல் சொல்லுவதுபோல் சொல்லிவிட்டுப் பத்மாவதி எத்தனை நாள் பொருத்து வந்தபோதிலும் அவள்மேல் யாதொரு குற்றமும் இராதென்று நிச்சயமாய் நம்புவதால் தன் குமாரன் பத்மாவதியைக் கலியாணம் செய்துகொள்ள சம்மதித்திருப்பதை அவரிடம் தெரிவித்துவிட்டு வரச்சொன்னதாகக் கூறியதாகவும், அது கேட்டவுடனே நாராயணசாமி நாயுடுவுக்கு முன்னால் வந்த கோபத்தைவிட அதிகமாகக் கோபம் வந்து சுப்பராயலு நாயுடுவும் குமாரசாமிநாயுடுவும் தன் மகளும் சேர்ந்து சதியாலோசனை பண்ணி இப்படியெல்லாம் செய்தால் தான் சம்மதித்து விடுவானென்று நினைத்து அவளை இர

கசியமாய் ஒளித்துவைத்திருப்பதாகவும் சப்பராயலு நாயுடுவைப் பெரிய திருடனென்றும் போக்கிரியென்றும் தாறுமாறுமாய்த் திட்டி அனுப்பிவிட்டு சுப்பராயலு நாயுடுவையும் அவர் மகனையும் பிடித்துக் கொட்டடியில் அடைத்துக்கொண்டு கேட்டால் பத்மாவதியின் இருப்பிடம் தெரியுமென்றும் என்னிடம் சொன்னர். அப்படி சுப்பராயலு நாயுடு ஒருகாலும் செய்திருக்கமாட்டாரென்று நான் நினைத்து அவர் சொன்னபடி யாதொன்றுங் நடத்தவில்லை.

7. சிங்கப்பூரிலிருந்து அன்றுபோன ஸ்டீமர்களில் அவள் போகவில்லையென்று திட்டமாய்த் தெரிகிறது.

8. அவளைக் கொண்டுபோய் அடைத்து வைத்துக்கொண்டு பொருள் பறிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் எவராவது செய்திருந்தால் இதற்குள்ளாக அவ்விஷயம் வெளியாய்விடும். இதுவரையில் அப்படி ஒன்றும் வெளியாகாததால் அவள் சிறைப்படுத்தப்படவில்லையென்றும் நம்புகிறேன்.

9. அவள் அணிந்திருந்த நகைகளுக்காக யாராவது திருடர்கள் அடித்துக் கொன்றிருந்தால் இதற்குள்ளாக அவளுடைய பிரேதம் அகப்பட்டிருக்கவேண்டும். அப்படி அகப்படாததால் அவள் திருடர்கையில் சிக்கிக்கொள்ளவில்லையென்றும் நம்புவதற்கு இடமிருக்கிறது.

10. ரோட்டில் நடந்து மோட்டார் வண்டிகளிலாவது அல்லது வேறு வண்டிகளிலாவது அபாயம் நேரிட்டிருந்தால் எங்களுக்கு முதலில் சமாசாரம் தெரியும். அப்படியும் இல்லை.

11. வெளியில் போனவுடனே புத்திசிதறிப்போய் பைத்தியம் அடைந்து அதனல் எந்தப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலாவது அடைத்திருப்பார்களென்று எல்லாப் பயித்தியக்கார ஆஸ்பத்திரிகளிலும் தேடினேம். அவள் ஒன்றிலும் இல்லை.

12. இவ்வூரிலுள்ள திருடர் கூட்டங்களிலெல்லாம் சரியானபடி விசாரித்தாய் விட்டது. அதிலும் பிரயோஜனமில்லை.

13. இவ்வூரிலுள்ள சாதாரணமான வீடுகளிலெல்லாம் தேடியாய்விட்டது; அவளைக்காணேம். ஆகவே அவள் தோட்டத்துக்குள் வந்தவுடனேயோ அல்லது தபால் பெட்டியினிடம் வந்த உடனேயோ மாயமாய்ப் போய்விட்டாள். இனி என்ன செய்வதென்று எனக்கும் என் உத்தியோகஸ்தர்களுக்கும் தெரியவில்லை. பெரிய வீட்டுக்காரியமாதலால் வர்த்தமானப்பத்திரிகைக்காரர்கள் போலீஸார் சரியானபடி வேலைசெய்யவில்லையென்று நிந்திக்கிறார்

கள். இப்பேர்ப்பட்ட சமயத்தில் கடவுளே என்மீது கருணைகூர்ந்து தங்களைக் கொண்டுவந்து விட்டார். இனி எப்படியாவது தாங்கள் இந்தப்பாரத்தை என்னிடமிருந்து பூராவாய் வாங்கிக்கொண்டு வேலைசெய்து உண்மையைக்கண்டு பிடிக்கவேண்டுமென்று தங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோவிந்தன்.—என்ன ஐயா! இவ்வளவு காரியாதிகளைக்கண்டு பிடித்துவிட்டு கடைசியில் என்னைப்போய் அவளை அழைத்துவரச் சொல்லுகிறீர்கள். எல்லாம் கண்டுபிடித்து விட்டோம். இன்ன இடத்தில் இருக்கிறாள். நீர் போய் அழைத்துவாரும் என்றுசொல் லுவதைப்போல் இருக்கிறதே தாங்கள் சொல்லுவது.

மேஜர் மக்பார்லண்டு துரை.—ஐயா! தாங்கள் சொல்லுவது எனக்கு அர்த்தமே யாகவில்லை. அதை அறியப்போதுமான சக்தியும் எனக்கில்லை. ஆகையால் தயவுசெய்து தாங்களே எப்படியா வது கண்டுபிடியுங்கள்.

கோவிந்தன்.—நான் அப்படிச்செய்வதில் ஆட்சேபணை இல்லை. இன்னும் மூன்று தினங்களுக்குள் பத்மாவதியைக்கண்டுபிடித்துத் தங்களிடம் ஒப்பித்துவிடுகிறேன். ஆனால் தாங்கள் கண்டுபிடித்த தாகச் சொல்லவேண்டுமே தவிர என்னால் கண்டுபிடிக்கப் பட்டா ளென்று தெரியக்கூடாது. மேலும் நான் கண்டுபிடிக்கும் வரையில் எப்படி வேலைசெய்கிறேனென்று என்னைக் கேட்கவுங் கூடாது. இதுவரையில் இந்தக்கேஸில் வேலைசெய்த ஐந்து உத்தியோகஸ் தர்களை என்னிடம் அனுப்பி என்கட்டளைப்படி நடக்கும்படிசெய்ய வேண்டும்; என்னைக் காரணங்கள் ஒன்றுங்கேட்கக்கூடாது. நான் தங்களோடு சம்பந்தப் பட்டவனென்றே தெரியக் கூடாதாகை யால் நான் இருக்கும் ஜாகைக்கே இவ்வுத்தியோகஸ்தர்களெல்லா ரும் வரவேண்டும். இந்த நிபந்தனைகளுக்குச்சம்மதித்து என்னை ஆராய்ச்சிசெய்யச்சொன்னால் நான் வாக்களித்தபிரகாரம் மூன்று நாட்களில் பத்மாவதியைத் தங்களிடம் சேர்ப்பிக்கிறேன்.

மேஜர் மக்பார்லண்டு துரை.—இந்த நிபந்தனைகள் மட்டுமல்ல; இனிமேல் தாங்கள் ஏற்படுத்தும் சகல நிபந்தனைகளுக்கும் நான் சம்மதிப்பதாய் இப்போதே வேண்டுமானால் எழுதிக்கொடுத்து விடுகிறேன். எப்படியாவது பத்மாவதியின் கதி என்னவாயிற் றென்று கண்டுபிடித்துவிட்டால் போதுமானது.

என்று சொன்னார். அப்போது யாரோ ஒருவர் கதவைத் தட்டினதாகத் தெரிந்தது. மக்பார்லண்டு துரை கோபத்துடன்

"நான் தொந்தரவு செய்யவேண்டாமென்று சொல்லியிருக்கும் பொழுது யார் கதவைத்தட்டினது? உள்ளே வா" என்று சொன்னூர். உடனே ஒரு கான்ஸ்டபில் மிகவும் அவசரம் என்று எழுதிய கடிதத்தை மேஜர் மக்பார்லண்டு துரை அவர்கள் கையில் கொடுத்தான். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

கடிதம்

நாராயணமந்திரம்.

ம-ா-ா-ஸ்ரீ, மேஜர் மக்பார்லண்டு துரை அவர்கள்,
போலீஸ் கமிஷனர், சிங்கப்பூர்,

ஐயா,

எனது குமாரத்தி பத்மாவதி இப்போதுதான் வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டாள். ஆகையால் அவளைத் தேடுவதைக்குறித்த சகல பிரயத்தனங்களையும் உடனே நிறுத்திவிடுங்கள். மேற்படி விஷயத்தில் செலவான கணக்கை அனுப்பினல் உடனே தொகை கொடுத்துவிடுகிறேன். மற்ற விவரம் தங்களைப் பார்க்கும்பொழுது சொல்லுகிறேன்.

இப்படிக்கு,
நாராயணசாமி நாயுடு.

இக்கடிதத்தை வாசித்ததும் மக்பார்லண்டு துரை அதைக் கோவிந்தனிடம் கொடுத்தார். அவர் அதை வாசித்துப் பார்த்துவிட்டு துரையை நோக்கி "கேஸ் இத்துடன் முடிந்துவிட்டதா?" என்று கேட்டார். அதற்குத்துரை "ஒருநாளும் இல்லை. என்னையும் எனது உத்தியோகஸ்தர்களையும் மூன்றுமாதக்காலமாய் வேலை செய்ய வைத்துவிட்டு எங்களிடம் விவரமாய் சகல விஷயங்களையும் சொல்லாமல் "வந்துவிட்டாள் நிறுத்திவிடு" என்று இவர் உத்தரவளித்துவிட்டால் யார் விட்டுவிடுவார்கள். பத்மாவதி சுயேச்சையாய்ப்போயிருந்தால் எங்குபோயிருந்தாளென்றும் பலாத்காரமாய்ப்பிடித்து வைக்கப்பட்டிருந்தால் எங்கு யாரால் பிடித்துவைக்கப்பட்டிருந்தாளென்றும் சொன்னலொழிய நான் விடப்போகிறதில்லை" என்றூர்.

கோவிந்தன்.—பத்மாவதியின் குணத்தைக்குறித்து நான் கேள்விப்பட்டது உண்மையாகில் அவள் மௌனம் சாதிப்பாளேயொழிய வாயைத்திறக்க மாட்டாளென்றே நம்புகிறேன்.

மேஜர் மக்பார்லண்டு துரை.—அவள் வாயைத் திறக்காவிட்டால் இன்று அவள் வீட்டிற்கு வராவிட்டால் தாங்கள் எப்படி வேலைசெய்து கண்டுபிடிப்பீர்களோ அப்படியே இப்போதும் வேலைசெய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்று சொன்னார். அப்போது இன்ஸ்பெக்டர் டாஸ்துரை அவர்கள் கமிஷனர்துரை அவர்களை டெலிபோன்மூலமாய் அவசரமாய்க் கூப்பிடுவதாக ஓர்கான்ஸ்டபில் சொன்னான். கமிஷனர்துரை அவர்கள் டெலிபோன் மூலமாய்ப் பேசிவிட்டுவரும் வரையில் கோவிந்தனை அங்கேயே இருக்கும்படிவேண்டிக்கொண்டார். அவர் சம்மதிக்கவே துரை அவர்கள் டெலிபோனண்டை போனார்கள்.

மூன்றாவது அத்தியாயம்
போட்டாபோட்டி ஆட்டம்

8–7-**-ல் பிரசுரமான சிங்கை ஜனமித்திரன் பத்திரிகையில் தடித்த எழுத்தில் பின்வரும் விஷயங்கள் காணப்பட்டன.

போட்டாபோட்டி ஆட்டம்

சென்ற இரண்டு மாதக்காலமாய் சென்னை சரச விநோத சிருங்கார சபாரஞ்சித ஜெகன்மோகன ஹிந்து பாலிகா நாடகக் கம்பெனியார் தங்களுடைய அதிஅற்புத வேஷங்களாலும் விலைமதிக்க வொண்ணாத உடைபாவனைகளாலும் சிருங்கார ரஸமான பார்ஸி வர்ணமெட்டுகளிலமைந்த தமிழ்ப்பாடல்களாலும் தேர்ச்சிபெற்ற சிறந்த ஆக்டர்களைக்கொண்டும் பல அற்புதமான சரித்திரங்களை வெகுநேர்த்தியாய் நடத்தி இச்சிங்கைமாநகரில் நாடகப்பிரிய நண்பர்களைச் சந்தோஷப்படும்படிச்செய்த விஷயம் சகலரும் அறிவர். இக்கம்பெனியில் நடிப்பவர்களெல்லாம் தக்க யுவதிகளான பெண்மணிகளாயிருப்பதாலும் சாதாரணமாய்ப் புருஷர்களை விடமாதரார் இயற்கையிலே நடைநொடி பாவனைகளிலும் ஜனவசீகர சாதுரியத்திலும் பெயர்போனவர்களாதலாலும் அதிலும் இக்கம்பெனியிலுள்ள எல்லாப்பெண்களும் அதிரூப சௌந்தரியவதிகளாதலாலும் இக்கம்பெனியைப்பற்றி அதிசிலாக்கியமாய் ஒவ்வொருவரும் புகழ்ந்து பேசுவது ஆச்சரியமல்ல. இக்கம்பெனியில் முக்கியபெண் வேஷம் தரிப்பவளும் அழகில் தனக்குச் சமானமில்லாதவளும் குயிலையும் பழிக்கச்செய்யும் குரலையுடையவளுமாகிய ஜீவாநந்தம் என்னும் பெண்மணியின் திறமையைப் புகழாதார் யார்? நாடகத்தில் சம்பந்தப்பட்ட பெண்களில் பதிவிரதையே இல்லையென்று பேசும் வழக்கச்சொல்லைப்பொய்யாக்குவதற்காகவே இந்த ரமணீமணி நாடகத்தில் சேர்ந்தாள் போலும்! அதிக ஐஸ்வரியவந்தரான ஓர் ஜமீன்தார் தம்மைவிவாகஞ்செய்துகொள்ளும்படி எவ்வளவோ

விரும்பி வேண்டியும் இப்பெண்மணி சம்மதிக்காததால் அவர் தமது ஜென்மபூமியாகிய சென்னையைவிட்டு இச்சிங்கையில் வந்து ஒரு பங்களா அமர்த்திக்கொண்டு இங்கு வசித்து வருவதாகத் தெரிகிறது. இதுவரையில் ரூபத்திலும் சாதுரியாலங்கார அபிநய விசேஷங்களிலும் இவளுக்குச் சமானமாய் நடிக்கக்கூடிய ஸ்திரீ ரத்னம் இவ்வுலகத்தில் உண்டோ என்று எல்லோரும் பிரமித்திருந்தார்கள். அச்சந்தேகத்தை நிவர்த்திக்கும் பொருட்டு இந்தியா, பர்மா, சிலோன் முதலிய சகல இடங்களிலும் மெடல், தோடா, பரிசு முதலியவைகளைப்பெற்று ஒவ்வொரு அம்சத்திலும் ஜீவாநந்தத்திற்குச் சமானமான கோகிலாம்பாள் என்னும் திருநாமத்தையுடைய ஒரு மாதுசிரோன்மணி இங்கு வந்திருப்பதைக்கேட்க மிக்க ஆநந்திக்கிறோம். மேலும் இன்றையதினம் இராத்திரி சரசவிநோத சிருங்கார சபாரஞ்சித ஜெகன்மோகன ஹிந்து பாலிகா நாடகக்கம்பெனியின் அரங்கத்திலேயே ஜீவாநந்தமும், கோகிலாம்பாளும் பாரிஜாத புஷ்பாபஹரணம் என்னும் நாடகத்தில் முறையே சத்தியபாமாவாகவும், ருக்குமணியாகவும் வேஷங்கள் பூண்டு தத்தம் முழு சாமர்த்தியத்தையும் காட்டிச் சபையை பிரம்மாநந்தமடையும்படிச் செய்வார்களென்று கேட்க நாம் மிகவும் மகிழ்வெய்துகிறோம். எப்போதும் வைக்கும் தாரணைக்கு இரண்டுபங்கு தாரணை வைத்தும் இதற்குள்ளாக முதல் வகுப்பு டிக்கட்டுகள் தவிர மற்ற வகுப்பு டிக்கட்டுகளெல்லாம் விற்பனையாகி விட்டதாகத் தெரிவதால் இவ்வற்புதமான ஆட்டத்தைப்பார்க்க விரும்பும் நமது நேயர்கள் இனியாவது காலதாமதமின்றி முதல்வகுப்பு டிக்கட்டுகளாவது வாங்கினுல்தான் இவ்வற்புத நாடகத்தைப்பார்க்க ஹேதுவிருக்குமென்பதைத் தெரிவித்துவிட்டோம். ஜீவாநந்தம் அம்மாளுக்கும், கோகிலாம்பாளுக்கும் நீடித்த ஆயுளைக் கொடுக்கவேண்டுமென்று சர்வ சக்தியுள்ள கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

நாடகம் சரியாய் ஒன்பதுமணிக்குத்தான் ஆரம்பிக்கப்படும், என்று தெரிந்திருந்தும் எப்பொழுதும்போல் போனுல் இடம் அகப்படுமோ அகப்படாதோ என்னும் சந்தேகத்தின் பேரில் மாலை ஆறுமணிக்கே நாடகக்கொட்டகைக்கு ஜனங்கள் வந்து கூடிவிட்டார்கள். நாடகம் ஆரம்பிக்க அரைமணி நேரத்திற்கு முன்னுல் வழக்கமாய்வரும் ஜீவாநந்தம் அம்மாள் அன்று மணி ஒன்பதாகியும் வரவில்லை. கோகிலாம்பாளும் அதுவரையிலும் காணேம்.

ஒருக்கால் இவர்களிருவரும் ஒருவருக்கொருவர் போட்டியாக ஆடவருவதால் விசேஷ அலங்காரங்கள் செய்துகொண்டுவருவதில் தாமதமாகிறதென்றும் எப்படியாவது இன்னும் சற்றுநேரத்தில் வந்து விடுவார்களென்றும் நம்பி எல்லாரும் எதிர்பார்க்கலாயினர். பாரிஜாத புஷ்பாபஹரணத்தின் முதல்பாகமாகிய கோபால கிருஷ்ண பரமாத்மாவினுடைய சபை ஸீன் முதல் நாரதர் பாரிஜாத புஷ்பம் பரமாத்மாவுக்குக்கொடுத்து அவருக்குப்பிரிய ஸ்திரீயின் தலையில் வைக்கும்படி சொன்ன பாகம் வரையில் நடந்தேறிவிட்டது. அடுத்த ஸீன் ருக்மணியின் அந்தப்புரமாதலாலும், ருக்மணி வேஷம் தரிக்கும் கோகிலாம்பாள் அதுவரையிலும் வாராததாலும் ருக்மணி முதல் கோகிலாம்பாளின் ஆட்டத்தைப்பார்ப்பதற்காக அதிக அவலாய்க் காத்திருக்கும் ஜனங்கள் ஆர்ப்பரித்து கைதட்டினதாலும் அந்நாடகக் கம்பெனியின் ஸ்டேஜ் மானேஜரான சுமார் எழுபத்தைந்து வயதுடைய சுந்தரராவ் அவர்களுக்கு இன்னது தான் செய்வதென்று தோன்றாமல் கோகிலாம்பாள் வீட்டிற்கு ஒரு ஆளையும் ஜீவானந்தமும் வாராததால் அவன் வீட்டிற்கும் ஒரு ஆளையும் அனுப்பினார். ஜீவானந்தம் வீட்டிற்குப்போன ஆள் திரும்பிவந்து அவன் இருக்கும் பங்களா பூட்டப்பட்டிருப்பதாகச்சொன்னான். அந்த ஆள் திரும்பிவந்த பின்னும் ஜீவானந்தம் வாராதகாரணம் தெரியவில்லை. கோகிலாம்பாள் வீட்டுக்குப்போன ஆள் திரும்பி வந்து அவ்விடத்தில் ஏதோ அபாயகரமான சமாச்சாரம் நடந்திருப்பதாகவும் பங்களாவைச்சுற்றி போலீஸ்காரர் காவல் இருப்பதாகவும் தன்னை உள்ளே விடமாட்டேனென்கிறார்களென்றும் சொன்னான். ஜனங்கள் செய்த ஆர்ப்பாட்டத்தைப் பொறுக்கமாட்டாமல் ஸ்டேஜ்மானேஜராகிய சுந்தரராவ் அவர்கள் அந்நாடகத்தில் முக்கியவேஷதாரிகளாகிய ஜீவானந்தத்தையும், கோகிலாம்பாளையும் காணாததால் அன்றையதினம் நாடகம் நடத்த சாத்தியமில்லையென்றும் டிக்கட்டுகளின் பணத்தை உடனே வாபஸ்செய்து விடுவதாகவும் நாடகம் பார்க்கவந்த மஹா ஜனங்களெல்லாம் நடந்துபோன அசந்தர்ப்பத்தைக்குறித்து மன்னிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். நாடகம் பார்க்க வந்திருந்தவர்களில் அநேகர் முரட்டுத்தனமாய்ப்பேசி அங்கு போட்டிருந்த லாந்தர்களை உடைத்து திரைகளைக் கிழித்துக் கொளுத்தினதோடு நில்லாமல் அவர்களைச் சமாதானப்படுத்த வந்தவர்களையும் அடிக்க வந்ததால் சுந்தரராவ் முதலிய நாடகக்

கம்பெனியார் பூராவும் தங்கள் உயிர்தப்பினால் போதுமென்று அவரவர்கள் வீட்டுக்கு ஓட்டம் பிடித்தார்கள். அங்கிருந்த போலீஸாரால் இக்கலகத்தை அடக்க முடியாததால் அபாயத்தைக்காட்டும் ஊதுகுழலை ஊதவே நான்கு பக்கங்களிலிருந்தும் போலீஸ்காரர் ஒத்தாசைக்கு வந்தபின் கலகத்தை அடக்கி முக்கியமான கலகக்காரர்களைப் பிடித்துக்கொண்டு போனார்கள்.

நான்காவது அத்தியாயம்

பயங்கரமான இரட்டைக்கொலை

இரண்டாவது அத்தியாயத்தின் இறுதியில் கமிஷனர்துரை அவர்கள் டெலிபோனில் பேசுவதற்காகப் போனாரென்று எழுதியதை இதைவாசிப்போர் மறந்திருக்கமாட்டார்களென்று நம்புகிறோம். டெலிபோனிடத்தில் போனதும் "கூப்பிட்டது யார்?" என்று கமிஷனர் துரை கேட்டதற்கு "டாஸ்" என்று மறுமொழி கொடுத்தார். என்ன விசேஷம் என்று கேட்டதற்கு "லக்ஷிமி விலாசத்தில் கோகிலாம்பாள் கொலைசெய்யப்பட்டிருக்கிறாள். தாங்கள் உடனே வந்தால் நலமென நம்புகிறேன்," என டாஸ் துரை சொன்னார். "உடனே வருகிறேன்" என்று கமிஷனர் துரை பதில் சொல்லிவிட்டுக் கோவிந்தனிடம் வந்து சமாச்சாரம் தெரிவித்து அவரையும் அழைத்துக்கொண்டு மோட்டார்கார் ஏறி லக்ஷிமி விலாசம் போய்ச்சேர்ந்தார்கள். இவர்கள் அங்குசென்றபோது இரவு பத்துமணியாயிருந்தாலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அங்கு கூடியிருந்தார்கள். போலீஸார் தங்களாலானவரையில் அவர்களைப் போகும்படி சொல்லியும் முடியவில்லை. கமிஷனர்துரை அவர்கள் கோவிந்தனை அழைத்துக்கொண்டு உள்ளேசென்று கோவிந்தனும் அவருமாக ஆராய்ச்சிசெய்ய ஆரம்பித்தார்கள்.

கமிஷனர் துரை அவர்கள் டாஸ் துரையைப்பார்த்து இக்கொலை நடந்த விஷயம் எப்படித் தெரிந்தது? என்று கேட்டதற்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஓர் கனவானைச் சுட்டிக்காட்டி "இவர்தான் தெரிவித்தார்," என்று சொன்னார். உடனே உள்ளே சென்று பார்த்ததில் பின்வரும் விஷயங்கள் தெரிய வந்தன.

எங்கு பார்த்தாலும் இரத்தப் பிரவாகமும், நாற்காலிகளும் சிறு மேஜைகளும் தலைகீழாய் விழுந்தும், மேஜைகளின் மேல் வைத்திருந்த விலையுயர்ந்த சாமான்களில் பல உடைந்தும், சிலகீழே

விழுந்தும் சின்னுபின்னமாய்க் கிடந்தன. மேலும் சுற்றிலுமுள்ள சுவர்களில் இரத்தத்தைத் துடைத்த கையின் விரல் அடையாளங்கள் இருந்தன. ஒரு நாற்காலியின் பக்கத்தில் இரத்தம் தோய்ந்த கட்டாரியொன்றும் காகிதம் அறுக்கும் தந்தத்தால் செய்த இரத்தம் தோய்ந்த கருவி யொன்றும் விழுந்து கிடந்தன. இவ்வளவு அலங்கோலங்களுக்கும் மத்தியில் தலைவிரிகோலத்துடனும் புன்சிரிப்பைக் காட்டும் முகத்துடனும் இறந்துவிட்டாளோ அல்லது தூங்குகிறளோ அல்லது மூர்ச்சையாய்த்தான் கிடைக்கிறளோவென்று கண்டோர் கலங்கி சந்தேகிக்கும் வண்ணமாகக் கோகிலாம்பாள் உடம்பெல்லாம் இரத்தப் பிரவாகமாயோடக் கிடந்தாள். இவளைப் பார்த்தவுடனே "ஆஹா! உனக்குக் கடைசியாக இக்கதியா நேர்ந்தது?" என்று தனக்குள்ளே கோவிந்தன் சொல்லிக்கொண்டார். இதை மேஜர் மக்பார்லண்டு துரை கேட்டார். "இவள் வேறு பேருடன் உன்னதமான ஸ்திதியில் இருக்கும்போது நான் அறிவேன். அந்தோ! எனது நண்பர்மட்டும் இப்போது உயிருடனிருந்து இவளை இக்கதியில் பார்த்திருந்தால் அவர் மனம் என்னவாகுமோ தெரியாது. இவள் பேரிலிருந்த பிரியத்திற்கு ஒருகால் அவளைக்கொன்ற கட்டாரியாலேயே தன் உயிரையும் மாய்த்துக்கொண்டிருப்பாரென்பது திண்ணம். இதை அறிந்தே சர்வ வல்லமையுள்ள கடவுள் அவரை முன்னுலேயே தமது உலகுக்கு அழைத்துக்கொண்டார்போலிருக்கிறது" என்று சொன்னர். "ஐயா! அவ்வளவு வருத்தப்படக்கூடிய தங்களுடைய நண்பர் யார்? அவர் பெயர் என்ன? இவள் யார்? இவளுடைய வாஸ்தவமான பெயர் என்ன? என்ற விஷயங்களைத் தயவுசெய்து தெரிவியுங்கள்" என்று மேஜர் மக்பார்லண்டு துரையவர்கள் கேட்டார். அதற்குக் கோவிந்தன் "ஐயா! இவள்பெயர் பாக்கியரத்னம். இவள் தன்னுடைய பெரியோர்களின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நடக்கத்தவறிய குற்றமானது இவளை இந்தகெதிக்குக் கொண்டுவந்துவிட்டது. இவள் ஒரு பெரிய குடும்பத்துப் பெண். பாழும் நாடகமானது இவளை இப்படி கெடுத்துவிட்டது. இவளை அதிக அருமையாய் எனது நண்பர் பெருமாள் நாயுடு அவர்கள் வைத்திருந்தார். அவர் இறந்த பின்னும் இவள் அதிக ஐஸ்வரியவதியாகையாலும், ரூபவதியாகையாலும், கலியாணம் செய்துகொள்ளும்படியும், பெருமாள் நாயுடுவிட மிருந்தபடியே தங்களிடமும் இருக்கும்படிக்கும் பல வேஷதாரிப் பிரபுக்களும் உண்மையான

தனவந்தர்களும் இவளை விரும்பிக் கேட்டார்கள். தன் அருமைக் காதலரான பெருமாள் நாயுடு அவர்கள் இறந்தபின் இன்னொருவரிடம் இருக்க சம்மதிக்காமல், எப்படியாவது தனது மிகுதி காலத்தைக் கழிக்கவேண்டுமேயென்றெண்ணி பொழுது போக்குக்காக இவள் நாடகத்தில் சேர்ந்தாள். நாடகத்தில் சேர்ந்த பின்னும் எனக்குத் தெரிந்தவரையில் இவள் தீயவழிகளில் பிரவேசிக்கவில்லையென்றே நான் திட்டமாய் நம்புகிறேன்," என்று சொன்னார். அப்பால் அவ்வறையைச் சோதிக்கையில் ஓர் ரத்ன கம்பளத்தால் மறைக்கப்பட்டு, கோகிலாம்பாளென்ற பாக்கியரத்னத்தின் அந்தரங்க வேலைக்காரியான சொர்ணமென்பவள் கிடந்தாள். அவள் உடலைத்தொட்டுப் பார்த்தவுடனே அவளும் இறந்து கிடக்கிருளென்று தெரிந்துகொண்டார்கள். அவள்பேரில் எந்தவிதமான சாயங்களுமில்லாததால் அவள் வேறு காரணத்தால் இறந்திருக்க வேண்டுமென்று யூகித்தாள். அவள் கிடந்த இடத்தில் சமீபத்தில் மருந்து பொட்டலம் மடித்த ஓர் காகிதத் துண்டு கிடந்தது. அதை வெகு கவனமாகக் கோவிந்தன் எடுத்துப் பார்த்தபோது அதில் மடித்திருந்த மருந்தில் கொஞ்சம்பாகம் ஒட்டிக்கொண்டிருந்ததாகத் தெரிந்து அதை அதிக ஜாக்கிரதையாய் மடித்துவைத்துக் கொண்டார்.

பின்னும் சோதித்துப் பார்க்கையில் ஓர் கனவானுடைய படமும் ஓர் கடிதமும் அகப்பட்டது. அவைகளைக் கோவிந்தன் கமிஷனர் துரையவர்களுக்குத் தெரியாமல் எடுத்துத் தன் ஜேபியில் போட்டுக் கொண்டார். பெட்டிகளிலுள்ள உடுப்புகள் கடிதங்கள் முதலியவைகள் சிதறிக்கிடந்ததால் அவளுடைய பெட்டிகளையெல்லாம் திறந்து ஏதோ தேடிப்பார்த்திருப்பதாகத் தெரிந்தது ஆனால் சுமார் ஐயாயிரம் ரூபாய் வரையில் நோட்டுகளாகவும் சாவரன்களாகவும், அப்பெட்டிகளில் இருந்ததாலும் அவளணிந்திருந்த விலையுயர்ந்த வைர நகைகளும் பெட்டியிலிருந்த மற்ற நகைகளும் யிருந்ததாலும் திருடவந்தவர்களால் கொலை செய்யப்படவில்லையென்று தெரிந்து கொண்டார்கள்.

அப்பால் கமிஷனர் துரை அவர்கள் டாஸ் துரையைக் கூப்பிட்டு முதலில் இக்கொலையைக் கண்டுபிடித்து அவருக்குத் தெரிவித்த கனவான் யார் என்று கேட்டார். அவர் பத்மாவதி கேஸ் விசாரணை செய்த போது சந்தேக ஸ்தானத்தில் வைத்திருக்கும் மூன்று நபர்களில் ஒருவராகிய மிஸ்டர் பராங்குஷ நாயுடு என்று

சொன்னார். உடனே அவரைக் கமிஷனர் துரையவர்கள் கூப்பிட்டு அந்நேரத்தில் அந்த இடத்திற்கு அவர் வரவேண்டிய காரணமென்னவென்றும் அவருக்குச் சொல்ல இஷ்டமிருந்தால் மட்டும் சொல்லும்படிக்கும் இல்லாவிட்டால் சொல்லவேண்டாமென்றும் சொன்னார்.

பராங்குஷ நாயுடு.—ஐயா! முதலில் இவ்விஷயத்தை நானே கண்டுபிடித்தவனாகலாலும், இன்னும் நான் பின்னால் சொல்லப்போகும் பல காரணங்களாலும் தாங்கள் என்னையே சந்தேகஸ்தானத்தில் வைப்பீர்களென்று நான் நன்றாக அறிவேன். இருந்தாலும் என்மனசாக்ஷிக்கு விரோதமில்லாமல் நான் நிரபராதியாகையால், எனக்குத் தெரிந்த விஷயங்களைச் சொல்வதில் யாதொரு ஆட்சேபணையுமில்லை. மேலும் தங்களோடு நிற்கும் கனவானைப்பார்த்தது முதல் அவர் எப்படியாவது உண்மையைக் கண்டுபிடித்து விடுவாரென்ற நம்பிக்கை எனக்குண்டாகலால் நான் எனக்குத் தெரிந்த விஷயங்களை வஞ்சனையில்லாமல் கூறி விடுகிறேன்.

என்று சொல்லிவிட்டு கோவிந்தனுடைய, கைகளிரண்டையும் பிடித்துக்கொண்டு "ஐயா! தாங்கள் இன்னொன்று எனக்குத் திட்டமாய்த் தெரியும். இவ்விஷயத்தில் எவ்வளவு பொருள் விரயமான போதிலும் நான் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். இக்கொலை செய்தவர்கள் நானாயிருந்தாலும் சரி அல்லது வேறு யாராயிருந்தாலும் சரி தாங்கள் தங்களுடைய சாமார்த்தியத்தால் கண்டுபிடித்து ஒன்று நான் கொலை செய்தேனென்றாவது தீர்மானமாய்க் காட்டும் சாக்ஷியங்களை ரூபிக்கவேண்டும்; அல்லது நான் கொலை செய்யவில்லை வேறு இன்னார்தான் கொலை செய்தார்கள் என்பதையாவது ரூபிக்கவேண்டும். இவ்விரண்டையும் விட்டு, போதுமான சாக்ஷியம் இல்லாததால் இக்கேஸ் தள்ளப்பட்டது. என்ற தீர்ப்புக் கிடைத்தால் அப்போதும் பொதுஜனங்களுக்கு நான் தான் கொலைசெய்திருப்பேன் என்ற எண்ணம் உண்டாகக் கூடும். ஆகையால் அப்பேர்ப்பட்ட சந்தேகத்திற்கு இடம்வைக்காமல் தாங்கள் இவ்விஷயத்தைக் கண்டறியவேண்டும்," என்று சொன்னார். கோவிந்தன் தன்னைச் சிங்கப்பூரில் யாரும் அறியார்கள் என்று நினைத்தது சரியல்லவென்பதைத் தெரிந்துகொண்டார். அப்பால் பராங்குஷ நாயுடு அவர்கள் தன்பேரில் எப்படியாவது சந்தேகம் உண்டாவது நிச்சயமாகையால் தன்னை அப்போதே கைதி செய்வதில் தனக்கு யாதொரு ஆட்சேபணையுமில்லை

யென்று சொன்னார். அதற்கு கமிஷனர் துரை அவர்கள் மறுநாள் விசாரணை நடந்தபின் அவசியமிருந்தால் கைதிசெய்வதாகச் சொல்லிவிட்டுப் போனாலும் வெளியே போனவுடனே ஒரு ஹெட் கான்ஸ்டேபிளிடம் பராங்குஷ நாயுடு அவர்களை அவருக்குத் தெரியாமல் ஜாக்கிரதையாய் அவர் என்னென்னசெய்கிறாரென்று கவனிக்கும்படி சொன்னதோடு எங்கேயாவது ஓடிப்போவதாகத் தெரிந்தால் உடனே கைதியாக்கி ஆபீசுக்குக் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தார்.

ஐந்தாவது அத்தியாயம்

விசாரணை

நான்காம் அத்தியாயத்திற் சொன்ன மறுநாட் காலை எழு மணிக்கு இப்பயங்கரமான இரட்டைக் கொலைகளைச் சேர்ந்த விஷயங்களை ஆராய்ந்தறிவதற்காக அவ்வீதியிலுள்ள ஒன்பது கனவான்களை வைத்துக்கொண்டு விசாரணை ஆரம்பமாயிற்று. அவ்விசாரணைக்கு முதல் சாக்ஷியாக மிஸ்டர் பராங்குஷ நாயுடு கூப்பிடப்பட்டார்.

இன்ஸ்பெக்டர்.—பராங்குஷ நாயுடுகாரு! இக்கொலைகளை முதலில் கண்டு பிடித்தவர்கள் தாங்கள்தானா?

பராங்குஷ நாயுடு.—இருக்கலாம்.

இன்ஸ்பெக்டர்.—முதலில் தாங்கள் தான் தெரிவித்திருக்கும் போது இப்போது 'இருக்கலாம்' என்று சந்தேக ஸ்தானத்தில் சொல்லுகிறீர்களே! அதென்ன?

பராங்குஷ நாயுடு.—நான் இவ்வீட்டிற்குள் வந்தபோது பின் பக்கத்தின் கதவு திறந்திருந்ததால் எனக்கு முன்னால் யாராவது என்னைப்போல உள்ளேபோய்ப் பார்த்துவிட்டு வெளியில் சந்தடி செய்யாமல் போயிருக்கலாமல்லவா? ஆகையால் தான் அப்படிச் சொன்னேன். மேலும் கோகிலாம்பாள் கொலை செய்யப்பட்டிருந்ததை மாத்திரம் நான் பார்த்தேனே தவிர அவள் வேலைக்காரி இறந்திருந்ததை நான் பார்க்கவில்லை யாதலாலும் அப்படிச் சொன்னேன்.

இன்ஸ்பெக்டர்.—சரி; எப்படியாவது இருக்கட்டும், தயவு செய்து தாங்கள் அந்நேரத்தில் பின்வாசல் வழியாக அங்கு வர வேண்டிய காரணமென்னவென்றும், தாங்கள் என்ன செய்தீர்களென்றும் சற்று விவரமாகச் சொல்லுங்கள் பார்ப்போம்.

பராங்குஷ நாயுடு.—ஐயா, தாங்கள் கேட்கும் கேள்விகளுக்குக் கிரமமான பதிலை அளிக்கவேண்டுமானால், இதற்கு முன்னால் நடந்திருக்கிற ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாக ஆதியோடந்தமாய்க் கூறினாலன்றி விளங்காதானபடியால், நான் இப்போது சொல்லும் விஷயங்களைச் சற்று சாவதானமாய் முழுமையும் கேட்டுக்கொண்டு, அப்பால் அதில் தங்களுக்குச் சந்தேகமான விஷயங்களைக் கேளுங்கள்.

சுமார் எட்டு வருஷங்களுக்கு முன்னால் நான் சென்னைக்குப் போயிருந்தபோது ஒருநாள் எனது நண்பரான பெருமாள் நாயுடு அவர்களை அவசரமாய்ப் பார்க்கவேண்டியதாயிருந்ததால் கோகிலாம்பாளென்ற பாக்கியரத்னத்தின் வீட்டில் அவர் இருப்பதாய்த் தெரிந்து அங்கு போய் அவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவரையும் பாக்கியரத்னத்தையும் இவ்விடத்திற்கு வரும்படி வேண்டிக்கொண்டேன். அப்போது வரமுடியாதென்றும் கூடுமானால் அடுத்த வருஷம் வருவதாகவும் சொன்னார்கள். நான் சென்னையிலிருந்த வரையில் அடிக்கடி பாக்கியரத்னத்தின் வீட்டிற்குப்போய் பெருமாள் நாயுடவர்களிடமும் பாக்கியரத்னத்தினிடமும் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்து விட்டு வருவதுண்டு. ஆகையால் எனக்கு பாக்கிய ரத்னமென்ற கோகிலாம்பாளை அவள் இங்கு வருவதற்கு முன்னாலேயே தெரியும். நான் சென்னையிலிருந்து வந்தபின் எனது நண்பராகிய பெருமாள் நாயுடவர்கள் இறந்துவிட்டதாகத் தெரியவந்தது. அது முதல் பாக்கியரத்னம் இவ்விடம் வரும்வரையில் அவளைப் பற்றிய சமாசாரம் ஒன்றும் எனக்குத் தெரியாது. இப்படியிருக்க சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னால் பாக்கியரத்னத்தினிடமிருந்து ஒரு கடிதமும் மணியார்டர் ரூபாய் ஆயிரமும் வந்தன. கடிதத்தில்தான் சிங்கப்பூரில் வந்து இரண்டொரு மாதங்கள் வசிக்க உத்தேசித்திருப்பதாயும் ஆகையால் தனக்குத் தகுந்த பங்களா ஒன்று மாதம் நூறு ரூபாய் குடிக்கூலிக்கு அதிகப்படாதபடி சரியான பங்களாவாய்ப் பார்த்து அதற்கு வேண்டிய மேஜை நாற்காலி முதலிய தட்டுமுட்டு சாமான்களையும் வாங்கி அமைப்பதற்காக ரூபாய் ஆயிரம் மணியார்டர் செய்திருப்பதாகவும் எழுதி இருந்தாள். அவள் கேட்டுக்கொண்டபடி 'லக்ஷ்மி விலாசம்' பங்களாவை அமர்த்தி சாமான்களும் சரிவர வாங்கிச் சேர்த்து வைத்தேன். கடிதம் வந்த ஒரு மாதத்திற்கப்பால் அவள் "ஜிபெங்கலா" என்னும் கப்பலில்

வருவதாகவும் தன்னைத் துறைமுகத்தில் வந்து சந்திக்கும்படியும் தந்தி கொடுத்தாள். நான் போய் சந்தித்து அவளுக்காகத் தீர்மானித்த பங்களாவில் கொண்டுபோய் விட்டு அவளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்தேன். சாப்பிட்டு முடிந்தபின் எனது நண்பர் பெருமாள் நாயுடவர்கள் உயிருடனிருந்த போது தான் எப்படி நிர்ணயமாயிருந்தாளோ அப்படியே அவர் இறந்த பின்னும் இருப்பதாயும் ஆகையால் நானாவது அல்லது நான் அழைத்து வரும் என்னுடைய இஷ்டர்களாவது அவளிடம் நிர்ணயம் தவறக்கூடிய வார்த்தைகளாடக் கூடாதென்றும் நிர்ணயம் தவறக்கூடிய எனது நண்பர்களை அவளிடம் அழைத்துவரக் கூடாதென்றும் தீர்மானமாய்த் தெரிவித்தாள். நானும் அவள் சொன்னபடியே சாதாரணமாய் ஓர் புருஷ நண்பரிடம் எவ்வளவு அன்னியோன்னியமாயிருப்பேனோ அப்படியே அவளிடமும் இருந்துவந்தேன். எனது நண்பர்கள் அப்படி அவளிடம் நடந்துகொள்வார்களென்ற நம்பிக்கை எனக்கில்லையாதலால் அவர்களில் ஒருவரையும் நான் அவளிடம் அழைத்துப்போகவில்லை. அவள் வந்த பதினைந்து தினங்களுக்குப்பின்னால் ஓர்நாள் நானும் அவளும் சென்னை சரசவிநோத சிருங்கார சபாரஞ்சித ஜெகன்மோஹன ஹிந்து பாலிகாநாடகக் கம்பெனியில் நாடகம் பார்க்கச் சென்றிருந்தோம். அப்போது அந்நாடகத்தில் முக்கிய பெண்வேஷம் தரிப்பவளாகிய ஜீவாநந்தத்தைக் கண்டவுடன் "ஹா! இவளா? இவளைக்குறித்துதானா இவ்வளவுசிலாக்கியமாய்ப்பேசிக்கொள்ளுகிறார்கள். ஆலையில்லா ஊரில் இலுப்பைப்பூ சர்க்கரை யென்பதைப்போல் இவளை இங்கு புகழ்கிறார்கள் போலிருக்கிறது" என்றாள். அவளை உனக்குத்தெரியுமா? என்று நான் கேட்டதற்கு "ஆ—ம்—தெ—ரி—யா—து" என்று பதில் சொன்னாள். ஆம் என்றும் தெரியாதென்றும் பதில் சொன்னால் அதன் அர்த்தமென்னவென்று கேட்டேன். அதற்குச்சரியான பதில் சொல்லாமல் வேறு பேச்செடுத்துவிட்டாள். அதற்கப்பாலும் இரண்டுமூன்று தடவைகளில் இவ்விஷயத்தைக்குறித்துக் கேட்டபோதும் சரியான மறுமொழிசொல்லாமல் பேச்சைமாற்றிவிட்டாள். நாங்கள் நாடகத்திற்குச்சென்ற மறுநாள்முதல்தனக்கு அக்கம்பெனியிலேயே வேஷம்பூண்டு ஜீவாநந்தத்திற்குப் போட்டியாய் நடக்கவேண்டும் முயற்சிகள்செய்து அவள்மனோபீஷ்டத்தை நிறைவேற்றும்படி என்னைவேண்டிக்கொண்டாள். நான் அந்நாடகக்கம்பெனியின் ஸ்டேஜ்மானேஜராகிய சுந்தரராவ் அவர்களிடம்

இவ்விஷயத்தைத் தெரிவித்தேன். கோகிலாம்பாளுடைய சாமர்த்தியத்தை சுந்தாராவ் நன்குணர்ந்தவராதலால் அப்படிச்செய்வது தனக்கு அதிக சந்தோஷத்தைக்கொடுக்குமென்றும் இருந்தாலும் ஜீவாநந்தத்தைக் கேட்டுக்கொண்டு தெரிவிப்பதாயும் சொன்னார். ஜீவாநந்தத்தினிடம் சுந்தாராவ் அவர்கள் கேட்டதாயும் அவள் அப்படிச்செய்யச் சம்மதிக்க மாட்டாளென்று சொன்னதாயும் சொன்னார். இவ்விஷயத்தைக் கோகிலாம்பாளிடம் தெரிவிக்கவே அவரைத்தன்னிடம் அழைத்துவந்தால் தான் பேசிக்கொள்வதாகச்சொன்னாள். அவருக்கும் அவளுக்கும் என்ன நடந்ததென்று எனக்குத்தெரியாது. கடைசியாக சுந்தாராவ் சம்மதித்ததாகவும் முதலில் பாரிஜாத புஷ்பாபஹரணம் என்னும் ஆட்டத்தில்தானும் ஜீவாநந்தமும் முறையே ருக்மணியாகவும் சத்தியபாமாவாகவும் வேஷம்பூண்டு நடிக்கப்போவதாகவும் சரியாய் இரவு ஒன்பது மணிக்குவந்தால் இருவரும் ஒன்றாய்நடிக்கப்பந்தலுக்குப்போகலாமென்றும்சொன்னாள். நான் சாயங்காலம் ஏழேமுக்கால் மணிக்கே அங்குசென்றேன். அப்போது அவள் யாரோ ஒருவரிடம் அதிகக்கோபமாய்ப்பேசிக்கொண்டிருந்ததைப்போலிருந்தது. ஆனால்நான் உள்ளே சென்றபோது அவள்மட்டுமிருந்தாள். அப்போது அவள் என்னைப்பார்த்து நான் அவ்விடத்திலிருந்தால் அவள் சிங்காரித்துக்கொள்வதற்கு இடையூறாயிருக்குமென்றும் ஆகையால் முன்குறிப்பிட்டபடி சரியாய் ஒன்பதுமணிக்கு வரும்படியாகவும் என்னைக் கழுத்தைப்பிடித்துத் தள்ளினதைப்போல அனுப்பிவிட்டாள். உடனேபோய் சாப்பிட்டுவிட்டு வரலாமென்று போனேன். சாப்பாடாக சற்றுநேரமானதால் சரியாய் ஒன்பதுமணிக்கு வரமுடியவில்லை. நான் லக்ஷிமிவிலாஸத்தண்டை வரும்போது ஒன்பதேகால் மணியாகிவிட்டதால் முன் பக்கத்தின் வழியாய்ப்போனால் இன்னும் சற்று அதிக நேரமாகுமென்று பின்பக்கத்தின் வழியாய்ப் போனேன். பின்கதவு திறந்திருந்ததால் உள்ளேபோய்ப் பார்த்தபோது கோகிலாம்பாள் அலங்கரித்துக் கொண்டபடியே மேலெல்லாம் இரத்தம் ஒழுக கீழேவிழுந்து கிடக்கக்கண்டு தொட்டுப்பார்த்தேன். உடம்பு குளிர்ந்திருந்ததால் இறந்துவிட்டாளென்று தெரிந்து எதற்கும் டாக்டரை அழைத்துவந்து பார்ப்பது சிலாக்கியமென்று நினைத்துப் பின்தெருவிலுள்ள டாக்டர் நஞ்சப்ப ஐயரைப்போயழைத்துவந்தேன். வரும் வழியில் டாஸ் துரையை சந்தித்தபோது அவரிடமும் சொன்னேன்.



அப்போது அவ்விடத்தில் ஜீவாநந்தமும் கோகிலாம்பாளும்
உரத்தசத்தமாய் ஒருவரையொருவர் திட்டிக்கொண்டிருந்தார்கள்.

(68-ம் பக்கம் பார்க்க.)

இன்ஸ்பெக்டர்.—நேற்று சாயந்தரம் ஏழேமுக்கால் மணிக்குத் தாம் வந்தபோது கோகிலாம்பாள் யாருடனேயோ கோபமாகப் பேசியதாகச் சொன்னீர்களே! எப்படி யூகித்தீர்கள்? கூடப்பேசினது யாரென்று தெரியுமா?

பராங்குஷ நாயுடு.—கோகிலாம்பாள் எப்போதும் சாந்தமாய்ப் பேசுவது வழக்கமாதலாலும் அப்போது அதிக சத்தம் போட்டுப் பேசினதாலும் கோபமாய்ப் பேசினுளென்று சொன்னேன். கூடப்பேசினது யாரோ ஒரு புருஷனுடைய சத்தம்போலிருந்தது. யாருடைய குரலென்று எனக்குத் தெரியாது.

இன்ஸ்பெக்டர்.—அவள் உரத்த குரலுடன் பேசியதாகச் சொன்னீர்களல்லவா? ஆகையால் பேசிய வார்த்தைகள் இன்னதென்று உங்களுக்குத் திட்டமாய்த் தெரியும். அதைத் தயவு செய்து தெரிவியுங்கள்.

பராங்குஷ நாயுடு.—"நீ இங்கு வரவேண்டிய பிரமேயமே கிடையாது. எனக்கு உன்னிடம் பேச சாவகாசமும் இல்லை. ஆகையால் உடனே வெளியே போய்விடு" என்று கோகிலாம்பாள் சொன்னுள். அதற்கு அவர் "எப்படியாவது தயவுசெய்து என்னைக் காப்பாற்று" என்று சொன்னுர். உடனே "சீ! வெளியே போ. இத்துடன் பலமுறை உனக்குச் சொல்லியும் கேளாமல் தொந்தரவு பண்ணுகிருய். உடனே நீ போகாவிட்டால் என் வேலைக்காரனை அழைத்து உன்னைக்கழுத்தைப்பிடித்துத் தள்ளச் சொல்லுவேன்" என்றுள். இவ்வார்த்தைகளெல்லாம் நான் பின் வாசற்படியின் வழியாய் போகும்போது கேட்டேன். அவளிருந்த இடத்திற்கு நான் சென்றபோது அங்கு யாரையும் காணும்.

இன்ஸ்பெக்டர்.—சரி; தங்களைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளினதைப்போல் போகச் சொன்னுளென்று சொன்னீர்களே என்? அதற்கு ஏதாவது காரணம் உண்டா? ஏதற்ககாப் போகச்சொன்னுளென்று தாங்கள் நினைக்கிறீர்கள்?

பராங்குஷ நாயுடு.—மணியைப் பார்த்துக்கொண்டு என்னை அவசரப்படுத்திப் போகச்சொன்னதால் அவள் யாருடைய வரவையோ எதிர்பார்த்தாளென்றும் அவள் எதிர்பார்த்த நபர் வரும்போது நான் அங்கே இருக்கக்கூடாதென்று நினைத்தாளென்றும் சந்தேகித்தேன்.

இன்ஸ்பெக்டர்.—மணியைப் பார்த்ததிலிருந்தே இப்படி யூகித்து விடலாமா! ஆட்டத்திற்குப் போக நேரமாகி விட்ட

தென்றும் தான் உடுத்திக்கொள்வதற்குப் போதுமான நேரம் இருக்குமாவென்றும் ஏன் பார்த்திருக்கக்கூடாது?

பராங்குஷ நாயுடு.—நான் போகும்போது அவள் பூராவாய் அலங்கரித்துக்கொண்டு நிலக்கண்ணாடியின் முன் நின்று புஷ்பம் சூடிக்கொண்டிருந்தாள். எப்போதும் அவள் புஷ்பம் சூடிக்கொள்ளுவது தான் கடைசி அலங்காரமாதலால் அப்பால் நான் சொன்னபடி யாரோ ஒருவரை சந்திப்பதற்காகத்தான் என்னைப் போகச்சொல்லி யிருக்கவேண்டும்.

இன்ஸ்பெக்டர்.—யாரையோ சந்திப்பதற்காகப் போகச் சொல்லியிருப்பாளென்று சொன்னீர்களே. அது யாராயிருக்கலாம்?

பராங்குஷநாயுடு.—யாரென்று எனக்குத் திட்டமாய்த்தெரியாது.

இன்ஸ்பெக்டர்.—யாரென்று திட்டமாய்ச் சொல்லாவிட்டாலும் யாராயிருக்கலாமென்று தான் யூகிக்கிறீகள்!

பராங்குஷ நாயுடு.—எனக்குத் தெரிந்தவரையில் இவ்வூரில் அவளுக்குச் சிநேகமானவர்கள் ஒருவரும் கிடையாது. ஒருநாள் நாங்களிருவரும் உலாவப்போகையில் குமாரசாமி நாயுடுவைச் சுட்டிக்காட்டி அவர் யாரென்று கேட்டாள். இன்னாரென்று நான் சொன்னவுடனே அவரைத் தன்னிடம் அழைத்துவரும்படி என்னை வேண்டினாள். நான் அவருடன் பேசுவதில்லையென்று சொன்னதற்குக் காரணமென்னவென்று கேட்டாள். நாராயணசாமி நாயுடு அவர்கள் புத்திரியாகிய பத்மாவதியை அவளுடைய தகப்பனார் எனக்குக் கலியாணஞ் செய்து கொடுப்பதாகச் சொல்லியிருக்கக் குமாரசாமி நாயுடு எப்படியோ பத்மாவதியைப் பக்குவப் படுத்திக் கொண்டு அவள் என்னைக் கலியாணஞ் செய்துகொள்ள சம்மதிக்காமல் செய்ததால் நான் அவரிடம் பேசுவதில்லையென்றும் ஆனால் அவருக்கும் எனக்கும் விரோதமில்லை யென்றும் சொன்னேன். எப்படியாவது அவரைத் தன்னிடம் அழைத்து வரும்படி கெஞ்சிக் கேட்டாள். வேறுயாரிடமாவது சொல்லி அழைத்து யருவதாகச் சொன்னேன்.

இன்ஸ்பெக்டர்.—சரி; அப்படியே செய்தீர்களா? இல்லாவிட்டால் தங்களுக்குத் தெரியுமா? அல்லது எங்கேயாவது அவர்களிருவரும் சந்தித்துப் பேசியதுண்டா?

பராங்குஷ நாயுடு—நான் சந்திக்கும்படி செய்யவில்லை. அவர் எப்போதாவது கோகிலாம்பாள் வீட்டிற்கு வந்ததாகவும் எனக்குத்தெரியாது. ஒருநாள் சாயங்காலம் கம்பெனி தோட்டத்தில்

வழக்கம்போல் உலாவச் சென்றேன். அப்போது அவ்விடத்தில் ஜீவாநந்தமும் கோகிலாம்பாளும் உரத்த சத்தமாய் ஒருவரை யொருவர் திட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் தனிமையாக இருப்பதாக நினைத்தார்கள். ஆனால் அவர்கள் திட்டிக் கொண்டதை நானும் தோட்டத்தின் இன்னொரு பக்கத்திலிருந்து வந்துகொண்டிருந்த குமாரசாமி நாயுடுவும் கேட்டோம். எங்களைப் பார்த்தவுடன் இருவரும் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தார்கள். உடனே கோகிலாம்பாள் குமாரசாமி நாயுடவர்களிடம் தன்னுடைய நடத்தையைக் குறித்து சமாதானஞ் சொல்லப்போனாள். ஜீவாநந்தம் குமாரசாமி நாயுடுவைப்பார்த்து "ஐயா! வீட்டிற்குப் போகலாம்; வருகிறீர்களா?" என்று கேட்டாள். அவர் கோகிலாம்பாள் சொல்லப்போன வார்த்தைகளைக் கேளாமல் ஜீவாநந்தத்துடன் சற்றுதூரம்போய் அங்கிருந்த சாரதாம்பாளையும் குப்பனையும் கூட்டிக்கொண்டு நால்வரும் வண்டியேறிப் போய்விட்டார்கள். அவர்போன பின்னும் எப்படியாவது தன்னிடம் குமாரசாமி நாயுடுவை அழைத்துவரும்படி கோகிலாம்பாள் கேட்டுக்கொண்டாள். நான் சாக்கு போக்குச் சொன்னது கண்டு தானே நேரில் அவருக்குக் கடிதமெழுதுவாகச் சொன்னாள். அவள் எழுதினாளோ, எழுதவில்லையோ எனக்குத்தெரியாது. நான் போகும் ஒவ்வொரு நாளும் அவள் அவருடைய பேச்செடாமலிருந்ததில்லை. ஆகையால் ஒருகால் அவரை தான் எதிர்பார்த்திருக்கலாமென்று நான் நினைத்தேன்.

இன்ஸ்பெக்டர்.—ஒன்பதேகால் மணிக்குப் போனபோது பின் பக்கத்தின் வழியாகப் போனதாகச் சொன்னீர்களே! பின் பக்கத்துக்கதவு எப்போதும் திறந்துதானிருக்குமோ? அப்படியில்லாவிட்டால் எப்படிக் கூப்பிடலாமென்று போனீர்கள்.

பராங்குஷ நாயுடு.—பின் கதவு எப்போதும் பூட்டியிருப்பது தான் வழக்கம். ஒரு வேளை திறந்திருக்கலாமென்று போனேன்; அப்படியே திறந்திருந்தது,

இப்படி இவர் சொன்னவுடனே பக்கத்தில் அழுக்குத்துணியுடன் நின்றுகொண்டிருந்த ஓர் கிழவன் ஒரு சாவியையும் கடிதத்தையும் இன்ஸ்பெக்டரிடம் மற்றவர்களுக்குத் தெரியாமல் கொடுத்தார். அவர் அதை வாசித்துப் பார்த்துக்கொண்டு பின்வருமாறு கேட்டார்.

இன்ஸ்பெக்டர்.—நாயுடுகாரு! இதோ இந்த சாவியைப்

பாரும். இதை நீர் எப்போதாவது பார்த்திருக்கிறீரா?

பராங்குஷ நாயுடு.—ஆம்; பார்த்திருக்கிறேன். இது லக்ஷ்மி விலாசத்துப் பின்கதவின் சாவி?

இன்ஸ்பெக்டர்.—சரிதானையா! இது எப்போதும் எங்கிருப்பது அதைச் சொல்லும்.

பராங்குஷ நாயுடு.—எங்கிருக்கும்! வீட்டில் தான் இருக்கும்.

இன்ஸ்பெக்டர்.—உம்மிடம் இருப்பதில்லையோ? நேற்றை தினம் இராத்திரி நீர் இராணியை வண்டியில் போகும்போதே தூரத்தில் எறியவில்லையா?

பராங்குஷ நாயுடு.—எனக்கு ஞாபகமில்லை.

இன்ஸ்பெக்டர்.—சரி; சாவி எறிந்தது தான் ஞாபகமில்லையென்று சொல்லிவிட்டீர். உள்ளே போனபோது சொர்ணத்தைப் பார்த்தீரா! அல்லது வேறே யாராவதிருந்தார்களா?

பராங்குஷ நாயுடு.—நான் வேறு யாரையும் பார்க்கவில்லை.

இன்ஸ்பெக்டர்.—சரி; நீர் போகலாம். வேறு சாக்ஷியைக் கூப்பிடுவோம்.

பராங்குஷ நாயுடு.—நான் போகலாமா? முடிந்துவிட்டதா?

இன்ஸ்பெக்டர்.—இப்போது கேட்கவேண்டிய கேள்விகள் கேட்டாயிற்று. மற்ற சமாசாரம் பின்னால் பார்த்துக்கொள்வோம். அப்படிப்போய் உட்காரும்.

அப்பால் டாக்டர் நஞ்சப்ப ஐயரை இரண்டாவது சாக்ஷியாகக் கூப்பிட்டார்கள்.

இன்ஸ்பெக்டர்.—டாக்டர்! தங்களுக்கு இக்கேஸ் விஷயமாய்த் தெரிந்தவைகளைத் தயவுசெய்து சொல்லுங்கள்.

டாக்டர் நஞ்சப்பா.—நேற்றைய தினம் இராத்திரி ஒன்பதடித்து இருபது நிமிஷத்திற்கு பராங்குஷ நாயுடு என்னை அவசரமாய் வரும்படி சொன்னார். எதற்காகவென்று கேட்டதற்கு லக்ஷ்மி விலாசத்தில் கோகிலாம்பாள் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும், இறந்துபோய் விட்டாளா இல்லையா என்று பார்ப்பதற்காகவும் என்னைக் கூப்பிட்டார். உடனே நான் போய்ப் பார்த்ததில் அவள் இறந்து சுமார் ஒன்றரை மணி நேரம் இருக்கலாமென்று நினைத்தேன்.

இன்ஸ்பெக்டர்.—கோகிலாம்பாளை மட்டும் பார்த்தீர்களா? சொர்ணத்தையும் பார்த்தீர்களா?

டாக்டர் நஞ்சப்பா.—சொர்ணம் இறந்தது அப்போது எனக்

குத்தெரியாது. அப்பால் போலீஸார் தேடியபோது தான் அவள் பிரேதத்தைக் கண்டு சொன்னார்கள். அப்பால் நான் அவனை சோதித்துப் பார்த்தேன்.

இன்ஸ்பெக்டர்.—ஒரு பிரேதத்தைப் பார்த்தவுடனே அவள் எப்போது இறந்திருப்பாளென்று சொல்ல முடியாது?

டாக்டர் நஞ்சப்பா.—பார்த்தவுடனே இத்தனை மணிநேரத்திற்கு முன்னால் இறந்திருப்பாளென்று திட்டமாய்ச்சொல்ல முடியாது. அப்போதுதான் இறந்திருப்பாள் அல்லது இறந்து நேரமாயிருக்குமென்பதை மட்டும் சொல்லலாம்.

இன்ஸ்பெக்டர்.—ஆனால் சற்று நேரத்திற்கு முன்னால் கோகிலாம்பாள் இறந்து மூன்றரைமணி நேரமிருக்குமென்று சொன்னீர்களே! அது எப்படி?

டாக்டர் நஞ்சப்பா.—போலீஸாரின் வேண்டுகோளின்படி அறுத்து சோதனை செய்தபோது நான் திட்டமாய் இவ்வளவு நேரமாயிருக்குமென்று கண்டறிந்தேன்.

இன்ஸ்பெக்டர்.—சொர்ணத்தையும் சோதனைசெய்து பார்த்தீர்களா? அவள் எப்போது இறந்திருக்கலாம்?

டாக்டர் நஞ்சப்பா.—ஏறக்குறைய கோகிலாம்பாள் இறந்த நேரத்திலேயே அவளும் இறந்திருப்பாளென்று நினைக்கிறேன்.

இன்ஸ்பெக்டர்.—சரி; அவர்கள் இருவரும் என்னகாரணங்களால் இறந்தார்களென்று தயவுசெய்து சொல்லுங்கள்.

டாக்டர் நஞ்சப்பா.—கோகிலாம்பாள் கட்டாரியின் குத்துகளால் இறந்திருக்கலாம். ஏனென்றால் அவள் விழுந்துகிடந்த சமீபத்தில் இருந்த கட்டாரியின் அளவையும் காயங்களின் அளவையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சரியாயிருந்தது. ஆகையால் அவள் உடம்பில் பட்ட காயங்களெல்லாம் கட்டாரியால் ஏற்பட்டதாகத்தானிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். சொர்ணத்தின் உடம்பை சோதித்துப் பார்க்கையில் பச்சிலை சம்பந்தப்பட்ட விஷம் சாப்பிட்டதால் இறந்ததாகத் தெரிகிறது.

இன்ஸ்பெக்டர்.—காகிதம் அறுக்கும் தந்தக் கருவியொன்று சமீபத்தில் இரத்தம் தோய்ந்து கிடந்ததே! அதனால் ஏதாவது காயங்கள் ஏற்பட்டிருக்குமா?

டாக்டர் நஞ்சப்பா.—இல்லை.

இன்ஸ்பெக்டர்.—பின் அதில் இரத்தம் எப்படி வந்திருக்கலாமென்று நினைக்கிறீர்கள்?

டாக்டர் நஞ்சப்பா.—எப்படி வந்ததென்று திட்டமாய்ச் சொல்லாவிட்டாலும் ஒருநாள் யாரோ தன்னைக் கட்டாரியால் குத்தும்போது தன் சமீபத்திலிருந்த காகிதம் அறுக்கும் தந்தக் கருவியினால் கோகிலாம்பாள் திரும்பக் குத்தப் பிரயாசப்பட்டிருக்கலாம். அப்போது இரத்தம் விழுந்திருக்குமென்று நினைக்கிறேன்.

இன்ஸ்பெக்டர்.—அப்படியானால் கோகிலாம்பாளைக் குத்தின ஆசாமிக்குக் காயமிருக்குமா?

டாக்டர் நஞ்சப்பா.—தந்தக்கருவியின் முனைப்பாகத்தில் இரத்தமில்லாததாலும் மத்தியபாகத்தில் மட்டும் இரத்தம் இருப்பதாலும் அந்தக் கருவியினால் காயம் ஏற்பட்டிருக்காதென்றும் கோகிலாம்பாளின் இரத்தமே அதில் சிந்தியிருக்கலாமென்றும் நினைக்கிறேன்,

இன்ஸ்பெக்டர்.—கோகிலாம்பாள் உடம்பில் எத்தனை காயங்கள் இருந்தனவென்றும், எந்தப்பக்கத்திலிருந்த காயத்தால் மரணம் சம்பவித்திருக்கலாமென்றும் நினைக்கிறீர்கள்?

டாக்டர் நஞ்சப்பா.—கோகிலாம்பாளின் முதுகு பக்கத்தில் இரண்டு காயங்களும் வலது கையில் ஒருகாயமும் இடதுகையில் இரண்டு காயங்களும் புஜத்தில் ஒரு காயமும் முகத்தில் ஒரு காயமும் மார்பில் ஒரு காயமும் பட்டிருக்கின்றன. இவைகளில் மார்பில் விழுந்த காயத்தால்தான் கோகிலாம்பாள் இறந்திருக்கவேண்டும்.

இன்ஸ்பெக்டர்.—இக்காயங்களெல்லாம் ஒரே ஆசாமியால் ஏற்பட்டதா அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆசாமிகளால் ஏற்பட்டதா?

டாக்டர் நஞ்சப்பா.—ஒரே கட்டாரியால் இக்காயங்களெல்லாம் ஏற்பட்டிருப்பதால் ஒரே ஆசாமிதான் செய்திருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

இன்ஸ்பெக்டர்.—இக்காயங்களில் முதலில் எந்தக்காயம் பட்டிருக்கலாம்?

டாக்டர் நஞ்சப்பா.—முதலில் இதுதான் பட்டிருக்குமென்று தீர்மானமாய்ச்சொல்ல முடியாவிட்டாலும் காயங்கள் பட்டிருக்கும் மாதிரியிலிருந்து முதலில் கோகிலாம்பாளுக்குத் தெரியாமல் முதுகில் குத்தியிருக்க வேண்டுமென்றும் ஒரு குத்துப் பட்டவுடனே கோகிலாம்பாள் என்னவென்று திரும்பிப் பார்ப்பதற்குள் முதுகில் மறுத்துபட்டிருக்க வேண்டுமென்றும் அதற்குள்ளாக அவள் எழுந்திருந்திருக்கலாமென்றும் அப்போது புஜத்தில் குத்து பட்டிருக்கலாமென்றும் அப்பால் தப்பித்துக் கொள்வதற்காகக்

கோகிலாம்பாள் இங்குமங்கும் ஓடினபோது மற்ற குத்துகள் பட்டிருக்கலாமென்றும் மார்பின்மேல் குத்துவிழுந்தவுடனே அவள் இறந்து விழுந்திருப்பாளென்றும் நினைக்கிறேன்.

இன்ஸ்பெக்டர்.—இக்கட்டாரியை நன்றாய் பார்த்தீர்களா? இதுயாருடையதென்று தங்களுக்குத தெரியுமா ?

டாக்டர் நஞ்சப்பா —சில மாதங்களுக்கு முன் நானும் பராங்குஷ நாயுடுவும் நாடகத்திற்குப்போய் வரும்போது ஒருகால் திருடர் அடித்தால் என்னசெய்வதென்று நான் கேட்டதற்கு, பராங்குஷ நாயுடவர்கள் தன் ஜேபியில் எப்போதும் கட்டாரி வைத்திருப்பது வழக்கமென்றும் வந்தால் ஓரேகுத்தாய்க்குத்திவிடுவதாகவும் சொல்லி ஒருகட்டாரியைக்காட்டினார். இக்கட்டாரியைப்பார்க்கும்போது அவரிடமிருந்த கட்டாரிபோல்தான் தோன்றுகிறது.

இன்ஸ்பெக்டர்.—சரி ; தாங்கள் போகலாம்.

என்று சொன்னவுடனே அடுத்த சாக்ஷியாகிய நடேசன் என்னும் காவல்காரனைக் கூப்பிட்டார்கள்.

இன்ஸ்பெக்டர்.-நடேசா ! நாங்கள் கேட்கும் கேள்விகளுக்கு தாறுமாறாய் உளராமலும், கதைசொல்லாமலும், உண்டு இல்லையென்று ஜவாபு சொல்லவேண்டும். நீ இங்கு வேலையிலமர்ந்து எவ்வளவு நாளாயிற்று? உன்னையார் வைத்தார்கள் ? இங்கு யார் யார் வருவது வழக்கம்? இவைகளை விவரமாய்ச் சொல்லு.

நடேசன்.—என்னெநாயுடு ஐயா தான் வேலையிலே வச்சாங்கோ. அம்மா யெண்ணைக்கி இங்கேவந்தாஙகளோ அண்ணைக்கி இங்கே வந்தேன். இங்கே எப்பவும் நாயுடு ஐயா தான் வருவாருங்க. வந்து பேசிட்டிருந்திட்டு போய்டுவாங்க.

இன்ஸ்பெக்டர்.—பராங்குஷ நாயுடுவைத்தவிர வேறே எவரும் அந்தம்மாள் வந்தது முதல் இங்கேவந்ததில்லையா? ஒளிக்காமல் சொல்லு.

நடேசன்.—ஐயா! எஜமான்கிட்ட நான் ஒளிச்சா சும்மாவுடமாட்டீங்கெண்ணு தெரியாதா? ஒரு மாஸ்திக்கிமுந்தி பட்டை பட்டையா விபூதிபூசிகிட்டுதள்ளாத பெரியவங்கவந்தாங்க, அவுங்கொ ஒரு அஞ்சாறு நாளா தொயந்தாப்பிலே வந்துகிட்டிருந்தாங்க. அப்பாலே அவுங்களும் வர்ரதில்லே.

இன்ஸ்பெக்டர்.—அவர் யாரென்று உனக்குத் தெரியுமா? அவர் இங்கே என்ன காரியமாய் வருவது வழக்கம் ?

நடேசன்.—வாசல்லே காத்துகிட்டு கெடக்கிற நாய்க்கி இதெல்லாந் தெரியுமா?

இன்ஸ்பெக்டர்.—அடே! அவர்கள் பேசிய சமாசாரம் பூராவாய் தெரியாவிட்டாலும் ஏதாவது ஒன்றிரண்டு வார்த்தைகளாவது கேட்டிருப்பாயல்லவா? அவைகளைச் சொல்லு.

நடேசன்.—நாய்க்குட்டிக்கி தீர்மானமாய் தெரியாது. என்னமோ வேஷம் போடனும் முன்னு அம்மா சொல்லிக்கிட்டாங்க. அவுங்க அந்தம்மா சம்மதிக்க மாட்டேங்கிறாங்கண்ணு சொன்னுங்க. அம்மா கோபிச்சாங்க. அவுங்க என்னம்மோ சொல்லி விட்டு போனுங்க.

என்று சொன்னவுடனே பக்கத்து அறையிலிருந்த ஸ்டேஜ் மானேஜராகிய சுந்தராராவை அழைப்பித்து "அங்கே வந்துபோனது இவர்தானா பார்" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார். நடேசன் 'ஆம்' என்று சொன்னவுடனே அவரை அனுப்பிவிட்டு நடேசனையே பின்வரும் கேள்விகள் கேட்டார்.

இன்ஸ்பெக்டர்.—சரி; வந்தது இவர்தான் ஒன்று, இன்னும் யார் யார் வருவார்கள்?

நடேசன்.—அம்மாகிட்ட வந்துபேசிட்டுப்போனது இவுங்கதான்.

இன்ஸ்பெக்டர்.—அடே பயலே! கேட்ட கேள்விக்கு ஜவாபு சொல்லு. இங்கே வந்துபோனவர்களையெல்லாம் நீ சொல்லவேண்டும். அவர்கள் வந்து அம்மாவிடத்தில் பேசியிருந்தாலும் ஐயாவிடத்தில் பேசியிருந்தாலும் அக்கரை இல்லை.

நடேசன்.—அவுரு ஐயா வந்துபோவதை யார்கிட்டனும் சொல்லக்கூடாதுன்னு சொர்ணம்மா எங்கிட்டே சத்தியம் வாங்கியிருக்காங்க. அந்தம்மா உசுரோடிருந்தா ஒருவேளை போனு போவுதுன்னு சொல்லலாம். இப்போ செத்திருக்காங்க, நான் சொன்னேன்னு இன்னாக்கிராத்திரிக்கே வந்து என் தொண்டையை கடிச்சி கொண்ணுடுவாங்க. நான் சொல்லவே மாட்டேன்.

இன்ஸ்பெக்டர்.—அடே பயலே! இப்பொழுது சொன்னால் பிழைத்தாய், இல்லாவிட்டால் நீ சொல்லும் வரையில் முக்கோணத்தில் கட்டி அடிக்கும்படி செய்வேன். ஜாக்கிரதை! யாரிடம் விளையாடுகிறாய்? அடே! முனுசாமி! தொண்ணித்தஞ்சி!! இவன் உடனே சொல்லா விட்டால் அடியடா அவன் தவடையில்.

என்று சொன்னார். உடனே பூதம்போலிருக்கும் ஒரு பாமதடியனாகிய கான்ஸ்டேபில் நடேசன் சமீபத்தில் வந்து நின்று

கொண்டு "உண்மையைச்சொன்னால் பிழைத்தாய், இல்லாவிட்டால் தெரியுமில்லா உனக்கு?" என்று சொன்னான். உடனே நடேசன் சொர்ணத்தின் பிசாசாவது ராத்திரிவந்து அடிக்கும். இப்போது சொல்லாவிட்டாலோ பக்கத்தில் நிற்கும் இப்போலீஸ் பிசாசு உடனே அறைந்து விடும்போலிருக்கிறது. ஆகையால் சொல்லிவிடுவதே நல்லது என்று தீர்மானித்துக்கொண்டு பின்வருமாறு சொன்னான்.

நடேசன்.—ஐயா! தள்ளாத ஒரு கிழவைத்தியர் அடிக்கடி அம்மாயில்லாத வேளையிலே சொர்ணம் அம்மாகிட்டே வருவாங்க. அவுங்க ரெண்டுபேரும் ரகஸியமா என்னமோ பேசுவாங்க.

என்று சொன்னவுடனே பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவர் கடிதத்தில் ஏதோ எழுதி கமிஷனர் துரையவர்களிடம் கொடுத்தார். அவர் அதை வாங்கி இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தார் அதில் "வைத்தியனைக்குறித்து விபரமாய் விசாரிக்கவும்" என்று எழுதியிருந்தது.

இன்ஸ்பெக்டர்.—வைத்தியர் எப்படியிருப்பார்? அவர் பேர் என்ன? அவரைக் குறித்த சகல விவரங்களையும் தெரிவி.

நடேசன்.—அவரை பார்த்தா தொண்ணூறு வயசு இருக்குமுண்ணு தோனும். உயரமாக இருப்பாங்க. கன்னங்கறேரெண்ணு இருப்பாங்க. நரச்ச தாடி வயத்துவரைக்கும் தொங்கிகிட்டு இருக்கும். இதுதான் எனக்கு தெரியும்.

இன்ஸ்பெக்டர்.—அவர் எப்போது கடைசியாக வந்தார்?

நடேசன்.—நேத்து சாயங்காலந்தான் கடைசியாக வந்தாங்க.

இன்ஸ்பெக்டர்.—இத்தனை நாளாய் வந்துபேசி விட்டுப்போகும்போது அவர்கள் என்ன பேசினார்களென்று கேட்க வேண்டுமென்ற ஆசை உனக்கு உண்டாயிருக்குமல்லவா? அப்படி ஒண்ணு இருந்து எப்போதாவது கேட்டிருந்தால் அவைகளைச் சொல்லு.

நடேசன்.—இத்தனை நாளா அப்படி நான் கேட்டதேயில்லே. நேத்து தான் அவுங்க பேசிகிட்டிருக்கப்போ என்னமோ சாமான் எடுக்க பக்கத்தறைக்குபோனேன். அப்போ என்ன பேசுராங் கண்ணு காது குடுத்து கேட்டேன். வைத்திய ஐயா சாயங்காலம் சரியா இருபது நாழிக்கு நல்ல லக்குனமுண்ணு சொன்னாங்க. அப்போசாப்புட்டா கட்டாயமா சொஸ்தமாகுமுண்ணு சொன்னாங்க. சத்தியமா வேறே ஒண்ணும் தெரியாது.

இன்ஸ்பெக்டர்.—'அவரைப் பார்த்தால் தொண்ணூறு வயதி

ருக்குமென்று தோன்றுகிறது' என்று சொன்னையே அவருக்கு நிஜமாய்; தொண்ணூறு வயதிருக்காதா?

நடேசன்.—நேத்துவரைக்கும் அவுங்களுக்கு தொண்ணூறு வயசிருக்குமுன்னுதான் நினைச்சேன். இப்போ எனக்கு சந்தேகந்தான்.

இன்ஸ்பெக்டர்.—உனக்கு ஸந்தேகம் வரவேண்டிய காரணமென்ன? விவரமாய்ச் சொல்லு.

நடேசன்.—நேத்து சாயங்காலம் எனக்குக் கால்லை அழுச்சல் அதிகமாயிருந்தது. வைத்திய ஐயாகிட்ட கேட்டு மருந்து வாங்கி திங்கலாமுன்னு ஐயா நம்ம வீட்டெவுட்டு போனப்பவே பின்னமே போனேன். நம்ம தெருவு போறவரைக்கும் தள்ளாத வுங்களைப்போல அடிமேலே அடிவச்சி நடந்து போனவங்க தெருவுக்குப்போனவுடனே விரைசா நடந்தாங்க. தள்ளாதவுங்க இவ்வளவு அவசரமாக நடப்பாங்களான்னு நினைச்சுகிட்டு வைத்தியக்காரய்யா, வைத்தியக்காரய்யான்னு கூப்பிட்டேன். திரும்பி பார்த்தாங்க. என்னய்யா! வயித்து வரைக்கும் தொங்கி கிட்டிருந்த நரைச்ச தாடியைக் காணோம்! கூப்பிட்டது நான்னு பார்த்தவுடனே சந்துலே போனாங்க. நான் ஓடிப்போயி பார்த்தேன். யாருங் காணோம். எப்படியோ மாயமா பூட்டாங்க.

இன்ஸ்பெக்டர்.—ஆனல் அங்கு வந்தவர் மாறுவேஷம் பூண்டு வந்தாரென்று நினைக்கிறாயோ?

நடேசன்.—ஐயா! அதெல்லாம் எனக்குத் தெரியாது. தெரிஞ்சதே சொல்லிட்டேன்.

இன்ஸ்பெக்டர்.—சரி; வேறே யாராவது வந்தார்களா?

நடேசன்.—நேத்து ராத்திரி எழுமணிக்கி அம்மா யென்னே கூப்புட்டு 'நடேசா! யார் வந்து கேட்டாலும் நான் ஊட்டுலெ இல்லெ வெளியே போயிருக்கேன்னு சொல்லு. சரியா எட்டு மணிக்கு ஒரு ஐயா வருவாங்க. அவுங்களை மட்டும் உடனே கூட்டி விட்டுவா'' அன்னு சொன்னாங்க. உத்தரவம்மான்னு சொல்லிட்டு வந்தேன். ராத்திரி எழு மணியிருக்கும். அவளுக்கு வேட்டி யெல்லாங் கட்டிகிட்டு ஒரு ஐயா வந்தாங்க. அவுங்க உடனே அம்மாவை பாக்கணுமுன்னாங்க. நான் அம்மா ஊட்டிலெயில்லென்னு சொன்னேன். பால்காரய்யா அம்மா யிருக்காங்கன்னு சொன்னாங்களே. நீ இல்லென்னு பொய்சொல்ர யெண்ணி சொல்லி அவுங்க அந்தம்மாளுக்கு பாத்ப முன்னு அவுங்க குடுக்கிற காயிதத்தெ

கொண்டுபோயி அம்மாகிட்ட காமிச்சா ஒருரூபா குடுக்கிறெண்ணு காயிதம் குடுத்து ரூபாவுங் குடுத்தாங்க. அதை வாங்கிட்டு போயி அம்மாகிட்ட குடுத்தேன். அம்மா கோவிச்சுகிட்டாங்க. அப்போ அவரை வரச்சொன்னாங்க. அவுங்க உள்ளே போனாங்க. அப்புறம் அவுங்க என்ன அனாங்களோ எனக்குத் தெரியாது. அம்மா அவரை ரொம்ப கோவிச்சிகிட்டாங்க.

இன்ஸ்பெக்டர்.—என்ன சொல்லிக் கோபித்தாள்?

நடேசன்.—ஐயா! நான் படிச்சா யிருக்கேன் இதெல்லாம் கியாபகம் வச்சிச்சொல்ல? என்னமோ ரொம்ப ரூபா செலவு பண்ணிட்டியே இங்கே யேன்வந்தே? உனக்கு நான் தம்பிடிகூட குடுக்க மாட்டேன். நான் செத்தா அப்போ யெடுத்துக்கோ. போ? போண்ணாங்க. இவ்வளவுதான்யா, என்னை படிச்சிபடிச்சி கேட்டா எனக்கு தெரியாது.

இன்ஸ்பெக்டர்.—அவர் வெளியேபோனதைப் பார்த்தாயா?

நடேசன்.—அப்படி உட்கார்ந் திருந்தேன். எப்படியோ கண்ணு இழுத்துட்டுது. அவுங்க போ—னா—ங்—கண்ணும் போ—க—ல்—லேண்ணும் எனக்கு சரியா சொல்லமுடியாது.

இன்ஸ்பெக்டர்.—சரி; இன்னும் யார் யார் வந்தார்கள்?

நடேசன்.—ஐயா! வேறே யாரும் முன் வாசற் வழியா வறெல்லே.

இன்ஸ்பெக்டர்.—சரிதானப்பா! முன் வாசல் வழியாய் வரா விட்டால் பின் வாசல்வழியாய் யார் யார் வந்தார்க ளென்றாவது சொல்லு.

நடேசன்.—ஐயா! எனக்கு புரத்தையுங் கண்ணிருக்கவா செய்து? அதெல்லாம் எப்பிடி தெரியுமையா?

இன்ஸ்பெக்டர்.—அடே! கண்ணில்லாவிட்டால் பேசின சத்தத்தை வாசலிலிருந்தபடியாவது கேட்டிருப்பாயல்லவா? சொல்லு

நடேசன்.—நாயுடய்யா சத்தந்தான் கேட்டாப்பிலே யிருந்தது.

இன்ஸ்பெக்டர்.—எப்போது?

நடேசன்.—எனக்கு ரூபா குடுத்தாங்களே அந்தய்யா போன புறவு.

இன்ஸபெக்டர்.—எவ்வளவு நேரம் கேட்டது?

நடேசன்.—ஐயா! எவ்வளவு நேரமுண்ணு சொல்ல நான் கெடியாரமா வசசிட்டிருக்கிறேன்? கொஞ்ச நேரந்தானிருக்கும்.

இன்ஸ்பெக்டர்.—மறுபடியும் யாராவது பேசினதாகக் கேட்டாயா?

நடேசன்.—யாரோ பேசினாப்பிலே இருந்தது.

இன்ஸ்பெக்டர்.—எப்போ?

நடேசன்.—நாயுடய்யா பேசின அரை நாழிக்கி அப்பாலே யிருக்கும்.

இன்ஸ்பெக்டர்.—திரும்பவும் பேசினது நாயுடுதானா?

நடேசன்.—அநேகமா அப்படித்தா னிருக்கது. என்னு நாயுடய்யா தான் பின்யாசல்லே வர்ரது. இன்னெக்கி மாத்திரம் யார் புதுசா வரப்போராங்க.

இன்ஸ்பெக்டர்.—ஆனால் திரும்பவும் பேசினது அவர்தா னென்று சொல்லு.

நடேசன்.—ஆமா அப்படித்தா னிருக்கலாம். என்னுடெ கொஞ்ச நேரம்பொறுத்து நாயுடய்யாதான் பின்வாசின்லெ யாரோ யாரோ போர சத்தங்கேட்டு வந்து அம்மா செத்துப் போனாங்கன்னு சொன்னாங்க.

இன்ஸ்பெக்டர்.—யாரோ சரியாய் எட்டுமணிக்கு வருவார்கள், உன்னை அழைத்து வா வென்று உங்கம்மா சொன்னார்களே. அப்படி 8-மணிக்கு யாராவது வந்தார்களா?

நடேசன்.—யாரும் வரல்லெ

என்று சொல்லிவிட்டு இன்னும் "அந்தம்மாளைப்போலவே எப்போ பார்க்கப் போகிறேன்" என்று இரண்டு கைகளால் தன் முகத்திலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு சிறு பிள்ளையைப் போல் ஓவென்று கதறி அழுதான். அத்துடன் அவன் சாக்ஷியத்தை நிறுத்திவிட்டு மறுசாக்ஷியாகிய ஸ்டேஜ் மானேஜர் சுந்தராராவை கூப்பிட்டார்கள்.

இன்ஸ்பெக்டர்.—சுந்தராராவ்காரு இக்கேஸ் சம்பந்தமான விஷயங்களைத் தங்களுக்குத் தெரிந்தவரையில் ஆதியோடந்தமாய் ஒன்றும் விடாமல் தயவுசெய்து சொல்லுங்கள்.

சுந்தராராவ்.—ஸார் ஒருமாதத்திற்கு முன்னால் பாலகிருஷ்ண நாயுடவர்கள் என்னிடம் வந்து கோகிலாம்பாள் எனது கம்பெனியிலே நடிக்க ஆசைப்படுவதாயும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து அவளைச்சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் சொன்னான். நான் எனது முக்கிய பெண் வேஷக்காரியான ஜீவாநந்தத்தைக் கேட்டுச் சேர்த்துக் கொள்வதாய்ச் சொல்லிவிட்டு அவ

ளிடம் போய்க்கேட்டதில் கோகிலாம்பாளுடன் நடிக்க, தான் ஒரு நாளும் சம்மதிக்கமாட்டாளென்றும் கட்டாயமாய் கோகிலாம்பாளைச் சேர்த்துக் கொள்ளவேண்டிய அபிப்பிராயம் எனக்கிருந்தால் தான் என் கம்பெனியைவிட்டு விலகிவிடுவாளென்றும் எனக்கும் அவளுக்கும் ஏற்பட்டிருக்கும் அக்ரிமெண்ட் ஷரத்துகளின் பிரகாரம் தான் திடீரென்று கம்பெனியை விட்டுப்போவதால் நேரிடக்கூடிய நஷ்டம் ரூபாய் பதினாயிரத்தையும் தான் கொடுத்துவிடுவதாகவும் சொன்னாள். கோகிலாம்பாளின் சாமர்த்தியங்களை நான் நன்குணர்ந்திருந்த போதிலும் ஜீவாநந்தத்தின் இஷ்டத்திற்கு விரோதமாய் நடக்க சம்மதியில்லையாகையால் பராங்குசநாயுடுவிடம் உண்மையைச்சொல்லி சரிப்படாதென்று சொல்லிவிட்டேன். அப்பால் கோகிலாம்பாள் என்னை அழைத்து இவ்விஷயத்தைக்குறித்து என்னிடம் கேட்டாள். அவளிடமும் உண்மையைச் சொன்னேன். அப்பால் தன்னைச் சேர்த்துக்கொள்ளாவிடில் ஒரு வாரத்திற்குள்ளாக எனக்குப் போட்டியாக வேறு கம்பெனி சேர்த்து இந்த சிங்கப்பூரிலேயே தான் ஆடப்போவதாகவும், தான் மிகுந்த சொத்துக்காரியாகையால் என் கம்பெனியிலிருப்பதை விட சிறந்த திரைகளையும் அதற்கேற்ற சாமான்களையும் சேகரித்து நடிக்கப்போவதாயும் அப்பொழுது எனக்கு ஏராளமான நஷ்டமுண்டாகுமென்பதையும் எடுத்துக்காட்டினாள். நான் யோசித்துச்சொல்வதாய் அவளிடம் சொல்லிவிட்டு ஜீவாநந்தத்தினிடம்போய் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லி எப்படியாவது அவளுடைய மனதை பெரிது பண்ணி ஒரு ஆட்டமாவது கோகிலாம்பாளுடன் நடிக்கச் சம்மதிக்கவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். அவளுடன் நடிக்க ஒருகாலும் சம்மதிக்கமாட்டாளென்று முதலில் சொன்னபோதிலும் நாளாவிர்த்தியில் என் வேண்டுகோளுக்கிணங்கி ஒப்புக்கொண்டதுபோல் பாவித்தாள். அதன் பேரில் தான் நேற்றைய ஆட்டத்தைக் குறித்து விசேஷ விளம்பரம் செய்தேன். அதன் முடிவு என்னவாயிற்றென்று தங்களுக்கே தெரியும். எனக்குச் சொந்தமான விலையுயர்ந்த திரைகள் உடுப்புகள் முதலியவைகள் கொளுத்தப்பட்டதால் அவைகளையும் இழந்து அத்துடன் எனது முக்கியப் பெண் வேஷக்காரியான ஜீவாநந்தம்மாளையும் இழந்துவிட்டேன். இனி என் கதி அதோகதிதான்.

இன்ஸ்பெக்டர்.—ஐயா ; அவைகளைக்குறித்து இப்போது சிந்திப்பதில் பிரயோஜனமில்லை. தாங்கள் மிகுந்த புத்திசாலியாகை

யால் கோகிலாம்பாளும் ஜீவாநந்தமும் இதற்குமுன் எப்போதாவது ஒருவரையொருவர் அறிந்தவர்களா வென்பதை யோசித்துச் சொல்லுங்கள்.

சுந்தரராவ்.—நான் அவர்கள் இருவரையும் விசாரித்ததில் ஒருவரை யொருவர் முன்னால் அறிந்ததில்லையென்று திட்டமாய்ச் சொன்ன போதிலும் அவர்கள் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து முன்னால் ஒருவரை யொருவர் அறிந்தவர்களா யிருக்க வேண்டு மென்றே நினைக்கிறேன்.

என்று சொன்னார். உடனே அந்த சாக்ஷியாகிய கம்பெனி தோட்டத்து குமாஸ்தா முத்யால் நாயுடு கூப்பிடப்பட்டார்.

இன்ஸ்பெக்டர்.—முத்யால் நாயுடு! உமக்கு இக்கேஸ் சம்பந்தமான விஷயங்கள் என்ன தெரியும்? விவரமாய்ச் சொல்லும்.

முத்யால் நாயுடு.—ஒரு மாதத்திற்கு முன்னால் ஒருநாள் நான் பெர்ன் (Fern) கொட்டகையிலிருந்து வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது ஜீவாநந்தம்மாள் அவ்விடத்தில் ஓர் கல்லணை மேல் உட்கார்ந்திருந்தார்கள். சற்று நேரத்திற்கப்பால் அவ்வழியே வந்த கோகிலாம்பாள் ஜீவாநந்தத்தைப் பார்த்து "ஆ, ரா! உன்னைப்பார்த்து அநேக வருஷங்களாயினவே. இன்று உன்னைப் பார்த்தது எனக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இங்கு நீ என்ன செய்கிறாய்? இவ்வளவு தூரதேசத்தில் உன்னைப் பார்ப்பேனென்று நான் கனவிலும் நினைக்கவில்லையே" என்று சொல்லிக்கொண்டே அவள் சமீபத்திற்போய் உட்கார்ந்தாள். அப்போது ஜீவாநந்தம்மாள் "எப்பொழுது நீ வீட்டைவிட்டு முத்துசாமியின் பொருட்டு வெளியேறினையோ அப்பொழுதே நீ எனது சிநேகியல்லவென்று நீக்கிவிட்டேன்; இது முதல் நீயும் நானும் இதுவரையில் ஒருவரை யொருவர் பார்க்காத அன்னியரைப்போல் நடந்துகொள்ளவேண்டும்" என்று சொல்லிவிட்டு அவ்விடத்தைவிட்டு ஜீவாநந்தம் எழுந்திருந்தாள். அப்போது கோகிலாம்பாள் "ஏண்டி ஜீவா! இவ்வளவு கர்வம் வந்துவிட்டதா உனக்கு? உனக்கு இவ்வளவு கர்வம் பிடித்ததற்குக் காரணம் மாடபுரம் ஜமீன்தார் பணமல்லவா? மஹா பதிவிரதா சிரோன்மணி நீ! ஓர் ஜமீன்தாரை வைத்துக்கொண்டிருப்பவள்: அத்துடன் அவர் ஒருவர் போதாமல் இவ்வூரிலுள்ள குமாரசாமி நாயுடு முதலிய பலரையும் வைத்திருக்கும் உனக்கு எனது நட்பு என்னத்திற்கு?" என்று சொன்னாள். அதற்கு ஜீவாநந்தம் "முத்துசாமி, பெருமாள்நாயுடு முதலிய பலரு

டைய வைப்பாட்டியாயிருந்த உனது புத்தி அப்படித்தானிருக் கும். எல்லோரையும் உன்னைப்போல் நினைத்துக்கொள்ளுகிருய். இப் போது வார்த்தையாடியதைப்போல் இன்னொருதரம் மட்டும் வார் த்தையாடுவாயாகில் உன்னை என்னபாடு படுத்துவேன்பார்" என்று சொன்னாள் அதற்குக் கோகிலாம்பாள் "ஆமடி உண்மைதான் நான் உலகறிய முத்துசாமியையும் பெருமாள் நாயுடுவையும் வைத் திருந்தேன். உன்னைப்போல வெளிக்கு மஹா பதிவிரதையைப் போல தோணப்பண்ணிக்கொண்டு உள்ளுக்கு ஒருடஜன் ஆசாமிக ளுடன் திருட்டுத்தனமா யிருக்கவில்லை. நீ என் சமீபத்தில் உட்கார மாட்டேனென்று சொன்னதற்காக நீயாடும் சதஸ்ஸிலேயே உன் னுடன் போட்டியாக ஆடி உனக்குப் பிடித்திருக்கும் கர்வத்தை அடக்காவிட்டால் என்பேர் பாக்யரத்னமல்ல" என்றுசொன்னாள். "உன்னுடன் நடிப்பதைவிட பிராணனைபாவது விட்டுவிடுவேன். அல்லது வேண்டுமென்று நீ இவ்வளவு கர்வம் செய்வதற்காக உன்னைக் கண்டதுண்டமாய் வெட்டிக்கொன்றாலும் தோஷமில்லை" என்று ஜீவாநந்தம் சொன்னாள். அப்பால் இருவரும் ஒருவரை யொருவர் ஏகதேசமாய்த் திட்டிக்கொண்டார்கள். இதற்குள்ளாக எதிரெதிரிலிருந்து குமாரசாமி நாயுடுவும் பராங்குஷ நாயுடுவும் வரவே ஜீவாநந்தம் குமாரசாமி நாயுடுவை அழைத்துக்கொண்டு போய்விட்டாள். கோகிலாம்பாள் குமாரசாமி நாயுடுவை அழைத்த போதிலும் அவர் கவனியாமல் போய்விட்டார். இதுதான் எனக் குத் தெரிந்த விஷயங்கள்.

இன்ஸ்பெக்டர்.—கோகிலாம்பாள் குமாரசாமி நாயுடுவை அழைத்ததாகச் சொன்னீரே; அவள் கூப்பிட்ட மாதிரியிலிருந்து அவளுக்கும் குமாரசாமி நாயுடுவுக்கும் நட்பு உண்டென்று தோற் றுகிறதா?

முத்யால் நாயுடு.—குமாரசாமி நாயுடு நடந்துகொண்ட மாதி ரியிலிருந்து அவர்கள் ஒருவரையொருவர் முன்னல் சந்தித்தவர்க ளாகத் தோற்றவில்லை.

அப்பால் அடுத்த சாக்ஷியாகிய ஹோட்டல் சொந்தக்கார ரான விட்டல்ராவ் கூப்பிடப்பட்டார்.

இன்ஸ்பெக்டர்.—விட்டல்ராவ்! இந்தக்கேஸில் உமக்கு என்ன தெரியும்?

விட்டல்ராவ்.—நேற்று சாயங்காலம் ஆறுமணி சுமாருக்கு ஒரு சிறுமூட்டையுடன் ஒருவர் ஹோட்டலுக்குவந்து சாப்பிட்ட

பின் கோகிலாம்பாள் வசிக்குமிடம் எனக்குத் தெரியுமாவென்று கேட்டார். நான் லக்ஷ்மிவிலாசத்தில் வசிப்பதாகச் சொன்னேன். அவ்விடத்திருந்து வழியெல்லாம் சரியாய்க் கேட்டுக்கொண்டுபோனவர் மறுபடியும் இரவு ஒன்பதுமணி சுமாருக்கு அதிக மனவருத்தத்துடனும் கவலையுடனும் வந்து உட்கார்ந்தார். அவர் மேல்வேஷ்டியில் ஏதோ சிகப்பாயிருக்கக்கண்டு என்னவென்று கேட்டேன்; தனக்கு அதைக்குறித்து ஒன்றும் தெரியாதென்று சொன்னார்; பார்த்தால் இரத்தத்தைப்போலிருந்தது. இன்று காலையில் இக்கோரமான கொலைகளைக் குறித்துக் கேள்விப்பட்டவுடன் எனக்குத்தெரிந்த விஷயங்களைச் சொல்லவந்தேன்.

இன்ஸ்பெக்டர்.—இப்போது அந்த நபர் எங்கேயிருக்கிறார்?

விட்டல்ராவ்—நான் வரும்போது ஹோட்டலில்தான் இருந்தார். எனது வேலைக்காரனை அவர்வெளியேபோய்விடாதபடி ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு வந்தேன்.

என்றுசொன்னார். உடனே இன்ஸ்பெக்டர் விட்டல்ராவுடன் இரண்டு கனிஸ்டேபில்களை அனுப்பி அந்த ஆளை அழைத்துவருவதுடன் இரத்தம் தோய்ந்த துணியையும் எடுத்துவரும்படி சொன்னார். அப்படியே அவர்கள்போய் அவரை அழைத்துவந்தார்கள். அவர்பெயரென்னவென்று இன்ஸ்பெக்டர் கேட்டதற்கு கோவிந்தசாமி நாயுடுவென்று சொன்னார்.

இன்ஸ்பெக்டர்.—ஐயா! தங்களுக்கு எந்தஊர்? இங்கு என்ன ஜோலியாய் வந்தீர்கள்? எப்போது வந்தீர்கள்? நேற்று சாயங்காலம் ஏழுமணிமுதல் ஒன்பது மணி வரையில் என்ன செய்தீர்கள்? என்ற விவரங்களைத் தயவுசெய்து சொல்லுங்கள்.

கோவிந்தசாமி நாயுடு.—நானிருப்பது மதுரை என் மாமனார் மகளாகிய கோகிலாம்பாள் என்னும் பாக்கியரத்னம் இவ்விடத்திலிருப்பதாகக் கேள்விப்பட்டதால் இங்குவந்தேன். நேற்று சாயங்காலம் ஹோட்டலில் விசாரித்ததில் அவள் லக்ஷ்மி விலாசத்திலிருப்பதாகச் சொன்னார்கள். உடனே அவளைப்போய் பார்த்தேன். அப்பால் வழிதெரியாமல் எங்கேயோ சுற்றிவிட்டு சுமார் ஒன்பது மணிக்கு ஹோட்டலுக்கு வந்தேன்.

இன்ஸ்பெக்டர்.—சரி; உமது வேஷ்டியில் இரத்தம் விழுந்திருக்கிறதே எப்படி வந்தது?

கோவிந்தசாமி நாயுடு.—எனக்குத் தெரியாது.

இன்ஸ்பெக்டர்.—உமக்கும் உமது மச்சினிச்சிக்கும் நடந்த

விருத்தாந்தங்களை உமக்குச்சொல்ல இஷ்டமிருந்தால் சொல்லும். ஒருகால் அவைகள் உமக்கு விரோதமாய் உபயோகப்படுத்தப்பட்டாலும்படலாம், ஆகையால் உமக்குச்சொல்ல இஷ்டமுள்ளவைகளை மட்டும் சொல்லும்.

கோவிந்தசாமி நாயுடு.—கோகிலாம்பாளிடம் எனக்கு அவசரமாய் இருபதாயிரம் ரூபாய் வேண்டுமென்று கேட்டேன். எனக்கிருந்த பிதுரார்ஜ்ஜிதசொத்தாகிய ரூபாய் முப்பதாயிரம் எனது மாமனும், அவள் தகப்பனுமாகிய சாரங்கபாணி நாயுடு என் பேருக்கு எழுதிவைத்த ரூபாய் இருபத்தையாயிரம் என்னவாயிற்றென்று கேட்டாள். தெரியாத்தனத்தினால் துஷ்ட சிநேகிதர்களுடன் கூடி என் ஆஸ்தி பூராவையும் இழந்துவிட்டதோடு இருபதினாயிரம் ரூபாய்க்குக் கடனாகி என்பேரில் வாரண்ட் பிறந்திருப்பதால் எப்படியாவது பெரிய மனது பண்ணி அத்தொகையைக் கொடுக்கவேண்டுமென்று கெஞ்சிக்கேட்டேன். சிலவருஷங்களில் எத்தனையோ ஆயிரம் ரூபாய்களை விரயப்படுத்திய எனக்கு ஒத்தாசை செய்ய அவளுக்கு இஷ்டமில்லையென்றும் அவள் உயிருடனிருக்கும் வரையில் ஒரு காசுகூட நான் எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லையென்று அவளுக்குப்பின் அவளுக்கு இஷ்டமிருந்தால் எனக்கு அவள் சொத்தைக் கொடுப்பதாயும் சொல்லிவிட்டு அந்த சமயத்தில் தனக்கு அவசரமான வேறு வேலையிருப்பதால் உடனே வெளியே போகும்படி என்னைத் துரத்தி விட்டாள். இதுதான் எனக்குத் தெரியும். நான் அவள் சொன்னபடி போய்விட்டேன்.

இன்ஸ்பெக்டர்.—எந்த வழியாய்ப் போனீர்?

கோவிந்தசாமி நாயுடு.—முன் வாசல் வழியாய்த் தான் போனேன்.

இன்ஸ்பெக்டர்.—அப்போது உம்மையாராவது பார்த்தார்களா? வாசல்காப்போன் என்ன பண்ணிக்கொண்டிருந்தான்?

கோவிந்தசாமி நாயுடு.—அவள் இவ்வளவு சொத்தை வைத்திருந்தும் நான் ஆபத்திலிருந்தும் அவள் என் சொந்த பந்துவாயிருந்தும் ஒத்தாசை செய்ய மறுதலித்து விட்டாளல்லவாவென்ற வருத்தத்துடன் நான் போனதால் எதிரில்யார் வந்தார்களென்றும் வாசல்காப்போன் என்ன செய்துகொண்டிருந்தானென்றும் நான் எங்கெங்கு சென்றேனென்றும் என்ன செய்தேனென்றும் எனக்குத் தெரியாது. ஹோட்டலுக்குப் போனதுதான் எனக்குத் தெரியும். வேறொன்றும் தெரியாது.

என்று சொன்னார். போலீஸ் கமிஷனர் பக்கத்தில் நின்று கொண்டிருந்தவர் எழுதிக்கொடுத்த சீட்டை அவர் இன்ஸ்பெக்ட ரிடம் கொடுத்தார். இன்ஸ்பெக்டர் வாசித்துப் பார்த்துவிட்டு அங்கு விசாரணைக்காக சேர்ந்திருந்த ஒன்பது கனவான்களுடன் கலந்து பேசி இக்கேஸில் முக்கிய சாக்ஷியாகிய ஜீவானந்தத்தைக் கண்டுபிடிப்பதற்காகவும் வேறு சில முக்கியமான விஷயங்களைக் கண்டுபிடிப்பதற்கும் இரண்டு வாரம் அக்கேஸைத் தள்ளிவைத் திருப்பதாயும் அதுவரையில் இப்போது அநுமானத்திலிருக்கிற பாரங்குசநாயுடுவையும் கோவிந்தசாமி நாயுடுவையும் கைதிகளா யிருக்கும்படியும் ஜாமீனிக்கு பிரேரகங்களை அடக்கஞ்செய்ய உத்தரவு கொடுத்துவிட்டார்கள்.

இவ்வளவு கலவரங்களும், கோர்ட்களும், போலீஸாருக்கு அதிகமான வேலைகளும் உண்டானதற்கு, சென்னை சரசவிநோத சிருங்கார சபாரஞ்சித ஜெகன்மோகன ஹிந்து பாலிகா நாடகக் கம்பெனியானது சிங்கப்பூருக்கு வந்ததே காரணமாகும். ஒரு ஊருக்கு ஒரு நாடகக் கம்பெனி வருமானால் அந்த ஊரில் வெகு துரிதத்திற்குமேல் சண்டைகள் உண்டாகிவிடுகின்றன. சட்டக்கார புருஷர்களாகிய வக்கீல்களுக்கும் நல்ல லாபம் கிடைக்கின்றது. கோர்ட்டுகளுக்கும் போதுமான வேலைகளும் ஏற்படுகின்றன. முற் காலத்திய நாடகங்களின் கௌரவம் ஒருவாறு தலைகாணாமற்போய் விட்டதானாலும் தற்காலத்திய அடாவடி நாடகக் கம்பெனிகளுக்குத் தாழ்வு கிடையாது. எத்தனையோ நல்ல புண்ய சரித்ரங்கள் இக்கம் பெனிகளிடம் அகப்பட்டுக் கொண்டு பாடாதபாடு படுகின்றன. புதிய நாகரீக ஏற்பாட்டில் டிராமா (Drama) என்னும் நாடகமுறை ஒன்று. இந்தவித நாடகமானது. பிரதமத்தில் தென்னிந்தியாவில் சுமார் 40-வருஷங்களுக்கு முன்பு பூனாவிலிருந்து தஞ்சாவூர் அரண் மனைக்கு வந்து நடத்ததாகவும் அதை ம-ா-ா-ஸ்ரீ. கோவிந்தசாமி ராவ் என்பவர் தமிழில் நடத்த முயற்சித்துத் தாமே தலைமையா யிருந்து நடத்தினார். இதன் பிறகுதான் பல கம்பெனிகளும் உற் பத்தியாயின வென்று சொல்லப்படுகிறது.

தமிழ் நாடகத்தை ஆதியில் தென்னிந்தியாவில் ஆரம்பம் செய்தவர்களின் நோக்கமும் அவர்களின் காரியங்களும் நன்றா யிருந்ததானாலும், பின்னாடிகளில் துன்மார்க்கர்களின் கலப்பு அதிக மாகி, கொஞ்சம் "பார்ஸி" உள்ளவர்களெல்லாம் நடிகர்களாகத் தோன்றிவிட்டதால் தமிழ் நாடகக் கம்பெனிகளின் கௌரவமே

போய்விட்டது. நாடகத்தி விருப்பவர்களுக்கு, குடும்பஸ்தர்கள் தங்கள் பெண்களைக் கொடுத்து மணம் செய்விக்கப் பின்வாங்குகிறார்களாதலாலும், அப்படி மணம் செய்து தருவதற்கே அவர்கள் ஒப்பாதிருக்கிறபடியாலும் நாடகத்திற் சேர்ந்தவர்களுக்கு விவாகம் என்பது விவாதத்தில் வந்துமுடிந்து, அவர்கள் தாசி வேசிகளோடும், உபநாயகிகளோடுமே கண்டபடியெல்லாம் காலங் கழிப்பவர்களாக முடிகிறபடியால், நாடகக் கம்பெனிகளால் விபசார விருத்தியாகும் மார்க்கங்கள் விசேஷமாயிருக்கின்றன. இப்படி நடிகர்கள் அன்னியமாதர்களை விரும்பியும், குலஸ்திரீகளிலும் வெகுபேரை மயக்கிக் கெடுத்தும் வருகிறார்களானதால் ஒரு ஊருக்கு நாடகக்கம்பெனி வந்துவிட்டது என்றுதெரிந்தவுடனே, அவ்வூரிலேயே சமாதானம், கற்பு, நல்லொழுக்கம் இவற்றிற்கெல்லாம் நடுக்கம்தோன்றிவிடுகிறது. மேலும் பிரதிநாடகத்திற்குத் தவறாமல் விலைமகளிர் சென்றவாறிருக்கின்றனர். எதற்காகவெனில் தங்களுடைய கிராக்கிக்காகத்தான், எவரையேனும் தமது வலையில் வீழ்த்தித் தங்களின் காலக்ஷேபம் நடத்துவதற்காகத்தான். விலைமகளிர்தான் இவ்வாறெனிலோ, குலமகளிரும் செல்கின்றனர். வீட்டிற்குள் அடுப்புக்கரிபடிந்த உடையுடனிருந்தாலும் வெளிப்புறப்படும்போது பிரத்தியேக விசேஷ அலங்காரம் செய்துகொள்வது மாமூலானதால் இந்தசிங்கார சோபிதத்திலே, குலமகளென்றும் விலைமகளென்றும் பேதம் கண்டுபிடிக்கமுடியாமற் போகின்றது. வீட்டிற்குத்தெரியாமல் நாடகக்காரருடன் ஓடிய குலஸ்திரீகளும் பலர். அதிக தூரத்திற்குப் போவானேன்; நமது பாக்கியரத்தினத்தின் சரித்திரம் தெரிந்தவர்களுக்கு விஸ்தரிக்கத் தேவையில்லையல்லவா? ஐயோ பாவம்! அவள் பிறந்த அருமையென்ன, வளர்ந்த உன்னதமென்ன, படித்த படிப்பென்ன, அவளுடைய அலங்காரமென்ன, லாவண்ய சோபிதமென்ன, இவ்வளவையும் பாழாக்கியது நாடகமல்லவோ? பாழும் நாடகத்தாலல்லவோ அவள் தனதுதந்தையை மறந்து, பிறந்த ஊரையுந் துறந்து குடும்பத்தினின்றும் பிரிந்து கடைசியாக இந்த சிங்கப்பூர் தீவில், ஆருமற்ற அநாதையாகக் கொலையுண்டு இறக்க நேர்ந்தது. ஸகோதரிகளே! நாடகம் பார்க்கச் செல்வதிலுள்ள துன்பங்களைக் கண்டீர்களா? இனியாகிலும் புத்தி பெறுங்கள் ஸகோதரர்களே? நீங்களும் இதைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நவீன நாகரீகம் கற்றுக் கொண்டு, சாமியேது மண்ணேது என்று சொல்லிவிட்டு, உங்கள்

ஸ்திரீகளை ஆஸ்பத்திரிகளுக்குக்கூட அனுப்பாமல் நிறுத்திக்கொள்கிற நீங்கள் உங்களுடைய தர்மபத்தினிகளை வெகு உல்லாசமாக நாடகங்களுக்கு அழைத்துப் போவதுமட்டும் ஒப்பத் தகுந்ததாமா? அது நன்றாயிருக்கின்றதா; நாடகம் பார்க்க விருப்ப மிருந்தால் சென்னை சுகுண விலாச சபை, பல்லாரி சரசவிநோதினி சபை போன்ற உத்தமபுருஷர்களின் ஸ்தாபனங்கட்குச் சென்று காட்சிகளைப் பார்ப்பது சிறந்ததாகும். அவ்வாறன்றி மூடர்களும், ஓயாக் குடியர்களும், வேசிக் கள்வர்களும், அற்பர்களும், வேசிகளும் சேர்ந்து நடத்துகின்ற நாடகங்களைக் காண்பதிலும் விசனகரமான காரியம் வேறொன்றில்லை. இதில் புருஷன் தவறினால் பிராயசித்தமுண்டு. ஸ்திரீகள் தவறினால் பிராயச்சித்தமில்லையென்ற கொள்கையுடைய நம்மவர்கள், அதற்குத் தகுந்த விதமாய் நாடக அமைப்பைத் திருத்திக் கொள்ளவேண்டியது முக்கியம். பாக்கியாத்மத்தின் கதியைப்பற்றிச் சிந்திக்கும் குலஸ்திரீகள் அதனால் சிறந்த படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளக் கூடுமென்று நம்புகிறோம்.

ஆறாம் அத்தியாயம்

கொலை செய்தது யார்?

முந்தின அத்தியாயத்திற் சொன்ன விசாரணை முடிந்தவுடனே போலீஸ் கமிஷனர் துரையவர்களும் இன்ஸ்பெக்டர் டான் துரையவர்களும் ஆபீஸுக்குப்போக உத்தேசித்துப் புறப்படும்போது தன்னுடன் கூட வந்திருந்த கோவிந்தன் எங்கேயென்று கமிஷனர் துரை கேட்டார். அதற்கு இன்ஸ்பெக்டர் டான் துரை கமிஷனர் துரையவர்களோடுகூட வந்தது இன்னுரென்றே தான் பார்க்காததால் தனக்கு ஒன்றுந் தெரியாதென்று சொல்லிவிட்டார். அவ்விடத்தில் காவலிருந்த ஜவானைப்பார்த்து யாராவது தன்னைத்தேடி வந்தால் ஆபீஸுக்கு வரும்படி சொல்லிவிட்டு கமிஷனர் துரையவர்கள் இன்ஸ்பெக்டரை அழைத்துக்கொண்டு ஆபீஸுக்குச் சென்றார்.

இவர்கள் போன அரைமணி நேரத்திற்கப்பால் கோவிந்தன் ஆபீஸுக்கு வந்தார். உடனே கமிஷனர் துரையவர்க்ள் கோவிந்தனை அழைத்துத் தன் சமீபத்தில் உட்கார்ந்துக் கொண்டு, போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து கோவிந்தனை சுட்டிக்காட்டி,

"இக்கனவா னிருக்கிறாரென்று யாதொரு வித்யாசமும் பாராட்டாமல் இக்கொலைகள் விஷயமான தங்களுடைய உண்மையான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன்." என்று சொன்னார்.

இன்ஸ்பெக்டர்.—இக்கொலைகளை இன்னார்தான் செய்ததாக என்று திட்டமாய்க் கூற முடியாவிட்டாலும், நானே பின்னால் சொல்லப்போகும் சாக்ஷியங்களைக்கொண்டு இப்போது கைதியாக்கியிருக்கும் பராங்குச நாயுடாவது அல்லது கோவிந்தசாமி நாயுடுவாவது தான் செய்திருக்கவேண்டுமென்று தீர்மானமாய் நம்புகிறேன். நான் சொல்லும் சாக்ஷியங்களைத் தாங்களும் கவனிப்பீர்களாகில், தாங்களும் வேறு விதமான தீர்மானத்திற்கு வருவது சாத்தியமாகாது. முதலில் பராங்குச நாயுடவர்கள் பேரில் சந்தேகப் படுவதற்கேதுவாகிய காரணங்களைச் சொல்லுகிறேன். (1) கொலை நடந்த அன்று இராத்திரி ஏழே முக்கால் மணிக்கு பராங்குச நாயுடு கோகிலாம்பாள் வீட்டிற்குச் சென்றதாகவும், தன்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளினதைப்போல் வெளியே போகச்சொன்னாளென்றும் பராங்குச நாயுடுவே கூறினார். அதற்குக்காரணம் என்னவாயிருக்கலாமென்று கேட்டபோது, தன்னைப்போகச்சொல்லிவிட்டு யாரோ ஒருவருடைய வரவை எதிர்பார்த்திருந்தாளென்றும் சொன்னார். (2) சுமார் எட்டுமணி நேரத்தில் கோகிலாம்பாளுடன் பேசியது அநேகமாய் அவராய்த் தானிருக்கலாமென்று காவற்கார நடேசன் சொன்னான். (3) பின்பக்கக் கதவின் சாவி இவரிடம் எப்போதும் இருந்திருக்கும்போது ஒருகால் பின் பக்கக் கதவு திறந்திருக்குமென்று நினைத்துச் சென்றேனென்று பொய் சாக்ஷி சொல்லக்காரணமில்லை. (4) அப்பால் அச்சாவியை ஒருவருக்குந்தெரியாமல் இராத்திரி போகும்போது தூரத்தில் எறிந்துவிட்டார். (5) எல்லாவற்றிற்கும் மேல் கோகிலாம்பாளைக் கொலைசெய்த கட்டாரி பராங்குச நாயுடுவுடையது தான் என்று ருஜுவாயிற்று. (6) பராங்குச நாயுடவர்கள் கோகிலாம்பாளிடம் ஏழே முக்கால் மணிக்குப் பேசினதாக ஒத்துக்கொள்ளுகிறார். ஒன்பதடித்து இருபது நிமிஷத்திற்கு 1½-மணி நேரத்திற்கு முன்னால் கொலைசெய்யப் பட்டிருக்கவேண்டுமென்று டாக்டர் நஞ்சப்பையர் சொல்லுகிறார். ஆகையால் ஏழு அடித்து ஐம்பது நிமிஷத்திற்குக் கொலை நடந்திருக்கவேண்டும். ஆகவே பராங்குச நாயுடவர்கள் போனதாகச் சொல்லும் நேரத்திற்கு ஐந்து நிமிஷங்களுக்குப் பின்னால் கொலை

டைந்ததாகத் தெரிகிறது. இவ்வளவு காரணங்களிருப்பதால் இவர் பேரில் பூராச சந்தேக மிருக்கிறது. இப்போது கோவிந்தசாமி நாயுடுவின் பேரில் ஏற்பட்ட சந்தேகத்திற்குக் காரணங்களைச் சொல்லுகிறேன். (1) கோகிலாம்பாளிடம் பேசப்போன கோவிந்தசாமி நாயுடு வெளியே சென்றதை எவரும் பார்க்கவில்லை. (2) கோவிந்தசாமி நாயுடுவின் துணிகளின் மீது இரத்தம் எப்படி வந்ததென்று அவரால் காரணம் சொல்ல முடியவில்லை. (3) தனக்கிருந்த ஆஸ்தி பூராவும் செலவழித்து விட்டதாகவும் இருபதினாயிரம் ரூபாய்க்கு தன் பேரில் வாரண்டு வந்திருப்பதாகவும் அந்த வாரண்டை ரத்து செய்வதற்காகவாவது இருபதாயிரம் ரூபாய் கொடுக்கும்படி கோகிலாம்பாளை அவர் கெஞ்சிக் கேட்டபோது "இப்போது ஒரு காசு கூட கொடுக்கமாட்டேன். எனக்கு இஷ்டமிருந்தால் எனக்குப் பின்னால் கொடுப்பேனே தவிர இப்போது கொடுக்கவே மாட்டேன்" என்று நிர்ணயமாய் கோகிலாம்பாள் சொல்லிவிட்டதாகவும் கோவிந்தசாமி நாயுடுவே கூறியிருக்கிறார். ஆகையால் அவர்பேரிலும் சந்தேகம் ஏற்படுகிறது.

இப்போது ஜீவாநந்தத்திற்கு விரோதமான சாக்ஷியம் என்னவிருக்கிறதென்பதைச் சொல்லுகிறேன். முத்தியால் நாயுடு சாக்ஷியத்திலிருந்து "உன்னுடன் கூடப்பிறந்தவளிட நான் பிராணனையாவது விட்டு விடுவேன்; அல்லது வேண்டுமென்று நீ இவ்வளவு கர்வம் செய்வதற்காக உன்னைக் கண்டதுண்டமாய் வெட்டிக் கொன்றாலும் தோஷமில்லை" என்று ஜீவாநந்தம் பயமுறுத்தினதாகச் சொல்லுகிறார். இப்படிப் பயமுறுத்தின விஷயமொன்றும் அவள் காணாமல் போயிருக்கும் விஷயமொன்றும் தவிர மற்றப்படி அவன் வேறு எந்தவிதமான சாக்ஷியமும் கிடையாது. ஆகையால் அவனுக்கும் இக்கொலைகளுக்கும் யாதொரு விதமான சம்பந்தமும் இல்லையென்றே நான் நினைக்கிறேன்" என்று இன்ஸ்பெக்டர் சொல்லி முடித்தார்.

அப்பொழுது கோவிந்தன் போலீஸ் இன்ஸ்பெக்டரை நோக்கி "எனக்கும் இக் கொலைப் பற்றிய விஷயங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையானாலும் நான் தாங்கள் சொல்லி இப்போது கேட்டவரையில் ஏற்பட்ட சந்தேகங்களைக் குறித்துக் கேட்கிறேன். பாலகிருஷ்ண நாயுடுதான் கொலை செய்திருப்பாரென்பதற்குப் போதிய காரணங்களை சொன்னீர்கள். ஆனால் இவளைக் கொன்றதால் பாலகிருஷ்ணநாயுடு என்னவிதமான அநுகூல

மடைந்தார்? அல்லது அவளைக் கொல்லுவதற்கு அவருக்கு ஏற்பட்ட காரணம் அல்லது நோக்கமென்ன? என்று தயவு செய்து சொல்லுங்கள்" என்று சொன்னார்.

இன்ஸ்பெக்டர்.—பாராங்குஷ நாயுடுவை வெளியே போகச் சொல்லிவிட்டு வேறுயாருடைய வரவையோ எதிர்ப்பார்த்திருக்க வேண்டும் என்று அவரே சொன்னதால் நம்மிடம் மகா பதிவிரதை போல் நடித்துவிட்டு வேறு யாரையோ விரும்புகிறாளென்ற பொறாமையின்பேரில் அவளைக் கொலை செய்திருப்பாரென்று நினைக்கிறேன். கோவிந்தசாமி நாயுடுவுக்கோ கோகிலாம்பாள் இறந்ததால் அவளுடைய ஏராளமான ஐஸ்வரியங்கள் அவருக்கே சேரும். மேலும் "எனக்குப்பின்னால் இஷ்டமிருந்தால் கொடுப்பேன்" என்று கோகிலாம்பாள் அவரிடம் சொன்னதாலும் தனக்கு உடனே ரூபாய்கள் அவசியமாய் வேண்டியதிருந்ததாலும் ஒருகால் அவளுக்கு இஷ்டமில்லாவிட்டால் அவளுடைய சொத்தை யெல்லாம் வேறே யாருக்காவது உயில் எழுதிவைத்து விடுவாளென்ற பயத்தாலும் அவர் அவளைக்கொலைசெய்திருப்பாரென்று நினைக்கிறேன்.

கோவிந்தன்.—சரி; கோகிலாம்பாளைக் கொன்றதற்குத்தான் இக்காரணங்களைச் சொல்லி விட்டீர்கள். கோகிலாம்பாள் வேலைக்காரியாகிய சொர்ணம்மாளைக் கொல்லுவதற்குக் காரணமென்ன? தாங்கள் குற்றஞ் சாட்டியிருக்கும் இருவர்களில் எவராவது கோகிலாம்பாளைக் கொலைசெய்திருந்தால் அதே சமயத்தில் சொர்ணம்மாளும் விஷம் சாப்பிட்டு இறந்திருப்பதாகத் தெரிகிறதாலும் அவளுக்கு விஷம் கொடுத்ததும் இவர்கள் இருவரில் ஒருவரா அல்லது வேறு ஆசாமியா? இவர்கள் இருவரும் கொடுக்கவில்லையென்று பின்னால் சொல்லும் காரணங்களைக்கொண்டு தீர்மானிக்கலாம். எப்படியெனில் தாங்கள் சொல்லியபடி பாராங்குஷநாயுடுவுக்குக் கோகிலாம்பாளின்பேரில் அவள் கொலைசெய்யப்பட்ட அன்றையசாயங்காலம் ஏழேமுக்கால் மணிக்குத்தான் பொறாமை ஏற்பட்டிருக்க வேண்டும். காவற்கார நடேசனின் வாக்குமூலத்திலிருந்து தள்ளாக கிழவைத்தியர் சாயங்காலமே சொர்ணம்மாளுக்கு விஷம் கொடுத்ததாக ஏற்படுகிறது. ஆகையால், விஷம் கொடுத்தது பாராங்குஷ நாயுடுவாய் இருக்கமாட்டார். இவ்வைத்தியர் அநேக நாட்களாய் வந்து சொர்ணம்மாளிடம் பேசிப்போவதாக நடேசன் சொன்னதாலும், கோவிந்தசாமிநாயுடு கொலைநடந்த அன்றுதான் இவ்விடம் வந்திருப்பதாகத் தெரிகிறதாலும் விஷம் கொடுத்தது

அவராயும் இருக்க முடியாது. ஆகையால் இதற்கு என்ன சமாதானம் சொல்லுகிறீர்கள்.

இன்ஸ்பெக்டர்.—சொர்ணத்தின் விரோதியான யாரோ ஒருவர் அவளுக்கு விஷம் கொடுத்திருக்கலாம். பராங்குச நாயுடுவாவது கோவிந்தசாமி நாயுடுவாவது கோகிலாம்பாளைக் கொலைசெய்திருக்கலாம். ஆகையால் கோகிலாம்பாளைக் கொலைசெய்ததற்கும் சொர்ணம்மாளைக் கொலைசெய்ததற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்றே நினைக்கிறேன்.

கோவிந்தன்.—இரண்டு கொலைகளும் ஏககாலத்தில் நடந்திருக்கிறதே; ஒன்றுக்கொன்று சொந்தமில்லாவிட்டால் ஏககாலத்தில் எப்படி நடந்தேறியிருக்கும்?

இன்ஸ்பெக்டர்.—"குருவி உட்காரப் பனம்பழம் விழ" என்பதைப்போல் இரண்டு சமயமும் தற்செயலாக ஒத்துக்கொண்டதென்றே நினைக்கிறேன்.

என்று சொன்னவுடனே கோவிந்தன் ஒன்றும் பேசவில்லை. உடனே கமிஷனர் துரையவர்கள் இன்ஸ்பெக்டருக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு அவர் போனபின் கோவிந்தனைப்பார்த்து அவருடைய உண்மையான அபிப்பிராய மென்னவென்றுகேட்டார். அவர் நிர்ணயமாய்த் தெரிந்துகொள்ளாமல் தன்னால் ஒன்றும் சொல்லமுடியாதென்றும் தான் சொல்லுகிறபடி செய்வதற்கேற்ற இரண்டு ஆசாமிகள் வேண்டுமென்றும், அவர்கள் போலீஸ்காரரா யிருக்கக்கூடாதென்றும் நம்பிக்கையுள்ளவர்களா யிருக்கவேண்டுமென்றும் சொன்னார். மேலும் தனக்கும் இக்கேசுக்கும் யாதொரு சம்பந்தமிருப்பதாக வேறு ஒருவருக்கும் தெரியக்கூடாதாகலால் தான் அன்றைமுதல் அடிக்கடி கமிஷனர் ஆபீசுக்கு வரமாட்டாரென்றும் கமிஷனர் தெரிக்கும் இரண்டு ஆசாமிகளைத் தானிருக்கும் ஜாகைக்கு அனுப்பும்படியும் சொல்லிவிட்டுக் கமிஷனரிடம் விடைபெற்றுக்கொண்டு கோவிந்தன் போய்விட்டார்.

ஏழாவது அத்தியாயம்

பிரிவாற்றாமை

கமிஷனர் துரையவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு வந்த கோவிந்தன் நேராக மாடபுரம் ஜமீன்தாராகிய கிருஷ்ணசாமி நாயுடுவர்கள் இருக்கும் ஜாகைக்குச் சென்றார். இவர்போனபோது

ஜமீன்தாரவர்கள் மிகுதியான சோர்வும விசனமுமான முகத்துடன் மாடியில் அங்குமிங்கும் நடந்து திரிந்துகொண்டிருந்தார். கோவிந்தனைக் கண்டவுடன் தன் குலதெய்வத்தைக் கண்டவர்போல் ஓடிவந்து நேற்றைய இராத்திரி முதல் தங்கள் கடிதம் வரும்வரையில் நான் தங்களைத்தேடி யலையாத இடம் பாக்கிகிடையாது. என்னை வெளியேபோக வேண்டாமென்றும் இவ்விடத்திலேயே இருக்கும்படிக்கும் எழுதிய தங்கள் கடிதத்தைக் கண்டது முதல் இதுவரையில் ஒவ்வொரு விநாடியும் தாங்கள் வருவீர்களென்றே எதிர்பார்த்துக்கொண் டிருந்தேன்.

கோவிந்தன்.—ஐயா ! நான் நேற்றுமத்தியானம்சாப்பிட்டது. அதுமுதல் இதுவரையில் ஒன்றும்சாப்பிடவில்லை. எனக்கு அதிகப் பசியாயிருக்கிறது. ஆகையால் நாம் சாப்பிட்டபின் சகல விஷயங்களையும் பேசிக்கொள்வோம். அல்லது சாப்பிடும்போதாகிலும் பேசுவோம் தயவுசெய்து துரிதமாய் ஸ்நானம்முடித்துவாருங்கள்.

கிருஷ்ணசாமி நாயுடு.—எனக்குப்பசியில்லை. தங்களுக்குசாப்பாடு வைக்கச் சொல்லுகிறேன் தயவு செய்து சாப்பிட்டுவிட்டு வாருங்கள். யாரடா அடே செல்லா !

கோவிந்தன்.--தாங்கள்காலையிலெழுந்து இதுவரையில்பல்கூடதுலக்கவில்லையென்று நன்றாகத்தெரிகிறது. எப்போதும் காலையில் காபிபலகாரமும், பத்துமணிக்கு சாப்பாடும், இரண்டுமணிக்கு பலகாரமுங்காபியும், மாலை ஐந்துமணிக்குத் தேத்தண்ணீரும் சாப்பிட்டிருப்பவர்கள் இதுவரையில் ஒன்றும சாப்பிடாமல் இருக்கும்போது தாங்கள் பசியில்லையென்று சொல்வது நம்பக்கூடாத விஷயம். ஆகையால் ஜல்தியாய்ஸ்நானம் பண்ணிவிட்டுவந்தால் சாப்பிடுவோம். இல்லாவிட்டால் எனக்கும் சாப்பாடு வேண்டாம். பட்டினியா யிருக்கும்போது கஷ்டமான விஷயங்களை யோசித்து யூகித்தறிய என்னால் முடியாதென்பது தங்களுக்குத்தெரியும். நான் ஒன்று சொல்லிவிட்டால் அதினின்று தவறிநடக்கமாட்டேனென்பதும் தங்களுக்குத்தெரியும். ஆகையால் தாங்கள்சாப்பிடாதவரையில் நானும் சாப்பிடப்போவதில்லை, என்னால் சாப்பிடாமல் வேலை செய்யவும்சாத்தியப்படாது. ஆகையால்தாங்கள் சாப்பிடாமலிருக்கும்வரையில் தங்களுக்கு அவசரமாய்ப் பார்க்கவேண்டு மென்று அபிப்பிராயமிருக்கும் வேலை நடக்கமாட்டாது.

என்று சொல்லிவிட்டு மௌனமாயிருந்தார். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கோவிந்தனுடைய சுபாவம் நன்குணர்ந்தவராத

லால் இனிதன்காரியம் நடக்கவேண்டுமானால் அவருடன் சாப்பிட்டுத்தான் தீரவேண்டுமென்று நினைத்துக்கொண்டு தன்வேலைக்காரனைக்கூப்பிட்டு ஸ்நானத்திற்குத் தண்ணீர் தயார்செய்யச் சொல்லி ஸ்நானஞ்செய்து கோவிந்தனும் அவருமாகச் சாப்பிட்டார்கள். சாப்பிட்டு இருவரும் ஏகாந்தமாய் உட்கார்ந்தபின் கோவிந்தன் என்னசமாச்சாரமென்று கேட்டார்.

கிருஷ்ணசாமி நாயுடு.—நேற்றையதினம் பகல் பன்னிரண்டு மணிக்கு வழக்கப்பிரகாரம் நான் ஜ்வாகாந்தத்தைப் பார்க்கப்போயிருந்தேன். அப்போதவள் நேற்றைய இராத்திரி சத்தியபாமா வேஷம் தரிப்பதற்குண்டான நகைகளையும் உடுப்புகளையும் அணிந்து அவைகள் சரியாயிருக்கின்றனவாவென்று பார்த்துக்கொண்டிருந்தாள். அச்சமயத்தில் தான் நான் அங்கு சென்றேன். அவளைப் பார்த்தமாத்திரத்தில் எனக்குண்டான சந்தோஷத்திற்கும் ஆச்சரியத்திற்கும் அளவேயில்லை. ஏனென்றால் இயற்கையிலேயே மிகவும் ரூபலாவண்யசௌந்தரியையாகிய அவள் பின்னும் விசேஷமாக அலங்கரித்துக்கொண்டிருந்ததில் அவளோர் தேவஸ்திரீ போலத் தோற்றினாள். அப்போதிவளைப்பார்த்து இவ்வளவு விசேஷ அலங்காரங்கள் செய்துகொள்ளவேண்டிய காரணமென்னவென்று கேட்டேன். தான் அவ்வூரில் அடைந்துள்ள பிரக்யாதியைக்கண்டு கோகிலாம்பாள் பொறாமையுற்று விசேஷமான அலங்காரங்களை செய்துகொண்டு தனக்குப் போட்டியாக ஆடித் தான் அதிக சாமர்த்தியசாலியென்று ரூபிக்கத் தீர்மானித்திருப்பதாகவும் அதற்கென்றே அவள் விசேஷத் திரவியம் செலவழித்து விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் வாங்கியிருப்பதாகவும் தனக்குத் தெரியவந்ததால், தானும் தன்னாலேகூடியவரையில் அலங்காரஞ்செய்துகொண்டு தான் அதுவரையில் அடைந்திருக்கும் பிரக்யாதியைநிலைநிறுத்தத் தீர்மானித்திருப்பதால் தான் தயார்செய்த ஆபரண அலங்காராதிகள் சரியாயிருக்கின்றனவா இல்லையாவென்று போட்டுப்பார்த்ததாகவும் சொன்னாள். அப்போது நான் "கோகிலாம்பாளல்ல வேறு யாராகிலும் சரி; இலட்சக்கணக்கான திரவியம்செலவழித்து நகைகளும் உடைகளும் அணிந்துவந்தாலும் உனக்கு ஈடாகமாட்டார்கள்" என்று தீர்மானமாய்ச்சொன்னேன். அதற்கவள் 'ராஜாமெச்சினவள்ரம்பை' என்னும்வழக்கச்சொல்லைப்போல அவளைநான் எப்போதும் அதிக ரூபவதியாக நினைத்துக் கொண்டிருப்பதால் என் கண்ணுக்கு அப்படித்தான் தோன்றுமென்றும் சபையோர்களால்

ல்வாதீர்மானஞ்செய்யவேண்டுமென்றும். வழக்கம்போல் அப்போதும் என்னைக்கலியாணஞ்செய்துகொள்ளும்படி வெகுவாய் நான் வேண்டிக்கொண்டேன். தன்னுடைய பெற்றோர்கள் இன்னாரென்றும்தான் இன்னஜாதியைச் சேர்ந்தவளென்றும் தெரிந்துகொள்ளுமுன் நான் அவளைக் கலியாணஞ்செய்துகொண்டு அவமானத்திற்குட்பட ஒருநாளும் சம்மதிக்க மாட்டாளென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டாள். அப்பால் சுமார் இரண்டு மணிநேரம் வரையில் அவளை அவ்வுடைகளுடனேயே இருக்கும்படி கேட்டுக்கொண்டு அவளுடன் பேசிக்கொண்டிருந்து வீடு வந்தேன். அவள் தான் பாடவேண்டிய பாட்டுகளை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டியிருக்குமாதலால் என்னை மறுபடியும் அங்கு வரவேண்டாமென்றும் நேராய் நாடகக் கொட்டகைக்கே வந்து விடும்படிக்கும் கேட்டுக்கொண்டாள். அவள் வேண்டுகோளின்படியே நான் நாடகப்பந்தலில் எனது இடத்தில் உட்கார்ந்துகொண்டு அவளைப் பார்ப்பதற்காக அதிக ஆவலுடன் காத்திருந்தேன். ஸ்டேஜ் மானேஜர் சுந்தரராவ் அவர்கள் அரங்கத்தில் வந்து கோகிலாம்பாள் ஜீவானந்தம் ஆகிய இருவரும் வாராததால் நாடகம் நடத்த முடியாதென்று சொன்னவுடனே வண்டி போட்டுக்கொண்டு ஜீவானந்தத்தின் வீட்டிற்குப்போய்ப் பார்த்தபோது வீடு பூட்டியிருந்தது. அவள் சொந்தவேலைக்காரனைக் கேட்டபோது சாயங்காலம் ஆறுமணியாகியும் புஷ்பக்காரன் புஷ்பம் கொண்டுவரவில்லையாதலால் ஜீவானந்தம்மாள் புஷ்பக்காரனிடம் தன்னை அனுப்பினதாகவும் தான் போய் புஷ்பம் வாங்கிவந்து பார்க்கையில் வீடு பூட்டியிருந்ததென்றும் அந்த அம்மாள் எங்கு சென்றார்களென்று தனக்குத்தெரியாதென்றும் சொன்னான். அப்போது முதற்கொண்டு இராத்திரியெல்லாம் அவள் போகுமிடங்களுக்குஞ் சென்று தேடியும் எங்கும் காணோம். தங்களையுங் கண்டுபிடிக்கக் கூடவில்லை. என்னசெய்வேன். இனி என் ஜீவானந்தத்தை உயிருடன் பார்ப்பேனோ என்னமோ தெரியவில்லை. கோகிலாம்பாளை அவள் கொலை செய்துவிட்டதாகப் பலர் பேசிக்கொள்வதாகக் கேட்க என் உடல் நடுங்குகின்றது. ஜீவானந்தத்தினிடம் ஒரு நிமிஷம் பேசியவர்கள் கூட அவளுடைய லக்ஷ்ய விலாஸம் பொருந்திய முகவசீகரத்திற்கடிமையாகி, தங்களுடைய பொல்லாத குணங்களையெல்லாம் விட்டொழித்து வெகு உத்தமர்களாய் மாறிப்போய்விடுவார்களென்பது உண்மை. அவளுடைய வார்த்தைக்கு வேறு போக

மாட்டார்கள். அத்தகைய புனிதவதியின் மீது இக்கொலைக்குற்றஞ் சுமத்தி தோஷாரோபணஞ் செய்வதானது பெரிய அநியாயமாயிருக்கிறது. அவளுடைய அன்பின் மிகுதிக்காக எனது உடல் பொருள் ஆவி மூன்றினையுமே அவளுக்கு அர்ப்பணம் செய்துவிட்ட நான், இப்போது அவளுடைய பிரிவாற்றாமையினால் படுஞ்சோகம், அந்த ஸ்ரீராமர்கூட சீதையைப் பிரிந்த காலையில் பட்டிருக்க மாட்டார். ஐயோ நான் என்ன செய்வேன்! அவள் என்னவானாளோ தெரியவில்லையே. அவளைக் காணாமல் ஒருநாள் போவதென்றால் ஒரு யுகமாயிருக்கிறதே. நித்தியமும் நான்கு ஐந்துமணிநேரம் அவளுடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போதே மற்றநேரம் போவது மகா கஷ்டமாயிருக்குமே! அப்படியிருக்க அவளுடைய சுந்தரமான புன்னகை பொருந்திய முகத்தைக் காணாமலும் அவளுடைய குயிலைப் பழிக்கச் செய்யும் இனிமையான குரலைக் கேளாமலும் இருப்பதென்றால் அது என்னால் முடியவே முடியாது. அவளைப் பிரிந்த நேரமுதற்கொண்டு ஒரு நிமிஷம் போவது ஒரு யுகமாக இருப்பதால் இனி என் வாணாட்கள் நீண்ட நாட்களாகவே முடியும்போலும்! ஏதேது? அவளைப் பிரிந்த இவ்வுடல் நிற்கவே நிற்காது. நேற்றிரவு முதல் இன்றையவரையில் அவளை நினைத்து என் மனம் புண்ணாயினை. ஐயோ ஜகதீசா! பாராயோ வென்றுயரமெல்லாம்!! அப்பா, கோவிந்தா! இந்த மனோவேதனையைப் பொறுக்க என்னால் இனி சாத்தியமில்லை. இதைவிட என் பிராணனை முடித்து விடுவேனென்று தோன்றுகிறது. நண்பர்களே! தாங்கள் எப்படியாவது அவளைக் கண்டுபிடித்து என்னுடன் சேர்ப்பீர்களென்ற நம்பிக்கையால் தான் இப்பிராணன் இதுவரையில் இருக்கிறது. ஆ! என் அழகிய ஜீவரத்தினமே! என் அருமைக் கண்மணியே! இனி நான் உன்னைக்காண்பதெப்போ! நான் சற்றே வருத்தத்தை யடைந்து வாடுவேனினும் அது காண நீ மனஞ்சகிக்க மாட்டாயே! அப்படியிருக்க என்னை இக்கெதிக்குள்ளாக்கிவிட்டு எங்கு சென்றாயோ! ஏ பெண்கள் சிகாமணியே! உன்னைக்கண்ட நாள் முதல் இதுவரையில் நான் உன்னை விட்டுப் பிரிந்திருக்கவில்லையே. உடலிரண்டும் உயிரொன்றுமென இதுவரையில் நாம் நிலைத்திருந்தோமே. உன்னைவிட்டுப் பிரிந்த என்னுயிரானது இன்னமிருக்கிறதே. உன் மனமென்ன கல்லோ? இரும்போ? அல்லது இரும்பினுங்கடிய இருதயம் என்னும் நவீன உலோகமோ? யானொன்றுமறிகிலேன்! யாருடைய துர்ப்போத

ணையாகிலுங் கேட்டுத்தான் நீ இப்படிச் செய்தாயோ, அல்லது உனது விரோதிகள் யாவரேனும் உன்னை ஏமாற்றி வகைமோசப் படுத்தினார்களோ. உன் மதி மழுங்கிப்போச்சுதோ. ஐயோ! நீ என்னை மறக்குங்காலமும் வந்ததோ? அல்லது ஒருக்கால் இங்கேயே மறைந்திருந்து நான் உன் மீது கொண்டிருக்கும் உள்ளன்பைச் சோதிக்கிறாயோ! என்ன செய்வேன். என்னால் நின் பிரிவைத் தாங்கக் கூடவில்லையே!

என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே கண்களிலிருந்து நீர் தாரைதாரையாய் வடிய அப்படியே சோர்ந்து மூர்ச்சித்து நாற்காலியில் சாய்ந்தார். இதுவரையில் இவர் சொல்லிய வார்த்தைகளையெல்லாம் மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த கோவிந்தன் அவர் மூர்ச்சித்து விழுந்த உடனே சட்டென்று எழுந்து குழந்தையைத் தூக்குவதைப்போல் அவரைத் தூக்கிக்கொண்டுபோய் படுக்கையில் கிடத்திவிட்டு ஒன்று மறியாதவர்போல் சுருட்டுப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

கிருஷ்ணசாமி நாயுடவர்கள் இராத்திரி 8½-மணி வரையில் சௌக்யமாய்த் தூங்கிக்கொண்டிருந்தார். அப்போது கோவிந்தன் அவரை எழுப்பஉத்தேசித்து நாற்காலியைக்கவிழ்த்துவிட்டார். நாற்காலி விழுந்த சத்தம் கேட்டவுடனே கிருஷ்ணசாமி நாயுடவர்கள் திடுக்கிட்டெழுந்து "ஏ ஜீவாநந்தம்! எங்கேபோய்விட்டாய்? இதுவரையில் என்னிடம் பேசிக்கொண்டிருந்த நீ ஒன்றும் சொல்லாமல் எங்கே மாயமாய்ப் போய்விட்டாய்" என்று சுற்றிச்சுற்றிப் பார்த்தார். அங்கே கோவிந்தன்மட்டும் சுருட்டுக்குடித்துக்கொண்டிருந்ததைப்போல் அவர் கண்ணிற்குத் தோன்றிற்றே யொழிய ஜீவாநந்தத்தைக்காணோம். உடனே கிருஷ்ணசாமி நாயுடவர்கள் கோவிந்தனைப்பார்த்து "அங்கு என்னுடன் இதுவரையில் பேசிக்கொண்டிருந்த ஜீவாநந்தம் எங்கேபோனாள்" என்று கேட்டார். கோவிந்தன் ஒன்றும்பேசாமல் மௌனமாயிருந்தார். உடனே இவருக்கு சுயபுத்திவந்து "ஓகோ! ஜீவாநந்தத்தைக் கனவில்தான் கண்டேனோ? சீச்சீ இல்லவே இல்லை. படுத்துத்தூங்கிக்கொண்டிருந்த என்னை ஜீவாநந்தம் வந்து தட்டி எழுப்பினாள். நேற்றைய முதல் என்னைப் புலம்ப வைத்துவிட்டு எங்குசென்றாய் என்று கேட்டேன். எனக்கு சந்தோஷச் செய்திக்கொண்டு வருவதற்காகத் தான் சென்றிருந்ததாகச் சொன்னாள். அப்பால் மாமூல் பிரகாரம் சுமார் மூன்று மணிநேரம் என்னுடன் பேசிக்கொண்டிருந்தா

ளோ, இறந்தாளோ? கோவிந்தா! உண்மையைச்சொல்" என்றார்.

கோவிந்தன்.—ஜீவாநந்தம் தங்களிடம் வந்து தங்களுக்கு சந்தோஷச் செய்தி கொண்டு வருவதற்காகச் சென்றிருப்பதாகச் சொல்லியபோதும் தாங்கள் மறுபடியும் அவளைக் கேட்பது சரியல்ல. தங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய நற்செய்தியைக்கொண்டு வருவதற்காகவே சென்றிருக்கிறாள். ஆகையால் தாங்கள் ஆத்திரப்படாமல் பொறுமையுடன் அவள் வரவை எதிர் பார்த்திருங்கள்.

கிருஷ்ணசாமி நாயுடு.—ஆனால் வாஸ்தவத்தில் அவள் இப்போது இங்கு வரவில்லையா? உண்மையைச் சொல்லு.

கோவிந்தன்.—ஜீவாநந்தத்தைத் தாங்கள் தூக்கத்தில் தான் கண்டு பேசினீர்கள். அவள் இங்கு வரவில்லை. ஆனால் தூக்கத்தில் சொல்லிய வார்த்தைகளாயினும் அவள் சொல்லிய வகையில் உண்மைதானென்று நான் விசாரித்தறிந்தேன்.

கிருஷ்ணசாமி நாயுடு.—கோவிந்தா! என்னைப் பரிகசிக்காதே.

கோவிந்தன்.—எப்போதாகிலும் நான் பரிகாசமாய்ப் பேசுவதைப் பார்த்திருக்கிறீர்களா!

என்று சொன்னார். உடனே கிருஷ்ணசாமி நாயுடவர்கள் முகத்திலிருந்த சந்தோஷமெல்லாம் நீங்கி பழைய விசனத்தை யடைந்தார். அப்போது கோவிந்தன் பின்வருமாறு சொன்னார்.

கோவிந்தன்.—கனவான்களே! நான் சொல்வதைச் சற்று கேளுங்கள். இந்த விஷயத்திலே ஜீவாநந்தத்திற்கும் இக்கொலைக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாதென்று சந்தேகமற நிரூபிக்கும் சாக்ஷியம் என்னிடமிருக்கிறது. மேலும் ஜீவாநந்தம் யாருடைய தீர்ப்பத்திற்குள்ளாகாமல் உபேக்ஷையாய்த்தான் போயிருக்கிறாளென்பதும் எனக்குத் தெரியும். இருந்தாலும் இப்போது அவ்விஷயங்களை நான் வெளிக்குச் சொல்லுவதால் வாஸ்தவத்தில் கொலை செய்தவர்கள் தண்டனைக்குள்ளாகாமல் தப்பிப்போக ஏதுவாயிருக்குமாதலால் அவர்களைக் கைதியாக்க வேண்டியதற்குப் போதிய சாக்ஷியம் கைக்கெட்டும்வரை அவ்விஷயத்தைக் குறித்து ஒன்றும் நான் சொல்லமாட்டேன். என்வார்த்தையில் தங்களுக்கு நம்பிக்கை யுண்டாகையால் இனி இவ்விஷயத்தைக் குறித்து என்னிடம் கேட்காமலிருக்க வேண்டுகிறேன். இப்போது மணி 8¾ ஆகிவிட்டதால் நாம் உடனே நாராயணசாமி நாயுடவர்கள் வீட்டிற்குப் போகவேண்டும். அவர்களெல்லாம் ஒன்பதுமணிக்கு சரி

யாய் வரும்படி எழுதிய சமாசாரம் தங்களுக்குத் தெரியுமல்லவா? ஆகையால் இனி கொஞ்சமாவது விசனப்படாமல் புறப்படத் தயாராகுங்கள்.

கிருஷ்ணசாமி நாயுடு.—தயவுசெய்து இந்த ஒரே கேள்விக்கு மட்டும் ஜவாபு சொல்லிவிடுங்கள். அப்பால் தங்களை நான் ஒன்றும் கேட்கவில்லை. நான் எப்போது ஜீவாநந்தத்தைப் பார்க்கமுடியும்?

கோவிந்தன்.- தங்களுக்கும் ஜீவாநந்தத்திற்கும் இருக்கும் அன்பைநோக்கினால் தாங்கள் கண்ணைமூடிக்கொண்டு நித்திரை செய்யும்போதெல்லாம் ஜீவாநந்தத்தைப் பார்க்கலாம். ஆனால் எங்கள் கண்களுக்கெல்லாம் தெரியும்படி தாங்கள் விழித்திருக்கும்போது அவளைப்பார்ப்பதற்கு சுமார் 25-தினங்களாவது செல்லும் ஆனால் 10-நாட்களில் அவளிடமிருந்து தங்களுக்கு நற்செய்தி கட்டாயமாய்வரும். இனி இவ்விஷயத்தைக் குறித்துத் தாங்கள் என்னைக்கேட்டால் எனக்கு ஒன்றுமே தெரியாது என்பதாகத்தான் பதில் சொல்லவேண்டியதாக விருக்கும்.

என்று கூறினார். கிருஷ்ணசாமி நாயுடவர்கள் கோவிந்தன் சொன்ன வார்த்தைகளால் அதிக திருப்தியடைந்து கூடியவரையில் வருத்தத்தைவிட்டு வண்டிபோடும்படி உத்தரவளித்துத் தன் அந்தஸ்துக்கேற்ற உடைகளை யணிந்து கோவிந்தனை அழைத்துக்கொண்டு நாராயணசாமி நாயுடவர்கள் வீட்டிற்குச் சென்றார்.

எட்டாவது அத்தியாயம்

இரண்டும் எட்டுமணிக்கா?

கோடீஸ்வரப் பிரபுவாகிய நாராயணசாமி நாயுடவர்கள் அதிகமாகக் கோபத்தைக்காட்டும் முகத்துடன் அவர் பங்களாவில் ஓர் சோபாவின்பேரில் உட்கார்ந்துகொண்டு மீசையை முறுக்கிய வண்ணம் கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தார். சரியாய் மணி ஒன்பதடித்ததும் ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடவர்களும் கோவிந்தனும் அங்குவந்து சேர்ந்தார்கள். ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடவர்களை மரியாதையாய்த் தமது பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு கடுகடுத்த முகத்துடன் கோவிந்தனை ஒரு நாற்காலியில் அமரும்படிகூறி அவரைப்பார்த்து “நீர் இன்று மத்தியானம் இங்குவந்திருந்தபோது எனது ஜென்மவிரோதிகளான

சுப்பராயலு நாயுடுவையும் அவர் குமாரனை குமாரசாமி நாயுடுவையும் இங்குவரச்சொல்லி என்னைக் கடிதம் எழுதும்படி தாக்கீது கொடுத்தபோது நான் ஒருகாலும் அப்படிச்செய்ய மாட்டேனென்று மறுக்க, அப்படிச்செய்யாவிட்டால் ஒருகால் எனது ஏகபுத்திரியாகிய பத்மாவதி அநேகமாய் அந்தக்கூத்தாடி முண்டையைக் கொன்றகேசில் சம்மந்தப்படுவாளென்று பயமுறுத்தினீர். என் புத்திரியாகிய பத்மாவதிக்கும் அந்தக் கூத்தாடி முண்டையின் கொலைக்கும் என்ன சம்பந்த மிருக்கக்கூடுமென்று நான் கேட்டபோது உமக்கு அப்போது சொல்ல சாவகாசமில்லையென்றும் இராத்திரி ஒன்பதுமணிக்குவந்து சகலமும் விபரமாகக்கூறுவதாயுஞ்சொல்லி என்னை அக்கடிதம் எழுதும்படி கட்டாயப்படுத்தினீர். அப்போதும் நான் எழுதமாட்டேனென்று மறுக்க, எழுதாவிட்டால் அதனால் நேரிடும்பலனை அநுபவிக்கக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுப்போய்விட்டீர். அந்தத் தேவடியாள் முண்டையின் கொலைக்கும் என் மகளுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இருக்கமாட்டாதென்று எனக்குத் திட்டமாய்த் தெரிந்தபோதிலும் உம்முடைய அட்டஹாசத்துக்குப் பின்வாங்கி அந்தத்தடியனை சுப்பராயலுவை இங்குவரும்படியாகக் கடிதமெழுதினேன். நீர் அப்படிச்செய்யச் சொன்னதற்குப் போதுமான காரணம் காட்டாவிட்டால் உம்மையும் அந்த இரண்டு திருட்டுப்பயல்களையும் இலேசில் விடமாட்டேன்" என்று சொன்னார். அச்சமயத்தில் சுப்பராயலுநாயுடுவும் அவர் புத்திரனாகிய குமாரசாமி நாயுடுவும் அவ்விடம் வந்தார்கள். நாராயணசாமி நாயுடவர்கள் அவர்களிடம் பேசாமல் கையால் இரண்டு நாற்காலிகளைக்காட்டினார். அவர்கள் இருவரும் அதிகக் கோபமாய் அந்நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். உடனே சுப்பராயலுநாயுடு கோவிந்தனைப்பார்த்து அதிககோபத்துடன் "ஐயா! இன்றையதினம் இராத்திரி ஒன்பதேகால் மணிக்கு எங்களிருவரையும் இங்குவரும்படிக்கும் வராவிட்டால் ஓர் நாடகக்காரியின் கொலைக்கேசில் என்மகன் சம்பந்தப்படும்படி ஏற்பட்டாலும் ஏற்படலாமென்றும் எழுதியிருக்கிறீர். நீர் எழுதியவிஷயங்களுக்குப்போதிய காரணங்களில்லாவிட்டால் உம்மை இலகுவில் விடமாட்டேன். இவ்விடத்திற்கு வர எனக்குக்கொஞ்சமும் இஷ்டமில்லையாகிலும் அதை ஜல்தியாய்த் தெரிந்துகொள்ளுவதற்காகவே அதிகவெறுப்புடன் இங்குவந்தேன். இங்கு நான் இருப்பது எனக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுக்கிறதால தயவுசெய்து நீர் சொல்லுவ

தாய் வாக்களித்த விஷயங்களை உடனே தெரிவித்துவிட்டால் சீக்கிரமாய்ப் போய்விடுகிறேன் ” என்று சொன்னார்.

கோவிந்தன்.—எனது நண்பர் ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணசாமி நாயுடவர்கள் என்னை இக்கேஸ் ஸம்பந்தமான விஷயங்களைத் துலக்கும்படி வேண்டிக்கொண்டிராவிட்டால் தாங்களிருவரும் இவ்வளவு தூரம் என்னைக்கோபித்துக்கொண்டதற்குத் தங்கள் இருவருடைய போக்கின்படியே விட்டுவிட்டு என்பாட்டில் நான் போயிருப்பேன். தாங்கள் மிக்க ஐஸ்வரியவந்தர்களாயிருந்தபோதிலும் அதைப் பற்றி எனக்குக்கொஞ்சமும் அவசியமில்லை. நான் ஏழையாயினும் ஒருவரிடம் இழிவாகிய வார்த்தையைக் கேட்பதற் கிசையமாட்டேன். தாங்கள் கேட்டுக்கொண்டபடி அக்கூத்தாடி முண்டையின் கொலைக்கும் தங்கள் பெண்ணுக்குமுள்ள சம்மந்தங்களைச் சொல்லிவிட்டுப் போய்விடுகிறேன். அப்பால் தங்களுக்கிஷ்டமானவர்களைக் கொண்டு துப்புத்துலக்கிக்கொள்ளுங்கள். இப்போது தயவுசெய்து தங்கள் புத்திரியை வரவழையுங்கள்.

என்று நாராயணசாமி நாயுடவர்களைப் பார்த்துச்சொன்னார். அவர் சினந்த முகத்துடன் கடுகடுத்துக்கொண்டு “எனது புத்திரி இங்கு வந்துதான் தீரவேண்டுமோ” என்றார். அந்தம்மாள் வராவிட்டால் நான் சொல்லும் விஷயம் உண்மையென்றும் அல்லவென்றும் எப்படித் தெரியக்கூடும்? ஆகையால் அவசியம் அந்தம்மாள் வந்துதான் ஆகவேண்டுமென்று கோவிந்தன் சொன்னார். அங்கு வைத்திருந்த ஒரு மணியை அடிக்கவே ஓர் வேலைக்காரி வந்தாள். அவளிடம் தன் புத்திரியை அழைத்துவரும்படி நாராயணசாமி நாயுடு சொன்னார். அவள்போய் பத்மாவதியை அழைத்துவந்தாள். பத்மாவதியைக் கண்டதும் குமாரசாமி நாயுடவர்களின் முகம் மலர்ந்தது. அவர்மட்டும் பத்மாவதியை சந்தோஷமான முகத்துடன் பார்த்தாரேயொழிய அவள் முகம் மட்டும் விசனத்தைத்தான் காட்டிற்று. அப்போது கோவிந்தன் தன் ஜேபியிலிருந்து ஓர் படம், ஓர் கடிதம், ஓர் கைக்குட்டை ஆகிய மூன்று வஸ்துக்களையும் எடுத்து மேஜையின் பேரில் வைத்து அக்குட்டையை எடுத்து நாராயணசாமி நாயுடவர்களிடம் கொடுத்து அவருடைய மகளிடம் இது யாருடைய கைக்குட்டையென்று கேட்கும்படி சொன்னார். அவர் பத்மாவதியிடம் கொடுக்க அவள் பிரித்துப்பார்த்து தன் கைக்குட்டைதான் என்று சொன்னாள். அதை மேஜையின்பேரில் வாங்கிவைத்துக்கொண்டு அங்கு வைத்திருந்த கடிதத்தையும் படத்

தையும் குமாரசாமி நாயுடுவிடம் கொடுத்து யாருடையதென்று கேட்டார். அப்படம் தன்னுடையது தானென்றும் அப்படத்தையும் அக்கடிதத்தையும் பத்மாவதி காணாமற்போன அன்று பத்மாவதிக்குத் தான் அனுப்பினதாகவும் சொன்னார். பத்மாவதி அக்கடிதத்தையும் அப்படத்தையும் அதற்கு முன்னால் தான் பார்க்கவேயில்லையென்று திட்டமாய்ச் சொன்னாள். அப்போது கோவிந்தன் இம்மூன்று வஸ்துக்களும் கூத்தாடியாகிய கோகிலாம்பாள் கொலைசெய்யப்பட்ட இடத்தில் கிடந்தனவென்றும் போலீஸ் கமிஷனரிடம் இவ்விஷயங்களை அன்றைய காலை விசாரணையில் வெளிப்படுத்த வேண்டாமென்றும் தன்னிடத்தில் அவ்வஸ்துக்களைக் கொடுத்தால் தான் தப்புக்கண்டு பிடித்துக்கொடுப்பதாய் வாக்களித்ததின்பேரில் அவர் அப்படியே சம்மதித்து அவ்வஸ்துக்களைத் தன்னிடம் கொடுத்ததாகவும் தான் அப்படிச் செய்யாவிட்டால் அன்றைய காலை விசாரணைக்கே பத்மாவதியும் குமாரசாமி நாயுடுவும் கூப்பிடப் பட்டிருப்பார்களென்றும் அப்படிச் செய்யவிடாமல் தடுத்து இவ்விஷயங்களை இரகசியமாய்க் கேட்பதற்குத் தான் அவர்களை அங்கு கூடச்செய்ததென்றும், ஒருவரும் தன் பேரில் கோபப்பட வேண்டியதில்லையென்றும் அந்த மூன்று சாமான்களையும் தான் போலீஸ் கமிஷனரிடம் கொடுத்து விடுவதாகவும் இனி அவரவர்கள் இஷ்டப்படி செய்துகொள்ளலாமென்றும் சொல்லிவிட்டு ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடவர்களைப் பார்த்து "வாருங்கள் நாம் வீட்டிற்குச் செல்வோம்" என்று சொன்னார்.

உடனே நாராயணசாமி நாயுடுவும் சுப்பராயலு நாயுடுவும் எழுந்து வந்து கோவிந்தனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு காரிய காரணங்கள் அறியாமல் நாங்கள் கோபமாய்ப் பேசியதற்காக மன்னித்துக்கொண்டு தங்களுடைய குழந்தைகளின் பேர்கள் இக்கேஸில் சம்பந்தப்படாமல் தடுத்து வாஸ்தவமாகிய குற்றவாளியைக்கண்டு பிடிப்பதோடு இவ்வஸ்துக்கள் அங்கு எப்படிப்போயின என்ற விஷயங்களைக் கண்டறிந்து சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அப்போதும் கோவிந்தன் சம்மதிக்காதவர்போல் நடிக்கவே அவ்விருவரும் கோவிந்தனை விட்டுவிட்டு ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடவர்களைக் கொண்டு கோவிந்தனை சமாதானப்படுத்தும்படிக் கேட்டுக் கொண்டார்கள். அப்போது கோவிந்தன் நாராயணசாமி நாயுடவர்களும் சுப்பராயலு நாயு

டவர்களும் அதிக தனவந்தராகையால் தான் கேட்டுக்கொள்ளு கிறபடி நடந்து கொள்ள மாட்டார்களென்றும் அப்போது இடைஞ்சல் உண்டாகுமென்றும் தான் பிரயாசைப்பட்டும் அவர்கள் தன் சொற்படி நடவாததால் ஒருகால் தன் வேலைகளெல்லாம் வியர்த்தமாவதோடு இக்கேசைத் துப்புத்துலக்க கோவிந்தனால் முடியாமற்போய்விட்டது என்ற அபக்கியாதியும் உண்டாகுமென்றும் சொன்னார். அவர்கள் இருவரும் கோவிந்தன் சொற்படி நடப்பதாக வாக்களித்தார்கள். அப்பால் கோவிந்தன் துப்புத் துலக்குவதாய்ச் சம்மதித்து அவரவர்கள் ஆசனங்களில் உட்காரும்படி சொல்லி குமாரசாமி நாயுடுவைப்பார்த்து இக்கடிதத்தையும் படத்தையும் பத்மாவதிக்கு எப்படி அனுப்பினீரென்று கேட்டார்.

குமாரசாமி நாயுடு.—பத்மாவதி காணாமற்போன அன்று இவ்வஸ்துக்களைத் தபாலில் அனுப்பினேன்.

என்று சொன்னார். உடனே பத்மாவதியைப் பார்த்து இவ்வஸ்துக்களை நீ பார்த்ததாக உனக்கு ஞாபகம் கொஞ்சமாவது இல்லையா வென்றார். அவள் பார்க்கவேயில்லை யென்று திட்டமாய்ச் சொன்னாள். அப்பால் கோவிந்தன் குமாரசாமி நாயுடுவைப்பார்த்து இவைகள் அனுப்பும்போது வேறு கடிதங்களை யாருக்காவது அனுப்பினீரா வென்று கேட்டார். அவர் இருக்கலாம். யாராருக்கு அனுப்பினேனென்று ஞாபகமில்லையென்று சொன்னார். உடனே கோவிந்தன் பத்மாவதி திரும்பிவந்துவிட்ட விஷயத்தைப்பற்றி வெளியில் பிரஸ்தாபிக்க வேண்டாமென்றும் இன்னும் ஆராய வேண்டிய விஷயங்களை ஆராய்ந்துகொண்டு பின்னால் வருவதாகவும் சொல்லிவிட்டு குமாரசாமி நாயுடுவைமட்டும் தங்களோடு அழைத்துக்கொண்டு கோவிந்தனும் கிருஷ்ணசாமி நாயுடுவும் தங்கள் ஜாகைக்குச் சென்றார்கள். போகும்வழியில் குமாரசாமி நாயுடுவைப் பார்த்து கோவிந்தன் பின்வரும் கேள்விகளைக் கேட்டார்.

கோவிந்தன்.—தங்களுக்கும் கோகிலம்பாளுக்கும் பரஸ்பர நேசம் உண்டா ?

குமாரசாமி நாயுடு.—ஒருபோது மில்லை.

கோவிந்தன்.—அவளுடன் எப்போதாவது தாங்கள் பேசியேனு மிருப்பதுண்டா ?

குமாரசாமி நாயுடு.—இ—ல்—லை. நான் பேசியிருப்பதில்லை.

கோவிந்தன்.—சரிதான் ; தாங்கள் பேசாவிட்டால் அவள் தங்களிடம் பேசியிருக்கிறாளா ?

குமாரசாமி நாயுடு.—ஆம். ஒருநாள் அவள் என்னுடன் பேச வந்தாள். நான் மறுமொழி சொல்லாமல் வந்துவிட்டேன்.

கோவிந்தன்.—எப்போது?

குமாரசாமி நாயுடு.—ஒருநாள்.

கோவிந்தன்.—ஒருநாள் என்பது தெரியும். எந்த சந்தர்ப்பத்திலென்று தயவுசெய்து சொல்லுங்கள்.

குமாரசாமி நாயுடு.—நான் அந்தச்சந்தர்ப்பத்தைக் குறித்து வெளியிடுகிறதில்லையென்று வாக்களித்திருப்பதால் சொல்ல முடியாது.

கோவிந்தன்.—கம்பெனி தோட்டத்தில் வைத்து கோகிலாம்பாளும் ஜீவாநந்தமும் ஒருவரை யொருவர் கிட்டிக்கொண்டார்களே! அப்பொழுதா?

என்று கேட்டவுடனே குமாரசாமி நாயுடு இவருக்கு இவ்விஷயங்கள் எப்படித் தெரியுமென்று நினைத்தார்.

கோவிந்தன்.—நாயுடவர்களே! எனக்கு எப்படி இவ்விஷயங்கள் தெரிந்ததென்று ஆச்சரியப்படவேண்டாம். தமது நண்பர் பாலகிருஷ்ண நாயுடவர்கள் அன்றையதினம் நடந்த விஷயங்களையெல்லாம் இன்றைய காலை விசாரணையில் சாங்கோபாங்கமாய்ச் சொல்லிவிட்டார். அன்றைய தினம் உம்மிடம் அவள் பேசியதைத் தவிர வேறு எப்போதாவது பேசியிருக்கிறாளா?

குமாரசாமி நாயுடு.—இல்லை.

கோவிந்தன்.—பேசியது இல்லையென்று சொல்லிவிட்டீர்கள். கடிதப்போக்குவரவேனும் உண்டா?

குமாரசாமி நாயுடு.—ஆம்; மூன்று கடிதங்கள் எழுதியிருக்கிறாள். நான் ஒருதரமாவது விடை எழுதினதில்லை.

கோவிந்தன்.—தயவுசெய்து ஒவ்வொரு கடிதத்திலும் என்ன எழுதியிருந்தாளென்று விவரமாய்ச் சொல்லுங்கள்.

குமாரசாமி நாயுடு.—முதல் கடிதத்தில் தான் ஜீவாநந்தத்தினிடம் கோபமாய்ப் பேசியதற்கு ஏற்பட்ட காரணங்களைச் சொல்லுவதற்காக என்னை வரும்படி எழுதினாள். நான் அதற்குப் பிரதியுத்தரம் ஒன்றும் எழுதாமற்போகவே பதினைந்து தினங்கள் பொறுத்து, ஜீவாநந்தத்தினிடம் கோபமாய்ப் பேசிக்கொண்டிருந்தபோதுதான் அவளை நான் முதலில் பார்த்தேனாகையால் அவளைப் பற்றி நான் கெட்ட அபிப்பிராயப் பட்டிருக்கிறேனெனவும் அப்படி என்மனதில் அபிப்பிராயப் பட்டிருப்பது சரியல்லவென்றும்

தயவு செய்து சில நிமிஷங்களாவது அங்குவந்தால் அவர்மனதில் ஏற்பட்டிருக்கும் கெட்ட அபிப்பிராயத்தை அவள் மாற்ற முடியுமென்றும் அப்படி மாற்றுதவரையில் அவளுடைய மனம் ஆறுதல் அடையாதென்றும் தான் என்னை இம்சிப்பதாக நினைத்துக் கொள்ளக் கூடாதென்றும் எப்படியாவது தன் வேண்டுகோளுக்கிணங்கி வந்துபோகவேண்டுமென்றும் எழுதினாள். நேற்றையதினம் தான் ருக்மணியாக வேஷம்பூண்டு எல்லோர் முன் வருவதற்குள் என்னைக்கண்டுபேசி நான் அவள்பேரில் கொண்டிருக்கும் ஓர் விதகெட்ட அபிப்பிராயத்தை மாற்றிவிட்டபின் தான் அரங்கத்தில் போக உத்தேசித்திருப்பதால் கட்டாயமாய் என்னை அன்றையதினம் இராத்திரி எட்டுமணிக்குத் தன்வீட்டிற்கு வரும்படிக் கெஞ்சி எழுதியிருந்தாள்.

கோவிந்தன்.—அந்த சமயத்தில் தாங்கள் அங்கு சென்றிருந்தீர்களா?

குமாரசாமி நாயுடு.—இல்லை.

கோவிந்தன்.—இதென்ன ஆச்சரியமான பொருத்தமாயிருக்கிறது. அவள் கொலைசெய்யப்பட்டதும் அனேகமாய் எட்டுமணிசுமாருக்குத்தான். அதேநேரத்தில் தான் தங்களையும் அவள் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறாள். உங்களை அவ்வளவு தூரம் வற்புறுத்தி அவள் கடிதம் எழுதியிருப்பதால் எப்படியும்நீங்கள்வருவீர்களென்றே அவள் நம்பியிருந்தல்கூடும். அவள் கொலையுண்டதும் எட்டுமணிக்கு; நீங்கள் அவளைச் சந்திக்கவேண்டியதும் எட்டுமணிக்கு; இதென்ன இரண்டும் எட்டுமணிக்கா? இவ்விவரங்கள் போலீஸாருக்கு எட்டுமானால் கேஸ் வெகுசுலபமாய்த் துப்புதுலங்கிவிட்டதாகக்கொண்டு உங்களைவுடனே சிறைப்படுத்திவிடுவார்கள். வாஸ்தவமான குற்றவாளி நீங்கள்தான் என்பதாக உலகமும் நம்பிவிடும். மேலும் கோகிலாம்பாளிடம் நீங்கள் இத்தனை தூரம் விரோதம் பாராட்டும்படியாய் அவளுடைய எதிரியாகிய ஜீவரத்தினம் உங்களைத் தூண்டிவிட்டிருக்கலாமென்று சொல்வதற்கும்போதுமான ஆதாரம் ஏற்படும்படியாக நீங்கள்ஜீவரத்தினத்தின் அன்பராகவும் இருக்கிறீர்கள். முதலில் நம்பெனித் தோட்டத்தில் கோகிலாம்பாள் உங்களுடன் பேசமுயன்றபோது நீங்கள் அதற்கு இடங்கொடாமற் போனதையும், பிறகு அவள் மூன்று கடிதங்கள் எழுதியும் நீங்கள்பதில்தாமற்போனதையும் கவனித்தால் அவளிடம் உங்களுக்கு ஏற்கனவே மிகுதியான துவேஷம் ஏற்பட்டிருப்பதாக நன்

ரூப் ருஜுவாகிறது. கோகிலாம்பாள் உங்களை எட்டுமணிக்கு வரும்படி எழுதியிருந்ததாலும் உங்களை சந்திக்க வென்றே அவள் ஏகாந்தமாய் அப்பொழுது இருந்திருக்கக் கூடுமாதலாலும் அந்த சமயத்தில் அவளைப்பார்க்கப் போவதுபோல நீங்கள் அங்குசென்று முன்பு உத்தேசித்தபடியே அங்கு ஒருவரு மில்லாததை யறிந்து துணிவுகொண்டு உடனே அவளை நீங்கள் கொன் றிருக்கிறீர்களென்று வெகு நன்றாக ருசுப்பித்து விடலாம். உங்களுக்குமான தண்டனையும் உறுதியாகிவிடலாம். இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்.

குமாரசாமி நாயுடு கோவிந்தனுடைய இருகைகளையும் பிடித்துக்கொண்டு "நீங்கள்தான் என்னைக்காப்பாற்றவேண்டும். நான் ஒரு பாவமுமறியேன். அற்ப இடத்துச் சாவகாசம் இவ்வளவு விபரீதங்களுக்குக் காரணமாயிற்று. கேஸ் முற்றிலும் என்னையே சாருவதான தோரணையிலிருந்தாலும், தாங்கள்மட்டும் என்னைப் பற்றி சம்சயங் கொள்ளவில்லையென்று நினைக்கிறேன். என் உயிர் தங்கள் கையிலிருக்கிறது" என்றார்.

கிருஷ்ணசாமி நாயுடு.—கோவிந்தா! நீ எப்படியும் குமாரசாமி நாயுடுவைக் காப்பாற்றவேண்டும். அவருடைய முகத்தில் யாதொருகளங்கமுமில்லை. அவர் மிகுந்த குணசாலி. அவரை விட்டுவிட்டு வாஸ்தவமான குற்றவாளியை நீ கண்டு பிடிக்கவேண்டும்.

கோவிந்தன்.—எனக்குக் குமாரசாமி நாயுடுவின்மீது சம்சயம் கிடையாது. ஒருகேஸ் என்று ஏற்பட்டால் அது இப்படி நாலாபக்கங்களுக்கும் வழியை உண்டுபண்ணி வைப்பது வழக்கமே. இந்த நிமிஷத்தில் நான் இருக்கிற ஸ்தானத்தில் போலீஸார் இருந்திருந்தால் அவரவர்மீதெல்லாம் சந்தேகம் தோன்றுகிறதோ அத்தனை பேர்களையும்கொண்டுவந்து அடைத்துவிடுவார்கள். பிறகு அவர்களுடைய கதி என்ன? கேஸ் முடியுமளவும் கொட்டடியில் இருந்து தொலைக்கவேண்டியதுதான். அவர்களுக்கும் கைதிகளுக்கும் பூந்திக்கும் லட்டுக்கும் எவ்வளவு பேதமுண்டோ அவ்வளவுபேதந்தானிருக்கும். இதனால் குற்றம் ருஜுவாகு முன்னதாகவே தண்டனை ஏற்பட்டு விடுகிறது. இந்தக்கேஸ் இப்படியாகத் தப்புவழியில் போகக்கூடுமென்று கருதித்தான் முதலிலேயே போலீஸ் கமிஷனரிடம் அந்த மூன்று வஸ்துக்களைப்பற்றிய சங்கதியைச் சொல்லவில்லை. ஏனென்றால் சாதாரண போலீஸாரின் காரியங்கள் நிரபராதிகளையெல்லாம் தொந்தரவு படுத்துவதா யிருப்பதால்தான்.

குமாரசாமி நாயுடு.—தாங்கள் தான் எனக்குப் பிரத்யக்ஷதெய்வம். இந்தக் கேஸிலிருந்து நான் தப்பிப் பிழைத்தால் மறுபடியும் என் தாயார் வயிற்றிலிருந்து பிறந்ததாகத்தான் பாவித்துக்கொள்ள வேண்டும். அதிகமான வியாதியிலிருந்து நல்லகாலபலத்தால் சௌக்கியப்பட்டுப் போகிறவர்களைப் பார்த்து இவன் செத்துப் பிழைத்தான் என்று வழக்கமாய் ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்களல்லவா? அதுபோல இந்தக் கேஸாகிய பெரும் பிணியிலிருந்து வைத்தியராகிய தங்களுடைய உதவியினால் நான் மீண்டும் புனர்ஜென்மம் அடையப்பெறுவேனாயின் அப்போது என்னைப்பார்த்து நான் செத்துப்பிழைத்ததாகவே நான் கருதிக்கொள்வேன். நீங்கள் தான் என்னைக் காப்பாற்றவேண்டும்.

கோவிந்தன்.—நீங்கள் யாதொன்றுக்கும் பயப்பட வேண்டாம். என்னிடத்தில் தெரிவித்த மாதிரியாக இவ்விஷயங்களை வேறெவரிடமும் சொல்லக்கூடாது. மேலும் அவசியம் நேரிட்டாலொழிய உங்கள் வீட்டைவிட்டு நீங்கள் வெளியே போவதையும் நிறுத்தி வைக்கவேண்டும். என்ன செய்கிறது. படிப்பு வாசனையேயில்லாமல் கூலி வேலைக்காரர்களுடைய நிலைமைக்குச் சரிசமான நிலைமையிலிருப்பவர்களைக் கான்ஸ்டேபில்களாய்த் தெரிந்தெடுத்து நியமிக்கும் வழக்கமிருக்கும் வரையில் அந்த இலாகாவில் குறைகள் இருந்துகொண்டுதானிருக்கும். கான்ஸ்டேபில் வேலைக்குப்பிரவேச பரீட்சையில் தவறி இருபது ரூபாய் அல்லது பதினைந்து ரூபாய் எங்கேயாவது கிடையாதாவென்று அங்குமிங்கும் போய் முட்டிப் பார்ப்பவர்களைப் பிடித்து நியமிக்கவேண்டும். அவர்களுக்குப் படிப்பிருக்கிறதென்றும் அவர்கள் பாவ புண்யத்திற்குப் பயப்படுவார்களென்றும் தீய நடத்தைக்கு அவ்வளவு சுலபமாய் உடன் படமாட்டார்களென்றும் பெரும்பான்மையும் நம்பலாம். அப்படிப் பட்டவர்களைப் போலீஸில் சேர்த்தால் காலக்கிரமத்தில் போலீஸ் இலாகாவில் யோக்கியர்களிருக்கக் காணலாம். அதைப் பற்றி இப்போது பேசுவதில் காரியமில்லை, நீங்கள் உங்கள் வீட்டுக்குப் போய்வாருங்கள்.

என்று சொல்லிக் குமாரசாமி நாயுடுவை யனுப்பிவிட்டுக் கோவிந்தனும் கிருஷ்ணசாமி நாயுடுவும் அவர்கள் ஜாகைக்குச் சென்றார்கள்.

ஒன்பதாவது அத்தியாயம்

மணிமந்திர ஔஷதாலயம்

சிங்கப்பூரில் நாட்டுக்கோட்டைச் செட்டிகள் வியாபாரம் செய்யும் தெருவில இரண்டடுக்குகளுள்ள ஓர் பெரிய வீட்டின் முன் பக்கத்தில் தங்க எழுத்துக்களில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

பகவதி மணிமந்திர ஔஷதாலயம்

இவ்விடத்தில் எவ்வளவு கோரமான நோய்களுக்கும் பயங்கரமான பேய் பிசாசு முதலியன பிடித்திருப்பதற்கும் காணாமற்போன ஆட்கள் நகைகள் முதலியவைகளை மைபோட்டுப் பார்த்துச் சொல்வதற்கும் ஏற்பாடுகள் உண்டு. ஒருதரம் சோதித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

முந்தின அத்தியாயத்தில் சொன்ன விஷயங்கள் நடந்த சில நாட்களுக்கப்பால் சுமார் ஆறு அடி உயரமும் உயரத்துக்கேற்ற கனமும் அகன்றுத் தருத்தபடி தேகமுமுடைய ஒருவர் மணிமந்திர ஔஷதாலயத்திற்குள் புகுந்தார். அவருடைய தேகம் பொன்னிறமாயிருந்தது. இடுப்பில் வேஷ்டி கட்டி ஒரு சொக்காய் போட்டு மேலே அங்கவஸ்திரம் மட்டும் தரித்திருந்தார். அவருடைய முகம் அதிக விசனத்தைக் காட்டுவது போலிருந்தது. இவர் உட்சென்றதும் அவ்விடத்தில் காவலிருந்த சேவகன் அங்குவைத்திருந்த மடி பணிக்கும் பொத்தானை அழுக்கினான். உள்ளே எங்கேயோ மணியடித்ததுபோல் சத்தம் கேட்டது. மணி அடித்து விட்டு சேவகன் “ஐயா, தாங்கள் எங்கிருந்து வந்தீர்கள்? என்ன ஜோலியாய் வந்தீர்கள்? தங்கள் திருநாமம் யாது?’ என்ற பல கேள்விகளை மடமடவென்று கேட்டான். இவைகளுக்கு அவர் பதில் சொல்லாமல் “அப்பா, நான் இவ்வீட்டின் சொந்தக்காரரை உடனே பார்க்க வேண்டும். தயவு செய்து உடனே அவர்களுக்குத் தெரிவி” என்று சொன்னார். அங்கு வைத்திருந்த டெலிபோன் என்னும் கருவியின் மூலமாய் அவர்கள் உள்ளே இருக்கிறார்களா இல்லையாவென்று தெரிந்து சொல்லுவதாகச் சொல்லி டெலிபோன் மூலமாய்க் கேட்டான். சற்றுநேரம் பொறுத்து சாமியார் அவசரமான வேலையிலிருக்கிறதென்றும் அன்று பார்க்க அவருக்கு சாவகாசமே இல்லையென்றும் மறுநாள் சாயங்காலம் ஆறுமணிக்குவந்

தால் அவருடைய வேலையை அவசியம் கவனிப்பதாய் வாக்களித்த தாகவும் சொன்னான். தான் வந்தகாரியம் அவசரமானதால் அன்றே பார்த்தால் குணமாயிருக்குமென்றும் அன்று பார்க்க முடியாவிட்டால் மறுநாளாவது கட்டாயமாய்ப் பார்த்துச் சொல்ல வேண்டுமென்றும் அவர்களிடம் கேட்டுச் சொல்லும்படி வேண்டிக்கொண்டார். மறுநாள் பார்த்துச் சொல்வதில் யாதொரு ஆட்சேபணையும் கிடையாதென்று சாமியார் டெலிபோன் மூலமாகத் தெரிவித்தவுடனே வந்திருந்தவர் வெளியே போனார். அவர் சுமார் ஒரு பர்லாங் சென்றதும் அவரைத் தொடர்ந்து யாரோ வருவதாகத் தெரிந்துகொண்டார். உடனே தன்னைத் தான் தொடர்ந்துவருகிறாரா, அல்லது தன் பாட்டில் வழியே போகிறாரா வென்று தெரிந்து கொள்வதற்காக அவ்விடத்திலுள்ள காபிக்கடையில் புகுந்து காபி சாப்பிட்டார். இவருக்குப்பின்னால் வந்தவரும் வேறொரு நாற்காலியில் அமர்ந்து காபி கொண்டுவரும்படி சொன்னார். முன்வந்தவர் வெளியே போக பின் வந்தவர் காபிசாப்பிடாமலே பின்தொடர ஆரம்பித்தார். ஆகையால் தன்னைத்தான் தொடர்ந்து வருகிறாரென்று நிர்மாணித்துக் கொண்டு நான்கைந்து சந்துகளில் மாறிமாறித்திரும்பி அங்கிருந்த ஓர் வாசலில் புகுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டார். பின்னால் வந்தவர் சற்றுநேரமிருந்து, உள்சென்றவர் வெளிவராததுகண்டு அது யாருடைய வீடென்று விசாரித்தார். அது ஒருவருடைய வீடல்லவென்றும் அங்கு ஐந்தாறு குடித்தனங்கள் இருக்கின்றனவென்றும் தெரிந்தவுடனே கதவைத்தட்டினார். கதவு திறந்ததும் அங்கிருந்த குடித்தனக்காரர்களிடமெல்லாம் முன்சென்றவரைக் குறித்து விசாரித்துப் பார்த்தார். யாரோ ஒருவர் உள்வந்தாரென்றும் முன்வாசல்வழியாய்ப் போய்விட்டாரென்றும் அங்கு ஐந்தாறு குடித்தனங்கள் இருப்பதால் யார் வீட்டுக்குவந்து போகிறாரோவென்று ஒருவரும் விசாரிக்கவில்லையென்றும் சொல்லிவிட்டார்கள். ஆகையால் தன்னை ஏமாற்றிவிட்டுப் போவதற்காகவே அப்படிச் செய்திருக்கலாமென்று நினைத்துக்கொண்டு பின் வந்தவர் மணிமந்திர ஔஷதாலயம் சென்றார். இப்படிப் பின் வந்தவர் யாரென்றால் மணிமந்திர ஔஷதாலயத்தின் தலைவர்தான். அங்கு வந்தவர் தனதுபேர் முதலிய விவரங்களைத் தெரிவிக்காததால் மறுநாளாவது அவர் வரும்போது அவருடைய பேர் இன்னதென்றும் அவர் இன்ன இடத்திலிருந்து வந்தாரென்றும் இன்ன வேலை

யார் வந்தாரென்றும் விசாரித்து வைத்துக்கொண்டு மறுநாள் அவர் வந்தவுடனே "நீர் இன்னார், உமதுபேர் இன்னது, நீர் இன்னஜோலியாய் வந்தீர்" என்று சுவாமி தனக்குச் சொன்னதாகச்சொல்லி அவருக்கு இவர் வார்த்தையில் நம்பிக்கையுண்டாகும்படி செய்வதற்காக வந்தார். அதால் வந்தவர்கள் இச்சாமியாரைப் பார்க்கிலும் பெரிய சாமியார்போலிருக்கிறது. ஆகையால் இவனை எய்த்துவிட்டுப் போய்விட்டார். இச்சந்தர்ப்பத்தைவிட்டு நாம் சிலவிஷயங்கள் சொல்லவேண்டி இருக்கின்றன. பெரியசாமியாரகளென்றும் மாந்திரீகர்களென்றும் பேர்வைத்துக்கொண்டு தங்களை நாடிவந்த ஜனங்களிடம் ஆட்களை வைத்தாவது அல்லது வேறுவிதமாயாவது வந்தது இன்னுரென்றும் இன்னகாரியமாய் வந்திருக்கிறுரென்றும் விசாரித்துக்கொண்டு சாக்ஷாத் கடவுளே இவர்களுக்குநேரில் சொன்னதைப்போல் அவர்கள் பேர்களைச்சொல்லி அழைத்தும் அவர்கள் இன்னவேலைக்காக வந்திருக்கிறார்களென்றும் இவ்வளவு ரூபாய் கொடுத்தால் தங்களால் முடித்துக்கொடுக்க முடியுமென்றும் சொல்லி பேதைஜனங்களை ஏமாற்றி பொருள் பறித்து வருகிறார்கள். இவர்களைப்போன்ற ஆட்களுக்கு இந்த மந்திரவாதிகளென்ற பேர்வைத்திருக்கும் மடையர்களுக்கு சாக்ஷாத் கடவுளே பிரத்தியக்ஷமாகியிருந்தால் அவர்களுக்கு என்ன குறையிருக்கப் போகிறதென்றும் அப்பால் அவர்களுக்குப் பணம் காசு என்னத்திற்கென்றும் யோசிக்கவேண்டிய ஞானம் சற்றுமின்றி தங்கள் பொருள் கொடுப்பதோடு நிற்காமல் தாங்களுடைய [illegible] குடும்ப சகிதமாய் இம்மடையர்களுக்கு ஏழுநாள் சுற்றிவந்து பலன்கொடுத்து வருவது எத்தனை பெரியபேதமை! யென்னவாம்? படித்தவர்களென்று பேர் வைத்துக்கொண்டிருக்கும் தனவான்கள் கூட இக்காரியங்களைச் செய்வதாயிருந்தால் கேவலம் கல்வி வாசனை சற்றுமறியாத நாட்டுஜனங்கள் செய்யக் கேட்பானேன்? இந்த சாமியார் முதல் முதலாக வருகிறவர்களை மறுதினம் வரும்படி தெரிவித்து அதற்குள் அவர்களின் காரியங்களை யறிந்து வைத்துக்கொண்டு பிறகு மறுநாள் திரிகாலமுமுணர்ந்த ஞானிபோல் அவர்களின் சங்கதிகளையெல்லாம் அவர்கள் கேட்குமுன்னதாகவே மடமடவென்று தெரிவித்து அவர்களை நம்பவைத்து அவர்கள் மூலமாக லாபமடைவதான வழக்கத்தைக் கொண்டிருந்தார். யாதொரு வேலையும் செய்ய மனமொப்பாமல் சோம்பலை மேற்கொண்டு சாமியார்களென்றும், பண்டா

ரங்களென்றும், ஆசாரியப் பிராமணர்களென்றும் பேர் வைத்துக் கொண்டு பிச்சையெடுத்துக் காலங்கழிப்பவர்களைப் பெரிய ஞானிகளாக மதித்துப்பூசிக்கின்ற தேசம் இந்த உலகத்திலேயே நமது இந்தியா ஒன்றுதான்!

இது நிற்க, மறுநாட் சாயங்காலம் ஆறுமணிக்கு, முந்தினநாள் வந்தவர் மறுபடியும் வந்தார். வந்தவர் முந்தினநாளே தன்னை எடுத்து விட்டுப் போயிருப்பதால் மறுபடியும் அவரை மறுநாளாவது அல்லது வேறு நாளாவது வரும்படி சொல்வதில் குணமிருக்காதென்றும் வந்தவன் மூடனல்லவென்றும் அவனது காரியங்களைத் தெரிந்துகொண்டவனென்றும் ஆகையால் தன் விரோதியென்றும் என்ன காரியமாய்த் தன்னிடம் வருகிறானென்று கூடிய ஜல்தியில் அறிந்துகொள்ள வேண்டுமென்றும் முன் கூட்டியே தீர்மானித்து வைத்திருந்தாராதலால் சாமியார் இவரை பூஜை அறைக்கு வரும்படி வாசல் காப்போனிடம் டெலிபோன் மூலமாகவழக்கப் பிரகாரம் சொன்னார். வாசல் காப்போன் இவரை உள்ளே அழைத்துச் சென்றான். பூஜை அறையானது சுமார் பன்னிரண்டு அடி அகலமும் நாற்பதடி நீளமுமுள்ள பெரியஹால். அவ்விடத்தில் நேர்ப்பக்கப் பார்த்தபடி மூன்று பயங்கரமான விக்கிரகங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. முதலாவது விக்கிரகம் சுமார் எட்டடி உயரத்தோடும் வாயைத் திறந்துகொண்டிருந்த ஓர் ஆஞ்சநேய விக்கிரகம். அதற்குப் பக்கத்தில் சுமார் ஏழடி உயரமுடைய காளி விக்கிரகம் நிறுத்தப்பட்டிருந்தது. காளியின் கைகளில் குழந்தைகளின் கழுத்து முண்டங்கள் கோர்க்கப்பட்டிருந்தன. காளியின் வாயிலும் ஒரு குழந்தையின் கழுத்தை முறித்துக் கடித்துக்கொண்டிருப்பதாகத் தோற்றிற்று. மூன்றாவது விக்கிரகம் கோரப்பற்களைத் திறந்துகாட்டிக்கொண்டும் கைகளில் கோடாரி, சூலாயுதம், சக்குமாந்தடி முதலிய ஆயுதங்களை வைத்துக்கொண்டுமிருந்த பத்தடி உயரமுடைய சுடுகாட்டு சுடலைமாடன் விக்கிரகம். வந்திருந்தவர் மஹா தீரவானும் தைரியவானுமாயிருந்தாலும் இப்பயங்கரமான விக்கிரகங்களைப் பார்த்ததும் அவர் மயிர் கூச்செறியாமலிருக்கவில்லை. அவ்விடத்தில் பூஜையில் உட்கார்ந்திருந்த சாமியாருக்கும் அதற்கு முந்தினநாள் தன்னைத் தொடர்ந்து வந்தவருக்கும் யாதொருவிதமான சம்பந்தமும் இல்லையென்று வெளித்தோற்றங்களால் தெரிந்த போதிலும் அநேகமாய் இவ்விருவரும் ஒரே ஆசாமியாய்த்தான் இருக்கவேண்டுமென்று வந்தவர் தீர்மானித்துத்தெரிந்துகொண்டார். சாமி

யார் இவரைச்சமீபத்தில்வரும்படி சைகைசெய்ததும் அவர் வந்தார்.

சாமியார்.—ஐயா, தாங்கள் யார்? என்ன ஜோலியாய் இவ்விடம் வந்தீர்கள்?

வந்தவர்.—தங்களிடம் ஓர் இரகசியமான விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டியிருப்பதால் நாம் இருவரும் தனியாயிருக்கிறோமா வென்று தயவு செய்து தெரிவியுங்கள்.

சாமியார்.—இம்மூன்று தேவதைகளைத் தவிர இங்குநாம் இருவர்மட்டிலும் தானிருக்கிறோம். வேறு ஒருவருமில்லையாதலால் தாங்கள் தடையில்லாமல் பேசலாம்.

வந்தவர்.—தங்களிடம் சொல்லுவதற்கு மனம் கூசுகிறது. எப்படியாவது சொல்லித்தான் தீரவேண்டியிருக்கிறது. தாங்கள் மனம் வைத்தால் என் காரியம் கைகூடுமென்பது நிச்சயம். ஆகையால் தாங்கள் முடித்துக் கொடுப்பதாக வாக்களித்தால் சொல்லுகிறேன்.

சாமியார்.—ஐயா, யாராவது நோயாளிகளாயிருந்தால் வைத்தியம் செய்வதற்காகவும் பேய் பிசாசுகள் பிடித்திருந்தால் மந்திரம் செய்வதற்காகவும் ஏதாவது வஸ்துக்கள் காணாமற்போயிருந்தால் மைபோட்டுப் பார்த்துச் சொல்வதற்காகவும் நான் தயாராய்க் காத்துக்கொண்டிருக்கிறேன். இவற்றில் எந்த ஜோலியாய் வந்தீர்களென்று தெரிவித்தால் உடனே செய்வதில் யாதொரு ஆட்சேபணையுமில்லை.

வந்தவர்.—ஐயா, நான் இம்மூன்று விஷயங்களில் ஒன்றையும் கருதி வரவில்லை. வேறு வேலையாய் வந்தேன்.

சாமியார்.—இம்மூன்று விஷயங்களைத் தவிர வேறு வேலை நான் செய்வதில்லை.

வந்தவர்.—தாங்கள் சமயாசமயங்களில் மட்டும் பெருந் தொகைகள் வாங்கிக்கொண்டு அப்பேர்ப்பட்ட வேலைகள் செய்வதாகத் திட்டமாய்க் கேள்விப்பட்டேன். தாங்கள் முடித்துக் கொடுக்கும் விஷயத்தில் தாங்கள் கேட்கும் தொகையைக் கொடுப்பதில் யாதொரு ஆட்சேபணையுமில்லை.

சாமியார்.—நான் இம்மூன்று விஷயங்களைத் தவிர்த்து வேறு வேலை செய்ததாக ஞாபகமில்லை. இருந்தாலும் நான் என்ன வேலை செய்து கொடுத்தேனென்று திட்டமாய்க் கேள்விப்பட்டீர்கள்.

வந்தவர்.—அதெல்லாம் இப்பொழு தென்னத்திற்கு? என் வேலையை முடித்துக் கொடுப்பதாக வாக்களியுங்கள்.



"கழுத்தை விட்டுவிடு; இல்லாவிட்டால் இத்தடியால் உன் கையை முறித்துவிடுவேன்" என்று சொன்னார்.

(112-ம் பக்கம் பார்க்க.)

சாமியார்.—தங்கள் வேலை இன்னதென்றே சொல்லாமல் முடித்துக்கொடு, முடித்துக்கொடு என்றால் எப்படி முடிப்பது? தங்கள் மனதில் இருப்பது எனக்கு எப்படித் தெரியும்?

வந்தவர்.—தங்களிடம் வந்தவர்கள் இன்னாரென்றும் இன்ன வேலையாய் வந்திருக்கிறார்களென்றும், முடியும் முடியாதென்றும் அவர்களைக் கேட்காமலே தாங்கள் சொல்லுவதாகக் கேள்விப்பட்டேன். ஆகையால் நான் என்ன ஜோலியாய் வந்திருக்கிறேனென்று தங்களுக்குக் கட்டாயமாய்த் தெரியுமென்றே நம்புகிறேன். தாங்கள் இனியாவது காலஹரணஞ் செய்யாமல் தயவு செய்து என் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுங்கள்.

சாமியார்.—என்னால் அப்படிச்சொல்லமுடியாதென்று தங்களுக்கு நிச்சயமாய்த் தெரியும். தாங்கள் என்னால் ஏமாற்றப்படும் ஆயிரக்கணக்கான ஜனங்களில் ஒருவர் அல்லவென்பதையும் நான் நன்குணர்வேன். வயிற்றுப் பிழைப்புக்காக வேஷம்போட்டுக் கொண்டு பேதைஜனங்களை நம்பவைப்பதற்காகப் பலவாறு பேசுவது வழக்கம். ஆகையால் தாங்கள் என் பிழைப்பைக் கெடுக்காமலிருக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் தங்களிடம் உண்மையைச்சொல்லிவிட்டதால் தாங்கள் என்னை சோதனைசெய்யவந்திருந்தால் இத்துடன் நிறுத்திவிட்டு இன்னும் ஏளனம் செய்யாதிருக்கும்படிக்கும் அல்லது வேறு ஜோலியாய் வந்திருந்தால் அதைத் தெரிவிக்கும்படிக்கும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வந்தவர்.—ஐயா, நான் ஜோலியில்லாமல் தங்களிடம்வரவில்லை. தாங்கள் என்னிடம உண்மையைச் சொன்னதுபோல் நானும் தங்களிடம் யதார்த்தத்தைச் சொல்லிவிடுகிறேன். எனக்கு விரோதியான பெண் ஒருத்தியிருக்கிறாள். அவளை எப்படியாவது இவ்வுலகத்திலிருந்து மறு உலகத்திற்கு அனுப்பவேண்டியது மிகவும் அவசியம். ஆனால் அவள் கொலைசெய்யப் பட்டாளென்று யாருக்கும் தெரியக்கூடாது. இயற்கையான மரணத்தால் தான் இறந்தாளென்று எல்லாரும் நினைக்கும்படியான மருந்து தங்களிடம் இருக்கிறதாம். டாக்டர்களால்கூட விஷத்தால் இறந்தாளென்று சாதாரணமாய்க் கண்டுபிடிக்க முடியாதென்றுங் கேள்விப் படுகிறேன். ஆகையால் தயவுசெய்து அம்மருந்தில் கொஞ்சம் உதவிசெய்யக் கோருகிறேன். தாங்கள் கேட்கும் தொகையைக் கொடுக்கச் சித்தமா யிருக்கிறேன்.

சாமியார்.—ஐயா, தாங்கள் சொல்வது எனக்கு மிக்க ஆச்சரி

யமாயிருக்கிறது. என்னிடம் அப்பேர்ப்பட்ட மருந்து இல்லை. ஆகையால் நான் இதுவரையில் யாருக்கும் கொடுத்ததில்லை. தயவுசெய்து தங்களுக்கு யார்சொன்னாரென்று தெரிவியுங்கள்.

வந்தவர்.—நான் சொல்லாவிட்டால் தாங்கள் அம்மருந்தைக் கொடுக்கமாட்டீர்கள்போலிருக்கிறது. சிலதினங்களுக்குமுன்னால் லக்ஷ்மி விலாசம் பங்களாவில் இருந்த சொர்ணம் அம்மாளின் மூர்ச்சரோக நாசம் நீங்கவைத்த மருந்து தாங்கள்தான் கொடுத்தீர்களென்று கேள்விப்பட்டேன்.

என்று சொன்னார். அவர் அப்படிச் சொன்னதும் சாமியாருடைய முகமானது கோடிபாவனைகளெல்லாம் அதிகமான கோபத்தைக்காட்டியபோதிலும் அதிகசாக்கிரதையாய் "இவ்விஷயம் இவ்வளவுதூரம் தங்களுக்குத் தெரிந்திருப்பதால் இனி தங்களிடம் மறைப்பதில் பிரயோஜனமில்லை. தாங்கள் தயவுசெய்து இங்கேயே உட்கார்ந்திருங்கள், நான் போய் மருந்தெடுத்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டு சாமியார் எழுந்துபோனார். வந்தவர் அட்டம புத்தியுள்ளவராதலால் தாங்கள் இங்கேயே உட்கார்ந்திருங்கள் என்று சாமியார் சொல்லவேண்டிய பிரமேயமில்லையென்றும் சாமியார் அப்படிச் சொன்னதால் தானிங்கிருந்தால் தன் உயிருக்கே அபாயம் நேரிடுமென்று மதித்து சற்றும் தாமதம் பண்ணாமல் எழுந்து வெளியேபோனார். இவர் தெருவில் சற்று தூரம் போனதும் பின்னால் யாரோ தொடர்ந்துவருவதாகத் தெரிந்தது. பின்னால் வந்தவனை ஏமாற்றிவிட்டுப் போகவுத்தேசித்து பக்கத்திலிருந்த சந்தில் புகுந்தார். இவர் சந்தின் அடுத்தமுனை போவதற்குள் பின்னால் வந்தவர் வேகமாய்வந்து இவர் எதிரேவந்து இவர் அறியுமுன் இவர் கழுத்தைப் பலமாய்ப் பிடித்து இறுக்கி கொன்றுவிடப்பார்த்தார். அச்சமயத்தில் சட்டென்று ஒருவர் தோன்றி "கழுத்தை விட்டுவிடு. இல்லாவிட்டால் இத்தடியால் உன்னை முறித்துவிடுவேன்" என்றுசொன்னார். அச்சத்தத்தைக் கேட்டதும் சாமியார் கையை எடுத்துவிட்டார். அவர் உடனே ஓடப்பார்த்தார். அப்போது புதிதாக வந்தவர் சாமியாருடைய கைகளிரண்டையும் இறுக்கிப்பிடித்துக்கொண்டு "அடே கிருஷ்ணா! நீ இப்பொழுது சந்நியாசிவேஷம் பூண்டிருந்தாலும் இவ்வூரிலுள்ள 'பகவதிமணிமந்திர ஔஷதாலயத்தின்' தலைவனாகிய சாமியார் நீயென்றும் சில வருஷங்களுக்கு முன் சென்னப்பட்டணத்துக் கருகிலுள்ள கோடம்பாக்கத்தில் சண்டமாருதசாமி யென்று பேர் வைத்துக்கொண்டு பட்டணத்து பெருமாள்

நாயுடுவை அவருடைய பெண்ஜாதி வசியப் படுத்துவதற்காக விஷத்தை மருந்தென்று கொடுத்துக் கொன்ற மகா சண்டாள னென்றும் நான் அறிவேன்," என்று சொல்லிவிட்டுக் கழுத்தைப் பிடிக்கப்பட் டிருந்தவனைப்பார்த்து "சீனு! இவனுடைய விஷயங் களைக் குறித்து உனக்குப் போதுமானபடி சொல்லி உன்னை இச் சண்டாளனிடம் அனுப்பும்போதே அவன் கொலை செய்யப் பின் னடையான். அதிக ஜாக்கிரதையாய்ப் போய்வா என்று நான் சொல்லியனுப்பியும் நீ இம்மடையன் கையில் சிக்கிக்கொண்ட தால் உனக்கு இன்னும் சாமர்த்தியம்போதாதென்றுதெரிகிறது." என்று சொல்லிவிட்டு போலீஸ் அபாய ஊதுகுழலை ஊதவே இர ண்டு போலீஸ்காரர்கள் ஓடிவந்தார்கள். அவர்கள் வந்ததும் கழுத் தைப் பிடித்துக்கொல்ல முயன்ற விஷயத்தைச் சொல்லி சண்ட மாருத சாமியாரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப்போய் அடைத்து விட்டார். கழுத்தைப் பிடித்துக் கொல்லப்போன சமயத்தில் வந்துதவியவர் துப்பறியும் கோவிந்தன்தானென்று இதை வாசிப்போர் நாம் சொல்லுவதற்கு முன்னதாகவே யூகித் திருக்கலாம்.

பத்தாவது அத்தியாயம்

கோவிந்தனின் அபிப்பிராயம்

சண்டமாருத சாமியைச் சிறையிலடைத்த தினத்தன்று இரவு பத்துமணி சுமாருக்கு நாராயணசாமி நாயுடு அவர்கள் பங் களாவில் கோகிலாம்பா ளென்ற பாக்கிய ரத்தினத்தின் கொலை யைப் பற்றியும் அவள் வேலைக்காரியாகிய சொர்ணத்தின் கொலை யைப்பற்றியும் கோவிந்தனுடைய உண்மையான அபிப்பிராயத் தைத் தெரிந்துகொள்வதற்காக நாராயணசாமி நாயுடவர்களும் அவர் புத்திரியாகிய பத்மாவதியும் சுப்பராயலு நாயுடுவும், மாட புரம் ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடுவும் கோவிந்தனும் ஒன்று கூடினார்கள். அப்பொழுது கோவிந்தன், பராங்குஷ நாயுடு அவர் களுக்கும் கோவிந்தசாமி நாயுடு அவர்களுக்கும் விரோதமாகப் போலீஸாரால் அதுவரையில் கண்டு பிடித்திருந்த சாக்ஷியங்கள் அவ்வளவையும் எடுத்துக்காட்டி, அவர்களுக்கு விரோதமாக இவ் வளவு சாக்ஷியங்கள் இருந்தபோதிலும் அவர்கள் இருவரும் குற்ற வாளிக ளல்லவென்று தான் தீர்மானமாய்த் தெரிந்துகொண்ட தாகச் சொன்னார். கோவிந்தன் இப்படிச் சொன்னவுடனே சுப்ப

ராயுலு நாயுடு அவர்கள் மீசை படபடவென்று துடிக்க அதிக கோபத்துடன் "ஆனால் உமது அபிப்பிராயத்தில் என்மகன்தான் கொலை செய்தானென்று பட்டிருக்கிறதுபோல் காண்கிறதே, எப்போது நீர் அனுமானித்த மூன்று நபர்களில் இருவர்பேரிலுங் குற்றமில்லையென்று தீர்மானமாய்ச் சொல்லிவிட்டீரோ, அப்போது மீதியிருக்கும் என் மகன் தான் கொலை செய்தானென்று அபிப்பிராயப் படுகிறீர்போல் தோன்றுகிறது. நீர் எதோ பிரமாத புத்திசாலி யென்றும். உம்முடைய சக்தி அபாரமென்றும். நீர் உண்மையைக் கண்டு பிடித்து விடுவீரென்றும் இவர்களெல்லாம் சொன்னதில் உம்மை நம்பும்படியாகி நான் வேறு தக்க மனிதர்களைக்கொண்டு துப்பு துலக்கப் பிரயத்தனப்படாமலிருந்தேன். அதற்கு உண்டான பலன் இதுதான் போலிருக்கிறது" என்று சொன்னார். அவர் சொன்ன வார்த்தைகளுக்காக கோவிந்தன் கோபப்படாமல் "இங்கு இன்றுகூடியிருப்பவர்க ளெல்லாம் நான் சொல்லுகிறபடி நடந்தாலொழிய உண்மையான குற்றவாளியைக் கண்டிபிடிப்பது கஷ்டமாகும். அப்படித் தாங்கள் எல்லோரும் ஒத்தாசை செய்வதாய் வாக்களித்தால் நான் குமாரசாமி நாயுடு குற்றவாளி யல்லவென்று திட்டமாய் ரூபிக்கிறேன்" என்று சொன்னார். உடனே பத்மாவதி தன்னை எந்தவிதமான ஒத்தாசை செய்யச் சொன்னாலும் செய்வதாக வாக்களித்தாள். அப்படியே மற்றவர்களும் வாக்களித்ததின் பேரில் கோவிந்தன் பின் வருமாறு சொன்னார்.

கோவிந்தன்.—கோகிலாம்பாளென்ற பாக்கியரத்னம் குமாரசாமி நாயுடுவாலாவது அல்லது வேறு எந்த மனிதனாலாவது கொலை செய்யப் படவில்லை.

என்றார். அவர் அப்படிச் சொன்னதும் பின் யாரால் கொலை செய்யப்பட்டாள் என்று எல்லோரும் ஒரு மூச்சாய் அடக்க வியலாத ஆவலுடன் கேட்டார்கள்.

கோவிந்தன்.—கோகிலாம்பாள் கொலை செய்யப் பட்ட இடத்தை நான் நேரிற்சென்று கண்டபோது எங்கு பார்த்தாலும் இரத்தப் பிரவாகமும், நாற்காலிகளும் சிறு மேஜைகளும் தலை கீழாய் விழுந்து அலங்கோலப் பட்டு, மேஜைகளின் மேல் வைத்திருந்த பல விலையுயர்ந்த சாமான்கள் அநேகம் உடைந்தும், சில கீழே விழுந்தும் சின்னாபின்னமாகிக் கிடந்தன. அவற்றிலிருந்து நான் கோகிலாம்பாளைக் கொன்ற நபர் அவளுக்கு ஸமத்

துவமான பலசாலியல்ல வென்றும், அப்போது ஆத்திரமே விட்டதனுல் வலிமை மிக்குற்று, அவசரத்தோடும் அதைரியத் தோடும் இக்கொலையைச் செய்திருக்க வேண்டு மென்பதாக நான் யூகித்தேன். ஏனெனில் பலசாலியான ஒருவர் கட்டாரியால் இவளைக் குத்தியிருந்தால் இவள் ஒரே குத்தில் இறந்திருப் பாள். இவள்உடம்பில் எட்டுகாயங்கள் இருந்தனவென்றும் அதில் முதுகு பக்கத்தில் இரண்டு காயங்களும், புஜத்தில் ஒரு காயமும், மார்பில் ஒரு காயமுமாகப்பட்டிருந்ததென்றும் தெரிகிறது. இந்தக் காயங்கள் எவ்வாருக நேர்ந்திருக்கக் கூடுமென்று டாக்டரைக் கேட்டதில் காயங்கள் பட்டிருக்கும் மாதிரியிலிருந்து, முதல் கோகி லாம்பாளுக்குத் தெரியாமல் முதுகில் குத்தியிருக்கவேண்டு மென் றும் அக்குத்துப் பட்டவுடனே அவள் திகைத்து திரும்பிப்பார்ப் பதற்குள் முதுகில் மறுகுத்து பட்டிருக்குமென்றும் அப்பொழுது அவள் எழுந்திருந்திருக்கலா மென்றும் அத்தருணத்தில் மறுபடி யும் புஜத்தில் இன்னொரு குத்துப்பட்டிருக்கலாமென்றும், தக்ஷண மே அவள் தப்பித்துக்கொள்வதற்காக இங்குமங்கும் ஓடினபோது மற்ற காயங்கள் ஏற்பட்டிருக்கவேண்டு மென்றும், இந்தத் திகிலி ஞலே இவள் ஏதுஞ்செய்யத் தோன்ருதவளாய் மயங்கின சமயத் தில் வெகு பலமாக மார்பில் குத்து விழுந்தவுடனே அவள் இறந்து போகும்படியாகச் சம்பவித்திருக்கக் கூடுமென்றும் டாக்டர் நஞ் சப்பையர் வெகு நிதானத்தோடு சொன்னுர். இதனுல் என்ன ஏற் படுகிறதென்ருல் அதிக பலமில்லாத ஒருவரால் கொலை செய்யப் பட்டிருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. மேலும் கொலை நடந்த இடத்தில் இரத்தம் தோய்ந்த கட்டாரி ஒன்றும் காகிதம் அறுக் கும் தந்தக்கருவி யொன்றும் இருந்தன. தந்தக்கருவியின் மத்தியில் மட்டும் இரத்தம் விழுந்து கிடந்ததால் கோகிலாம்பாள் அக்கருவி யால் திருப்பிக்குத்த முயன்றிருக்கலாமென்றும் தெரிகிறது. இவள் முதல் குத்தில் இறந்திருந்தால் திரும்பக் குத்துவதற்குப் பிரயா சைப்பட்டிருக்கமாட்டாள். ஆகையால் இவள் முதல் குத்தில் இறக்கவில்லையென்றும் டாக்டர் சொன்னபடிதான் நடந்திருக்கு மென்றும் எண்ண இடமிருக்கிறது. சொர்ணத்திற்கு முன்கூட் டியே விஷம் கொடுத்திருப்பதால் இக்கொலையானது திட்டமாய் முன் கூட்டித் தீர்மானித்துச் செய்ததாகத் தெரிகிறது ஆகையால் இக்கொலை மகாபலசாலிகளான கோவிந்தசாமி நாயுடு, பராங்குஷ நாயுடு, குமாரசாமி நாயுடு ஆகிய இம்மூவராலேனும், இவர்களில்

ஒருவராலேனும் நடத்தப்படவில்லையென்று தீர்மானமாய்ச் சொல்லலாம். இவர்கள் வேறு யாரையாவது கொண்டு இக்கொலையைச் செய்யும்படி தூண்டியிருந்தாலும் தேகக்கட்டுள்ள பெருத்த தடியர்களைக் கொண்டு கொலைசெய்யச் சொல்வார்களே யொழிய கேவலம் சரீர பலமில்லாதவர்களைக் கொண்டாவது வயோதிகர்களைக் கொண்டாவது கொலை செய்யச் சொல்லமாட்டார்கள். குமாரசாமி நாயுடுவுக்கும் கோகிலாம்பாளுக்கும் அன்னியோன்னிய தொந்தமிருந்திருந்தால் அவரை முன்வாசல் வழியாய் வரச் சொல்லியிருக்கமாட்டான். முன் வாசல்வழியாய் சரியாய் எட்டு மணிக்கு ஓர் கனவான் வருவாரென்றும் உடனே விட்டுவிடும்படியும் வாசல் காப்போனிடம் சொல்லியிருந்ததால் குமாரசாமி நாயுடுவுக்கும் பாக்கிய ரத்னத்திற்கும் அதற்கு முன்னால் எவ்விதமான அன்னியோன்னியமும் கிடையாதென்றே திட்டமாய்ச் சொல்லலாம். அவற்றையெல்லாம் ஆரஅமர சிந்திக்குங்கால் பாக்கிய ரத்னத்தின் கொலையானது எந்த மனிதனாலும் செய்யப்படவில்லையென்றும் ஓர் பெண்ணால் தான் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும் தீர்மானமாய்த் தெரிகிறது.

என்று சொன்னார். இவர் இப்படிச்சொல்லி முடிக்கவுடனே சுப்பராயலு நாயுடுவுக்குக் கோபம் வந்ததுபோல் நாராயணசாமி நாயுடுவுக்கும் கோபம் வந்து, "ஆனால் உமக்கு பத்மாவதியின் பேரில் தான் சந்தேகம்போலிருக்கிறது" என்றார். கோவிந்தன் தனக்கு பத்மாவதியின் மீதும் சந்தேகமில்லையென்று சொன்னவுடனே ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடவர்கள் "ஆனால் உமக்கு ஜீவாநந்தத்தின் பேரில் தான் சந்தேகம்போலிருக்கிறது" என்று சிடுத்த முகத்துடன் கேட்டார். கோவிந்தன் அப்படியல்லவென்றும் தனக்கு மூன்று பெண்களின் மேல் சந்தேகமிருக்கிறதென்றும், தனக்கு இன்னார்தான் கொலைசெய்திருக்கலாமென்று தெரிந்திருந்த போதிலும் அந்த ஆசாமியைத் தண்டிப்பதற்குப் போகிய சாக்ஷியங்கள் அதுவரையில் கிட்டவில்லையென்றும் அவர்கள் எல்லோருடைய ஒத்தாசை இருந்தாலொழிய தனக்கு சாக்ஷியம் அகப்படுவது கஷ்டமென்றும் ஆகையால் அவர்கள் முன் வாக்களித்த பிரகாரம் உதவி செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு அவரவர்கள் இன்னின்ன விதமாய் உதவி புரியவேண்டுமென்றும் அவர்களிடம் சொல்லிவிட்டுக் கோவிந்தனும் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் அவரவர்கள் ஜாகைக்குச் சென்றார்கள்.

பதினோராவது அத்தியாயம்

ஷ்ரார்த்தம்

நமது கதையின் முதலாவது அத்தியாயத்தில் தனது தாயாராகிய பாலம்மாளும், தனது தருமபத்தினியாகிய செல்லம்மாளும் சேர்ந்து மருந்துவைத்து பெருமாள் நாயுடுவை கொன்றார்களென்பதை நமது வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்களென்று நம்புகிறோம். பெருமாள்நாயுடு காலமானபின்பு, அவருடைய தாயாராகிய பாலம்மாள் தனது ஏக பிரியபுத்திரன் இறந்ததற்குத் தானே காரணமாயிருந்ததை நினைத்து நினைத்து ஆற்றொணாத் துயரமெய்தி, அவ்வாதனையால் மிகுதியும் மெலிந்து தோன்றினாள். தான் மருந்திடாவிடின் தனது புத்திரன் இன்னும் வெகுகாலம் வரை உயிரோடிருப்பானென்றும், அவனுடைய பிரியமெல்லாம் பாக்கிய ரத்னத்தின் பேரில் இருந்தபோதிலும், தான் தன் அருமைக்குமாரனுடைய முகாரவிந்தத்தைக்கண்டு ஆநந்திக்கும் பாக்கியத்துடன் மீதியுள்ள தனது வாணாளைத் திருப்தியுடன் கழித்துக்கொண்டு வெகு கௌரவமாயிருக்கலாமே யென்றும், இவ்வாறு பலபலவாறாகக் கருதி சித்த மழிந்து சிந்தனை மிகுந்து ஸதாகாலமும் துக்கஸாகரத்தில் மூழ்கினவளாய் அக்கோபத்தைச் செல்லம்மாள் மீதும் ஊர்வம்பியின் மீதும் காமாக்ஷியின் மீதும் காட்டி, அவர்களே தன் புத்திரனைக் கொல்ல ஏமதூதர்களாய் இருந்தார்களென்று தூற்றிக் கொண்டிருந்தாள். செல்லம்மாளோ பெருமாள் நாயுடு இறந்ததால் பாலம்மாளுக்கு ஒன்றும் நஷ்டமில்லை யென்றும் தான் தன் மஞ்சள் புஷ்பம் குங்குமம் முதலியவைகளை இழக்கும்படி நேரிட்டதென்றும் அதனால் தனக்கே அதிக நஷ்டமென்றும் பாவியாகிய ஊர்வம்பியும் கிழட்டுப்பிணமாகிய தன் மாமியாரும் சேர்ந்து தன் புருஷனைக்கொன்றார்களென்றும் திட்டிக்கொண்டிருந்தாள். இதிலிருந்து ஊர்வம்பி, காமாக்ஷி, தெருச்சுத்தி முதலானவர்கள் இவர்கள் வீட்டிற்கு வருவதையே நிறுத்திவிட்டார்கள். இப்படி இவர்கள் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொண்டதால் பெருமாள் நாயுடுவுக்கு மருந்து வைத்துக்கொன்ற விஷயம் ஊரார் எல்லோருக்கும் தெரிந்தது. தெருவில் போவார் வருவாரெல்லாம் இவர்கள் கேட்கும்படியாகத் திட்ட ஆரம்பித்தார்கள். தன் குமாரனை இழந்த விசனமும் ஊராரின் வசைச்சொற்களுடைய கொடூரமும் கேட்கச் சகியாமல் பாலம்மாள் ஒருநாள் இரவு தன் வீட்டிலிருந்த கிணற்றில் விழுந்து உயிரை விட்டாள். ஐயோ பாவம்! பாலம்மாளின் கடைசிக்காலம் இப்படி அநியாயச் சாவாய் முடிந்தது.

அவள் தன் குமாரனுக்கு மனப்பூர்வமாக ஒரு தீங்கும் நினைத்த வளல்ல. அவருடைய க்ஷேமத்தையே அல்லும் பகலுங்கோரி நின்ருள். தன் மகன் சுகமாக வாழ வேண்டுமென்று ஊரிலுள்ள கோவில்களுக்கெல்லாம் கும்பிட்டு வந்தாள். அம்மன் ஸந்நதிகளில் பிரஸாதமாகக் கிடைக்கிற மஞ்சள் குங்குமத்தையெல்லாம் தன் மருமகளின் திருமங்கல்யத்தில் வைத்து, அது தீர்க்க மாங்கல்யமாயிருக்க வேண்டுமென்றுங் கோரிக்கை கொண்டும் நடந்துவந்தாள் பத்து மாதம் சுமந்துபெற்றுப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்து வாலிபமாக்கி, அவர் உலகத்திலே உயர்ந்த உத்தியோகம் செய்யக்கண்டு அவரது சுக போகங்களையே தனது நலங்களாகக்கண்டு வாழும் தாயின் அன்புக்கு நிகராக இவ்வுலகில் வேறோரன்பு முளதோ? இவ்வுத்தம குணங்களெல்லாம் பாலம்மாளிடத்துப் பொருந்தியிருந்தும் அவள் தன் புத்திரனுக்கு மருந்திட முயன்ருளெனில், அது அவளுடைய பேதமைத் தன்மையாலேயே தான் என்று சொல்வதில் சந்தேகமுண்டோ?

"பெண்புத்தி யென்பது பெரும்பேதமைத்தே."

என்பது சரியாயிருந்தது. ஒரு ஸ்திரீயானவள் தனது பதி, புத்திரர் முதலானவர்களைவிட மேன்மையான யுக்தி, புத்தி, ஆலோசனை சாதுரியங்களை யுடையவளாயிருப்பினும் அதை வெளிக்குக் காட்டாமல் சமயம் வாய்த்தபோது மிகவும் அடக்கத்துடன் கால இடம் அறிந்து உருக்கமும் விநயமும் இனிமையுமான முறையில் தன் ஆலோசனைகளை எடுத்துச்சொல்லி நல்வழியினின்று பிறளும் மாந்தரைச் சீர்படுத்த முயலவேண்டும்.

இவ்விதம் செய்வதற்கு அன்னுர் போதிய அளவு ஒழுக்கப் பயிற்சியும் கல்விப்பயிற்சியும் அடையப் பெற்ரோராய் குடும்பவாழ்வுக்கனுசரணையான காரியங்களில் மிகவும் தேர்ச்சியுள்ளவர்களாயிருத்தல் வேண்டும்.

இங்கு நமது பாலம்மாளிடத்து மாதாவின் அன்பு மட்டும் விசேஷித்து விளங்கிற்றேயன்றி ஸ்வதந்திர யூகமும், விவேக சகிதமான ஆலோஸனையும், புத்தி சூக்ஷமமும், நல்லஸகவாஸமும் உயர்ந்த சிந்தனைகளும் இல்லாமலிருந்ததற்கு, அந்த அம்மாள் படிப்பறியாப் பாவையாக இருந்ததே காரணம். அதனுல்தான் துஷ்ட அவிவேக மாதர்களுடைய கைப்பாவையானுள். அதன் விளைவு அவளுடைய துர்மரணமாய் முடிந்தது. பாலம்மாள் மட்டும் கல்வியறிவும் நற்சகவாஸமுமுள்ள பெண்மணியா யிருந்திருந்

தால் தன் கண்மணியான புத்திரனை இவ்வளவு தீவிரத்தில் இழக்கக் கொடுத்திருக்க மாட்டாள். மருந்து ஈடு, முதலிய துர்த்த வியாபாரங் களிலும் பிரவர்த்தித்திராள். ஊர்வம்பி, தெருச் சுத்தி போன்ற குணங்கெட்ட நாரிகட்கும் அவளிடத்து வேலையேயிராது. அவர்கள் அவளை நாடிச் செல்லவுந் துணியார். பாலம்மாள் தனது புத்திரனுடன் எவ்வளவோ வைபவமாக நாட்கழித்து சந்தோஷமாக வாழ்ந்துகொண் டிருக்கலாம். இப்படிப் பிராணத் தியாகம் செய்யவேண்டிய அவசியம் இருந்திருக்காது. தனது புத்திரன் வழியாகப் பேரன் பேத்திகளடைந்து பெருவாழ்வு கொண்டாடக்கூடிய அதிர்ஷ்டத்தைப் பாலம்மாள் தனது புத்தி குறைவால் போக்கடித்துக் கொண்டது பரிதாபத்திலும் பரிதாபம்! இவளைப்போன்ற மாதர்களுக்குச் சொந்த புத்தியுமில்லை; பிறர் சொல்லுகிற புத்தியையும் கேட்பதில்லை. தாங்களே எதுவொன்றிலும் ஸ்வயேச்சையாய்ச் சென்று மறுபடியும் மீளவியலாது படுகுழிகளில் வீழ்ந்து நலங்கெடுவதன்றி, மற்றவர்கட்கும் அதனால் எண்ணற்ற சங்கடங்கள் விளைவிக்கின்றனர். அவிவேக மாதர்களின் காரியங்களெல்லாம் எப்போதும் இவ்விதமாய் ஆபத்திலேயே முடிகின்றன.

இது நிற்க, செல்லம்மாள் தன் மாமியார் இறந்துபோனவுடனே, பெரிய சனி தொலைந்ததென்று ஸந்தோஷ மடைந்தவளாய் சென்னையி லிருந்த தன் புருஷன் சொத்துக்களை யெல்லாம் ஒன்றுக்குப் பாதியாகவும் முக்கால் விலைக்கும் விற்றுப் பணமாக்கிக் கொண்டு தனது சொந்த ஊராகிய சிங்கப்பூருக்குப் போய்ச் சேர்ந்தாள். இப்போது செல்லம்மாளின் செல்வாக்குக் கேட்கவேண்டுமா? பந்துக்களின் ஆரவாத்துக்குக் குறைவா? பத்தெட்டு இலைகள் போட்டு பரிமாறுவதில் தடையா? சிநேகிதர்களுக்குத் தான் என்ன குறைவா? எத்தனையோ புருஷர்களும் பெண்களும் அவளிடும் கட்டளைகளை நிறைவேற்ற எதிர்பார்த்துக் காத்திருப்போராயினர். வருவார் போவாருக் கெல்லாம் விருந்துகள் நமது செல்லம்மாளின் வீட்டிலேயேதான். பண்டிகைகளென்ன, விரதங்களென்ன, ஒவ்வொரு மாதத்திலும் வருகிற அமாவாசையும், பிரதி பக்ஷத்திலும் வருகிற ஏகாதசியும் செல்லம்மாளின் மூலமாக வெகு கௌரவத்தை யடைந்தன. சில யௌவன புருஷர்களுங் கூட அவள் மீது கொஞ்சம் கவனம் செலுத்த லாயினர். சில சாமர்த்திய சாலிகள் எவ்விதத்திலாவது அவளைத் தங்கள்

வசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று முயல்வாராயினர். நம் நாட்டிலே சகோதரர்களிடமும் பந்துக்களிடமும் வசித்துக் காலங் கழிக்கும் பணக்காரரான விதவைகளை எவ்விதத்திலேனும் அவர்களிடமிருந்து பிரித்து தங்கள் வசப்படுத்திக் கொள்ள முயன்று வரும் ஆடவர்கள் அநேகரிருக்கிறார்கள். விதவைகளையே அண்டிப் பிழைப்போரும் அல்லது அவர்களுக்கு அந்தரங்கத்தில் புருஷர்களாக இருப்போரும் பலர். ஸ்திரீகள் ஏழைகளாயிருந்து விதவைகளாய்விடின் மட்டும் சங்கடங்களும் ஆயிரத்தெட்டு நிஷ்டூரங்களும் நிர்ப்பந்தங்களும் உண்டாகின்றனவே யொழிய, நல்ல பணப்புஷ்டியுள்ளவர்களாயிருந்து விதவைகளாய் விட்டால்--அதிலும் புருஷன் வீட்டோடே அடியோடு மாண்டு எல்லா சொத்துக்களும் அவ்விதவைகளுக்கே சொந்தமாகி விட்டால்—அப்படிப் பட்டவர்கள் வாழ்வு நமது செல்லம்மாளைப் போல் வெகு செல்வாக்கு வைபவமாகவே முடிகின்றது. இவர்கள் எதிரில் வந்தால் சகுன சாஸ்திரங்களுங்கூடப் பொய்யாகி விடுகின்றன வென்றால் இவர்களின் உன்னதத்திற்குக் கேட்பானேன்?

உலகத்தின் விபரீதப் போக்குகள் இவ்வாறு பலவகையா யிருப்பினும் நமது இந்து குடும்பங்களில் அநேக மாதர்கள் ஏதோ காலகதியால் தாங்கள் விதவைகளாய் விட்டபோதிலும், நமது செல்லம்மாளைப் போலப் புருஷன் சொத்துக்களையும் அவன் வாழ்ந்திருந்த வீட்டையும் விட்டுவிட்டுத் தாய் வீட்டுக்கு ஓடிப்போகாமல் தனது பர்த்தா வசித்த இல்லத்திலேயே வசித்து அவ்வீட்டில் தன்காலம் உள்ளவரையும் அவன் பேரைச்சொல்லி விளக்கு வைத்துக்கொண்டு அவனது சொத்துக்களையும் நல்லவிதமாகப் பரிபாலித்து, பெரியோர்களுக்கு அடங்கி மிகவும் மானமும் மரியாதையுமாக ஈஸ்வர பக்தியுடன் நடந்து கொள்கிறார்கள். இப்படிப் பட்டவர்களின் ஜென்மம் இறுதியில் புன்ஜென்ம மாகாமல் புனித ஜென்மமாக முடியுமென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. இப்படி யெல்லாம் நாம் எடுத்துக் காட்டியதிலிருந்து நமது செல்லம்மாளைப் பற்றி வாசகர்கள் விபரீதமாக ஏதேனும் நினைத்து விடக்கூடாது. அவள் சிங்கப்பூரில் அவ்வளவு வைபவமாக வாழ்கின்றா ளென்பதை விவரித்தோமே தவிர வேறில்லை. அவள் உண்மையில் இதுவரை கற்பு நிலையிலிருந்தும் தவறவில்லை. செல்லம்மாளின் தாயாரும் பாகீரதி அம்மாளும் சகோதரிகள். பெருமாள் நாயுடுவின் ஏழாவது ஸ்ரார்த்தத்துக்காக அவ்வூரிலுள்ள

அவர்கள் பந்துக்களும் ஜாதியாரும் அழைக்கப்பட்டு திதி சாப்பாடு, சேவகாலம் ஹரிகதை முதலியவைகளெல்லாம் வெகு விமரிசையாய் நடந்தேறின. இத்திதிக்கு மாடபுரம் ஜமீன்தாராகிய ராமதாஸ் நாயுடவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். ஜமீன்தார் ராமதாஸ் நாயுடவர்கள், பாக்கியரத்னமும் சொர்னமும் கொலை செய்யப்பட்ட அன்றுதான் சிங்கைக்குவந்தார். அன்றையமுதல் அடிக்கடி நாராயணசாமி நாயுடவர்கள் வீட்டிற்கும் செல்லம்மாள் வீட்டிற்கும் வந்துபோவது வழக்கம். ராமதாஸ் நாயுடவர்கள் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து அவர் செல்லம்மாளிடத்து அதிகமாகக் காதலுற்றிருக்கின்றாரென்ற வதந்தி அவ்வூரில் வெகு பிரபலமாயிருந்தது. ராமதாஸ் நாயுடவர்கள் சுமார் ஐந்தரை அடி உயரமும் பருத்த தொந்தியும் நரைத்த மீசையுமுடையவராதலால் இவரை எல்லோரும் தாத்தா, தாத்தாவென்று ஏளனம் செய்வது வழக்கம். அவர் பேசும் வார்த்தைகளும் அவருடைய நடத்தைகளும் எல்லோருக்கும் சிரிப்பையும் ஏளனத்தையும் உண்டாக்கும் என்னவிதமாக வெல்லாம் ஏளனம் செய்தபோதிலும் அவருக்குக் கோபம் என்பதே வருவது கிடையாது. அநேகமாய் தன்னை ஏளனம் செய்கிறார்களென்று தெரிந்து கொள்ளக்கூடிய சக்திகூட அவருக்குச் சிறிதும் இல்லையென்றே சொல்லலாம்.

திதி நடந்த அன்றைய மத்தியானம் எல்லாரும் சாப்பிட்டானபின் செல்லம்மாள் இவரிடம் விளையாட்டாய்ப் பேசிக்கொண்டிருந்தாள். அப்போது சுப்பராயலு நாயுடு அவர்கள் சமீபத்தில் வந்து உட்கார்ந்தார். சற்றுநேரம் பொறுத்து நாராயணசாமி நாயுடு அவர்களும் அங்கு வந்து அமர்ந்தார். அப்போது செல்லம்மாள் "இன்றைக்குக் கட்டாயமாய் மழைவரும்" என்றுசொன்னாள்

ராமதாஸ் நாயுடு.—எண்டி குட்டீ செல்லம்! என்னடி! இருந்தாப்பிலே இருந்து நம்ம சமஸ்தானத்து ஜோசியர் சொல்ராப்போலே மழைவரு முண்ணுட்டுயே; அப்படி வாராமல்போனா உன்னே என்னபண்ரது? மழைவந்தா ஒண்ணுமில்லே: வராட்டா நீ என்னைக் கட்டி கிண்ணும்.

செல்லம்.—ஆமாம். உங்களைக் கட்டிக்கொண்டால் எனக்கென்ன குறைவு இருக்கப்போகிறது. தாங்களென்ன அந்தஸ்தில் குறைவா? அம்சையில் குறைவா? தங்கள் அழகைக் குறித்து வர்ணிக்க அந்த ஆயிரம் நாவுள்ள ஆதிசேஷனாலும் முடியாதே!

ராமதாஸ் நாயுடு.—எண்டி! என் முகத்தை நல்லாபாரு. நான்

அவ்வளவு அழகாவா இருக்கேன். நிஜமாச்சொல்லடி. அப்படிண்ணு பின்னே யேன் கட்டிகிட மாட்டேன்றே?

செல்லம்.—தங்களுடைய அழகுக்கும், எனது அழகின்மைக்கும் எணிவைத்தால்கூட எட்டாதே தாத்தா. அப்படியிருக்க நான் தங்களைக் கலியாணம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டால் தாத்தாவை எப்படிக் கலியாணம் செய்துகொண்டேனென்று எல்லாரும் சொல்லுவார்கள். அதற்காகத்தான் மாட்டேனென்கிறேன்.

ராமதாஸ் நாயுடு.—சரி, நீமாட்டேண்ணு உட்டுடப்போறெ? இப்போ இல்லாவிட்டாலும் இன்னுங் கொஞ்ச நாள்லே எப்படியாவது உன்னைக் கட்டிப்போடுவேன். நீ என்னமோ நான் கிழவண்ணு எப்பவும் எதுதுரே. அது இப்பமா தெரியும். ஒரு நாளைக்குத் தெரியப்போவுது; அப்பொல்லவா பார் சமத்துண்ணும் யார் அசடுண்ணும் தெரியும். அதெல்லாம் இருக்கட்டும் நீ மழைவருமிண்ணியே, என்னத்துக்கு? ஏஞ்சொன்னே?

செல்லம்.—இப்போது ஏன் சொன்னேனென்று தெரிந்துகொள்ளக்கூட சக்தியில்லாத தாத்தாவாகிய நீங்களா என்னை அசடாக்கப் போகிறீர்கள்? சரி, அந்த நாள் வரும்போது பார்த்துக் கொள்வோம். இப்போது எங்க சின்னப்பனாகிய நாராயணசாமி நாயுடுவும் எனது மாமனாகிய சுப்பராயலு நாயுடுவும் இத்தனை வருஷங்களாயில்லாத புதுமாதிரியாக இன்று ஒருவர் சமீபத்தில் ஒருவர் உட்கார்ந்ததால் தான் மழைவருமென்று சொன்னேன்.

நாராயணசாமி நாயுடு.—செல்லம்! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி பேசுவதற்காக இங்குவந்தேன். அது என்னவெனில் ஓர் வியாபாரவேலையாக நான் அவசரமாய்ச் சென்னைக்குப் போய்வரவேண்டியதிருக்கிறது. உனது தாயாராகிய பாகீரதி அம்மாள் எக்காரணத்தையிட்டும் நான் இங்கு இல்லாதபோது தான் இருக்கமாட்டாளென்றும் என்னுடன்கூடவே கட்டாயமாய்ச் சென்னைக்கு வருவதாயும் சொல்லுகிறாள். அவள் இஷ்டத்திற்கு விரோதமாய் நடப்பதென்றால் என்னால்கூடவில்லை. பத்மாவதியோ எக்காரணத்தைக் கொண்டும் இப்போது தனக்கு சிங்கையிலிருந்து அடியெடுத்து வைக்கமுடியாதென்றும் தனக்குச் சிங்கையில் அவசரமான வேலையிருக்கிறதென்றும் ஒரே பிடிவாதமாய்ப் பிடிக்கிறாள். உன் தங்கையின் மனோபாவத்தைக் குறித்து உனக்கு நன்றாய்த் தெரியுமாதலால் அவள் பிடித்த பிடியிலிருந்து மாறமாட்டாளென்பதை நீ செவ்வனே அறிவாய்; நாங்கள் இருவ

ரும் போனபின் அவள் நமது வீட்டில் தனியாயிருக்க வேண்டிய திருப்பதால் என்ன செய்வதென்று எனக்குத் தோற்றவில்லை. நீ மகாபுத்திசாலியாகையால் இதற்குச் சரியான யுக்தி சொல்ல வேண்டும்.

ராமதாஸ் நாயுடு.—என்னையா! என்னமோ பிரமாதமா யுக்தி கேட்கவந்துவிட்டீர்? எப்படியிருந்தாலும் செல்லம் பொம்மனாட்டி தானே. சக்கரதீவட்டி தடியங்களைப்போல் இரண்டு செக்கடி முண்டங்கள் இங்கு உக்காந்திருக்கப்போ வசம்பு நாத்தம் போகாத இந்த செல்லத்தை வந்து கேட்டீரே! என்ன புத்தியா உம்முடைய புத்தி! நீர் தான் புத்தியில்லாமலே கேட்காமல்போனாலும் நான் என்னமோ சொல்லாமே இருக்கப்போரதில்லே; இவ்வளவு கஷ்டம் என்னத்துக்கய்யா உமக்கு. பத்மாவதியை எனக்குக்கட்டிக்குடுத்துட்டா நானும் அவளும் சந்தோஷமா விளையாடிக்கிட்டு இருப்போம். இதற்கு யுக்தியாம் ஆலோசனையாம், ஒரு கேள்வியாம். பேஷ்! பேஷ்!!

சுப்பராயலு நாயுடு.—இதைக்குறித்து யோசிப்பானேன்? நமது வீட்டில் விட்டுவைத்தால் போகிறது. ஒருவேளை குழந்தை குமாரசாமி இருக்கிறானென்று யோசிக்கிறீர்கள் போலிருக்கிறது.

நாராயணசாமி நாயுடு.—அப்படி ஒன்றும் இல்லை; பத்மாவதி அங்கு இருக்கமாட்டேனென்று சொல்லிவிட்டாள். ஆகையால் அது நடக்காதகாரியம். அதைவிட செல்லம்மாள் நமது வீட்டில் வந்து குழந்தை பத்மாவதியுடன் இருப்பதுதான் சிலாக்கியமென்று தோற்றுகிறது.

ராமதாஸ் நாயுடு.—சரி! சரி!! சரி!!! இந்த தடிப்பயல்நம்ம ஆருக்கு வந்து ரொம்ப நாளாச்சி; இவனைத் தொலைக்கிறதுக்கு என்னடா வழிண்ணு மூணு பேரும்சேந்து இப்படி பேசிகிட்டு இருக்கிறீங்க. நம்மவூர்லே இருந்தாலும் காலத்தாலே சாயங்காலம் ஆட்டுக்கிடாசண்டை கோழி சண்டை, விட்டுருக்கதிலே கொஞ்சநேரம் போகும். அப்பாலே ஒரு பயலையாவது சிருக்கியையாவது சண்டைக்கிழுத்துப் பரிச்சிவிடுகிறதிலே கொறைபொழுதும் போவும். இங்கே விடிஞ்சா பொழுது போனா எனக்குச் செல்லம்மாகிட்டப் பொழுதுபோாது. அவளைக் கூட்டிகிட்டுப்போய் உன்மகளை அடைச்சிருக்கிற அறையிலே கொண்டுபோயி அடைச்சிட்டா அவ இவளைப்பார்த்தும் இவ அவளைப்பார்த்தும் அழுதுட்டு கிடப்பாக. உங்க வீட்லயா பண்ணி யாட்டமா ரெண்டு நாய் கிடக்கு. அந்தத்

தேவடியாமகன் நாயா என்னைப்பார்த்தவுடனே உர்ருண்ணு உரு மிக்கிட்டு கடிக்கவருது. என் அருமைச் செல்லத்தை பாக்காமே என்னாலே இருக்கவோ முடியாது. உங்க வீட்டுக்கு வந்து அந்த நா கடிச்சி நாயாட்டமா நான் கொலச்சி சாகிறதைவிட நான் இண்ணைக்கே வேணுமுண்ணாலும் ஊருக்குப் புறப்பட்டுப் போறேன்.

நாராயணசாமி நாயுடு.—ஐயா! தாங்கள் செல்லத்தின்பேரில் அவ்வளவு பிரியமாய் இருக்கும் விஷயம் எனக்குத்தெரியாது. என் னிமித்தம் தாங்கள் இவ்வூரைவிட்டுப் போகவேண்டாம்; நான் வேறு ஏதாவது தக்க ஏற்பாடு செய்து கொள்கிறேன்.

சுப்பராயலு நாயுடு.—ஏற்பாடு செய்வது என்ன இருக்கிறது? நமது நண்பரவர்களுக்கு செல்லம்மாள் தங்கள் வீட்டுக்குப் போனால் தான் வருத்தமிருப்பதாகத் தெரிகிறது. அதைவிட பத்மாவதியை இவ்விடத்தில் கொண்டுவந்து விட்டுவிட்டால் பத்மாவதியும் செல்லமும் ஒன்றாயிருக்கிறார்கள். அப்போது நமது நண்பரவர்களுக்கு எந்த விதமான கஷ்டமும் இருக்காதென்றே நம்புகிறேன்.

ராமதாஸ் நாயுடு.—ஆஹா! அப்படியா! கஷ்டமிருக்காதா? பத்மாவதியும் செல்லமும் பொழுதுக்குப்பேசிகிட்டிருந்தா எம்பாடு சாப்பாடு கூப்பாடாய் முடியும்போலிருக்கு. இருந்தாலும் செல்லம் பாதி நேரம் பத்மாவதிகூட அழுதுகிட்டிருந்தாலும் பாதி நேரமாவது என்கிட்ட பேசிகிட்டிருப்பாளல்ல. அப்படித்தான் செய்து தொலைங்க.

என்று சொன்னார் அதுவரையில் மௌனமாய் இருந்த செல்லம்மாள் இனி தான் சும்மாயிருப்பது உசிதமல்லவென்று நினைத்து "தாங்கள் பத்மாவதியை இங்கு கொண்டுவந்து விட்டு இங்கேயே இருக்கும்படி சொல்லிவிட்டுப் போகாமல் இவ்வளவு தூரம் யோசனை செய்தது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் அநேகமாய் பத்மாவதி இங்கு வந்திருக்க சம்மதியாளென்றே நினைக்கிறேன். அவள் வரும் விஷயத்தில் நான் அவளை வைத்துக்கொள்வதில் ஆக்ஷேபனை யில்லை" என்று சொன்னாள். உடனே ராமதாஸ் நாயுடவர்கள் வழக்கப்பிரகாரம் அவருடைய நவீன பாஷையில் பேச ஆரம்பித்தார். சற்றுநேரம் சென்றபின் எல்லாரும் அவரவர்கள் வேலைகளைப்பார்க்கச் சென்றார்கள். மறுநாட்காலையில் நாராயணசாமி நாயுடவர்களும் அவர் பத்தினியும் பத்மாவதியை அழைத்துவந்து செல்லம்மாள் வீட்டில் விட்டுவிட்டுச் சென்னைக்குப் போவதாகச் சென்றார்கள்.

பன்னிரண்டாவது அத்தியாயம்

எதிர்பாராத சம்பவங்கள்

பகவதி மணிமந்திர ஔஷதாலயத்தின் தலைவராகிய சண்டமாருத ஸ்வாமியைச் சிறையில் அடைத்த மறுநாட் காலையில் அவரை அடைத்திருக்கும் அறையின் எதிர்பக்கத்திலுள்ள ஹாலில் போலீஸ் இன்ஸ்பெக்டராகிய ராஜு முதலியாரவர்கள் உட்கார்ந்துகொண்டு தமது வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது வெளியில் காவலிருந்த போலீஸ்வீரன் ஒருவன் அவரிடம் வந்து "தங்களைப்பார்ப்பதற்காக ஒருசாய்பு வந்திருக்கிறார்" என்று சொன்னான். எந்த சாய்பு என்று கேட்டதற்கு பிணுங்கு மொகதீன் சாய்பு என்று சொன்னான். உடனே சேவகனைப் பார்த்து "சாய்பிடம் சில ரகஸ்யமான விஷயங்கள பேசவேண்டியிருப்பதால் உள்ளே ஒருவரையும் விடாமல் பாரா உஷாராயிரு" என்று ஆக்ஞாபித்துவிட்டு சாய்பை உள்ளே அனுப்பும்படிசொன்னார். சாய்பு உள்ளே வரும்போதே பூமியைத் தொட்டு சலாமிட்டுக் கொண்டு "சலாம் முதலியாரவாள்" என்று சொல்லிக் கொண்டே வந்தார்.

ராஜு முதலியார்.—சாய்பவாள் வாணும், வாணும். இந்த நாற்காலியிலே உட்காருங்கள், ஏது ரொம்பதூரம் வந்து விட்டீர்களே.

மோகதீன் சாய்பு.—தங்க காகிதம் வரும் வரும்ணு ஐஞ்ஜாறு மாசமா பார்த்துகிட்டு அல்லாவை தொழுதுகிட்டு இருந்தாங்க; நம்மள்க்கி ஒரு காகிதமாவது வாராததுலே அல்லாவுடைய கிருபையிலே உன்க்கி உடம்புக்கு என்ன செய்றுண்ணு தெரிஞ்சிட்டு போரதற்காக வந்தாங்க.

ராஜு முதலியார்.—அல்லாவுடைய கிருபையாலே நாம் சௌக்கியமாயிருக்கிறோம், நம்மைப் பார்த்துவிட்டுப் போவதற்காகவே வந்தீர்களா; அல்லது வேறு எந்த ஜோலியாய் வந்தீர்கள்?

மோகதீன் சாய்பு.—நம்க்கி இந்த ஊரிலே யார்கிட்டயும் வந்தானில்லே. அவசரமா ஐயாகிட்டதான் வந்தான்.

ராஜு முதலியார்.—என்ன ஜோலியாய் வந்தீர்களென்று தய்வு செய்து தெரிவியுங்கள்.

மோகதீன் சாய்பு.—நம்க்கி ஒரு பிள்ளை இருந்தான் இல்லே; அவன் நம்முடைய சொத்தெல்லாம் தீந்தாரா பண்ணி ரொம்பக் கடன் வச்சிட்டான். இப்போ நம்மமேலே ஒருத்தன் வாரண்

டெடுத்திருக்கான். அவன்க்கி திங்கட்கிழமை வர்ரான் இல்லே: அண்ணாக்கி பத்தாயிர ரூபா நம்மள் அவன்க்கி அழனும்; எங்கெங்கே பாத்தாலும் ஒரு தம்மடி கூட வர்ரான் இல்லே; அப்போ நாம் நினச்சான்; நம் லூயா ராசுமுதலி இருக்கான் இல்லே; அவன் கிட்டப்போறு ரெண்டு வருஷத்து கீழே நம்மிட்டே நோட்டெழுதிக் குடுத்து பத்தாயிர ரூபாய் வாங்கிருக்கான் இல்லே; அதைப் போய் வாங்கிட்டு வந்து அவன்க்கி அழலாமுன்று வந்தான்.

ராஜா முதலியார்.—சாய்பவாள்! நான் தங்களிடத்தில் பத்தாயிர ரூபாய் வாங்கினது வாஸ்தவந்தான். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் தற்காலத்தில் என் கையில் பத்தாயிரம் தம்பிடி கூட இல்லை. இப்போதுதான் மாசம் நூறு ரூபாய் சீட்டுக் கட்டிவருகிறேன். அந்தச் சீட்டு விழுந்தவுடன் தங்களுக்குச் சேரவேண்டிய வட்டியும்முதலும் பூவின்மேல் வைத்துச்செலுத்திவிடுகிறேன். தயவுசெய்து இப்பொழுது மட்டும் தொந்தரவு செய்யாதீர்கள். நாங்கள் இன்னும் பல்கூடத் துலக்கவில்லைபோலிருக்கிறது. யாரடா! ஆடர்லி!

மோகதீன் சாய்பு.—இப்போநமக்குப்பசி இருக்கிறான் இல்லே திங்கக்கிழமக்குள்ளே நம்க்கி ரூபா குடுக்காட்டா நம்க்கிக் குடி முழுகிப்போறான். அப்படி இருக்கதிலே நம்மள்க்கு தொகை கொடுத்தா சாப்பாடு முடிஞ்சாப்பிலேதான்.

ராஜா முதலியார்.—சாய்பவாள்! அப்பொழுதே என்னிடம் ஒரு காசுகூட இல்லையென்று சொன்னேனே. தாங்கள் அதை நம்பாமல் பன்னிப் பன்னிப் பேசுவதில் பிரயோஜனமென்ன? தயவுசெய்து இரண்டு மாசம் பொறுத்துக் கொண்டால் வேறு யாரிடத்திலாவது கடன் வாங்கியாவது கொடுத்து விடுகிறேன். இப்போது என்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

மோகதீன் சாய்பு.—நம்க்கி அவ்வளவு ஆவசரம் இல்லாட்டா நாம் பிஞங்கிலிருந்து *சூத்தாட்டி ஏறி இவ்வளவு தூரம் வர்ராணு? பணம் வாங்காமப் போரான் இல்லே. நல்ல வழியிலே குடுக்காட்டா கோர்ட்டிருக்கிறான், நம்மள் இருக்கிறோம். நம்மள் திங்கக் கிழமை வரைக்குந்தான் பொறுப்பான். திங்கக் கிழமை சாங்காலம் பணம் நம்ம கையில் வந்து உக்காராட்டா செவ்வாக் காத்தாலே கோர்ட் ஏர்ரான். நம்ம அல்லா சாக்ஷியா சொல்லிட்டான். அப்பால் நமக்கி கோபிச்சிக்கிள்ரதிலே உபகாரம் இருக்

* பிஞங்கில் படகை சூத்தாட்டி என்பது வழக்கம்.

கிருன் இல்லே. நம்பள் இப்போபோரான். திங்கக்கிழமை சாயங் காலம் சரியா அஞ்சிமணிக்கி வர்ரான். நம்மள் பணம் கொடுத் தாகணும்.

ராஜு முதலியார்.—சாய்பவாள்! தங்களுக்கும் நமக்கும் சுமார் முப்பது முப்பத்தைந்து வருஷமாய் லேவாதேவியுண்டு. இதுவரையில் தாங்கள் என்னே இம்சித்ததே கிடையாது. அப்படி யிருக்க இப்போது திடீரென்று வந்து நான் தங்களுக்குக் கொடு க்கவேண்டிய பத்தாயிர ரூபாயையும் 'திங்கட்கிழமைக்குள் கொ டுத்துவிட்டு மறுகாரியம், பார்' என்ருல் நான் எங்கிருந்து கொடுப் பது. தாங்கள் இப்போது கோர்ட்டில் வியாச்சியம் போட்டால் இதுவரையில் நான் சம்பாதித்த கௌரதையானபேர் போய்விடும். "இந்த இன்ஸ்பெக்டருக்குக் கடன் அதிகமாயிருப்பதால் இனி லஞ் சம் வாங்கப் பின்னடையான்" என்னும் எண்ணங்கொண்டு சர்க் காரார் என்னே வேலேயிலிருந்து தள்ளிவிடுவதால் என் பிள்ளே குட் டிகள் தெருவில் நிற்க நேரிடும். எனக்குக்கடன் தீர்ப்பதற்கு வேறு கெதி இல்லையாதலால் தாங்கள் பணத்தை இழக்கவேண்டியதாய் நேரிடும்; இதைவிட நான் சொன்னபடி இரண்டுமூன்று மாதங்கள் பொறுத்தீர்களாளுல் எப்படியாவது சமாளித்துக் கொடுக்கிறேன்.

மோகதீன் சாய்பு.—நம்க்கித் தீர்மானம் சொல்லிப் போட் டான். பெரிய சர்க்கார் உத்தியோகத்திலே இத்தனே வருஷமா இருக்கிருன் இல்லே; உன்க்கி ரூபா இல்லேண்ணு யார் நம்புரான். உன்க்கி பெரிய பங்களாவில் இருக்கிருன். கண்ணுடி, பீர்வா மேஜை, நாற்காலி எல்லா சாமான் இருக்கிருன், சாட்டுக்குதுரே இருக்கிருன். நல்ல உடுப்பு வச்சிருக்கிருன். இவ்வளவு வச்சி கிட்டு ரூபா இல்லேண்ணு சொல்லுருன். நம்க்கி நம்புரான் இல்லே.

ராஜு முதலியார்.—ஐபா! நான் சொல்வதைச் சற்று கவன மாய் கேளுங்கள். சர்க்கார் உத்தியோகத்தில் லஞ்சம் வாங்காம லும் தனது கௌரதையைப் போக்கடித்துக் கொள்ளாமலும் இருக்கும் எல்லா உத்யோகஸ்தருக்கும் சர்க்காரில் கொடுக்கும் சம்பளம் அவர்கள் செலவுக்கு மட்டும் போதுமானதா யிருக்கும். அநேக இடங்களில் அது பாதிச் செலவுகளுக்குக் கூடப் போதாததாகவே யிருக்கும். என்னேப்போல் பிள்ளே குட்டிக ளுடனிருப்பவனுக்கு லஞ்சம் வாங்காவிட்டால் கடன் இருக்குமே தவிர வேறு சொத்திருக்காது. நான் இதுவரையில் என் வேலே

யைச் சரிவரப்பார்த்து ஒரு தம்படிகூட லஞ்சம் வாங்காதவனாதலால் என்னிடம் ஒன்றும் கிடையாது. ஆகையால் என்மீது இப்போது தாங்கள் வியாஜ்ஜியம் தொடர்ந்தால் தங்கள் பணத்தை இழந்துவிடுவதோடு என்பிள்ளை குட்டிகளையும் தெருவில் நிறுத்துகிறீர் இது சத்தியம்.

மோகதீன் சாயபு.—எப்படி யிருந்தாலும் இருக்கிறான். திங்கட்கிழமைக்குள்ளே நம்மள் பணம் வராட்டா நம்மள் கோட்டுக்குப்போரான்; நம்மள் அல்லாமேல் ஆணையா சொல்ரான்; நம்மள் போய் வர்ரான்; சலாம்.

என்று சொல்லி விட்டு சாப்பு எழுந்துபோய் விட்டார். இன்ஸ்பெக்டர் ராஜூ முதலியார் அவர்கள் அதிக விசனத்தைக் காட்டும் முகத்துடன் சுமார் மூன்றுமணி நேரம் வரையில் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாரே தவிர வேலையொன்றும் பார்க்கவில்லை. இன்ஸ்பெக்டருக்கு எதிர் அறையில் அடைபட்டிருந்த சண்டமாருத ஸ்வாமியார் "இன்ஸ்பெக்டரவாள்! தங்களிடம் சில விஷயங்கள் பேச உத்தேசித்திருக்கிறேன். வேறு ஒருவரையும் இங்கு வரவேண்டாமென்று சொல்லிவிட்டு தங்களுடைய நாற்காலியை என் சமீபத்தில் இழுத்துவந்தால் தங்களுக்கு அனுகூலமான விஷயங்கள் சொல்லுகிறேன்" என்றார்.

ராஜூ முதலியார்.—சீச்சீ! மடையா! வாயை மூடு. ஆயிரக்கணக்கான ஜனங்களை எப்படிபோல் என்னையும் மந்திரம் செய்கிறேனென்றும் கைரேகைப் பார்த்துச் சொல்லுகிறேனென்றும் எனக்கு நற்காலம் வரப்போகிறதென்றும் சொல்லி ஏமாற்ற உத்தேசித்திருக்கிறாப்போ லிருக்கிறது. உன் பூச்சி என்னிடம் காட்டாதே. நீ மகா கெட்டிக்காரனென்றும் எப்படியாவது உத்யோகஸ்தர்களை ஏமாற்றி விட்டுப் போய்விடுவாயென்றும் நினைத்துத்தான் கமிஷனர் துரையவர்கள் இத்தனை டிவிஷனில் என்னிடம் உன்னை யனுப்பி அதிக ஜாக்கிரதையாய் நேரில் பார்த்துக் கொள்ளும்படிச் சொல்லியிருக்கிறார். நானும் சாப்பாடுகூட இவ்விடத்திலேயே வைத்துக் கொண்டு உன்னைப் பார்த்து வருகிறேன். நீ என்னை ஏமாற்ற நினைப்பது பிரயோஜனப்படாது.

சண்டமாருத ஸ்வாமி.—ஐயா! நான் தங்களிடம் எனது மந்திரத்தையும் மாயத்தையும் குறித்துப் பேச வரவில்லை. தங்களுக்கும் சாய்பவாளுக்கும் நடந்த சம்பாஷணையிலிருந்து தாங்கள் அதிக கஷ்டதிசையி லிருக்கிறீர்களென்று தெரிகிறது. தங்களுடைய

பிள்ளைகுட்டிகள் கஷ்டப்படாமலும் தாங்களும் சிவில் ஜெயிலுக்குப் போகாமலும் இதுவரையில் காலங்கழித்ததைப்போல் கௌரவமாய் வாழ்ந்திருக்கச்செய்ய என்னால்கூடும். தாங்கள் மட்டும் என்னை ஓடிப்போகவிட்டு விடுவதாயிருந்தால் தங்களுக்கு முப்பதினாயிரம் ரூபாய் கொடுக்கிறேன்.

ராஜா முதலியார்.—சீச்சீ! கழுதைத் தடியா! லஞ்சம் என்ற வார்த்தை பேசுவாயாகில் உன் பல்லை உடைத்துப் போடுவேன். கமிஷனர்துரை அவர்கள் சொன்ன வார்த்தை சரியாய் வந்துவிட்டதே. "பெருந்தொகை கொடுக்க இத்தடியன் பின் வாங்கான். ஆகையால்தான் இச்சிங்கையில் மகா யோக்கியனை உன்னிடம் ஒப்புவிக்கிறேன். அதி ஜாக்கிரதையாய் அவனைக்காத்து நீ என்னிடம் ஒப்புவிக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டுப் போனார். மற்றவர்களிடம் பேசுவதைப்போல் என்னிடம் இன்னொரு தரம் மட்டும் இவ்வார்த்தை பேசுவாயாகில் உன்னை நான் உதைப்பது நிச்சயம்; ஜாக்கிரதை.

என்று சொல்லிவிட்டு மௌனமாய் இருந்துவிட்டார். சண்டமாருத ஸ்வாமி விதைவிதைத்து விட்டோம். அது முளைக்காமல் போகாது. செடிவளர்ந்தபின் மாசூல் அறுத்துக் கொள்ளலாம் என்று அவரும் சும்மா இருந்தார். அன்றையதினமெல்லாம் இன்ஸ்பெக்டர் வேலையொன்றும் செய்யாமல் ஆழ்ந்த யோசனையிலேயே இருந்தார். இன்ஸ்பெக்டருக்கு யோசனை அதிகமாக ஆக சண்டமாருத ஸ்வாமிக்கு சந்தோஷம் அதிகரித்துவந்தது. கடவுளே தம்பால் நின்று சாய்பை இன்ஸ்பெக்டரிடம் அனுப்பினதாக நினைத்தார்.

இந்த இடத்திலே கடவுளின் பேச்சு குறுக்கே வந்ததை நோக்கி நாம் பெரிதும் வருத்தமடைகிறோம். வெகுபேர் கடவுளின் நாமத்தைத் தங்களின் துர்க்கிருத்தியங்களிலெல்லாம் இழுத்துவிட்டு அவருடைய மகிமைக்கு குறைவையுண்டு பண்ணுகிறார்கள். ஒரு சாமான்யத் திருடனுங்கூட "எனக்கு இன்று நல்ல லாபங்கிடைத்தால், சாமி! உனக்குப் பொங்கலிடுகிறேன்" என்று பிரார்த்தித்துக்கொண்டு வெளியேறுகிறான். பரிதானம் வாங்குகிற உத்தியோகஸ்தர்களும் தங்களுக்கு அன்று பலமான வருமானம் ஏற்பட்டால் "கடவுள் கிருபை செய்தார்" என்கிறார்கள். எஜமானனுக்குத் தெரியாமல் சிறுகச்சிறுக அடித்துக்கொண்டு போகிற உள் திருடர்களும் "எஜமானனுக்கு நமது கபடங்கள் ஒன்றும் தெரியாததும் கடவுளின் தயவால்தான்" என்று கருது

கிறார்கள். ஸ்திரீகளின் கற்பைப் போக்குவதே தொழிலாகக் கொண்ட ஆடவர்கள் "அவள் நமது வலையில் அகப்படும்படிக் கடவுள் கடாக்ஷிக்கமாட்டாரா" என்று பிரார்த்திக்கிறார்கள். புருஷனுக்குத் தெரியாமல் பல இடங்களுக்கு வரத்துப் போக்காயிருக்கிற துஷ்டைகளும் "தங்களைப்பற்றி உலகம் ஸம்சயிக்காதது கடவுளின் அருளால்தான்" என்று பாராட்டி மனவுறுதிகொள்ளுகிறார்கள். உலகத்தில் நடக்கும் அக்கிரமங்களில் இப்படியாகக் கடவுளின் பெயரை சம்பந்தப்படுத்துவது பெரிய அக்கிரமமென்றே சொல்லவேண்டும். இந்தத் துராத்மாக்களுக்கு நரகத்திலேயுங்கூட ஒரு நல்ல இடமகப்படுவ தரிது.

நிற்க, மறுநாள் அதாவது வியாழக்கிழமை காலையில் சண்டமாருத ஸ்வாமியார் இன்ஸ்பெக்டரைப் பார்த்து "ஐயா! நேற்று நான் சொன்ன விஷயத்தை ஆலோசித்தீர்களா?" என்றார்.

ராஜூ முதலியார்.—அடே மடையா! நேற்றே இவ்விஷயத்தைப் பற்றி என்னிடம் பேசாதே யென்று சொன்னேனே ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறாய்?

சண்டமாருத ஸ்வாமி.—தயவுசெய்து நான் சொல்வதைச் சற்று கவனியுங்கள். தாங்கள் வேலைக்கு வந்தது முதல் இதுவரையில் தங்களைப் போலொத்த* லஞ்சம் வாங்காத யோக்கியமான உத்தியோகஸ்தர் கிடையாதென்றபேர் சம்பாதித்தீர்களே. அதனால் தாங்கள் அடைந்த சுகிர்தமென்ன? துலுக்கப் பயலுக்குப் பத்தாயிர ரூபாய் கடனானதுதான் கண்ட பலன்போலிருக்கிறது. இன்னொருதரமும் சொல்லுகிறேன். நான் சொல்லுகிறபடி நடப்பதால் தாங்கள் தங்கள் பிள்ளை குட்டிகள் சகிதம் சுகமாய் ஜீவித்திருக்கக்கூடும். அப்படி யில்லையென்று மறுப்பீர்களானால் தாங்களும் தங்கள் பிரியமுள்ள பெண்ஜாதியும், தங்கள் அருமைக்குழந்தைகளும் சோற்றுக்குக்கூட வழியின்றித் திண்டாடும்படியான காலம்வந்துவிடும்; தாங்கள் உத்தியோகத்திலிருக்கிறஇப்பொழுதே கடன் கேட்டால் திருப்பக்கொடுப்பீர்களோ கொடுக்கமாட்டீர்களோ வென்ற பயத்தால் தங்களின் நண்பர்களாக நினைத்திருப்பவர்களெல்லாம் கடன்கொடுக்கச் சம்மதியாமல் சாக்குப்போக்குச் சொல்லுவார்கள். இப்போதே அக்கெதியானால் தங்கள் வேலைபோனபின் ஒரு தம்பிடிகூட ஒருவரும் கொடுக்கமாட்டார்கள். இது நிச்சயம்; சத்தியம்.

ராஜூ முதலியார்.—இதென்னடா பெரிய சனியனாயிருக்கிறது

ஐயா! சுவாமியாரே உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். என்னுடைய பெண்ஜாதி பிள்ளைகளின் துர்ப்பாக்கியமான நிலைமையைக் குறித்து நீர் பேசி என் மனோதிடத்தைக் கலைத்து விடாதேயும்.

சண்டமாருத ஸ்வாமி.—உள்ளத்தைச் சொன்னால் என் தங்களுக்கு மனவருத்தமுண்டாக வேண்டும். தங்கள் அருமைப்பிள்ளைகள் தங்களிடம் வந்து "நாயனா பசியெடுக்கிறது; ஆப்பம், காப்பி இல்லாவிட்டாலும் ஏதாவது கொடுத்து எங்கள் பசியைத் தீருங்கள்" என்று சொல்லும் போது தங்கள் மனம் எப்படி இருக்குமென்று தயவுசெய்து சற்று யோசித்துப் பாருங்கள்.

ராஜா முதலியார்.—ஐயா! உமக்குக் கோடி நமஸ்காரம். நீர் எனக்கு வரப்போகும் கஷ்டதிசைகளையெல்லாம் ஒவ்வொன்றாய் எடுத்துக்கூறவேண்டாம். நீர் சொன்ன விஷயங்களைப் பற்றி யோசித்துச் சொல்லுகிறேன். தயவுசெய்து நீர் சாயங்காலம் வரை ஒன்றும் பேசாதிரும்.

என்று சொல்லிவிட்டு போலீஸ்காரரை அனுப்பி அவ்வூரில் தனவந்தனான ஒரு செட்டியையும் ஒரு மார்வாடியையும் தனது நண்பர்களில் இருவரையும் தனித்தனி அழைத்துவரச் செய்து மொகதீன் சாய்புக்குப் பத்தாயிரம் ரூபாய் கடன் கொடுக்கவேண்டிய திருப்பதையும் சாய்பு உடனே பணத்தைக் கொடுக்காவிட்டால் சம்மன் செய்வதாய்ச் சொன்னதையும் சொல்லி அத்தொகை கடன் கொடுக்கும்படி ஒவ்வொருவரையும் தனித்தனியாய்க் கேட்டார். ஒவ்வொருவரும் கொடுக்க முடியாதென்று சாக்குப்போக்குச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்களே ஒழிய ஒருவரும் தருவதற்கு இசையவில்லை. இதற்குள் சாயங்காலமாகிவிட்டதால் சண்டமாருத ஸ்வாமியார் இன்ஸ்பெக்டரைப் பார்த்து "ஐயா! நான் சொன்ன விஷயங்களில் முதல் விஷயம் பலித்துவிட்டது. இன்னமும் என் சொல்லைத் தள்ளுவீர்களானால் கட்டாயமாய் பெண்டு பிள்ளைகளுடன் தாங்கள் சோற்றுக்குக்கூடத் திண்டாடுவது நிச்சயம்," என்று சொல்லிவிட்டு மௌனமாயிருந்தார்.

ராஜா முதலியார்.—என்னதான் செய்யச் சொல்லுகிறீர்? உம்முடைய அபிப்பிராயத்தைத்தான் சொல்லும் பார்ப்போம்.

சண்டமாருத ஸ்வாமி.—பார்ப்பதென்ன இருக்கிறது? என்னை இங்கிருந்து தப்பி மறைந்துகொள்ள விட்டுவிட்டால் தங்களுக்கு முப்பதினாயிரம் ரூபாய் கொடுக்கிறேன்.

ராஜா முதலியார்.—பேஷ்! பேஷ்! நன்றாய்ச் சொன்னீர்.

உம்மை மறைந்துகொள்ளும்படி விட்டுவிட்டால் அப்பால் நான் பணம் பெறுவது எப்படி? கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்து வெண்ணெய் உருகிக் கண்ணில் விழுந்து கண் மூடிக்கொண்டவுடனே கொக்கைப் பிடித்துக்கொள்ளும் வித்தையைப்போலிருக்கிறதே நீர் சொல்வது!

சண்டமாருத ஸ்வாமி.—ஐயா! நான் சொன்ன வார்த்தையிலிருந்து பிறண்டு பேசமாட்டேன். பந்தோபஸ்தான இடத்தில் நான்போய்ச் சேர்ந்தவுடனே சத்தியமாய் முப்பதாயிரம் ரூபாய் அனுப்பிவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்.

ராஜு முதலியார்.—சரி, சரி: இந்த ஜெபம் என்னிடஞ்சாயாது. ரூபாய்களாகவாவது அல்லது சாவரன்களாகவாவது என் கையில் முப்பதினாயிரம் ரூபாய் கொடுத்தாலொழிய நான் சம்மதிக்கமாட்டேன். அந்தப்பேச்சே என்னிடம் பேசவேண்டாம்.

சண்டமாருத ஸ்வாமி.—நான் தங்கள் பந்தோபஸ்தில் அடைபட்டிருக்கும்பொழுது எப்படிப்பணம் கொடுக்க முடியும். நான் ரூபாய்கள் இங்கே வைத்துக்கொண்டா யிருக்கிறேன்?

ராஜு முதலியார்.—உமக்கு நம்பிக்கையுள்ள ஒரு நண்பருக்கு எழுதிப் பணம் தருவித்துக்கொள்ளும். அப்படிச் செய்ய முடியாவிட்டால் இனி இந்தப் பேச்சே என்னிடம் எடுக்கவேண்டாம். ஒரு ஒத்தாசை வேண்டுமானால் செய்கிறேன். அதாவது உமது நண்பருக்கு எழுதும் கடிதத்தை அவரிடம் சேர்ப்பிக்கும்படி தக்க ஏற்பாடு செய்கிறேன். ரூபாய் பெறாமல் உம்மை வெளியே அனுப்புவேனென்று நீர் கனவிலும் நினைக்கவேண்டாம்.

என்று சொன்னார். அதற்கு சண்டமாருத ஸ்வாமி ஒன்றும் சொல்லாமல் அழ்ந்தயோசனையிலிருந்தார். மறுநாள் வெள்ளிக்கிழமை காலையில் சண்டமாருதஸ்வாமி காகிதம், பேனா முதலியன கொண்டு வரச்சொல்லி ஓர் கடிதம் எழுதி இன்ஸ்பெக்டர் கையில் கொடுத்து அதை நம்பிக்கையுள்ள ஓர் ஆளிடம் தந்து அந்த விலாசத்தின்படி கொண்டுபோய்ச் சேர்த்தால் அவர்கள் ரூபாயுடன் வருவார்களென்றும் அப்போது ரூபாய்கள் பெற்றுக்கொண்டு தன்னை விட்டுவிடுவதற்காக சத்தியம் செய்து கொடுக்கும்படி இன்ஸ்பெக்டரைக் கேட்டு உறுதிமொழி பெற்றுக்கொண்டு கடிதத்தை அவரிடம் கொடுத்தார்.

ஆஹா! சத்தியம் என்பது எங்கெந்த வழிகளிலெல்லாம் உபயோகமாகிறது பாருங்கள்! இன்ஸ்பெக்டரும் சாமியாரும் சத்தி

யஞ் செய்துகொண்ட காரியம் அந்த சத்தியம் என்கிற பரம வாக்குக்கு ஏற்ற கௌரவம் பொருந்தியதா? ஐயா இது என்ன அநியாயம்! நமது குழந்தைகளில் அநேகர்—ஏன் பெரியவர்களிலும் அநேகர் இந்த சத்தியம் என்ற பதத்தை எடுத்ததற்கெல்லாம் வழங்குகிறார்கள். அது அவர்களுக்கு 'தண்ணீர்குடித்த பாடாக' இருக்கிறது. சத்தியம் என்ற பதம் ஈஸ்வர சொரூபம் பொருந்தியதாயிருக்க, அதனை வீணில் வழங்குதல் பெரும் பாவம். ஆனாலும் இங்கு மற்றொரு ரஸமான குறிப்பொன்றையும் கொடுக்க விருப்பமடைகிறோம். அதாவது கேவலம் சண்டமாருத சாமி போன்ற அற்பர்கட்கு சத்தியத்தி னிடத்து இருக்கிற மதிப்பு விஸ்வாசம்கூட அநேக பெரிய மனிதர்களிடத்துக் காணோமென்பதே. விசேஷமாக கடவுள் பக்தி நிறைந்தவர்களென்று வெளிக்குத் தோன்ற நடப்பவர்களே சத்தியம் என்ற பதத்தை ஒரு பொருட்டாக மதிக்கிறதில்லை. "பிரபஞ்ச விலாசத்தில்" இதுவுமொரு விநோதமே போலும்.

இப்படியிருக்க அதே வேளையில் செல்லம்மாளும், பத்மாவதியும் செல்லம்மாள் வீட்டு நடு ஹாலில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். பத்மாவதி அதிகவிசனமான முகத்துடன் உட்கார்ந்திருந்தாள். செல்லம்மாள் அவளுக்குத்தேறுதல் சொல்லிக்கொண்டிருந்தாள். அப்போது சுப்பராயலு நாயுடு அவர்கள் பத்மாவதியைப் பார்ப்பதற்காக வந்து அவளிடம் பேசிக்கொண் டிருந்தார். அப்போது ஜமீன்தார் ராமதாஸ் நாயுடு தில்லானா பாட்டுப் பாடிக்கொண்டே வந்து செல்லம்மாளின் மடியின்மீது உட்கார வந்தார். செல்லம்மாள் சற்று விலகிப் போகவே இவர் சோபாவில் விழுந்து தடுமாறிக் கீழேயும் விழுந்துவிட்டார். எல்லாரும் சேர்ந்து தூக்கவே ஒருவாறு சிரித்துக்கொண்டே எழுந்து உட்கார்ந்தார். இவர்கள் பலவிதமாய்ப் பேசிக்கொண் டிருக்கும்பொழுதே செல்லம்மாளின் வேலைக்காரன் ஒரு கடிதம் கொண்டுவந்து கொடுத்தான். அக்கடிதத்தைப் பார்த்ததும் செல்லம்மாள் முகம் வேறுபட்டதாயினும் சிரித்துக் கொண்டே "ஐயா! நான் ஓர் அவசர ஜோலியாகச் சற்று வெளியே போய் வரவேண்டியதிருக்கிறது, நான் வரும்வரையில் நீங்கள் மூவரும்பேசிக்கொண்டிருங்கள்; இதோ ஒரு நொடியில் வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனாள். அவள் போனதும் ராமதாஸ் பின்வருமாறுசொன்னார்.

ராமதாஸ் நாயுடு.—சுப்பராயலு நாயுடவாள்! என்னை நீங்கள் எல்லோரும் பைத்தியக்கார னென்று நினைத்துக்கொண் டிருக்கிறீர்கள். இந்தப் பைத்தியக் காரனுக்குத் தெரிந்த ஒரு விஷயம் மகா புத்திசாலிகளாகிய உங்களுக் கெல்லாம்கூடத் தெரியாதென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன்.

சுப்பராயலு நாயுடு.—தாங்கள் சொல்லும் ஆயிரக் கணக்கான கதைகளில் இதுவும் ஒன்றாயிருக்கலாம். எதோ சொல்லுங்கள் பார்ப்போம். தாங்கள் சொன்னபிற்பா டல்லவா எங்களுக்குத் தெரிந்த விஷயமென்றும் தெரியாத விஷயமென்றும் ஏற்படும்.

ராமதாஸ் நாயுடு.—இந்த ஊரில் ஒரு வீடு இருக்கிறது. அந்த வீட்டிற்குள் யாருக்குந் தெரியாத அறை ஒன்றிருக்கிறது. அது சுமார் பதினைந்து அடி சதுரமான அறை. உயரம் சுமார் முப்பத்திரண்டு அடி இருக்கலாம். அந்த அறையிலிருந்து எவ்வளவுதான் கூப்பாடு போட்டாலும் வெளியில் கேட்காது. அந்த அறையின் நான்கு சுவர்களில் நான்கு படங்கள் தொங்கப் போட் டிருக்கின்றன. வடபக்கத்து சுவரில் இருக்கும் படம் ராவண சந்நியாசி சீதையை தூக்கிப்போகும் படம்.

என்று சொன்னவுடனே பத்மாவதி அம்மாள் அதுவரையில் ராமதாஸ் இருந்த பக்கங்கூடத் திருப்பிப் பார்க்காமலும், பேசாமலும் விசனமாயும் மௌனமாயும் இருந்தபோதிலும் ராமதாஸைப் பார்த்து "ஐயா! மற்ற மூன்று சுவர்களில் என்னென்ன படங்கள் இருக்கின்றன அந்த அறையில் என்னென்ன சாமான்கள் இருக்கின்றன" என்றாள். "கீழ் பக்கத்துச் சுவரில் சகுந்தலா ஜனனமும், தென்பக்கத்துச் சுவரில் அன்னம் தமயந்தி படமும், மேல்பக்கத்துச் சுவரில் திரௌபதி வஸ்திராபஹரணப் படமும் இருக்கின்றன. அறையின் ஒரு மூலையில் பெரிய இரும்புக் கட்டில் ஒன்று போட்டிருக்கிறது. இரும்புக் கட்டிலின்மேல் ரோஜா புஷ்பங்கள் போட்ட பட்டினால் தைக்கப்பட்ட மெத்தையொன்று போடப்பட் டிருக்கிறது." என்று சொன்னார், மற்ற விவரங்கள் சொல்லுமுன் பத்மாவதி "போதும், போதும் நிறுத்துங்கள். அந்த அறை எங்கிருக்கிறது?"

ராமதாஸ்.—ஓகோ! யாருக்குந்தெரியாதென்று நான் நினைத்தது சரியல்லபோலிருக்கிறது. நீ அவ்வளவு அவசரமாய்க் கேட்பதைப் பார்த்தால், உனக்கு அந்த அறை தெரியுமென்றும் அந்த அறையில்தான் நீ சிறைவைக்கப்பட் டிருந்தாயென்றும் நான்

நினைக்கிறேன். நான் சொல்வது சரிதானு ?

பத்மாவதி.—ஐயா ? அதெல்லாம் ஏன் கேட்கிறீர்கள் ? தயவு செய்து அந்த அறை எங்கே இருக்கிறதென்று சொல்லுங்கள்.

ராமதாஸ்.—ஓகோ ! நான் கேட்கும் கேள்விக்கு நீ ஜவாபு சொல்லக்கூடாது ; நீ கேட்பதற்கு மட்டும் நான் ஜவாபு சொல்ல வேண்டுமோ ? சொல்லமாட்டேன்.

பத்மாவதி.—ஐயா ! தாங்கள் நினைத்தது சரிதான். தயவு செய்து அந்த அறை எங்கிருக்கிறதென்று தெரிவியுங்கள்.

ராமதாஸ்.—அவ்வறை இவ்வீட்டிற்குள் தான் இருக்கிறது.

பத்மாவதி.—இந்த வீட்டில் இருக்கும் ஒவ்வொரு அறையும் நான் அறிவேன். இவ்வீட்டில் அவ்வறையே கிடையாது, ஆகையால் தாங்கள் ஏளனஞ் செய்கிறீர்களென்றே நம்புகிறேன்.

ராமதாஸ்.—"கிழவன் வார்த்தை கின்னரக்காரனுக்கேற்குமா" என்பதுபோல் நீ என் வார்த்தையை நம்பமாட்டாய்போ லிருக்கிறது. ஐயா ! சுப்பராயலு நாயுடு அவர்களே! தயவுசெய்து தாங்களும்கூடவாருங்கள். நான் இவ்வீட்டிற்குள்ளேயே பத்மாவதிக்கு அவ்வறையைக் காட்டுகிறேன்.

என்று சொல்லி அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு மாடியின்மீது சென்று அங்கு வைத்திருந்த ஓர் புஸ்தக ஷெல்ஃபை சற்று தள்ளினதும் அநேகமாய் சுவரென்று நினைக்கும் படியே இருந்த ஓர் கதவு இருந்தது. ராமதாஸ் நாயுடு தன் ஜேபியிலிருந்து ஓர் சாவியை எடுத்துக் கதவைத் திறந்து மூவரும் உள்ளே சென்றதும் உள்ளே இருந்தபடியே கதவைப் பூட்டிக் கொண்டு அங்கு அமைந்துள்ள சூட்சுமப் படிகளின் வழியாய்க் கீழே இறங்கிச் சென்றதும் அங்கேயும் ஓர் கதவு இருந்தது. அக்கதவையும் தன் ஜேபியில் வைத்திருந்த மற்ருெரு சாவியால் திறக்க அவர் சொன்ன அறை காணப்பட்டது. அப்போது சுப்பராயலு நாயுடுவும் ராமதாசும் அறையின் உள்ளே சென்ருர்கள். பத்மாவதி உடலெல்லாம் பதற பேச வாயெழாமல் அவ் வாசலிலேயே நின்றுகொண்டிருந்தாள். அப்போது மேல் கதவைத் திறந்துகொண்டு யாரோ இருவர் அவ்வறைக்கு வரும் சத்தம் கேட்டது. சற்றுநேரத்திற்கெல்லாம் செல்லம்மாளும் சண்டமாருத ஸ்வாமியும் அங்கு வந்தார்கள். செல்லம்மாளுக்கும் சண்டமாருத ஸ்வாமிக்கும் உள்ளே ராமதாஸ் நாயுடுவும் சுப்பராயலு நாயுடுவும் இருக்கும் விவரம் தெரியாது, பத்மாவதி செல்

லம்மாளைப் பார்த்து "என்னை ஏண்டி இவ்வறையில் இத்தனை நாள் சிறையில் வைத்திருந்தாய்" என்று கேட்டான். உடனே செல்லம்மாள் அவனுக்கு ஒன்றும் ஜவாபு சொல்லாமல் சண்டமாருத ஸ்வாமியைப் பார்த்து "இனி இவனை உயிருடன் விட்டால் நம் இருவர் உயிருக்கும் இவன் உலைவைத்து விடுவான். ஆகையால் இவனை இப்போதே கொன்று விடுவது நல்லது." என்று சொல்லிக்கொண்டு ஓர் சிங்கமானது ஓர் அற்பப் பிராணியின்மேல் பாய்வதுபோல் பதுமாவதியின்மேல் பாய்ந்து அவள் கழுத்தை இறுக்கிப் பிடித்துக்கொல்ல யத்தனித்தாள். அப்போது ராமதாஸ் அவள் எதிரில் வந்து "என் அருமைச் செல்லமே! பெருமாள் நாயுடுவையும் பசுவையொத்தவளென்ற பாக்கியரத்னத்தையும் அவள் வேலைக்காரியாகிய சோணத்தையும் கொன்றது போதாதா? அந்தோ உன் சிறிய கைகள் நான்காவது கொலையும் செய்ய வேண்டுமா?" என்று மிகுந்த சாந்தமாய்க் கேட்டார். அதற்குள் சுப்பராயலு நாயுடுவும் இவன் எதிரில் தோன்ற பதுமாவதியின் கழுத்தைப் பிடித்த செல்லம்மாளின் கைகள் சோர்வுற்று விழுந்தன. அப்போது சண்டமாருத ஸ்வாமி ராமதாஸைப் பார்த்து "இவ்வளவு சங்கதி தெரிந்த நீ யார்? மடையனைப் போல் யார் திட்டுதலும் பட்டுக்கொண்டிருந்த முட்டாளாகிய உன்வாயில் இவ்வளவு சமாசாரங்கள் பிறக்கிறதாகையால் நான் உன்னை உயிருடன் விடப்போவதில்லை. இதோ கொன்றுபோடுகிறேன் பார்" என்று கட்டாரியைக் கையில் எடுத்துக் கொண்டு குத்தவந்தார். உடனே ராமதாஸ் அவர்கள் தன் ஜேபியிலிருந்து சாவதானமாய் ஒரு கைத்துப்பாக்கியை எடுத்துக்காட்டி "இன்னொரு அடி எடுத்து வைப்பாயாகில் தெருவில் திரியும் பைத்தியம் பிடித்த நாயைச் சுட்டுக் கொல்வதைப்போல் உன்னைக் கொன்று போடுவேன். நான் யாரென்று அறிந்துகொள்ள நீ அதிக ஆவலாயிருப்பதால் சொல்லுகிறேன் கேள். நான் இத்தனை நாட்களாய் செல்லம்மாளும் மற்றவர்களும் செய்த ஏளனங்களையும் திட்டின திட்டுகளையும் கேட்டுக்கொண்டு செல்லம்மாளைக் கலியாணஞ் செய்துகொள்ள வந்த ஓர் பைத்தியம்பிடித்த கிழட்டு மட ஜமீன்தாரன் என்று நீங்கள் எல்லோரும் நினைத்தீர்கள். நீ சென்னையிலாவது வேறு எந்த ஊரிலாவது தீய செய்கைகள் செய்வதாகத் தெரிந்தால் பெருமாள் நாயுடுவுக்கு எழுவருஷங்களுக்கு முன்னால் எடு மருந்தென்று விஷத்தைக்கொடுத்து அவரைக்

கொன்ற குற்றத்தை நீ சாக்ஷிகள் முன்னிலையில் ஒப்புக்கொண்டு கையெழுத்துப்போட்ட பத்திரத்தை சர்க்காருக்குக்காட்டி உன்னைத் தண்டனையடையும்படி செய்யவேண்டுமென்று பெருமாள் நாயுடு சொல்லி பத்திரத்தை பந்தோபஸ்தாய் வைத்திருக்கும்படி கொடுத்த துப்பறியும் கோவிந்தன் நான்" என்றார். இப்படிக் கோவிந்தன் சொன்னதும் சண்டமாருத ஸ்வாமி "நீ என்னைச் சுட்டுக்கொன்றாலும் சரிதான். உன்னைக்கொன்றுவிட்டு சாகிறேன் பார்." என்று கோவிந்தன் மேல்பாய எத்தனித்தான். கோவிந்தன் சொன்னபிரகாரம் துப்பாக்கியால் சுடாமல் சும்மாயிருந்தார். ஆனால் பின்னாலிருந்து யாரோ மூவர் திடீரென்று தோன்றி சண்டமாருத ஸ்வாமியைப்பிடித்துக் கையிலும் கால்களிலும் விலங்குகள் மாட்டினார்கள். அப்போது கோவிந்தன் "அடே! சீனு, பெண்புலியைக் கூண்டில் அடை. இல்லாவிட்டால் ஒருக்கால் அது பத்மாவதியைப்பாய்ந்து கொன்றுவிடும்" என்று சொன்னார். உடனே சீனு செல்லம்மாளுக்கும் விலங்குகள் மாட்டிவிட்டார்.

செல்லம்மாள்.—ஐயா! தாங்கள் இனி எனக்கு விலங்குகள் மாட்டவேண்டிய அவசியமே கிடையாது. ஏனென்றால் எப்போது சொர்ணத்திற்கு விஷம் வைத்துக்கொன்றது சண்டமாருதஸ்வாமிதானென்று துப்பறியும் கோவிந்தனுக்குத் தெரியுமென்று சாமியார் சொன்னவுடனேயே பாக்யரத்னத்தைக் கொன்றது நான்தான் என்று அவர் கண்டுபிடித்திருப்பாரென்றும் இனி அவர் கையிலிருந்து தப்புவது சாத்தியமல்லவென்றும் தெரிந்தே விஷம் வாங்கித் தயாராய் வைத்திருந்தேன். இங்கு பத்மாவதியில் கூட சுப்பராயலு நாயுடுவையும் தங்களையும் கண்டவுடனே எனது விஷயங்களெல்லாம் வெளிப்பட்டு விட்டனவென்று தெரியும். அப்போதே நான் விஷத்தைச் சாப்பிட்டுவிட்டேன். இனி மூன்று மணி நேரந்தான் ஜீவித்திருப்பேன். மாஜிஸ்டிரேட் அவர்களை வரவழைத்தால் என் பாக்கியரத்னத்தையும் சொர்ணத்தையும் நான் கொன்றேனென்ற விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன்.

என்றாள். உடனே இவர்களை அழைத்துக்கொண்டு எல்லாருமாக மேலேபோய் செல்லம்மாளையும் சண்டமாருத ஸ்வாமியையும் வெவ்வேறு அறைகளில் பூட்டி சீனு முதலானவர்களைக் காவல் வைத்துவிட்டு ஜமீன்தார் ராமதாஸ் என்ற கோவிந்தனும், பத்மாவதியும் சுப்பராயலு நாயுடுவுமாக எப்போதும் செல்லம்மாள் உட்கார்ந்து பேசும் அறையில் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது

இன்ஸ்பெக்டர் டாஸ்துரை ஜமீன்தார் ராமதாஸ் நாயுடுவைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறாரென்று வேலைக்காரன் சொன்னான். அவரை உடனே உள்ளே வரச்சொல்லவே, வந்த இன்ஸ்பெக்டர் டாஸ்துரையைப்பார்த்து ராமதாஸ் "ஐயா! தாங்கள் ஒருமணி நேரத்திற்கு முன்னாலேயே கோகிலாம்பாள் என்ற பாக்யரத்னத்தை நான் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டி வாரண்டுடன் என்னைக் கைதிசெய்வதற்காக வருவீர்களென்று எதிர்பார்த்திருந்தேன். தாங்கள் ஜமீன்தார் ராமதாஸுக்கும் கோகிலாம்பாள் என்றபாக்கியரத்னத்திற்கும் சாவகாசபார்க்கம் உண்டாவென்று சென்னைக்குத் தந்தி அடித்துக் கேட்டதும் இரண்டுமூன்று மாதக் காலமாய் கோகிலாம்பாள் ராமதாஸைக் கலியாணம் செய்துகொள்ள சம்மதித்திருந்ததாகவும் அப்பால் ஒர்நாள் பலர் முன்னிலையில் சபையில் வைத்து ஜமீன்தார் ராமதாஸை ஏளனம் செய்வதற்காகவே தான் கலியாணம் செய்துகொள்ள சம்மதித்ததாக நடித்ததாகவும் சொன்னதின்பேரில் ராமதாஸுக்குக் கோபம் வந்து "உன்னை எப்படியாவது கொன்றுபோடுகிறேன் பார்" என்றுவர்பித்ததாகவும் பதில் தந்தி வந்தவுடனே ஜமீன்தார் ராமதாஸ் எப்போது சிங்கைக்கு வந்தாரென்று தாங்கள் விசாரித்ததாகவும் கோகிலாம்பாள் இறந்த அன்று காலையில் தான் வந்ததாகவும், ராமதாஸ் மாறுவேஷம்பூண்டு வெளியேபோய் அன்றைய இராத்திரி வெகுநேரத்திற்குப் பிறகு வந்தவிஷயம் தாங்கள் விசாரித்து அறிந்தவுடனே ராமதாஸ் தான் கொலைசெய்திருக்க வேண்டுமென்று தாங்கள் யூகித்து வாரண்ட்வாங்கத் தாங்கள் சென்றது வரையில் நான் அறிவேன்" என்றார். இவர் இப்படிச்சொன்னதும் இன்ஸ்பெக்டர் டாஸ்துரைக்கு இன்னதுதான் செய்வதென்று தெரியாமல் திகைத்து நிற்கையில் போலீஸ் கமிஷனர் துரையவர்கள் அவ்விடம் வந்தார்கள். வந்ததும் கோவிந்தன் டாஸ்துரையவர்கள் வந்த விஷயத்தை கமிஷனரிடம் தெரிவித்தார். அவர் இன்ஸ்பெக்டர் டாஸைப் பார்த்து ராமதாஸின்பேரில் வாரண்டு எடுக்கும் விஷயம் முன்கூட்டி தனக்குத்தெரிவித்திருந்தால் இன்ஸ்பெக்டர் டாஸ்துரையும் பொதுவாக சிங்கப்பூர் போலீஸாரும் அவமானமடையாதபடி தாம் தடுத்திருக்கலாமென்றுசொல்லி ராமதாஸைச் சுட்டிக்காட்டி "இவர்தான் சென்னையில் கியாதிபெற்ற துப்பறியும் கோவிந்தன் நாம் கண்டுபிடிக்க முடியாமல் திண்டாடிக்கொண்டிருந்த பத்மாவதியைக்கண்டுபிடிப்பதற்காக இவர் இங்கே

ஜமீன்தார் ராமதாஸ் என்ற மறுபேர் பூண்டுவந்தார். அவரை நான் இக்கொலைகளைத் துப்புத் துலக்கும்படி கேட்டுக் கொண்டதின் பேரில் அவர் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து இவ் வீட்டில் வைத்திருக்கிறார். இப்போது மாஜிஸ்டிரேட்டு முன்னிலை யில் ஓர் குற்றவாளி கொடுக்கும் வாக்கு மூலத்தைக்கொண்டு நீர் சகலமும் அறிந்து கொள்ளலாம்," என்று சொன்னவுடனே மாஜி ஸ்ரேட் துரையவர்களும் வந்து சேர்ந்தார்கள். கோவிந்தன், போ லீஸ் கமிஷனர் மாஜிஸ்ரேட், இன்ஸ்பெக்டர் டாஸ்துரை, சுப்பரா யலு நாயுடு ஆகிய எல்லோரும் செல்லம்மாளின் அறைக்குட்சென் றார்கள். உடனே செல்லம்மாள் மாஜிஸ்டிரேட்டிடம் பின்வருமாறு சொன்னாள்.

செல்லம்மாள்.—என் புருஷர் இறந்துபோனபின் சிங்கைக்கு வந்தது முதல் எனது மாமனார் சுப்பராயலு நாயுடு அவர்களின் புத்திரனாகிய குமாரசாமி நாயுடுவை நான் கலியாணம் செய்து கொள்ளவேணுமென்ற எண்ணம் கொண்டேன். அவருக்குப் பத் மாவதியைக் கலியாணம் செய்து கொள்ளவேண்டுமென்னும் எண் ணம் இருப்பது கண்டு அக்கலியாணம் நடக்காதபடி இயற்கையா கவே எனது மாமனார் அவர்களுக்கும் எனது சிறிய தகப்பனாராகிய நாராயணசாமி நாயுடு அவர்களுக்கும் இருந்த விரோதத்தை நான் என் சிறிய தகப்பனரிடம் அதிகமாக மூட்டிவிட்டு கிளறிக்கொ டுத்து அதிகப்படும்படி செய்தேன். அவருக்கு இஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும் பத்மாவதி குமாரசாமி நாயுடுவையே கலியா ணம் செய்துகொள்ளப்போகிறாள் என்ற விஷயம் எனக்குத் தெரி ந்தவுடனே என் சகோதரியாகிய அவளைக்கொல்ல மனம் துணியா மல் அவள் பேரில் அபவாதம் உண்டாக்க நினைத்து எனது தாத்தா காலத்தில் மூடிவைத்த ரகசிய அறையைத் திறக்கும் படி செய்து அதில் பத்மாவதியை சண்டமாருதஸ்வாமியின் உதவியால் பிடித்து வந்து பலநாட்கள் வைத்திருந்து அவள் எங்கே சிறையில் வைக்கப் பட்டிருந்தாளென்று அவளுக்குத் தெரியாமல் மயக்கம் கொடுத் துக் கொண்டுவந்தும் திரும்பக்கொண்டுபோயும் விட்டு விட் டோம். தான் அத்தனை நாட்கள் எங்கு சென்றிருந்தாளென்று எல்லாருக்கும் திருப்தியாகக் கூடியபடி சொல்லமுடியாமற் போன தால் நான் நினைத்தபடியே பத்மாவதி, குமாரசாமி நாயுடுவைக் கலியாணம் செய்து கொள்ள மறுதலித்துவிட்டாள். இனி எப்படி யாவது குமாரசாமி நாயுடுவை நான் வசப்படுத்தி விடலாமென்று

நினைத்திருக்கையில்பாழும்நாடகக்கம்பெனிஇவ்வூர்வந்தது. குமாரசாமி நாயுடு அந்நாடகக் கம்பெனியில் சேர்ந்த ஜீவாநந்தத்துடன் அடிக்கடி போய் சம்பாஷித்து வந்தாலும் அவள் பதிவிரதையென்றும் கலியாணம் செய்து கொண்டால் மாடபுரம் ஜமீன்தாரைத்தான் கலியாணம் செய்து கொள்வாளென்றும் வேறொருவரையும் கலியாணம் செய்துகொள்ள மாட்டாளென்றும் திட்டமாய்த் தெரிந்தவுடனே நாளடைவில் குமாரசாமி நாயுடுவை நான் வசப்படுத்திக் கொள்ளலாமென்று நம்பியிருந்தேன். இப்படியிருக்கையில் கோகிலாம்பாளென்ற பாக்கியரத்னம் இவ்வூருக்கு வந்து சேர்ந்தாளென்ற விவரம் தெரிந்தது. நான் பத்மாவதியை மயக்கங் கொடுத்து எடுத்துவந்தபோது அவளிடமிருந்த குமாரசாமி நாயுடவர்கள் படத்தையும் அவர் அவளுக்கு எழுதிய கடிதத்தையும் அவளுடைய கைக்குட்டையையும் எடுத்துவைத்திருந்தேன். பாக்கியரத்னம் என் வீட்டிற்கு வந்து எனக்குத்தெரியாமல் என் வேலைக்காரிக்கு லஞ்சம் கொடுத்து அவைகளை எடுத்துக்கொண்டு போனசங்கதி தெரிந்த உடனே இவ்வஸ்துக்கள் என்னிடமிருந்த சங்கதி போலீஸாருக்குத் தெரிந்தால் அதன் பேரில் என்மேல் சந்தேகம் கொண்டு என் வீட்டைச் சோதனை போடுவார்களென்றும் அப்போது பத்மாவதியை நான் பிடித்து வைத்திருக்கும் விவரம் வெளிக்கு வருமென்றும் இவ்விஷயங்கள் வெளிக்கு வரா முன்னம் அவ்வஸ்துக்களை அவளிடமிருந்து கொண்டு வரவேண்டுமென்றும் தீர்மானித்தேன். மேலும் அவள் குமாரசாமி நாயுடுவை தன்னிடம் வந்து பேசிவிட்டுப்போகும்படி எழுதிய இரண்டு மூன்று கடிதங்களைக் குமாரசாமி நாயுடுவின் வேலைக்காரனின் உதவியால் நான் பார்த்தேன். குமாரசாமி நாயுடு அநேகமாய் பெருமாள் நாயுடுவைப்போல் ரூபத்திலும் நடையுடைபாவனைகளிலும் இருப்பதால் எப்படியாவது பாக்கியரத்னம் அவரைத் தன் வசப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்திருப்பதாக அறிந்தேன். நான் பாக்கியரத்னத்தின் ரூபலாவண்யத்தையும் அவளுடைய சாதுர்ய மதுரமொழிகளையும் நன்குணர்வேனாகையாலும் ஒருதரம் பாக்கியரத்னத்திடம் குமாரசாமிநாயுடு பேசிவிட்டால் அவளுடைய சாமர்த்தியத்தினால் அவள் பேரில் பிரியமுண்டாகும் படி செய்யக்கூடிய சக்தி அவளுக்குஉண்டென்று எனக்குத் தெரியுமாகையாலும் குமாரசாமிநாயுடுவை வசப்படுத்துவதற்காகவே அவள் ஜீவாநந்தத்திற்குப் போட்டியாக அரங்கத்தில் ஆடி தனதுமுழுரூப

லாவண்யங்களையும் சாமர்த்தியங்களையும் அரங்கத்திலிருந்தாவது குமாரசாமி நாயுடுவுக்குக்காட்டுவதற்காகவே போட்டா போட்டியாகவேஷம் போடத் தீர்மானித்தாளென்றும் தெரிந்து கொண்டேன். ஆகையால் இனி பாக்கியரத்னத்தை உயிருடன் வைத்தால் எனது மனோபீஷ்டம் நிறைவேறாதென்று நான் நிச்சயமாய் நம்பி அவளைக்கொல்லத் தீர்மானித்து சண்டமாருத ஸ்வாமியைக்கொண்டு அவள் வேலைக்காரியாகிய சொர்ணத்திற்கு விஷத்தைக்கொடுக்கச்சொல்லி அவர் கொடுத்த பின் நான் போய் அவளைக்கொன்றேன். என்பேரில் சந்தேகம் வராதபடி பராங்குஷநாயுடவர்கள் கட்டாரியை சண்டமாருத ஸ்வாமியைக்கொண்டு எடுத்து வரச்செய்து அக்கட்டாரியால் குத்தினேன். குமாரசாமி நாயுடு அவர்கள் பத்மாவதிக்கு அனுப்பிய அவர் படத்தையும் கடிதத்தையும் பத்மாவதியின் கைக்குட்டையையும் நான் தேடியதில் அவைகள் அகப்படவில்லை. என்ன செய்தாளோ அறியேன். அவசரத்தில் நேற்றையதினம் பத்மாவதியை இங்கு அவர்கள் கொண்டு வந்துவிடுவது எனக்கு சற்றும் சம்மதமில்லாம லிருந்தாலும் இக்கபடவேஷதாரியாகிய கோவிந்தனின் தூண்டுதலால்தான் அவளை இங்கு கொண்டுவந்து விட்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். கோவிந்தன் இங்குவருவாரென்ற விவரம் எனக்காவது சண்டமாருதஸ்வாமியாருக்காவது தெரிந்திருந்தால் நாங்கள் இக்கார்யங்களைச் செய்திருக்கவே மாட்டோம். இருந்தாலும் விதியை வெல்ல எவராலும் முடியாது. இப்போதுகூட பாக்கியரத்னத்தைக் கொன்றது பாவமென்றாவது கெடுதலென்றாவது நான் நினைக்கவில்லை. அதைக்குறித்து எனக்கு வருத்தமும் கிடையாது. ஆதிமுதலே என் வாழ்வை விணுக்குவதற்கே அவளைக் கடவுள் சிருஷ்டித்தார் போலிருக்கிறது.

என்று சொன்னுள். அப்போது திடீரென்று களைப்புமேலிட்டவளாய்க் கண்ணை மூடினுள், மூடினதும் “ஐயையோ! ஏமாந்தேனே, இதோ பாக்கியரத்னம் அழகான உடைகளும் நகைகளும் அணிந்து என்முன் நிற்கிறுளே. அவளைக் கொன்றுவிட்டோமென்ற மனப்பால் குடித்திருந்தேனே. ஐயையோ! கட்டாரியுடன் என்னைக் குத்தவருகிறுளே. என்ன செய்வேன்? அவளைத் தடுப்பார் இங்கு யாருமில்லையா? இதோ சமீபத்தில் வந்துவிட்டாளே! அடீ! என்னைக்கொல்லாதே, கொல்லாதே” என்றதும் இரண்டு கைகளையும் விரித்தபடியே படுக்கையின் மேலிருந்த

அவள் உடல் மேல் எழும்பி விழுந்ததும் அவள் பிராணன் போய்விட்டது.

இந்த அத்தியாயத்தின் இறுதியிலே செல்லம்மாளின் கதையும் ஒருவாறாக முடிவுபெற்றது. ஆயினும் அவளுடைய துர்க்கிருத்தியங்களின் விளையாட்டும் இன்னும் முற்றுப்பெறவில்லை. இந்த துர்க்கிருத்தியங்களைச் செய்ததிலிருந்து அவள் கடைசியாக யாது பயனை யடைந்தாள்? ஒரு கொலை செய்யப்போய் நான்காவது கொலையையும் செய்யத் துணிந்ததுதான் லாபம். ஒருகூடை முடைகிறவன் ஒன்பது கூடை முடைவானென்பதுபோல கொலையோ, களவோ, லஞ்சமோ, விபசாரமோ, குடிகெடுத்தலோ, மதுபானமோ, ஒரு பிஷக்கிற்குப்பட்டிய சுருட்டு பிடிப்பதோ, ஒரு சிட்டிகைப் பொடி போடுவதோ மனைவியின் மெல்லிய தேகத்தை அடிப்பதோ, கோர்ட்டில் போய் பொய்சத்தியம் செய்வதோ, அன்னிய ஸ்திரீகளைக் கண்ணெடுத்துப் பார்ப்பதோ எதுவோ ஒரு முறை முதல் முதலாகச் செய்து விட்டால் பிறகு மனந்துணிந்து தைரியப்பட்டு அது சகஜமாகவும் இலேசாகவும் போய்விடுவது உலக அநுபவம். ஆயினும் இந்த துர்க்கிருத்தியங்களைச் செய்வோர்கள் அதைப் பூர்த்தி செய்துவிட்டால் தாங்கள் ஏதோ ஒரு பெரிய காரியத்தை நிறைவேற்றிவிட்டதுபோல நினைத்துக்கொண்டு மனதுக்குள் துணிகரத்தை எழுப்பிக்கொள்ளுகிறார்கள். ஐயோ, அவர்களின் முடிவு கடைசியில் என்ன விதமாக ஆகின்றது பாருங்கள்!

பெருமாள் நாயுடுவின் காலமுதற்கொண்டே செல்லம்மாள் மகா துஷ்டையாயிருந்தாலும் பதிவிரதா தர்மத்தில் அவளைச் சற்றும் குறைகூறமுடியாது. அவளை ஒரு நாகஸர்ப்பமென்றும், அவளிடத்து யாரும் நெருங்கார் என்றும் ஊரிலுள்ள பெண்கள் அவளைப் பற்றிப் பேசும்போது சொல்வது வழக்கம். அத்தகைய செல்லம்மாளை சிங்கப்பூர் வந்தபிறகு குமாரசாமி நாயுடுவினிடத்து மதிமயக்கங் கொண்டாளென்றால் மாதர்களின் மனோசலனத்தையும் உறுதியற்ற நிலையையும் பற்றி என்னென்று விவரிப்பது? ஆடவர்களிலேயும் அநேகர் இந்த மனோசலனத்திலும் உறுதியின்மையிலும் மாதர்களைவிட அதிகபட்டவர்கள் தான். வெகு சீக்கிரத்தில் புருஷர்களுடைய சித்தம் மாறுவதுபோல் ஸ்திரீகள் சித்தம் மாறுவதில்லை யென்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். பொதுவாக இருபாலாருமே அழகு, யௌவனம், சுந்தரமும் புன்சிரிப்புமான முகம் இவைகளிலே அநேகமாய் மயங்கிப்போகின்

றூர்கள். உலகத்தில்மனிதர்களுடைய ஸ்வபாவ குணத்தின் தீவிரமான மாறுதல்கள் வெகு விசித்திரமா யிருக்கிற தென்றே சொல்லும்படியாக நேருகிறது. பிறருக்குத் தீங்கையே நினையாத பாக்யரத்னமும் ஜீவானந்தத்தை அவமானப்படுத்தி தன் சாமர்த்தியத்தையும் அழகையும் குமாரசாமி நாயுடு அறியும்படி போட்டா போட்டி நாடகத்திற்கு ஏற்பாடு செய்தாள். மகா பரிசுத்தவானாகிய பெருமாள் நாயுடுவும் பாக்கியரத்னத்தை சைதாபேட்டை ஆற்றிலிருந்து தூக்கியதும் அவளுடைய தேகஸ்பரிசம் பட்டமாத்திரத்தில்மனது வேறுகி அவளிடத்து மனஞ்செலுத்தத் தொடங்கிக்கொண்டார். கேவலம் விளையாட்டுப்போல வேடிக்கை விநோதமாய் தனது பிதாவுடன் மதுரையிலே நாடகம் பார்க்கச்சென்ற பாக்கியரத்னம் தன்னுடைய கதைகள் இவ்வளவுதூரம் விரிவு பெறுவதற்கான எதுவை அந்த நாடகத்தின் மூலமாக உண்டாக்கிக் கொள்ளும்படியாக நேர்ந்து போயிற்று. அந்நாடகத்திலே இச்சித்த காதலனோடு வசித்த பாக்கியரத்னம் பின் அவன் இறக்கவும் உடனே தான் உயிர்வெறுத்து சைதாபேட்டை ஆற்றில் விழப்போன துணிகரம, விரக்தி அவ்வளவையும் பெருமாள்நாயுடுவின் வதனமும் அன்பும் மறக்கவைத்தது.

இவைகளை யெல்லாம் பார்க்கும்போது உலகத்திலே எவர்களுடைய மனம் எந்த சந்தர்ப்பத்தில் என்னென்னவிதமாக மாறுமோ வென்றல்லவா கலங்கும்படியாயிருக்கிறது. "பெற்ற தாய்க்குப் பிறகு பெற்ற அப்பன் சிற்றப்பன்" என்ற பழமொழியும் மனிதர்களின் உறுதியில்லாத குணவேறுபாடுகளையே பெரிதும் விவரிப்பதாக இருக்கின்றது. நல்லார் பொல்லாராதலும் பொல்லார் நல்லாராதலும் உலகின்கண் படிப்படியாகவே நிகழ்ந்து வருகின்றதென்பது யாவருக்கும் தெரிந்த உண்மைதான். கடைசியாக, மனிதர்களின் ஸ்வபாவகுணங்களென்று நாம் நினைத்திருப்பவைகளெல்லாம் இப்படி அடிக்கடி பிறழ்ந்துபோகுந் தன்மையனவாக இருத்தலால், உலக வாழ்க்கையிலே மாந்தர்கள் வெகு எச்சரிப்புடனும், மிகுந்த ஜாக்கிரதை யுடனும், சன்மார்க்கத்தி னின்று பிறழ்ந்துபோகாதிருக்கும்படி பார்த்துக்கொண்டும், அற்ப கிருத்தியங்களில் ஒன்றிலுஞ் சம்பந்தம் வைத்துக் கொள்ளாமலும் தமது ஜீவித காலத்தை நடத்திச் செல்லவேண்டி யிருக்கிறதென்பதை இங்கு பலமாக வற்புறுத்தி இந்த அத்தியாயத்தை முடிவு செய்கிறோம்.

பதிமூன்றாவது அத்தியாயம்

ஜீவானந்தம்

முந்தின அத்தியாயத்திற் சொன்ன விஷயங்கள் நடந்த சற்று நேரத்திற்கப்பால் மாடபுரம் ஜமீன்தார் கிருஷ்ணசாமிநாயுடு அவர்கள் செல்லம்மாள் வீட்டிற்குவந்து அங்கு நடந்தேறிய விருத்தாந்தங்களைக் கேள்விப்பட்டவுடனே கோவிந்தனைப் பார்த்து பின்வருமாறு கேட்டார்.

கிருஷ்ணசாமி நாயுடு.—கோவிந்தா! நான் அன்று ஜீவானந்தம் எங்கேபோயிருக்கிறாள் என்று கேட்டபோது ஜீவானந்தத்திற்கும் இக்கொலைக்கும் யாதொரு சம்பந்தமு மில்லையென்று சந்தேகமற ரூபிக்கும் சாக்ஷியம் இருப்பதாகவும் அவள் ஒருவருடைய தீர்ப்பர்தத்திற்கும் கட்டுப்படாமல் சுயேச்சையாய்த்தான் போயிருக்கிறாளென்றும், இருந்தாலும் அப்போது அவ்விஷயங்களைத் தாங்கள் சொல்வதால் வாஸ்தவமான குற்றவாளிகள் ஓடிப்போக ஹேதுவாகுமென்றும், வாஸ்தவமான குற்றவாளிகளைத் தண்டிக்கக்கூடிய சாக்ஷியம் அகப்படும் வரையில் அவ்விஷயத்தைப்பற்றி ஒன்றும் சொல்ல மாட்டீர்களென்றும் சொன்னீர்கள். எனக்கு ஜீவானந்தத்தைப்பற்றிய விஷயங்கள் அப்போதே அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் அதிகமா யிருந்தபோதிலும், தாங்கள் ஒரு தரம் ஓர் விஷயம் திட்டமாய்ச் சொல்லிவிட்டால், அப்பால் எவ்வளவு தூரம் கேட்டபோதிலும் வெளியிட மாட்டீர்களென்பதை உணர்ந்தே நான் தங்களை இதுவரையில் கேட்கவில்லை. ஆனால் இப்பொழுது வாஸ்தவமான குற்றவாளிகள் இன்னாரென்று ஏற்பட்டு அவர்கள் பிடிபட்டுப் போனதால் இனியாவது ஒரு விநாடி கூட காலதாமதஞ் செய்யாமல் அவளைப்பற்றிய சகல விஷயங்களையும் தெரிவிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

கோவிந்தன்.—எஜமானவர்களே! கோகிலாம்பாளுஞ் சொர்ணமும் கொலைசெய்யப்பட்ட அன்றைய சாயங்காலம் ஆறுமணிக்கு இங்கிருந்து சென்னைக்குப்போன கப்பலில் ஜீவானந்தமும் அவள் வேலைக்காரியும் சென்னைக்குச் சென்றார்கள். ஆகையால் கொலை நடந்தபோது அவர்கள் இவ்விடத்திலேயே இல்லை.

கிருஷ்ணசாமி நாயுடு.—நான் ஜீவானந்தத்தினிடம் அன்றைய சாயங்காலம்வரையில் பேசிக்கொண்டிருந்தபொழுது அவள்சென்னைக்குப் போவதாக என்னிடம் சொல்லவில்லையே. என்னை இவ்

வளவு தூரம் கஷ்டப்படும்படி ஒன்றும் சொல்லாமல் போன காரணமென்ன?

கோவிந்தன்.—அவள் சென்னைக்குப் போகும் சங்கதி சாயங்காலம் 5¾-மணி வரையில் அவளுக்கே தெரியாது. 5¾-மணிக்கு தந்தி வந்ததும் உடனே புறப்பட்டு விட்டாள்.

கிருஷ்ணசாமி நாயுடு.—தங்களுக்கு இவ்விஷயம் எப்படித் தெரியும்? தயவுசெய்து தெரிவியுங்கள்.

கோவிந்தன்.—அவளைச் சென்னைக்கு வரவேண்டுமென்று தந்தியடிக்கும்படி நான் தான் செய்தேன். சென்னை பெருமாள் நாயுடு அவர்களின் இஷ்டரான ராமாநுஜலு நாயுடவர்களிடம் பெருமாள் நாயுடவர்கள் சாகும்போது முத்திரையிட்ட ஓர் பையைக்கொடுத்து, அப்பையை அதன்மேல் குறிப்பிட்ட தேதி வரும்வரையில் எக்காரணத்தைக் கொண்டும் திறக்கக்கூடாதென்று பிரமாணம் வாங்கிக்கொண்டதோடு அக்காகிதங்கள் சம்பந்தமான ஓர் பெண்ணுக்கு மாதம் மாதம் நூறு ரூபாய் அனுப்பும்படியும் வேண்டிக்கொண்டார். அப்பெண் இன்னார் தானென்றும் எங்கிருக்கிறாள் என்றும் சொல்லுமுன் பெருமாள்நாயுடு பிரக்ஞையில்லாமல் இறந்துவிட்டதால் அப்பெண் எங்கிருக்கிறாள் என்று அவரால் கண்டுபிடிக்கக் கூடவில்லை. எக்காரணத்தைக்கொண்டும் திறக்கமாட்டேனென்று ராமாநுஜலு நாயுடு பிரமாணம் பண்ணிக்கொடுத்திருந்ததால் அத்தேதி வரும் வரையில் அப்பையைத் திறக்க அவருக்கிஷ்டமில்லை. குறிப்பிட்டதேதி சென்ற மாதந்தான் வந்ததால் அத்தேதியில் அக்காகிதக்கட்டின் முத்திரை அவர் உடைத்துப் பார்த்தபோது அப்பெண் ஓர் ஜமீன்தாரின் புத்திரியென்றும் அந்த ஜமீன்தார் போலீசாரால் அக்கிரமமான குற்றஞ்சாட்டப்பட்டபோது அவர் ஒளித்துச் கொண்டதாகவும், அப்படி ஒளித்துக் கொள்ளுமுன் தான் ஒளித்துக்கொண்டால் சர்க்காரார் தன்பேரில் வாரண்டு எடுத்து அப்போது தான் ஆஜராகா விட்டால் தமது சொத்துக்களைத் தான் அனுபவியாதபடி சர்க்கார் கைப்பற்றிக் கொள்வார்களென்ற பயத்துடன் சுமார் 5 லக்ஷம் ரூபாய்பெறுமான ரொக்கம் நகைகள் முதலியவற்றைப் பெருமாள் நாயுடு அவர்களிடம் சேர்த்து மூன்று வயதுள்ள தம்முடைய புத்திரியைப் பெருமாள்நாயுடு வசம் ஒப்புவித்து அக்குழந்தைக்குப் புத்திவந்து தனது பெற்றோர்கள் யாரென்று கேட்டால் தான் குறிப்பிட்ட தேதிவரும் வரையில் சொல்லக்

கூடாதென்றும், அக்கேதிக்கு முன்னால் ஜமீன்தார்பேரில் ஏற்பட்ட குற்றம் அவர் செய்யவில்லையென்று ருஜுவாகிவிட்டால் அப்போதுமட்டும் அவளுக்குத் தெரிவிக்கும்படிக்கும் அவள் தகப்பனார் கேட்டுக்கொண்டதாகவும் எழுதியிருந்தது. அதில் அவள் படமும் வைக்கப் பட்டிருந்தது. அக்குழந்தையைப் பெருமாள் நாயுடு அவர்கள் அதிக யோக்கியரும் குழந்தைகள் இல்லாதவருமாகிய மதுரை பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய பாகவதர் அவர்களிடம் விட்டு அவருடைய குழந்தையைப்போல் பார்த்துக் கொள்ளும்படியும் அவளுக்குப் போதுமானபடி கல்விப்பயிற்சி செய்விக்கும்படியும் சங்கீதம் கற்பித்துக் கொடுக்கும்படியும் ஏற்பாடு செய்திருந்ததாக எழுதியிருந்தது. மதுரை பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய பாகவதர் அவர்கள் வீட்டில் போய் விசாரித்தபோது அவர் அக்குழந்தைக்கு சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகள் சரிவரக் கற்றுக்கொடுத்ததோடு சங்கீதமும் சரியாய்க் கற்பித்தாரென்றும், அவர் இறந்துபோன பின்பு அவர் வளர்த்த குழந்தை சிலநாட்கள் வரையில் அவர் வீட்டிலேயே தனிமையாய் இருந்ததாகவும் அப்போது சாரங்கன் என்ற ஓர் வேலைக்காரனுடைய உதவியால் வீட்டிலுள்ள சாமான்களை விற்று சிலநாட்கள் வரையில் செலவழித்து வந்ததாகவும் அப்பால் செலவுக்கு கஷ்டமாகிவிடவே ஜீவிக்க வழி தெரியாமல் நாடகத்தில் சேர்ந்ததாகவும் அதன் பின் அவள் இருக்குமிடம் தெரியாதென்று ம-ா-ா-ஸ்ரீ ராமாநுஜலு நாயுடு அவர்கள் என்னிடம் தெரிவித்து அவள் படத்தையுங்கொடுத்து அவளைக் கண்டு பிடிக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். சென்னை இராஜதானியிலும் கொழும்பிலும் ஆடிக்கொண்டிருக்கும் நாடகக் கம்பெனிகளிலுள்ள பெண் வேஷதாரிகளையெல்லாம் பார்த்தபோது அவள் அகப்படவில்லை. அப்பால் பினங்கு சிங்கப்பூரிலாவது இருக்கிறாளாவென்று கட்டாயமாய்த் தெரிந்து சொல்லும்படி ராமாநுஜலு நாயுடு அவர்கள் என்னை வேண்டிக் கொண்டார்கள். அச்சமயத்தில் தங்களிடமிருந்து பத்மாவதியைக் கண்டு பிடிப்பதற்காக என்னை வரும்படி அடித்த தந்தியும் வந்தது, இரண்டு வேலைகளையும் பார்த்துக்கொண்டு போகலாமென்று வந்தேன். வந்தவுடன் இவ்விடத்திலுள்ள சென்னை சரஸ விநோத சிருங்கார சபாரஞ்சித ஜகன் மோஹன ஹிந்து பாலிகா நாடக் கம்பெனியில் போய் விசாரித்தபோது தாய் தந்தையர்கள் இன்னாரென்று அறியாத ஜீவாநந்தமென்னும்

ஒரு பெண் இருப்பதாகவும் அவளுக்கு சாரங்கன் என்ற வேலைக்காரன் ஒருவன் இருப்பதாகவும் கேள்விப்பட்டு ஓர் பரதேசி வேஷம் பூண்டு அவள் வீட்டில் போய்ப்பார்த்தேன். என்கையில் இருந்த படத்தைப்போல் ஓர் படம் அங்கு தொங்கவிட்டிருப்பது கண்டு அப்படம் யாருடையதென்று விசாரித்தேன். ஜீவாநந்தத்தின் படமென்று தெரியவந்தது. உடனே இவ்விஷயங்களை ராமாநுஜலு நாயுடுவுக்கு தந்தி மூலமாய்த் தெரிவித்தேன். தெரிவித்ததோடு ஜீவாநந்தத்தைப் புறப்பட்டு வரும்படித் தந்தியடிக்கும்படியும் அதில் கண்டிருந்ததால் அவர் ஜீவாநந்தத்திற்கு பின்வருமாறு தந்தியடித்தார்.

தந்தி

ஜீவாநந்தம்மாள், சென்னை நாடகக் கம்பெனி, சிங்கப்பூர்.

உன் பெற்றோர்கள் இன்னாரென்று தெரிந்துகொள்ளவும், உனது தகப்பனார் உனக்காக வைத்திருக்கும் சுமார் 12 லக்ஷம் ரூபாய்களை வாங்கிக் கொள்ளவும், தாமதமின்றிப் புறப்பட்டு வரவேண்டியது. நான் தந்தி அடிப்பது உண்மையென்று காண்பிப்பதற்காக உன்னைத் தேட நான் அனுப்பியிருக்கும் எனது நண்பர் சிறுவயதில் எடுத்த உனது படத்தைக் காட்டுவார்.

ராமாநுஜலு நாயுடு,
"ஸ்ரீரங்க நிலயம்" திருச்சி.

இத்தந்தி வருமென்று நான் தபாலாபீசில் காத்திருந்து தந்தியை எடுத்துக்கொண்டு போகும் ஆளுடனேயே அவள் படத்தை எடுத்துக்கொண்டு போய் அவளுக்குக் காட்டி ராமாநுஜலு நாயுடு ஜீவாநந்தத்தை அடையாளம் கண்டுகொள்வதற்கு உதவியாக, அப்படத்தை அவளிடமே கொடுத்து ஒரு விநாடி கூடத் தாமதிக்காமல் போனால் தான் அன்றையக் கப்பலில் போகலாமென்றும் சொல்லி அவளை அழைத்துக்கொண்டு போய்க் கப்பலில் ஏற்றினேன். அவளும் அவள் வேலைக்காரியும் கப்பலில் அடி எடுத்து வைத்தார்களோ இல்லையோ கப்பல் புறப்பட்டுவிட்டது. அவள் போகு முன் இவ்விஷயங்களைத் தங்களுக்குச் சொல்லும்படி வெகுவாய் வேண்டிக்கொண்டாள். அதற்குப் பின்னால் நடந்த காரியங்களை யோசித்துத் தங்களிடம் இதைச் சொல்லுவதால் இக்கொலைகளைக் கண்டுபிடிப்பதற்கு இடையூறுகுமென்று நினைத்துத் தங்களுக்கு சொல்லவில்லை.

ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடு.—கோவிந்தா! இதுவரையில் நீர் மகா யோக்கியனென்று நினைத்திருந்தேன். இப்போது தான்

நீர் மகா வஞ்சநெஞ்சர் என்று தெரியவருகிறது. அந்தச் சிறுக்கியைக் கொன்றவர்களைக் கண்டுபிடித்தாலென்ன கண்டுபிடிக்காவிட்டால் எனக்காக வேண்டியதென்ன? நீர் இக்ஷணமாக என்னிடம் உண்மையைச் சொல்லாமல் என்னைச் சித்திரவதை செய்ததற்குச் சரியான காரணம் சொல்லாவிட்டால் இத்துடன் நமது இஷ்டத்திற்கு பங்கம் வரும்.

கோவிந்தன்.—ஐயா! தாங்கள் இவ்வளவு தூரம் கோபித்துக் கொள்ளவேண்டாம். நான் அப்போதே தங்களிடம் உண்மையைச் சொல்லியிருந்தால் அவ்விஷயத்தைத் தங்களால் மனதில் அடக்கி வைத்திருக்க முடியவே முடியாது. தாங்கள் முகத்தில் விசனக்குறி தோற்றாமல் சந்தோஷக்குறிகள் தோற்றும். தாங்கள் சந்தோஷமாயிருப்பதைப் பார்த்து எப்படியாவது சாமர்த்தியமான கேள்விகளைக் கேட்டுத் தங்களிடமிருந்து உண்மையைக் கிரஹித்துக் கொள்வார்கள். மேலும் கோகிலாம்பாளும் சொர்ணமும் கொலை செய்யப்பட்ட அன்றைய இராத்திரி எட்டுமணிக்குத் தாங்கள் லக்ஷ்மி விலாசத்தின் பின் வாசலின் சமீபத்தில் தங்கள் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கி உட்சென்று சில நிமிஷங்களுக்கப்பால் வண்டியில் வந்து ஏறிச்சென்றதாகத் தெரிகிறது. ஸ்ரீவாநந்தத்தைக் கலியாணம் செய்து கொள்வதற்காக இங்கு வந்து காத்திருக்கும் தாங்கள் அவளுடைய விரோதியாகிய கோகிலாம்பாள் வீட்டிற்கு அவள் கொலை செய்யப்பட்ட நேரத்தில் சென்றிருந்தீர்களென்ற விஷயம் போலீசாருக்குத் தெரிந்திருந்தால் பொய்யாகவோ அல்லவோ தங்களைச் சிறையிலடைத்திருப்பார்களா அல்லவா என்ற விஷயத்தை சற்று யோசியுங்கள். ஸ்ரீவாநந்தத்தைக் காணாமல் மற்றவர்களுடன் தாங்களும் தேடிக்கொண்டு மனவருத்தத்துடன் இருந்ததால் தான் போலீசாருக்குத் தங்கள் பேரில் சந்தேகம் ஏற்படவில்லை. அப்படியில்லாமல் தாங்கள் சந்தோஷமாய் இருந்திருந்தால் தங்கள்மேல் சந்தேகப்பட்டுத் தாங்கள் அன்று செய்த காரியாதிகளையெல்லாம் நிர விசாரித்திருப்பார்கள். அப்போது நான் மேலே சொன்ன விஷயங்கள் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். தங்களுக்கு அப்பேர்ப்பட்ட கஷ்டம் வராமலிருப்பதற்காகவே நான் தங்களிடம் இக்காரியங்களைச் சொல்லவில்லை.

ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடு.—கோவிந்தா! நான் கோபமாய்ப் பேசியதற்காகத் தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும். நான் கோகிலாம்பாளின் வீட்டுக்குச் சென்ற விஷயம் ஒருவருக்கும் தெரி

யாதென்றே நினைத்தேன். நான் லக்ஷ்மி விலாசத்தின் வழியாய்ப் போகும்போது கோகிலாம்பாள் அலங்கரித்துக் கொண்டு மாடியிலுள்ள ஜன்னலின் சமீபத்தில் நின்றாள். இவள் விசேஷ அழகுள்ளவளென்றும் அதிக திரவியம் செலவழித்து அந்நாடகத்தில் ஜீவானந்தத்திற்குப் போட்டியாக ஆடுவதற்காகவென்றே உடைகள் தயாரித்திருக்கிறாள் என்றும் கேள்விப்பட்டதால் அவள் அரங்கத்தில் தோன்றுவதற்கு முன்னாலேயே அவளுக்குந் தெரியாமல் தோட்டத்திலிருந்தபடியே அவளைப் பார்த்துவிட்டுப் போக நான் சென்றது உண்மையே; அவளைப் பார்த்ததும் அவள் அழகுடைய ஸ்திரீ என்பதற்குக் 'சந்தேக மில்லாவிட்டாலும், ஜீவானந்தத்தின் அழகுக்கும் அவளுடைய அழகுக்கும் அதிக பேத மிருந்ததால் அவளை ஜீவானந்தத்திற்குச் சமானமான அழகுள்ளவள் என்று எவரும் சொல்லமாட்டார்கள் என்று தெரிந்தது. உடனே நான் வெளியே போய்விட்டேன். சரி; அது எப்படியாவது இருக்கட்டும். இப்போது ஜீவானந்தம் எங்கிருக்கிறாள்? அதைதயவுசெய்து தெரிவியுங்கள்.

கோவிந்தன்.—இப்போது அவள் பினாங்குக்கும் சிங்கப்பூருக்குப் மத்தியில் வந்துகொண்டிருக்கிறாள். நாளை காலையில் தாங்கள் அவளைப் பார்க்கக்கூடும்.

என்றார். அது கேட்டு கிருஷ்ணசாமி நாயுடவர்கள் எப்போது பொழுது விடியுமென்று ஒரு மணிக்கு ஒருமுறை தமது கெடியாரத்தை எடுத்து எடுத்துப் பார்த்துக்கொண்டு "என்ன! கெடியாரம் இவ்வளவு மெதுவாய் போகிறது" என்று சொல்லிக் கொண்டிருந்தார், அதற்குக் கோவிந்தன் "இதற்காகவே தங்களிடம் இவ்விஷயம் நான் சொல்லாமலிருந்தேன். இனி தங்களுக்கு இன்றைய இராப்பொழுது போவது ஒரு யுகமாகத்தான் தோன்றும். தங்கள் கெடியாரம் சரியாய்த்தான் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால் தங்கள் மனதுமட்டும் அதிக ஓட்டம் ஓடுகிறது" என்று சொல்லிவிட்டுத் தன் ஜோலிகளைப்பார்க்கச் சென்றார்.

மறுநாட் காலையில் கிருஷ்ணசாமி நாயுடவர்களும் கோவிந்தனும் சிங்கப்பூர் துறைமுகத் திற்குப்போய் கப்பலின் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். கப்பல் வந்தது. ஜீவானந்தத்தைக் கண்டதும் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் உடல் பூரித்தது. கோவிந்தன் கப்பலிலிருந்த ஜீவானந்தத்தின் சாமான்களை யெல்லாம் சரிவரப் பார்த்து எடுத்துவருவதாகச் சொல்லி மற்றவர்களை யெல்

லாம் தாமதமின்றி வீட்டிற்குப் போகும்படி அனுப்பிவிட்டார்.

கிருஷ்ணசாமி நாயுடு.—ஜீவா! நீ என்னிடம் சமாசாரம் தெரிவித்து என்னைக்கூட அழைத்துப் போகாமல் சென்றதற்காக உன்னிடம் குறைந்தது மூன்று மாதங்கள் வரையிலாவது பேசக் கூடாதென்று நினைத்திருந்தேன். ஆனால் பொழுது விடிந்ததும் என் எண்ணங்களெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் மாறி துறைமுகத்தில் வந்து காத்திருந்து உன்னைக்கண்டு பேசினபின் தான் என் ஆவி உடல் சேர்ந்தது. மனதிற்கும் திருப்தியாயிற்று.

ஜீவாநந்தம்.—தங்களிடம் சொல்லவாவது தங்களை அழைத்துப் போகவாவது எனக்கு ஒரு விநாடி கூட சாவகாசமில்லை. தங்கள் நண்பர் சகலமும் அப்போதே சொல்லியிருப்பாரென்று நம்புகிறேன்.

கிருஷ்ணசாமி நாயுடு.—போகட்டும். சொல்லத்தான் சாவகாசமில்லை. நீ பினங்கு சென்றவுடனாவது ஒரு தந்தி அடித்திருக்கலாமல்லவா?

ஜீவாநந்தம்.—தாங்கள் வேண்டுமென்றே என்பேரில் குறை கூறுகிறீர்கள். தங்கள் நண்பர் சகல விஷயங்களையும் அன்றே தங்களிடம் சொல்வதாக உறுதி சொல்லியிருக்க இரண்டு தினங்கள் பொறுத்து நான் தந்தி படிப்பதில் சுகிர்தமென்ன?

கிருஷ்ணசாமி நாயுடு.—எனது நண்பர் நேற்றைய இராத்திரிதான் என்னிடம் இவ்விஷயங்களைத் தெரிவித்தார்.

என்று சொல்லி, அவர் சொல்லாததற்கு ஏற்பட்ட காரணங்களையும் அவள் போனது முதல் அன்றுவரை நடந்த விருத்தாந்தங்களையும் சொன்னார். அதைக் கேட்டவுடன் ஜீவாநந்தத்திற்கு அதிக வருத்தமும் துக்கமும் உண்டாகி, சற்று நேரம் ஆழ்ந்த சிந்தனையிலிருந்துவிட்டு "ஐயோ! கோகிலாம்பாளும் நானும் முன்னால் இருந்த இஷ்டத்திற்கு ஒரு இராத்திரியாவது அவளுடன் ஆடி அவள் மனோபீஷ்டத்தை நிறைவேற்றாத பாவியானேனே" என்று வருத்தமுற்றாள். கிருஷ்ணசாமி நாயுடவர்கள் தேறுதல் சொன்னதின்பேரில் வருத்தத்தைவிட்டு அப்பால் அவள்போய் வந்த சமாசாரங்களைச் சொல்ல ஆரம்பித்தாள். அவைகளைக் குறித்து விவரமாய்ச் சொன்னால் விரியுமாகையால் சுருக்கமாய்ச் சொல்வோம்.

ஜீவாநந்தம்.—நான் நாகப்பட்டணம் போய்ச் சேர்ந்ததும் அங்கு ராமாநுஜலு நாயுடு எங்கள் வரவை எதிர்பார்த்திருந்து எங்

களை அழைத்துக்கொண்டு திருச்சிக்குப் போனார். வீட்டுக்குப் போய் சாப்பாடு முதலிய காரியங்கள் முடிந்தவுடன் அவ்விடத்திய பிரபல வக்கீல்கள் இருவர் முன்னிலையில் வைத்து பின்வரும் பத்திரங்களை வாசித்துக் காட்டினார்.

முதல் பத்திரம்

**௵ ஆகஸ்டு௴ 11௳ 'ஆதிபுரம் ஜமீன்தாராகிய பத்மநாபநாயுடு எழுதி வைத்த ஒயில் சாசனம் என்னவென்றால்,

எனது விரோதிகளின் தூண்டுதலின் பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் பத்மநாப ஐயரவர்கள் என்பேரில் அநியாயமாய் இ. பி. கோ. 124-A செக்ஷன்படி நான் இராஜதுரோகம் செய்ததாகவும் இராஜதுரோகம் செய்வதற்காகக் கொள்ளைக் கூட்டத்தாரைச் சேர்த்து ஓர் வீட்டில் கொள்ளையடித்து அவ்வீட்டிலுள்ள ஓர் வேலைக்காரனைக்கொன்று விட்டதாகவும் கேஸ் சரியாய் ஜோடித்துக்கொண்டு வந்துவிட்டதாலும் இது சர்க்காருக்கு விரோதமான கேசாகையால் அநேகமாய் நியாயம் எனக்குக் கிடைக்கவே கிடையாதென்று எனக்குத் திட்டமாய்த் தெரியுமாதலால் அநியாயமாய் என் உயிரை இழப்பதற்கிசையாமல் எனக்கிருக்கும் ஒரே குழந்தையாகிய ஜீவாநந்தத்தையும் என்னால் அன்றையதினம் சேகரிக்கக்கூடிய ரொக்கம் ரூபாய் ஐந்து லக்ஷத்தையும் எனது பிராணஸ்நேகிதரான பெருமாள் நாயுடு அவர்களிடம் ஒப்புவித்து அக்குழந்தைக்கு சரியான புத்தி வரும் வரையில் மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் அல்லது அவருக்கு எவ்வளவு உசிதமென்று தோன்றுகிறதோ அவ்வளவு ரூபாய்கள் செலவழித்து அவளுக்கு படிப்பு சங்கீதம் முதலியவைகள் கற்பிப்பதோடு அவளுக்கு வயது வந்து அவளிடம் சொத்து ஒப்புவிக்கும் வரையில் எந்தக் காரணத்தையிட்டும் அவள் இன்னாளென்றும், அவள் பெற்றோர்கள் இன்னாரென்றும் அவளுக்குத் தெரிவிக்கக் கூடாதென்றும் எற்பாடு செய்திருக்கிறேன்.

தெய்வாதீனமாய் பெருமாள் நாயுடு அவர்களுக்கு எதாவது அபாயம் வருமென்று தோன்றினால் அவருடைய நம்பிக்கையுள்ள ஒரு நண்பரிடம் குழந்தையையும் சொத்தையும் ஒப்புவிக்கலாமேயொழிய அவரிடம் அவள் இன்னாளென்று சொல்லக்கூடாது. இந்த ஒயில் சாசனத்தையும் அவளுக்கு வயது வரும் வரையில் திறக்கக்கூடாதென்று அவரிடம் உறுதிமொழி பெற்றுக்கொண்டு கொடுக்கும்படியும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

நான் குற்றவாளியல்லவென்று தீர்மானமானாலொழிய நான் என் குழந்தை முகத்தில் விழிக்கமாட்டேன்.

எனது நண்பர் பெருமாள் நாயுடவர்கள் மகா சத்தியவானாகையால் என் மனோபீஷ்டத்தின்படி சரிவர நிறைவேற்றுவாரென்று நம்புகிறேன்.

சாக்ஷிகள்

பராங்குஷ நாயுடு }
சுப்ரமணிய ஐயர் } (கையொப்பம்) பத்மநாபநாயுடு.

இரண்டாவது பத்திரம்

* * ஷூ மார்கழி 3உ. சென்னை கோபால்சாமி நாயுடு குமாரர் பெருமாள் நாயுடு எழுதிக்கொடுப்பது என்னவென்றால்,

என்னிடம் எனது நண்பர் ஒருவர் எழுதிக்கொடுத்த உயில் சாசனத்தையும் அது சம்மந்தமான முதல் ரூபாய் ஒரு லக்ஷமும் வட்டி இரண்டு லக்ஷத்து நாலாயிரத்து ஐம்பத்தொரு ரூபாய் எட்டணாவையும் ஒப்புவித்து நான் அவரிடம் சொல்லியபடி நடக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தக் காரணத்தைக்கொண்டும் மேற்படி உயில் சாசனத்தை எனது நண்பர் அதன் மேல் குறிப்பிட்ட தேதி வரும் வரையில் திறந்து பார்க்கக்கூடாது.

சாக்ஷிகள்

ஷார்ட்துரை
ஸொலிஸிட்டர்.
கோவிந்தன்,
திருவல்லிக்கேணி.
சண்டமாருதஸ்வாமி.

(கையொப்பம்) பெருமாள் நாயுடு.

இவ்விரண்டு பத்திரங்களையும் என் கையில் கொடுத்து பத்திரத்தில் கண்ட தொகையும் அதன் வட்டியுமாக ரூபாய் பன்னிரண்டு லக்ஷத்து எண்ணாயிரத்து ஆறுபத்தேழும் என்னிடம் கொடுத்து விடுதலைப் பத்திரம் எழுதி அங்கிருந்தவர்களிடம் சாக்ஷிகையெழுத்தும் வாங்கி என்னிடம் கொடுத்து என் இஷ்டப்படி நடந்து கொள்ளலாமென்று சொல்லிவிட்டார். உடனே நான் ஒருநாள் கூடத்தாமதம் செய்யாமல் தங்களிடம் இச்செய்திகளைச் சொல்வதற்காக வந்தேன்.

என்று சொன்னாள். உடனே கிருஷ்ணசாமி நாயுடவர்கள் ஜீவாநந்தத்தைப் பார்த்து பின்வருமாறு சொன்னார்.

கிருஷ்ணசாமி நாயுடு.—ஜீவாநந்தம்! நான் இன்றொரு நற்செய்திசொல்லுகிறேன். உன் தகப்பனாரான பத்மநாபநாயுடு அவர்களின் பேரில் கட்டிமோசக்கேஸ் கொண்டுவந்தது என் சிறிய தகப்பனாரின் ஆண்டுகளின் பேரில்தான். அப்பொழுது கேஸ் உன் தகப்பனாருக்கு விரோதமாய் முடிந்தாலும் அதற்கு மூன்று வருஷங்களுக்கு அப்பால் என் சிறியதகப்பனார் மரணவஸ்தையிலிருக்கும்போது உன் தகப்பனார் பேரில் கொஞ்சமாவது தோஷமில்லையென்று சந்தேகமற ருஜுபிக்கும் சாக்ஷியங்களுடன் கலெக்டர் துரை அவர்கள் முன்னிலையில் வாக்குமூலங்கொடுத்து மேற்படி சாக்ஷிகளின் மூலமாய் ருஜூக் கொடுத்ததின் பேரில் உன் தகப்பனாரவர்களைக் குறித்து மேல்படி கலெக்டர் துரை அவர்கள் கவர்ன்மென்

வந்தால் சொத்துக்களையெல்லாம் அவரிடம் ஒப்புவிக்கப்படும் என்று கெஜட்டில் பிரசுரித்திருக்கிறார்கள். இவ்விஷயம் உன் தகப்பனுருக்குத் தெரியாதோ அல்லது அவருக்கு ஏதாவது அபாயம் நேரிட்டதோ அறியேன். அவர் வாராவிட்டாலும் அவர்குமாரியாகிய நீ அச்சொத்துக்களை அடைவதில் யாதொரு கஷ்டமும் இருக்காது.

என்று சொன்னார். இப்படிச் சொன்னதும் ஜீவாநந்தத்தின் சமீபத்தில் நின்று கொண்டிருந்த அவள் வேலைக்காரனுன தாடியும் மீசையும் ஏராளமாய் வளர்ந்து இளைத்திருந்த சாரங்கன் "ஆ! என் கண்ணே! உன்னை என் புத்திரி என்று அழைக்கும் பாக்கியம் இன்று தான் பெற்றேன். நீ இதுவரையில் நம்பியிருந்தபடி நான் உன்வேலைக் காரனல்ல. உன்னைப் பெற்றெடுத்த தகப்பனுராகிய பத்மநாபநாயுடு நானே தான்" என்று அவளைச் சேர்த்துக் கட்டி அவள் உடம்பெல்லாம் நனைய கண்ணீர் சொரிந்தார். சற்று நேரத்திற் கப்பால் க்ஷவரம் செய்து கொண்டு தன் வாஸ்தவமான உடைகளை யணிந்து பழைய பத்மநாப நாயுடுவாக மாறி தன் வார்த்தைகளில் சற்று அவநம்பிக்கை கொண்ட கிருஷ்ணசாமி நாயுடவர்களின் சந்தேகம் தீரும்படி போகிய சாக்ஷியங்களால் தான் சொன்னது உண்மையே யென்று நிரூபித்தார்.

கிருஷ்ணசாமி நாயுடு.—ஜீவா! நீயும் பாக்கியரத்னமும் எப்போது நண்பர்களா யிருந்தீர்கள்?

ஜீவாநந்தம்.—மதுரையில் பிரம்மஸ்ரீ சுப்ரமண்ய பாகவதர்களிடம் அவள் சங்கீதம் கற்றுக்கொள்ள வந்தபோது நாங்கள் இருவரும் நண்பர்களா யிருந்தோம். அவள் முத்துசாமியின் நிமித்தம் வீட்டை விட்டு வெளியேறியவுடன் சுப்ரமண்ய பாகவதரவர்கள் இனிமேல் நான் அவளை எங்கே சந்தித்தாலும் அவளுடன் வார்த்தையாடக் கூடாதென்று என்னிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டார்.

கிருஷ்ணசாமி நாயுடு.—உன் தகப்பனுராகிய பத்மநாப நாயுடு உன்னிடம் எப்போது சேர்ந்தார்?

ஜீவாநந்தம்.—சாஸ்திரிகள் இறந்தவுடனே அவர் குறைந்த சம்பளத்திலிருக்க ஒப்புக்கொண்டதால் அவரை வேலையில்வைத்தோம். அதுமுதல் என்னோடுதான் இருந்துவருகிறார். அவர் என் தகப்பனுரென்பதை யறியாமல் பலவேளைகளில் நான்கண்டித்தும் பேசியிருக்கிறேன். ஆனுல் அவர் அதைத் தோஷப்பண்ணிக் கொள்வதில்லை.

பதினைந்தாவது அத்தியாயம்

கோவிந்தன் விவரித்துச் சொல்லல்

செல்லம்மாள், தாலும் சண்டமாருத ஸ்வாமியாருக் தான் கோவிலப்பாளைக் கொடுப்பதாக வாக்குமூலம் கொடுத்தவுடனே இக்கொலைகளுக்காகச் சிறையில் வைக்கப்பட்டிருந்த பராங்குஶ நாயுடவர்களையும் கோவிந்தசாமி நாயுடு அவர்களையும் கோவிந்தனுடைய தூண்டுதலின்பேரில் விடுதலை செய்துவிட்டார்கள். மறுநாள் மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு கோவிந்தனைப் பிரபுவான நாராயணசாமி நாயுடு அவர்களின் பங்களாவிலேயே கமிஷனர் துரை அவர்களும், நாராயணசாமி நாயுடு அவர்களும், ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் பராங்குஶ நாயுடு அவர்களும், இன்ஸ்பெக்டர் டாஸ்துரை அவர்களும், பாகீரதி அம்மாளும், பத்மாவதியும் கூடியிருந்து, பத்மாவதியை அடைத்து வைத்திருந்த இடத்தையும் கொலை செய்தவர்களையும் கோவிந்தன் எப்படிக் கண்டுபிடித்தானென்பதைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்பினார்கள். கமிஷனர் துரை அவர்கள் கோவிந்தனைப்பார்த்து "ஐயா! தாங்கள் முதலில் என்னை வந்து கண்டபோது நான் அது வரையில் சேகரித்திருந்த தப்பாறுகளைத் தங்களிடம் சொல்லி அதற்கேற்ற சம்பந்தமான ரிக்கார்டுகளைத் தங்களிடம் காட்டினேன். அவைகளையெல்லாம் பார்த்தவுடனே தாங்கள் என்னைப் பார்த்து 'என்ன ஐயா, எல்லாம் கண்டுபிடித்துவிட்டோம், இன்ன இடத்தில் இருக்கிறாள். நீர் போய் அழைத்து வாரும் என்று சொல்லுவதைப் போலிருக்கின்றதே' என்று தாங்கள் சொன்னீர்களே. எப்படி அப்போதே அறிந்தீர்களென்பதைத் தயவுசெய்து சொல்லுங்கள்" என்று கேட்டார்.

கோவிந்தன்.—தாங்கள் இக்கேசில் சரியானபடி வேலை செய்திருக்கிறதாகத் தங்கள் ரிக்கார்டுகள் காண்பித்தன. எங்கெங்கே விதங்களிலெல்லாம் தேடவேண்டுமோ அந்தந்த விதங்களிலெல்லாம் தேடிவிட்டார்கள். அப்படித் தேடிய வரையில் எல்லா இடங்களைக் குறித்த விவரங்களையும் சரிவரப் பார்த்துவிட்டார்கள். ஆனால் இவ்வூரில் வைத்தியம் படித்தவர்களை வெளியில் தெரியாதபடி தனவந்தர்கள் தங்கள் வீட்டிலேயே அடைத்து வைத்திருந்த பூர்த்தி விபரங்களின் ஞாபகம் வைத்திருந்தீர்களே தவிர அவர்கள் தனவந்தர்களாதலால் அவ்விடங்களையெல்லாம் முன்னாலேயே

செங்கல் வைத்து மூடிவிடப்பட்டதாகத் தெரிந்ததாலும் அநேகமாய் பதுமாவதியை அடைத்துவைப்பதில் இந்த ஐந்து நபர்களுக்கும் எவ்விதமான அநுகூலமும் கிடையாதென்றும் நினைத்து அந்த ஐந்து இடங்களையும் தாங்கள் திட்டமாய்ப் பரிசோதித்துப் பார்க்கவில்லை. மற்ற இடங்களிலெல்லாம் கொஞ்சமாவது சந்தேகத்துக்கு இடமில்லாமல் சம்பூரணமாய்த் தேடியும் அவளைக் கண்டுபிடிக்க முடியாததால் அவளை இந்த ஐந்து வீடுகளில் ஒன்றில் தான் அடைத்து வைத்திருக்க வேண்டுமென்று நான் நிச்சயித்தேன். மேலும் அப்பேர்ப்பட்ட ஐந்து வீடுகளிலும் நான்கு வீட்டுக்காரருக்கும் பதுமாவதி அம்மாளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும், விருப்பு வெறுப்புகளும் கிடையாதென்றும் சமீபத்தில் அவர்கள் வீடுகளில் எந்தவிதமான கட்டிட ரிப்பேர்களும் செய்யப்படவில்லையென்றும் தங்கள் ரிக்கார்டுகள் காண்பித்தன. இந்த ஐந்து வீடுகளில் சமீபத்தில் செல்லம்மாள் வீட்டில் மட்டும் ஏதோ ரிப்பேர்கள் நடந்ததாகத் தங்கள் ரிக்கார்டுகள் காண்பித்தபோதிலும் அவளுக்கும் பத்மாவதிக்கும் அதிக நட்பிருந்ததாலும், அவள் சொந்த பந்துவாதலாலும் அவள் ஒருக்காலும் அப்படிச் செய்திருக்க மாட்டாளென்பதாகத் தாங்கள் நம்பிவிட்டதால் அவ்விஷயத்தில் தாங்கள் சரியானபடி வேலை செய்யவில்லையென்றும் ஆகையால் அநேகமாய் அவ்விடத்தில் தான் அவள் இருப்பாளென்றும் யான் யூகித்தேன்.

மேஜர் மக்பார்லேண்டு துரை.—தாங்கள் நினைப்பது சரியல்ல; தங்களைப்போல் அவ்வளவு திட்டமாய் சந்தேகப்படாவிட்டாலும் நான் சற்று சந்தேகப்பட்டு சில நாட்கள் வரையில் அவ்வீட்டின்மேல் கண்வைத்து என் ஆட்கள் மூலமாய்ச் சமாசாரம் அறிந்துவந்தேன். தாங்கள் அவ்விஷயமான ரிக்கார்டுகளைப் பார்க்கத் தவறி விட்டீர்கள்போலிருக்கிறது.

கோவிந்தன்,—இல்லை ஐயா. நான் அந்த ரிக்கார்டுகளைப்பார்த்த பின்னால் தான் திட்டமாய் பத்மாவதி செல்லம்மாள் வீட்டில் தான் இருக்கவேண்டுமென்று யூகித்தேன். எப்படியெனில், தாங்கள் வேவுகாரர்களை விட்டு விசாரித்ததில் செல்லம்மாள் வீட்டிற்குக் காலை பத்துமணிக்கும், சாயந்திரம் எட்டுமணிக்கும் சண்டமாருதஸ்வாமி நித்தியம் வந்து ஏதோ மந்திரம் செய்துவிட்டுப் போவதாகவும் எழுதியிருந்தது. தாங்கள் இதை நம்பினீர்கள். சென்னையில் இருந்த பெருமாள் நாயுடு அவர்களுக்கு இச்செல்லம்மாள்

இந்த சண்டமாருத ஸ்வாமியிட மிருந்து தான் ஆட்கொல்லியை வசியமருந்தென்று வாங்கி வந்து ஊட்டி அவரைக் கொன்றாளாதலால் இவர்கள் இருவருடைய குணமும் எனக்கு நன்றாய்த்தெரியும். மேலும் காலை பத்துமணிக்கும் மாலை எட்டுமணிக்கும் தவறாமல் சாமியார் வந்ததால் செல்லம்மாள் பத்மாவதிக்கு ஆகாரம் கொடுக்கப்போனால் இன்னார்தான் பத்மாவதியைச்சிறையில் வைத்திருக்கிறார்களென்று அவள் அறிந்துகொள்வாளென்ற எண்ணத்துடன் சாப்பாடு வேளையாகிய காலைபத்துமணிக்கும் மாலை எட்டுமணிக்கும் சாப்பாடு கொடுத்துப் போவதற்காகவே சாமியார் வந்து போகிறார் என்றும் நான் யூகித்தேன். அதன்பேரில்தான் அவ்வளவு திட்டமாய்ச் சொன்னேன்.

மேஜர் மக்பார்லண்டு துரை.—சரி; இவ்விஷயந்தான் திருப்தியாகச் சொல்லிவிட்டீர்கள். மற்றவைகளையும் தயவுசெய்து சொல்லவேண்டுகிறேன்.

கோவிந்தன்.—கொலைகள் நடந்த இடத்தைப்போய்ப் பார்த்ததும் பாக்கியரத்னத்தின் கொலை ஓர் ஆண்பிள்ளையால் செய்யப்பட்டதல்லவென்றும் ஓர் பெண்ணால்தான் செய்யப்பட்டதென்றும் யூகித்திருந்தேன். (இப்படிக் கோவிந்தன் யூகித்ததற்குப் போதிய காரணங்கள் ஏற்கனவே பத்தாவது அத்தியாயத்தில் விவரிக்கப்பட் டிருக்கின்றன.)

மேஜர் மக்பார்லண்டு துரை.—ஓர் புருஷனால் அக்கொலை செய்யப்படவில்லையென்றும் பெண்ணால்தான் செய்யப்பட்டதென்றும் தாங்கள் அவ்வளவு திட்டமாய் யூகித்திருந்தும் பாரங்குச நாயுடுவையும், கோவிந்தசாமி நாயுடுவையும் ஏன் சிறையிலடைக்கப் பார்த்திருந்தீர்கள்.

கோவிந்தன்.—சட்டப்படி தாங்கள் நடத்துவதை நான் ஏன் தடுக்கவேண்டுமென்று சும்மா இருந்துவிட்டேன். மேலும் நான் என்ன கடவுளா? ஒருக்கால் நான் நினைத்ததே தவறுதலாயிருக்கலாமல்லவா? இல்லை, நான் யூகித்ததே சரியென்று வைத்துக்கொள்வோம். அதற்குப்போதிய சாக்ஷியங்கள் வேண்டாமா? குற்றவாளிகளென்று இருவரைப்பிடித்துக் கொட்டடியில் அடைத்துவைத்திருந்ததால் வாஸ்தவத்தில் கொலைசெய்தவர்கள் தங்களைப்பற்றி போலீசார் சந்தேகிக்கவில்லையென்றும் வேறு ஆசாமிகளைச் சந்தேகித்து விட்டதால் அநேகமாய்த் தங்கள் காரியம் வெளிக்குத் தெரியாதென்றும் நினைத்துக்கொண்டு அஜாக்கிரதையா யிருப்

பார்கள். அப்போது அவர்களைக் கண்டுபிடித்துக் கொள்ளலா மென்றும் சில நாட்கள் பராங்குசநாயுடுவும் கோவிந்தசாமிநாயுடுவும் சிறையில் இருந்ததினால் ஒன்றும்கெட்டுப்போக வில்லையென்றும்நினைத்தே சும்மா இருந்துவிட்டேன்.

மேஜர் மக்பார்லண்டு துரை.—சரி மேல் நடந்தவற்றைத் தயவு செய்து கூறுங்கள்.

கோவிந்தன்.—கொலை நடந்த இடத்தைச் சோதித்துப் பார்க்கையில் பெட்டிகளிலுள்ள சாமான்களையெல்லாம் எடுத்துப்போட்டிருந்த மாதிரியிலிருந்து கொலை செய்த நபர் எதையோ தேடிப் பார்த்திருப்பதாகத் தெரிந்தது. ஆனால் அந்த நபர் தேடிய வஸ்து அகப்பட்டு எடுத்துப்போனதும் அகப்படாததும் தெரியவில்லை. அப்பால் தேடிப்பார்க்கையில் பாக்கியரத்னத்தின் படுக்கையின் தலையணையின்கீழ் குமாரசாமி நாயுடுவின் படமும் இதோ இக்கடிதமும் கிடைத்தன.

கடிதம்.

எனது பிரியமுள்ள பத்மாவதிக்கு,

உனக்குக் கொடுப்பதற்காகவே எடுத்த எனது படத்தை இத்துடன் உனக்கு அனுப்பியிருக்கிறேன். நீ விரும்பியபடி படம் அழகாய் அமைந்திருக்கிறதென்பதே எனது நம்பிக்கை. இதைப்போலொத்த படம் வேறு யாரும் வைத்திருக்கக் கூடாதென்பதற்காக இந்த ஒரே ஒரு பிரதிமட்டும் எடுத்ததல்லாமல் அக்கண்ணாடியையும் உடைத்துவிட்டேன்.

இப்படிக்கு, உனது பிரிய நேசன்,

குமாரசாமி நாயுடு.

மேஜர் மக்பார்லண்டு துரை.—இப்படமாவது கடிதமாவது அகப்பட்டதாகத் தாங்கள் இதுவரையில் என்னிடம் சொல்லவே இல்லையே, என் ?

கோவிந்தன்.—நான் அவைகளைக கண்டவுடனே பத்மாவதியின் கேசுக்கும் இக்கொலைக்கும் சம்மந்தம் இருப்பதாக யூகித்து இக்கொலை சம்மந்தமான விஷயங்களைக் கண்டு பிடிப்பதாகத் தங்களிடம் ஒப்புக்கொண்டேன். பின்னால் அந்த ரிக்கார்டுகளெல்லாம் தாங்கள் என்னிடமே சேர்ப்பித்ததால் இவைகளையும்நானே வைத்துக்கொண்டேன். அந்தக் கொலைக்கேசை என்னைத் துப்புத்துலக்கச் சொல்லியிராவிட்டால் கட்டாயமாய்த் தங்களிடமே கொடுத்திருப்பேன்.

என்று சொன்னார். அப்போது கமிஷனர் துரை அவர்கள் மேல் நடந்தவைகளைச் சொல்லச் சொன்னார்.

கோவிந்தன் — கொலை நடந்த மறுநாள் விசாரணை காலத்தில் கும்பலோடு கும்பலாய் சண்டமாருத ஸ்வாமியார் அங்கு வந்து நின்று அன்று விசாரிக்கப்பட்ட விஷயங்களை அதிகக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார். விசாரணை முடிவதற்குள் அதிக அவசரமாய்ச் சென்றார். அவருக்குத் தெரியாமல் நானும் கூடச்சென்றேன். சாமியார் செல்லம்மாளின் வீட்டிற்குப் போய் யாதொரு தட்டுத் தடையில்லாமல் நேராக உள்ளே சென்று அவளிடம் வெகு இரகசியமாகச் சிலசங்கதிகள் சொல்லிவிட்டுத் தன் வீட்டிற்குப் போனார். கோகிலாம்பாளின் வேலைக்காரியாகிய சொர்ணத்தின் சமீபத்தில் கிடந்த மருந்துப் பொட்டலத்தைப் பத்திரமாய் எடுத்து வைத்திருந்தேனல்லவா? அதைப் பரிசோதித்துப் பார்க்கையில் சென்னை இராஜதானியில் மட்டும் கிடைக்கக்கூடிய ஓர் விஷப்பூண்டிலிருந்து எடுத்த மருந்தென்று கண்டு கொண்டேன். காணாமற்போயிருந்த பத்மாவதி கொலை நடந்த ஒருமணி நேரத்திற்கப்பால்தான் வந்தாளென்பதை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்களென்று நம்புகிறேன். பத்மாவதிக்கு வந்த கடிதமும் படமும் பத்மாவதியின் கைக்குட்டையும் கோகிலாம்பாளின் தலையணையின் கீழ் இருந்ததாலும் கோகிலாம்பாள் கொலை செய்யப்பட்ட ஒருமணி நேரத்திற்குள் பத்மாவதி தன் வீட்டிற்குத் திரும்பிவந்ததாலும் இக்கொலை யார்செய்தார்களென்று கண்டுபிடிக்க வேண்டுமானால் முதலில் பத்மாவதி சுயேச்சையாய்ப் போய் எங்கேயாவது ஒளித்திருந்தாளா அல்லது பலாத்காரமாய் சிறையில் வைக்கப்பட்டிருந்தாளா வென்று கண்டுபிடிக்கவேண்டியது அவசியமாயிற்று. ஆகையால் நான் பிடாரிபுரம் ஜமீன்தாராகிய ராமதாஸ் என்னும் பெயர்பூண்டு முட்டாளைப்போல் நடித்தால்தான் எங்குபோனாலும், என்ன பேசினாலும் யாரும் சந்தேகப்படமாட்டார்களென்று நினைத்து அடிக்கடி செல்லம்மாள் வீட்டிற்குப்போய் வந்தேன். இப்படிப் போய் சோதித்தபோது முன்னால் பைத்தியக்காரனை மூடிவைத்திருந்த அறையின்வழி செங்கல் சுண்ணாம்பால் கட்டப்பட்டது அப்படியே இருந்தது. ஆகையால் புதிதாக அவ்வறைக்கு வழி அமைத்திருக்க வேண்டுமென்று நினைத்து சிலமாதங்களுக்கு முன்னால் செல்லம்மாள் வீட்டில் வேலை செய்த கொல்லத்துக்காரன் (கொத்தன்) யாரென்று விசாரித்து அவன் வீட்டில்

போய்ப்பார்த்ததில் செல்லம்மாள் வீட்டில் வேலைசெய்து முடித்த வுடனே சென்னைக்குப் போய் விட்டதாகக் கேள்விப்பட்டு அவன் வைப்பாட்டியாகிய தாயம்மாளிடம் போய் நான் இப்போதுதான் சென்னையிலிருந்து வந்ததாகவும் அங்கே கொல்லத்துக்காரனாகிய ராமசாமி வேறொரு ஸ்திரீயை வைத்துக்கொண்டு அவள் கேட்கும் சாமான்களை யெல்லாம் வாங்கிக் கொடுப்பதோடு இனிமேல் சிங்கப்பூர் முகம் பார்க்கப் போவதில்லையென்றும் இன்னும் இதைப்போ லொத்த அவளுக்குக் கோபத்தை மூட்டக் கூடிய பல விஷயங்களையும் சொன்னதின்பேரில் அவள் அவனிடமிருந்து சில தினங்களுக்கு முன்னால் வந்த ஒரு கடிதத்தை என் சமீபத்தில் வீசி எறிந்து "அந்தச் சண்டாளன் அவ்வளவு ரூபாய்களை எடுத்துக்கொண்டு போனபோதே திரும்பிவருவது சந்தேகமென்று சொல்லி நான் தலையிலடித்துக் கொண்டேன். இப்போதுகூட எவ்வளவு பசப்பி கடிதம் எழுதியிருக்கிறான் பாருங்கள்" என்று சொன்னாள். நான் அக்கடிதத்தைப் பார்ப்பதைப் போல் விலாசத்தைமட்டும் அதிக கவனமாய்ப் பார்த்துக்கொண்டு அவளுக்காக அதிக அனுதாபப் பட்டுவிட்டு ராமசாமி கொடுத்தனுப்பியதாக அவள் கையில் இருபது ரூபாய் கொடுத்துவிட்டு சென்னையிலுள்ள எனது ஏஜண்டாகிய ராமுடுவை ராமசாமியிடம் இவ்விஷய சம்பந்தமான காரியங்களை நயத்திலாவது பயத்திலாவது கண்டறியும்படி தந்தி அடித்தேன். அவன் சிங்கப்பூர் போலீஸ்காரன் வேஷம் தரித்து ராமசாமி தனிமையாய் இருக்கையில் அவனைப் போய்க் கண்டு செல்லம்மாளைப் பயமுறுத்தி ஏராளமான பணம்பெற்றுவந்ததாக அவள்பிரியாது கொடுத்ததாகச் சொன்னதின்பேரில் அவன் "ஐயோ! நான் வேண்டாமென்று சொன்னபொதுகூட அந்தம்மாள் பலாத்காரமாய் எனக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து என்னைச் சென்னைக்குப் போய்விடு என்று அனுப்பினார்களே யொழிய நான் வேறு பாவம் அறியேனே" என்று சொன்னானென்றும் அதன்பேரில் எதற்காக ரூபாய் இரண்டாயிரம் கொடுத்தார்களென்று படிப் படிப்பாய்க் கேட்டதில் மாடியிலிருக்கும் தனித்த ஓர் அறைக்குப் போவதற்கு இன்ன இடத்தில் வழி இடித்துக் கட்டிக் கொடுக்கச் சொன்னார்கள். நான் அந்த வேலையைத்தவிர வேறு ஒன்றும் செய்யவில்லையே. என்மேல் இரக்கங்கொண்டு பணங்கொடுத்துவிட்டு பெரியமனுஷாளெல்லாம் இப்படிச்செய்தால் என்னைப்போல் ஏழைகள் என்ன

செய்வதென்று அழுதாளென்றும் அதன்பேரில் ராமுடு இரக்கங்
கொண்டவன்போல் அந்தம்மாளை மறுபடியும் கேட்டு வருகிறே
னென்று சொல்லிவிட்டு வந்துவிட்டதாகவும் எனக்குத் தந்தி மூல
மாய் விவரமாய்த் தெரிவித்தான். ஓர் நாள் செல்லம்மாள் வீட்டி
லில்லாத வேளை அறிந்து அங்குபோய் பரிசோதித்து அவ்விடத்
தைக் கண்டுபிடித்து அவ்வறை பூட்டப்பட் டிருந்ததால் மெழுகு
கொண்டுவந்து அடையாளம் எடுத்து திறவுகோல் செய்து அவ்
வறையைத் திறந்து பார்த்தேன், இதற்கு மத்தியில் நான் பிச்
சைக்காரன் வேடம்பூண்டு கோகிலாம்பாள் தலையணையின் கீழ்
இருந்து எடுத்த படத்தைப் பார்த்தாச் செல்லம்மாளின் வேலைக்
காரிகள் ஏதாவது சொல்லுகிறார்களா வென்று பார்ப்பதற்காகச்
செல்லம்மாள் வீட்டில் இல்லாத நேரத்தில் செப்படி வித்தை
காட்டுவதைப்போல் காட்டிக்கொண் டிருக்கும்போதே இப்
படத்தை எடுத்துத் திடீரென்று வெளியே வைத்தேன் மற்ற
வேலைக்காரிகளெல்லாம் அதைப் பார்த்து ஒன்றும் சொல்லாம
லிருக்க செல்லம்மாளின் அந்தரங்க வேலைக்காரியான மாணிக்க
மென்பவள் மட்டும் அதிக ஆச்சரியமுற்று நான் வெளியே போன
வுடன் என்னைப் பின் தொடர்ந்து வந்து "ஐயா! தங்களுக்கு இப்
படம் எங்கிருந்து கிடைத்தது" என்று கேட்டாள். அங்கு என்
னுடன் வந்து காத்துக்கொண் டிருந்த போலீஸ்காரனிடம் நான்
கண் ஜாடை செய்யவே அவன் "அம்மா! தங்களை கமிஷனர்
துரை அவர்கள் உடனே அழைத்துவரச் சொன்னார்கள். அமரிக்
கையாய் வந்தால் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் இவ்வண்டி
யில் ஏற்றி அழைத்துப்போவேன் தாங்கள் வராமல் தாமதித்தால்
விலங்குகள் மாட்டி நடத்திக் கூட்டிக்கொண்டு போவேன்" என்
றான். அப்போது பிச்சைக்காரன் வேஷம் போட்டிருந்த நான்
போலீஸ்காரனைப் பார்த்து "ஐயா! அந்தம்மாள் ஒண்டியாய் வரப்
பயப்படுகிறார்கள். என்னையும் கூட அழைத்துப்போனால் சந்தோஷ
மாய்க் கூடவருவார்கள்போ லிருக்கிறது. நான் வண்டியின் பின்
னால் உட்கார்ந்து வருகிறேனையா," என்றேன். அவர் சம்மதிக்
காதவர்போல் சம்மதிக்கவே அந்தம்மாள் ஒரு பக்கமும் அவர்
ஒரு பக்கமும் ஏறி உட்கார்ந்தார்கள். நான் வெளியே உட்கார்ந்
திருந்தேன். வண்டி என் அறைபோய்ச்சேர்ந்தது. மூவருமிறங்கி
உட்சென்றதும் நான்போய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு
அவளைப் பார்த்து 'பெண்ணே! இப்படத்தைப் பற்றிய சகல

விவரங்களும் உனக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். நீ உண்மையைச் சொன்னால் பிழைத்தாய். இல்லா விட்டால் என்ன நடக்கும் தெரியுமா? கோகிலாம்பாளை நீ கொலை செய்தாய் என்ற குற்றம் உன்மேல் சுமத்தப் பட்டு நீ தூக்கு தண்டனை அடைவது நிச்சயம். உன்னை இப்படமென்ற வலையைப் போட்டு பிடித்துக் கொண்டு வருவதற்காகவே நான் செப்படி வித்தைக்காரன்போல் வந்தேன். இப்படம் சம்பந்தமான விஷயங்கள் பூராவும் எனக்குத் தெரியும். நீ உண்மையைச் சொல்லுகிறாயா அல்லது ஜெயிலுக்குப் போகிறாயா? வென்றேன். முதலில் தனக்கும் அப்படத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்று அவள் சொன்னபோதிலும் அநேக சாமர்த்தியமான கேள்விகளைக் கேட்டதில் அப்படமும் கடிதமும் தன் எஜமானியாகிய செல்லம்மாள் வைத்திருந்ததாகவும் ஓர்நாள் செல்லம்மாளைப் பார்ப்பதற்காக கோகிலாம்பாள் வந்ததாகவும் செல்லம்மாள் வீட்டிலில்லாததால் கோகிலாம்பாள் அவள் அறையை சுற்றிப் பார்க்கையில் எப்படியோ இப்படத்தையும் கடிதத்தையும் கைக்குட்டையையும் கண்டெடுத்து அவைகளைக் கொடுத்தால் ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்லித் தன்னை அழைத்துப்போய் ரூபாய்கள் கொடுத்து அவள் அங்குவந்த விஷயமாவது படமும் கைக்குட்டையும் எடுத்து வந்த விஷயமாவது செல்லம்மாளிடம் சொல்லவேண்டாமென்று வற்புறுத்தி அனுப்பினதாகவும் தான் அப்படியே சம்மதித்து சென்றதாகவும் செல்லம்மாள் வந்தவுடன் படத்தையும் கடிதத்தையும் காணாமல் தன்னைக் கூப்பிட்டுக் கேட்டதாகவும் தனக்கு ஒன்றும் தெரியாதென்று சொன்னதாகவும் அதன் பேரில் தன்னை பயமுறுத்தி அடித்துத் திட்டினதின்பேரில் தான் உண்மையைச் சொல்லிவிட்டதாகவும் இதைவிட வேறொன்றும் தனக்குத் தெரியாதென்றும் இது சத்தியமென்றும் சொன்னாள். அதன்பேரில் நான் அவளைக்கேட்ட விஷயம் வெளிக்கு வந்தால் அன்றையதினமே அவள் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு ஜெயிலுக்குப் போகும்படி நேரிடுமென்று பயமுறுத்தி அனுப்பிவிட்டேன். அப்பால் சண்டமாருதஸ்வாமி இல்லாத நேரத்தில் அவர் வேலைக்காரன் ஒருவனுக்குப் பணம் கொடுத்து அவர் ஒளித்து வைத்திருந்த உடைகளைக் கொண்டு வரச்சொல்லி அவ்வுடைகளையும் பொய்த்தாடியையும் கோகிலாம்பாளின் வேலைக்காரனாகிய நடேசனிடம் காண்பித்து வைத்தியர் அணிந்து வந்த உடையும் தாடியும் அவைகள் தானாவென்று

கேட்டபோது அவன் 'ஆம்' என்று சொன்னான். இதுவரையில் கொலைசெய்த இரண்டு பேர்கள் இன்னொன்று ஏற்பட்டதே யொழிய கோர்ட்டில் அவர்களைத் தண்டிக்கப்போதிய சாக்ஷியங்கள் அகப்படவில்லை. சாக்ஷி சேகரிப்பதற்காகவே சீனுவை சண்டமாருத ஸ்வாமியிடம் அனுப்பி அவர் அவனைப் பின் தொடர்ந்து சென்றபோது நான் அவர் வீட்டிற்குள் புகுந்து அவர் வைத்திருக்கும் மருந்துகளைத் தேடியதில் சொர்ணத்தைக் கொன்ற விஷம் சண்டமாருத ஸ்வாமியிடம் இருக்கக் கண்டேன். ஆகவே சொர்ணத்தைக் கொன்றவர் சண்டமாருத ஸ்வாமியார்தான் என்பதைக் கோர்ட்டில் ரூபிப்பதற்குக் கோகிலாம்பாளுடைய வேலைக்காரனை நடேசன் சாக்ஷியமும் அவர் வைத்தியன் வேஷம் பூண்ட உடைகளும் பொய்த்தாடியும் போதுமென்று கண்டுகொண்டேன் இனி கோகிலாம்பாளைக் கொன்ற நபரை சண்டமாருத ஸ்வாமியார் மூலமாய்த்தான் கண்டுபிடிக்கவேண்டுமென்று தீர்மானித்து மறுநாள் சீனுவை அவரிடம் அனுப்பி மருந்து கேட்கும்படி சொன்னேன். நான் நினைத்தபடியே சாமியார் தனது இரகசியம் அறிந்த சீனுவைக் கொல்ல வெளியே வந்தார். அப்போது அவரைப் பிடித்துக் கொட்டடியில் அடைத்துக்கொண்டு கேட்டதில் அவர் வாயைத் திறக்கவேயில்லை. அப்பால் யோசனைசெய்து சிங்கப்பூரிலேயே இலஞ்சம் வாங்காதவர் என்று பெயரெடுத்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜு முதலியாரிடம் போலீஸ் கமிஷனர் மூலமாய் நான் கலந்து பேசி வாஸ்தவத்தில் அவருக்குக் கடன் நிர்ப்பந்தம் இருக்கிறதென்று ஸ்வாமியாருக்குக் காட்டுவதற்காக நான் மோகனின் சாப்பு வேடம் பூண்டு அவரைக் கடனுக்காக ஸ்வாமியாரின் எதிரில் நிர்ப்பந்தப் படுத்தியபோது அவர் கடன் கேட்ட ஆள்களிடமெல்லாம் சொல்லிவைத்தும் கடன் கொடுக்க முடியாதென்று சாக்குப்போக்குச் சொல்லும்படி செய்ததின் பேரில் ராஜு முதலியார் ஒருவாறு இலஞ்சம் வாங்கச் சம்மதித்ததுபோல் அபிநயிக்க, சண்டமாருதஸ்வாமி ஓர் கடிதம் எழுதி அவரிடம் கொடுத்து செல்லம்மாளிடம் கொடுக்கும்படி அனுப்பினார். ராஜு முதலியார் அக்கடிதத்தை வாங்கி அங்கு வெளியே காத்திருந்த என்னிடம் சேர்ப்பிக்க அதைப் பிரித்துப் படித்துவிட்டு உடனே அதைப் படம் பிடித்துக்கொண்டு மடித்து செல்லம்மாளிடம் கடிதத்தைக் கொண்டுவந்து கொடுக்கும்படி திட்டஞ் செய்துவிட்டு நான் வைத்தியக்கார ஜமீன்தார் வேஷம் தரித்து வழக்கம்போல் செல்லம்மாள் வீட்

டில் போயிருந்தேன். அக்கடிதம் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

கடிதம்

என்னை இதுவரையில் காப்பாற்றிவந்த செல்லம்மாள் அவர்களுக்கு சதா ஊழியனான சண்டமாருத ஸ்வாமி எழுதும் விண்ணப்பம் என்னவென்றால், சென்னை திருவல்லிக்கேணி துப்பறியும் கோவிந்தன் இங்குவந்து கோகிலாம்பாளையும் சொர்ணத்தையும் கொலை செய்தவர்களைக் கண்டுபிடிக்க முயல்கிறதாகத் தெரிகிறது. எப்படியோ தாங்கள் கோகிலாம்பாளைக்கொன்ற விஷயம் யூகித்து என்னை ஓர் சொற்பக் குற்றத்தின்பேரில் கொட்டடியில் அடைத்து வைத்துக்கொண்டு தங்களுக்கு விரோதமாய் சாக்ஷிசொன்னால் விட்டுவிடுவதாகப் பயமுறுத்துகிறான். அந்தப் பிசாசைக் கண்டது முதல் எனக்கு அதிகப் பயமாயிருக்கிறது. எந்த சமயத்தில் எப்படிப் பயமுறுத்தி உண்மையைக் கிரஹித்து விடுவானோ தெரியாது. நான் இங்கிருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் நமது ஆபத்தை விருத்தி செய்யும். எனக்குக் காவலிருக்கும் போலீஸ் இன்ஸ்பெக்டராகிய இராஜு முதலியாருக்குப் பதினாயிரம் ரூபாய் நிர்ப்பந்தமான கடனிருக்கிறது. அதையும் கொடுத்து மேலே இருபதினாயிரம் ரூபாய் கொடுத்தால் என்னை விட்டுவிடுவதாகச் சம்மதித்திருக்கிறார். ஆகையால் நம்மிருவர் உயிரைக் காப்பாற்றவேண்டுமென்ற எண்ணம் தங்களுக்கிருந்தால் முப்பதினாயிரம் ரூபாயுடன் வண்டிபோட்டுக்கொண்டு உடனே இந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து ரூபாய்களைக் கொடுத்துவிட்டு என்னை அழைத்துப்போய் பதமாவதியை வைத்திருந்த இடத்தில் வைத்தால்தான் நாம் இருவரும் தப்பலாம். அப்படியில்லாவிட்டால் கோவிந்தன் எப்படியாவது என்னிடம் தங்கள் விஷயங்களைக் கிரஹித்து விடுவான். தாங்கள் அவ்வளவுக்கு இடம் கொடுக்கமாட்டீர்களென்று நம்பி தங்களுக்கு எழுதும் தங்கள்சதா கீழ்ப்படிதலுள்ள.

சண்டமாருத ஸ்வாமி.

ஒருக்கால் இவர்கள் இருவரும் சந்தித்தபின் வேறுயோசனை செய்து வேறெங்காவது போய்விடுவார்களோ என்னமோவென்று நினைத்து சினுவையும் இன்னும் இருவரையும் இவர்களைப் பின்தொடர்ந்து வரும்படியும் அவர்கள் வீட்டிற்கு வராமல் வேறெங்காவது சென்றால் அவர்களை உடனே கைதிகளாக்கும்படியும், நேராய் வீட்டிற்கு வந்தால் அவர்களுடன் கூடவேவந்து அவர்கள் எங்குசெல்லுகிறார்களோ அங்கு வரும்படியும் அவர்கள் கதவைப்பூட்டிக்கொண்டு உள்ளேசென்றால் அந்த அறையைத் திறப்பதற்காக ஓர் சாவியையும்கொடுத்து திட்டப்படுத்தி வந்தேன். நான் நினைத்தபடியே சகலமும் நடந்தேறின என்றார்.

அப்போது இன்ஸ்பெக்டர் டாஸ்துரை கோவிந்தனைப் பார்த்து "நான் தங்கள்பேரில் வாரண்டு எடுத்துக்கொண்டு வந்து நின்றவுடன் எல்லாம் கூட இருந்து விசாரித்து வாரண்டு எடுத்து வந்தவர்களைப்போல் ஒப்புவித்தீர்களே. அது எப்படி?" என்று கேட்டார். அதற்குக் கோவிந்தன் நான் ஜமீன்தார் வேஷம் பூண்டு போகையில் தனது காரியாதிகளை ஆட்களை வைத்து இன்ஸ்பெக்டர் டாஸ்துரை பார்ப்பதாக தனக்குத் தெரிந்தது முதல் தன்னைப்பற்றி என்னென்ன செய்துவருகிறார் என்று கவனித்து அப்போதைக்கப்போது அறிந்து கொண்டதாகவும் இதில் ஆச்சரியப் படக்கூடிய விஷயம் ஒன்றுமில்லையென்றும் சொன்னார்.

இன்ஸ்பெக்டர்.—பராங்குச நாயுடு கோகிலாம்பாளின் வீட்டுப் பின்பக்கத்து சாவி தன்னிடம் கிடையாதென்று ஏன் பொய் சொன்னார்?

கோவிந்தன்.—தன்பேரில் சந்தேகம் அதிகரிக்கக் கூடாதென்றே சொல்லியிருப்பார். மேலும் அவர் சாவியை முந்தின ராத்திரியே தூர எறிந்ததை யாரும் பார்க்கவில்லை என்று நினைத்திருந்தார்.

இன்ஸ்பெக்டர்.—கோவிந்தசாமி நாயுடுவின் துணியில் இரத்தம் எப்படி வந்தது?

கோவிந்தன்.—துணியில் பட்டிருந்த இரத்தத்தை ரசாயன பரிட்சை செய்து பார்த்தேன். அது மனிதர் இரத்தம் அல்லவென்றும் மிருக இரத்தம் என்றும் தெரியவந்தது. மிருக இரத்தம் எப்படி வந்ததென்று யோசித்ததில் ஒருக்கால் ஆடுகளடிக்கும் இடத்தில் இருந்த இரத்தம் ஒட்டியிருக்குமாவென்று சந்தேகித்து அவ்விடத்தில் போய் விசாரித்ததில் அன்றிரவு மேஜை ஆடுகள் அடிக்கும்போது யாரோ ஒருவர் வந்ததாகவும் அவர் பைத்தியக்காரனைப்போல் ஒன்றும் தெரியாமல் அந்த இடத்தில் விழுந்ததாகவும் அவரை வெளியே பிடித்துத் தள்ளினதாகவும் கசாப்புக்காரன் சொன்னான்.

இன்ஸ்பெக்டர்.—ஐயா! இன்னும் ஒரே ஒரு சந்தேகத்தை மட்டும் நிவர்த்தி செய்யுங்கள். பாக்கியரத்னமென்ற கோகிலாம்பாளுக்கு ஒரு பிள்ளையிருந்ததாகச் சொன்னீர்களே. அப்பிள்ளை எங்கேயிருக்கிறது? இதை ஏன் கேட்கிறேனென்றால் கோகிலாம்பாள் சொத்தை யாரிடம் நியாயமாய் ஒப்பிக்கவேண்டும் என்று அறிவதற்காகத்தான்.

கோவிந்தன்.—பெருமாள் நாயுடவர்கள் இறந்த ஒரு வருஷத்திற்குப்பின் அப்பிள்ளையும் பரமபதமடைந்தது. எனக்குத் தெரிந்த வரையில் அவள் சொத்துகளெல்லாம் கோவிந்தசாமி நாயுடுவைத்தான் சேரும்போலிருக்கிறது. என் அவசரப்பட வேண்டும். கோவிந்தசாமி நாயுடு கோர்ட்டுமூலமாய் தன் சுதந்தரத்தை ரூபிக்கும்வரையில் கவர்ன்மெண்டிலேயே அச்சொத்துகளிருக்கட்டுமே.

அங்கிருந்தவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களையெல்லாம் தெளிவாய்த் தெரிவித்து விட்டதாகவும் இனி தங்களுக்கு யாதொரு சந்தேகமு மில்லையென்றும் சொல்லி கோவிந்தனுடைய சாமர்த்தியங்களைக் குறித்துப் புகழ ஆரம்பிக்கவே கிருஷ்ணசாமி நாயுடுவை அழைத்துக்கொண்டு கோவிந்தன் தனக்கு அவசர ஜோலியிருப்பதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

இவ்விஷயங்களெல்லாம் நடந்தமறுநாள் கோவிந்தன் சண்டமாருதஸ்வாமியை ஜெயிலில் போய் தான் இரண்டு தினங்களுக்கு முன்னால் கேட்டபோது உண்மையைச்சொல்லி இருந்தால் ஒருக்கால் அவரை அப்ரூவராய் எடுத்துக்கொண் டிருப்பா ரென்றும் இப்போதுஅதற்கு சாத்தியமில்லை யென்றும் சொல்லி அவருக்கு விரோதமாய் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியங்களைச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவர்சென்ற கொஞ்ச நேரத்திற்கப்பால் சண்டமாருத ஸ்தாமி தனக்குச் சாப்பாடு போட்ட பிங்கானை உடைத்து அத்துண்டுகளைக்கொண்டு தன் கழுத்தை அறுத்துக் கொண்டார். இப்படி அறுத்ததில் சரியாய்க் கழுத்து அறுபடாததால் அவர் பிராணன் போகவில்லை. அதற்குள்ளாக வார்டர்கள் பார்த்துக் கொண்டதால் அவரைப்பிடித்து கையிலும் காலிலும் விலங்குகள் மாட்டி ஜெயில் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் போட்டார்கள். கண்ணாடித்துண்டுகள் கழுத்தில் அகப்பட்டுக் கொண்டதால் அதை எடுக்க முடியாமலும் பிராணன் போகாமலும் சாமியார் ஒருமாதக் காலம் அதிக ஹிம்சைப்பட்டார். அந்தோ பரிதாபம்! அவர் பட்ட அவஸ்தையை எழுதவும் எமது கை கூசுகின்றது. விழித்திருக்கும்போது இக்காயங்களா லுண்டான வலியை வெகுவாக உணர்ந்து நொந்தார். கண் மூடினவுடனே இவர் அநியாயமாய் மறந்துகொடுத்தும் வேறுவிதமாய் கொலைசெய்த அநேகருடைய உருவத் தோற்றங்களும் இவர் கண்ணுக்குப் புலப் பட்டதோ என்னமோ ஈசன்தான் அறிவார். "ஐயையோ! என்னை வெட்

டாதேயுங்கள் தூற்றாதேயுங்கள். எனக்கு விஷம் ஊட்டாதேயுங்கள்" என்று இப்படிப் பலவாறாகச் சொல்லிப் புலம்புவார். இவருடைய ஜென்ம விரோதிக்குக்கூட அந்தோ! இவர் இப்படி ஹிம்சைப் படுவதைவிட இறந்து விடுதல் நல்லதென்று தோன்றிற்று. என்னசெய்யலாம்! வினை விதைத்தவன் வினை அறுத்தான், தினைவிதைத்தவன் தினை அறுத்தான் என்பதைப்போல் இவர்செய்த துஷ்கிருத்தியங்களுக் கெல்லாம் பிரதிபலன் அநுபவித்தே தீரவேண்டியதிருந்தது. இப்படி ஒருமாதம் ஹிம்சைப் பட்டபின் பரம தயாநிதியாகிய கடவுளே இவர்மீது இரங்கி இவரை இம்மண்ணுலகின் பாதையிலிருந்து நிவர்த்தி செய்துவிட்டார். இனி நரகத்தில் இவருக்கு எந்த இடங் கிடைக்குமோ அறியோம்.

நிற்க. சென்னையில் இவருக்கு அநுசரணையா யிருந்து மருந்துகள் விற்றுவந்த காமாக்ஷியம்மாளுக்கு கண்கள் இரண்டிலும் பூவிழுந்து விழிகள் குருடாய்விடவே அவள் உண்டிக்கும் உடைக்கும் அவதிப்பட்டு ஓர்நாள் பக்கத்திலிருந்த விளக்கினின்று அக்னி எப்படியோ இவள் உடையில் பற்றிக்கொண்டு எரிந்து உடம்பு புண்ணாகி பத்துநாள் வரையில் அதிக கஷ்டப்பட்டு இறந்தாள். இன்னும் பெருமாள் நாயுடுவுக்கு வசியமருந்து வாங்கிக் கொடுக்கத் தீர்மானித்த ராமக்கா, சோமக்கா, ஆமணக்கம்மாள், ஊர்வம்பி, தெருச்சுத்தி முதலானவர்களுக்கு என்ன கெடுதி நேரிடுமோ நாம் அறியோம்.

கோவிந்தசாமி நாயுடவர்கள் கோகிலாம்பாள் என்ற பாக்யரத்னத்தின் சொத்துக்குத் தான் தான் பாத்தியஸ்தனென்று ருஜுப்படுத்தி அச்சொத்துக்களைப் பெற்றுக்கொண்டார். முன்னால் சொத்துகளை விரையப் படுத்திவிட்டுக் கஷ்டப்பட்டாராதலால் இப்போது அவருக்கு பணம் சம்பாதிப்பதில் ஏற்படும் கஷ்டம் தெரிந்துவிட்டது. பழைய துர்க்குணங்களைவிட்டு இப்போது கிரமகாலட்சேபம் செய்து வருகிறார். கூடிய ஜல்தியில் அவருக்குத் தகுந்த பெண்ணைக் கலியாணம் செய்வார்களென்று நம்ப இடமிருக்கிறது.

பதினைந்தாவது அத்தியாயம்

இரட்டைக் கலியாணங்கள்

சண்டமாருத ஸ்வாமியிடமிருந்துவந்த கோவிந்தன் போலீஸ் கமிஷனர் துரை அவர்களிடம் போய், தான் சென்னையிலிருந்து வந்து அநேக நாட்களாய் விட்டதாலும் தான் வந்த ஜோலிகளெல்லாம் முடிந்துவிட்டதாலும் தனக்குச் சென்னையில் பல அவசர ஜோலிகள் இருப்பதாலும் தான் உடனே சென்னைக்குப் போகவேண்டுமென்று தெரிவித்தார். அவர் கோடீஸ்வரப் பிரபுவாகிய நாராயணசாமி நாயுடு முதலான அவ்வூரிலுள்ள பல சனவான்களையும் வரவழைத்துக் கோவிந்தனுடைய அபாரமான செய்கைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, விலையுயர்ந்த தங்கப் பதக்கமொன்று அவருடையசொந்தச் செலவில்செய்து கோவிந்தனுக்கு அச்சபையில் வைத்து வெகுமானமளித்து, சென்னை போலீஸ் கமிஷனர் துரை அவர்களுக்கும் ஓர் கடிதம் எழுதிக் கொடுத்தனுப்பினர். கோவிந்தன் புறப்பட்டுப் போகும்போது நாராயணசாமி நாயுடு அவர்களும், சுப்பராயலு நாயுடு அவர்களும், பராங்குஷ நாயுடு அவர்களும், கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும், தனித்தனியே கோவிந்தனுக்கு மூடிபோட்ட கடிதங்கள் கொடுத்தார்கள். ஒவ்வொன்றிலும் பெருந்தொகைகள் அடங்கிய தெரிசன உண்டியல்கள் இருந்தனவென்று நமக்குத் தெரியுமே தவிர தொகைகள் இவ்வளவென்பதைத் திட்டமாக நாம் அறியோம். கோவிந்தசாமி நாயுடு அவர்கள்மட்டும் கோவிந்தனை சென்னையில் வந்து சில தினங்களில் பார்ப்பதாகச் சொன்னார். ஆனால் கோவிந்தனோ அவர் வந்து பார்ப்பதில் தனக்கு எவ்விதமான ஆட்சேபனையும் கிடையாதென்றும் அவரிடமிருந்து யாதொரு வெகுமதியும் பெற்றுக்கொள்ளத் தனக்கு மனமில்லையென்றும் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார்.

நிற்க, இவ்விஷயங்கள் நடந்த சில தினங்களுக்கப்பால் பராங்குஷ நாயுடவர்கள் நாராயணசாமி நாயுடவர்களிடம் வந்து முன்னால் அவர் வாக்களித்தபிரகாரம் பத்மாவதியைத் தனக்குக் கலியாணம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டார். பத்மாவதிக்கும் அவள் தாயாருக்கும் இக்கல்யாணத்தில் இஷ்டமில்லையாதலாலும் அவர் அவர்களுடைய விருப்பத்திற்கு விரோதமாய்த் தனக்குச்செய்ய அபிப்பிராயமில்லையாதலாலும் வேறொ

ரிடத்தில் தக்க பெண்ணைப்பார்த்து தானே கலியாணம் செய்து வைப்பதாகச் சொன்னார். பாரங்குச நாயுடு அவர்கள் கோபித்துக்கொண்டு இனி தான் கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லையென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அப்பால் இரண்டு தினங்களுக்குப் பிறகு சுப்பராயலு நாயுடு அவர்களும் அவர் பெண்சாதியும் வந்து நாராயணசாமி நாயுடுவைச் சமாதானப் படுத்தி பத்மாவதியைக் குமாரசாமி நாயுடுவுக்குக் கலியாணம் செய்யத் தீர்மானித்து தாம்பூலம் மாற்றிக்கொண்டு சந்தோஷமாய்ச் சென்றார்கள்.

**வரு வைகாசி 12-க்குச் சரியான **வரு மேமீ 25உ ஞாயிற்றுக்கிழமையும் உத்திராட நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் அன்று உதயாதி நாழிகை 10-க்கு மேல் 12½-க்குள்ளாக கடக லக்கினத்தில் குமாரசாமி நாயுடு அவர்களுக்கும் பத்மாவதி அம்மாளுக்கும் வெகு விமரிசையாய் விவாகம் நடந்தேறிற்று. கடவுள் அநுக்கிரகத்தால் தம்பதிகள் நோயற்றவாழ்வும் குறைவற்ற செல்வமும் பொருந்திவாழ்வாராயினர்: வேளாவேளைகளில் நாராயணசாமி நாயுடவர்கள் குமாரசாமி நாயுடு அவர்களிடம் பழையவிரோதத்தைக் காட்டாமலிருப்பதில்லை. ஆயினும் அவர்கள் மறு நிமிஷத்திலேயே சந்தோஷமும் சமாதானமுமாய்ப் போய்விடுவது வழக்கமாயிருந்தது.

ஜீவானந்தம், தன்னைப்பார்க்கிலும் சுமார் பதின்மடங்கு ஸ்திதியுடைய ஆதிபுரம் ஜமீன்தாராகிய பத்மநாப நாயுடு அவர்களின் புத்திரியென்று தெரிந்தது முதல் கிருஷ்ணசாமி நாயுடு, ஜீவானந்தம் தன்னை முன்போல் நேசித்து மணம்செய்து கொள்வாளோ என்னமோவென்று சந்தேகிக்கலானார். அவருடைய காதற்பெருக்கின் ஆழமறியாத பத்மநாப நாயுடவர்களோ கிருஷ்ணசாமி நாயுடவர்கள் ஒருவாறாக இருப்பதைக்கண்டு, ஜீவானந்தம் நாடகத்தில் சேர்ந்திருந்ததால் ஓர் நாடகப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டால் அவர் பந்துக்கள் சம்மதிப்பார்களோ அல்லது உலகந்தான் அவரைப்பற்றி என்ன சொல்லுமோ என்று நினைத்து விலகப் பார்க்கிறாரோவென்று சந்தேகித்தார். இந்த ஸம்சயத்தை ஒருவாறாக நிவர்த்தி செய்து கொள்ளுமாறு அவர் ஓர் நாள் ஏகாந்தமாய் கிருஷ்ணசாமி நாயுடவர்களை வரவழைத்துப்பின் வருமாறு கேட்டார்.

பத்மநாப நாயுடு.—நண்பரவர்களே! நான் இப்போது தங்க

ளிடம் சில முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேச உத்தேசித்திருக்கிறேன். தாங்கள் தயவுசெய்து நான் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையான பதில் அளிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். தாங்கள், நான் ஜீவாநந்தத்தின் வேலைக்காரனென்று நம்பி என்னிடமும் அவள் வேலைக்காரி என்று நினைத்த என் பந்துவாகிய சாரதாம்பாளிடமும் ஜீவாநந்தத்தைப் பற்றிக் கேட்ட பல கேள்விகளையும் அவைகளுக்கு நாங்கள் கொடுத்த மறுமொழிகளையும் மறந்திருக்க மாட்டீர்களென்று நம்புகிறேன். அவைகள் முற்றிலும் உண்மையே. மஹா உன்னத அந்தஸ்தில் இருக்கும் ஓர் ஜமீன்தாராகிய தாங்கள் ஓர் நாடகப்பெண்ணை மணம்செய்து கொள்ளும்படி எப்படிப் பல தடவைகளில் கேட்டீர்கள்?

கிருஷ்ணசாமி நாயுடு.—ஐயா! ஜீவாநந்தம், சாரதாம்பாளுடன் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கையில் நான் அவளை முதல் முதல் சந்தித்தேன். அப்போது அவள் நாடகத்தில் சேர்ந்திருந்த விவரம் எனக்குத் தெரியாது. அவள் கழுத்தில் தாலியில்லாததால் அவளுக்குக் கலியாண மாகவில்லையென்றும் நகைகளெல்லாம் அணிந்து குங்குமப்பொட்டு வைத்திருந்ததால் அவள் கன்னியென்றும் அறிந்தேன். அவளைக் கண்டதுமுதல் எனக்கு ஓர் விதமான மனக்கிளர்ச்சி உண்டாயிற்று. அவர்களுக்குத் தெரியாமலே என்ன பாஷை பேசுகிறார்களென்று கவனித்தேன். தெலுங்கு பாஷை பேசிக்கொண்டு சென்ற உடன் எனக்குண்டான ஆநந்தத்திற்கு அளவே இல்லை. அநேகமாய் நாயுடு ஜாதிப் பெண்ணாகத்தா னிருக்கவேண்டு மென்றும் அவளைக் கலியாணம் செய்து கொண்டாலொழிய என் உயிர் நிற்காதென்றும் தோன்றிற்று. அப்போது பின்னால்சற்று தூரத்தில் வந்துகொண்டிருந்த தங்களைப்பார்த்து ஜீவாநந்தத்தைக் குறித்த விருத்தாந்தம் கேட்டேன். தாங்கள் "அந்த அம்மாள் யாராயிருந்தால் உங்களுக்கென்ன? உங்கள் ஜோலியைப் பாருங்கள்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டீர்கள். அப்பால் என் வேலைக்காரனொருவனை உங்கள் பின்னாலேயே அனுப்பி விசாரித்ததில் ஜீவாநந்தம் சென்னை சரச விநோத சிருங்கார சபாரஞ்சித ஜகன்மோஹன ஹிந்து பாலிகா நாடகக் கம்பெனியில் முக்கிய பெண் வேஷதாரி யென்று கேள்விப்பட்டவுடனே எனக்கு அதிக மனவருத்த முண்டாயிற்று. ஏனெனில் தற்காலத்திய நாடகக் கம்பெனிகளில் நடிக்கிற ஒவ்வொரு பெண்ணும் அநேகமாய் கற்பு

நிலை குலைந்தவளாகவே இருக்கிறாள். உத்தம ஸ்திரீகள் நாடகத்தில் நடிப்பதை நான் இதுவரையில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. ஆகையால் இவளும் அப்பேர்ப்பட்டவளா யிருப்பாளோவென்று சந்தேகித்துப் பலவிதங்களிலும் விசாரித்துப் பார்த்ததில் இவளைப்போல் பதிவிரதா சிரோன்மணி கிடையாதென்று தெரிந்து கொண்டேன். பரம்பரையாய் நமது ஜாதியார் நற்குலத்தில் பிறந்து அந்தஸ்துடைய ஒருவருடைய பெண்ணாயிருந்தால் அவள் எலும்புருக்கி நோய் கொண்டவளாயினும் சரி, பார்ப்பதற்கு அதிக விகாரமான சொரூப முடையவளாயினும் சரி, அப்புருஷனுடைய தேக வலிமைக்கும் இவளுடைய தேக வலிமைக்கும் மனத்திற்கும் புத்திக்கும் எவ்வளவு பேதமுண்டோ அவ்வளவு பேதமிருந்தாலும் சரி, எப்படியாவது அவள் பந்து வென்றும், பெரிய குலத்தில் சேர்ந்தவளென்றும் தெரிந்தால் உடனே அவளைக் கலியாணஞ் செய்து வைத்துவிடுவது வழக்கமாயிருக்கிறது. அப்படிக் கலியாணம் செய்தபின் அப்புருஷனுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்ற அவள் சக்தியற்றவளாய்ப் போவதால் அப்புருஷனுக்கும் அப்பெண்ணுக்கும் மனத்தாங்கல் உண்டாகி விடுகிறது: அப்புருஷனோ எப்படியாவது தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்ற விரும்பி தன் மனதுக்கிசைந்த விலைமகளிரிடமாவது குலமகளிரிடமாவது செல்வதால் நேரும் கலகங்களும், பொருள் நஷ்டங்களும், அவமானமும் எல்லாவற்றிற்கும் மேலாக அவன் தேகம் கெடுவதும் பெரிய குடும்பங்களில் நான் பார்த்திருக்கிறேன். அப்படி அறிந்ததால் தான் எனக்குக் கொஞ்சமும் ஈடாகாத எனது சொந்த மாமனார் மகளைக் கலியாணம் செய்துகொள்ளும்படி என் இனத்தார் சொன்ன போது நான் மறுத்துவிட்டு தேசப்பிரயாணம் வந்தேன். வந்த இடத்தில் ஜீவாநந்தத்தைக் கண்டேன்; காமுற்றேன். அது முதல் அவளே என் மனதிற்கிசைந்த கன்னிகையென்று நிச்சயித்து சுந்தரராவ் அவர்களின் உதவியால் நாளாவர்த்தியில் அவளுடைய சிநேகம் பெற்று அவளைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பி பலமுறை நான்கேட்டும் அவள் தான் எக்குலத்தாளென்றும், யார் மடந்தையென்றும் அறியுமுன் ஒருநாளும் ஒருவரையும் கலியாணம் செய்துகொள்ளமாட்டாளென்றும் அதிலும் உயர்குலத்திற் பிறந்து உன்னத ஸ்திதியில் யிருக்கும் என்னைக் கலியாணம் செய்துகொண்டு எனக்கு அவமானத்தை உண்டுபண்ண மனமிசையாளென்றும் ஒரேபிடிவாத

மாய்ச் சொன்னாள். இனிமேல் அவள் பெற்றோர் இன்னாரென்று கண்டு பிடிப்பது அசாத்தியமென்று நான் சொன்னபோது தனக்குப் பதினெட்டு ஆண்டு நிறைந்த சமயம் தான் இன்னாளென்று தெரிவிக்கப் படுமென்று தன்னை வளர்த்துவந்த சாஸ்திரிகள் சொன்னதாகச் சொன்னாள். அதற்கு நான் அவள் என்ன ஜாதிப் பெண்ணாயிருந்தாலும் சரி, நான் அவளைக் கலியாணம் செய்து கொள்ளத் தயாராயிருப்பதாகச் சொன்னேன். அதற்கவள் நமது இந்தியாவில் அப்பேர்பட்ட வழக்கம் கிடையாதென்றும் அவ்விதமாக விவாகம் நடக்குமாகில் அதனால் புருஷனைவிட பெண்ணுக்கே அதிகமான சங்கடங்களும் தொல்லைகளுஞ் சூழுமென்றும் ஆகையால் தான் சம்மதிக்க முடியாதென்றும் மறுத்துவிட்டாள். அப்போது நான் சென்னை ராஜதானியிலுள்ள மறவர் ஜாதி ஜமீன்தார் ஒருவர் சமீபத்தில் ஓர் பிராம்மண ஸ்திரீயைக்கலியாணம் செய்து கொண்டதையும், வடபிராந்தியத்திலுள்ள ஓர் தேசத்து ராஜா ஓர் துலுக்கப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டதையும் இன்னும் இப்பேர்ப்பட்ட ஐந்தாறு விவாகங்கள் நடந்திருக்கின்றனவென்றும் பத்திரிகைகளின் எழுதப் பட்டிருந்ததை நான் அவளுக்குக் காட்டினேன். நான் அப்படிக் காண்பித்தும் அவள் சம்மதிக்காததால் அவள் மனமிரங்கும் வரையில் காத்திருந்தேன். இப்பொழுது அவள் என்னைவிட பதின்மடங்கு அதிகமான ஐஸ்வர்யமும், கௌரவமுடைய தங்கள் புத்திரி யென்று தெரிந்தது முதல் தாங்கள் அம்மாது சிரோண்மணியை எனக்குக் கலியாணஞ் செய்துக்கொடுக்க இசைவீர்களோவென்ற சந்தேகந்தான் என் மனதைப் பலநாட்களாய்ப் புண்படுத்திக் கொண்டிருக்கிறது. தங்களுடைய ஆஸ்தியையும் அந்தஸ்தையும் கவனிக்கும்போது நான் எத்தனையோ மடங்கு குறைந்தவனென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். இருந்தாலும் எனக்கு ஜீவாநந்தத்தின் பேரில் இருக்கும் பிரியம் எவ்வளவென்று தங்களுக்குத் தெரியும். ஆகையால் நான் அதைப்பற்றி விசேஷித்துச் சொல்ல வேண்டியதில்லை தாங்கள் ஜீவாநந்தத்தை எனக்குக் கொடுக்க மறுதலித்துவிட்டால் என் வாழ்நாள் வீண்நாளாகிவிடும். அத்துடன் எனது கதியும் அதோகதிதான். ஆகையால் என்மீது கருணைகூர்ந்து நான் ஜீவாநந்தத்தை அடையும் பாக்கியத்தைப் பெறும்படி ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்.

பத்பநாப நாயுடு.—நண்பாவர்களே! தங்களுக்கும் ஜீவாநந்தத்

திற்கும் இருக்கும் பரஸ்பர உள்ளன்பை நன்குணர்ந்த நான் அவளைத் தங்களுக்கு பாணிக் கிரஹணம் செய்து கொடுப்பதில் யாதொரு ஆட்சேபனையுமில்லை. ஆகவே மனது சமாதானப்படுங்கள். என்றாலும் தங்கள் பந்துக்களும் நண்பர்களும் ஓர் நாடகப் பெண்ணைக் கலியாணம் செய்துக்கொள்ள சம்மதிப்பார்களோ யென்ற பயந்தான் என்னைச் சிந்தனைக் குள்ளாக்குகிறது.

கிருஷ்ணசாமி நாயுடு.—ஐயா! தாங்கள் அதைப்பற்றிக் கிஞ்சித்தேனும் யோசிக்க வேண்டியதில்லை. ஜீவாநந்தம் இன்னாளென்று தெரியாத போதே பந்துக்களையும் நண்பர்களையும் கவனியாமல் அவளைக்கலியாணம் செய்துகொள்ளச் சித்தமாயிருந்தேன். அப்படியிருக்க இப்போது என்ன ஆட்சேபனை யிருக்கப் போகிறது?

பத்மநாப நாயுடு.—ஆனால் தங்கள் இஷ்டப்படி செய்வதில் எனக்கும் யாதொரு ஆட்சேபனையில்லை. அது விஷயத்தில் மிக்க சந்தோஷந்தான்.

என்று சொன்னார். உடனே எல்லோருமாக அடுத்த கப்பலில் ஏறிச் சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள். பத்மநாப நாயுடு தான் இன்னாரென்று ருஜூப் படுத்தினதின் பேரில் அவருடைய ஜமீன் அவருக்கு ஒப்புவிக்கப் பட்டது.

அப்பால் ஒரு மாதம் பொறுத்து ** ஹு ஆனிமீ 9உக் குச்சரியான ** ஹு ஜூன்மீ 22உ ஞாயிற்றுக் கிழமையும் திருவோண நக்ஷத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபதினத்தில் அன்று உதயாதி நாழிகை 2½ க்குமேல் 7½ க்குள்ளாக (காலை 7-மணிக்குமேல் 9-மணிக்குள்ளாக) கடக லக்கினத்தில் மாடபுரம் ஜமீன்தாராகிய ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுக்கும், ஆதிபுரம் ஜமீன்தாராகிய பத்மநாப நாயுடு அவர்கள் ஏக புத்திரியாகிய சௌபாக்கியவதி ஜீவாநந்தம்மாளுக்கும், வெகு விமரிசையாய்க் கலியாணமாயிற்று.

ஜீவாநந்தம் என்பதின் பின்பாகமாகிய ஆநந்த என்பதையும் கிருஷ்ணசாமி நாயுடு என்பதின் முன் பாகமாகிய கிருஷ்ணன் என்பதையும் சேர்த்து இக்கதைக்கு ஆநந்த கிருஷ்ணன் என்னும் பெயரிட லானோம்.

ஆனந்த கிருஷ்ணன் முற்றிற்று

The Guardian Press 4. Sembudas Street Madras.

"இராஜாம்பாள்"

"சந்திரகாந்தா"

"மோஹன சுந்தரம்"

"ஆனந்தகிருஷ்ணன்"

என்னும் நிகரில்லாத நாவல்களை எழுதிய

J. R. ரங்கராஜு அவர்களால் எழுதப்பட்ட

புது நாவல்

"இராஜேந்திரன்"

1919-ம் ௵ மே௴ 15௳ வெளிவரும்

வேண்டியவர்கள் :—

ரங்கராஜு பிரதர்ஸ்

5. மௌண்ட்ரோட், சென்னைக்கு

எழுதிப் பெறலாம்.